

ஜூலை 2025

# எழுநா

இதழ் 36

ISSN 3093-5210

# எழுநா

**அட்டைப்படம் :**
உள்ளும் வெளியும்
புகைப்படம்: தர்மபாலன் திலக்சன்

**இதழ் 36**

## இயக்குநர் சபை

**கணேசானந்தன் சசீவன்**
ஆளுகை

**தில்லைநாதன் கோபிநாத்**
வெளியீடு

**கனகலிங்கம் சுகுமார்**
வளத்திரட்டல்

## வெளியீட்டுக்குழு

**கணேசானந்தன் சசீவன்**
பதிப்பாளர்/ பிரதம ஆசிரியர்

**ஸ்ரனிஸ்லஸ் கபில்தேவ்**
உதவி ஆசிரியர் / நகல் திருத்தம் / நூல் தயாரிப்பு / தர நிர்ணயம்

**விஜயதர்சினி தினேஸ்**
கற்கைவட்டம்/ நிகழ்வுகள்/விநியோகம் / ஊடக ஒருங்கிணைப்பு

**குகதர்சினி பரமநாதன்**
வலைத்தளம் / பரவலாக்கம் / அச்சு ஒருங்கிணைப்பு / ஆய்வு ஒருங்கிணைப்பு

**தனுஜன் சுந்தரலிங்கம்**
ஆவணப்பட ஒருங்கிணைப்பு

**மதுராங்கி குணசீதன்**
கலை பண்பாட்டு ஒருங்கிணைப்பு

## தயாரிப்புக் குழு

**ஜீவமணி பாலன்**
நூல் வடிவமைப்பு /அட்டை வடிவமைப்பு

**ரவீந்திரன் கருப்பையா**
நூல் வடிவமைப்பு/அட்டை வடிவமைப்பு

**பழனிவேலன் ஞானேசகர்**
அட்டை வடிவமைப்பு

**வேணி ஆனந்தா**
சஞ்சிகை வடிவமைப்பு

**கௌரிகாந்தன் சித்தாந்தன்**
மெய்ப்புப்பார்ப்பு

**நிரோஷா தியாகராசா**
மெய்ப்புப்பார்ப்பு

**கலாமணி பரணீதரன்**
அச்சு ஒருங்கிணைப்பு

## வளவாளர்கள்

**தில்லைநாதன் கோபிநாத்**
நூல் தயாரிப்பு

**தங்கராஜா பிரபாகரன்**
மனிதவளத் தொடர்பு

**சிறிதரன் சோமிதரன்**
ஆவணப்படம்

**இ. பத்மநாப ஐயர்**
உசாத்துணை சேவை

**சஜீவன் தர்மரட்ணம்**
நிகழ்வுகள்

**கணபதிப்பிள்ளை சர்வானந்தா**
விநியோகம்

**ஜனனி பாலசுந்தரம்**
வலைத்தளம் / பரவலாக்கம்

## ஆதரவளிப்போர்

**மானுடம் நிறுவனம்**
நூல் தயாரிப்பு / சஞ்சிகை விநியோகம் / உசாத்துணை சேவை

**தமிழ் ஊடகத் திரட்டு**
ஆவணப்படம்

**ஆதிரை வெளியீடு**
ஆவணப்படம்

**நிகரி**
ஆவணப்படம்

**நாளை வெளியீடு**
ஆவணப்படம்

## கற்கை வட்ட ஒருங்கிணைப்பாளர்கள்

**நடராஜா முரளிதரன்**
கனடா

**சிவராஜா ரூபன்**
நோர்வே

## கூட்டுறவு புத்தக மன்ற ஒருங்கிணைப்பாளர்கள்

**கனகலிங்கம் சுகுமார்**
ஐக்கிய இராச்சியம்

**கணேசானந்தன் சசீவன்**
ஐக்கிய இராச்சியம்

**இ. பத்மநாப ஐயர்**
ஐக்கிய இராச்சியம்

**சதீசன் தனபாலசுந்தரம்**
ஐக்கிய இராச்சியம்

**எஸ்.கே.விக்னேஸ்வரன்**
கனடா

**இளங்கோ**
கனடா

**சிவராஜா ரூபன்**
நோர்வே

**சஞ்சயன் செல்வமாணிக்கம்**
நோர்வே

**சுவர்ணலதா செந்தில்குமார்**
அவுஸ்திரேலியா

**தில்லைநாதன் கோபிநாத்**
அவுஸ்திரேலியா

**அசோக் யோகன் கண்ணமுத்து**
பிரான்ஸ்

**ராஜ்குமார் ரஜீவ்காந்த்**
கொழும்பு

## நிகழ்வு ஒருங்கிணைப்புப் பங்காளர்கள்

**சிறகுகள் அமையம்**
யாழ்ப்பாணம்

**சத்தியமனை நூலகம்**
யாழ்ப்பாணம்

**தமிழ்த் தேசிய கலை இலக்கிய பேரவை**
கிளிநொச்சி

**மீசோ**
கிளிநொச்சி

**எழுகை அமையம்**
கிளிநொச்சி

**கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்**
வவுனியா

**சந்திரோதயம் கலை இலக்கிய பெருமன்றம்**
மட்டக்களப்பு

**'கா' கலை இலக்கிய வட்டம்**
மட்டக்களப்பு

**திரைப்படக் கழகம்**
மட்டக்களப்பு

**ஏறாவூர் வாசிப்பு வட்டம்**
மட்டக்களப்பு

**தளம் கட்டமைப்பு**
திருகோணமலை

**நிகர் சமூக கலை இலக்கிய அரங்கம்**
கண்டி

**கலை இலக்கிய வட்டம்**
பதுளை

**தியேட்டர் மேட்ஸ் பண்பாட்டு கழகம்**
நுவரெலியா

**கொழும்புத் தமிழ்ச் சங்கம்**
கொழும்பு

## விநியோகப் பங்காளர்கள்

**பனுவல் புத்தகசாலை**
யாழ்ப்பாணம்

**குயின்சி புத்தகசாலை**
யாழ்ப்பாணம்

**வெண்பா புத்தகசாலை**
யாழ்ப்பாணம்

**தாயன்பு புத்தகசாலை**
முல்லைத்தீவு

**அறிவொளி புத்தகசாலை**
முல்லைத்தீவு

**பாத்திமா புத்தக நிலையம்**
மட்டக்களப்பு

## அச்சுப்பதித்து விநியோகிப்போர்

**நாளை வெளியீடு**
கனடா

## கொற்றம் ஆய்வு துறைசார் மதியுரைஞர் குழு

**ஶ்ரீவரதராஜன் பிரசாந்தன்**
மொழியும் இலக்கியமும்

**கந்தையா ரமணிதரன்**
நீரியலும் நீர்ப்பாசனமும்

**குமாரவடிவேல் குருபரன்**
சட்டமும் சட்ட முறைமையும்

**நடராஜா சிறீஸ்கந்தராஜா**
சூழலும் உயிர்ப் பல்வகைமையும்

**சச்சிதானந்தன் சுகிர்தராஜா**
சமயமும் இறையியலும்

**பால சிவகடாட்சம்**
சுதேசியமும் பாரம்பரிய மருத்துவமும்

**நாகமுத்து பிரதீபராஜா**
புவியியலும் திட்டமிடலும்

**பரமு புஸ்பரட்ணம்**
வரலாறும் தொல்லியலும்

**சனாதனன் தமோதரம்பிள்ளை**
கட்புல அரங்கேற்றக் கலைகள்

**சேரன் உருத்திரமூர்த்தி**
சமூகவியலும் மானிடவியலும்

**முத்துக்கிருஸ்ணன் சர்வானந்தன்**
பொருளியலும் நிதியியலும்

**சபா ஜெயராசா**
கல்வியியலும் கற்றலும்

**மரியோ அருள்தாஸ்**
அரசியலும் மெய்யியலும்

**இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்**
கட்டடக்கலையும் வடிவமைப்பும்

**கந்தையா பகீரதன்**
விவசாயமும் மீன்பிடியும்

## கொற்றம் ஆய்வு - வழிப்படுத்தும்

**மீநிலங்கோ தெய்வேந்திரன்**


## தொடர்பிற்கு

மின்னஞ்சல்:
contact@ezhunaonline.com
ezhunamedia@gmail.com

முகவரி:
எழுநா
63, சேர். பொன்.
இராமநாதன் வீதி
கலட்டி சந்தி, திருநெல்வேலி

# உள்ளே...


மாதா கோயில் அம்மன் — 03
- தி. செல்வமனோகரன்

நான்காம் உலகமும் அரசு இல்லாத தேசிய இனங்களும் – பகுதி 1,2 — 09
- ஆங்கில மூலம்: பெர்னாட் நைட்ஸ்மன்
தமிழில்: கந்தையா சண்முகலிங்கம்

போரும் புதிய போக்குகளும் — 21
- கார்த்திகேசு இந்திரபாலா

கந்தரோடைத் தொல்லியல் (Archaeology of Kantarodai) பகுதி 1,2,3 — 26
- சிவ தியாகராஜா

சுன்னத்துக் கலியாணம் — 49
- எம். ஐ. எம். சாக்கீர்

நீ மயங்குவதேன்: சுயமுன்னேற்றத்துக்கான வழித்தடம் — 54
- எம். எம். ஜெயசீலன்

லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில் வலிகாமம் – தெல்லிப்பழை — 60
- இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்

1983 கறுப்பு யூலை பேரழிவின் பின்னரான மே தினம்: இலங்கையின் இனக்குழுமப் பிரச்சினைக்கான தீர்வு — 65
- ஆங்கில மூலம்: நியூட்டன் குணசிங்க
தமிழில்: கந்தையா சண்முகலிங்கம்

மீள் பார்வைக்கான சமூக சக்திகள் — 71
- நடேசன் இரவீந்திரன்

மலையக வீதிப்பாடல்கள்: சமூக, அரசியல் எழுச்சித் தாக்கங்கள் அறிமுகம் — 78
- அருணாசலம் லெட்சுமணன்

1949 – 1968: ஈழத்தமிழரின் அரசியல் உருமாற்றமும் எதிர்ப்புப் போராட்டங்களும் – பகுதி 1 — 85
- சி. அ. யோதிலிங்கம்

குயர் வெறுப்பும் குயர் சமூகத்தின் மீதான ஓரங்கட்டல்களும் — 92
- அனுதர்சி கபிலன்

இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகளில் பிராமணரும் பிரம்மதேயமும் — 96
- எம். எம். ஜெயசீலன்

இலங்கை மலையகத் தமிழர்களின் சமூக அசைவியக்கத்தில் கூத்துக் கலைகளின் செல்வாக்கு – பகுதி 1,2 — 102
- பொன் பிரபாகரன்

வடக்கு – கிழக்கு மாகாணங்களின் பொருளாதார அபிவிருத்தியில் கூட்டுறவுத்துறையின் பங்குபற்றல் — 116
- அமரசிங்கம் கேதீஸ்வரன்

மூலோபாயப் பகுதி பற்றிய அடிப்படைத் தகவல்கள் – பகுதி 4 — 121
- சுப்ரமணியம் சிவகுமார்

பின்காலனியச் சூழலில் ஈழத்துப்புலம் தனக்கான தனித்த அடையாளங்களை, அவற்றைப் பேணுதலுக்கான அக்கறையை கொண்டமைந்ததாக இல்லை. பொருளாதாரம், சமயம், பண்பாடு என எல்லாத் தளங்களிலும் 'மேனிலையாக்கம்' எனும் கருத்தாக்கத்தை நோக்கிய பயணத்தையே மேற்கொண்டு வருகின்றது. இத்தகைய பின்னணியில் தன்னடையாளப் பேணுகை குறித்த பிரக்ஞையை ஏற்படுத்துதலின் ஒரு பகுதியாகவே 'ஈழத்து நாட்டார் தெய்வங்கள்' எனும் இக்கட்டுரைத் தொடர் அமையப்பெறுகிறது. இதில் ஈழத்தில் மட்டும் சிறப்புற்றிருக்கும் தெய்வங்கள், ஈழத்தில் தனக்கான தனித்துவத்தைப் பெற்றிருக்கும் தெய்வங்கள் என்பன கவனத்தில் கொள்ளப்படுகின்றன. இத்தொடரானது தெய்வங்களை அடையாளப்படுத்துவதோடு அவற்றின் வரலாறு, சமூகப் பெறுமானம், சடங்கு, சம்பிரதாயங்கள், தனித்துவம், இன்றைய நிலை, சமூகத்துக்கும் அதற்குமான இடைவினைகள் முதலான பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக அமைகிறது. கள ஆய்வின் வழி நிகழ்த்தப்படும் இவ்வாய்வு விவரணம், வரலாறு எனும் ஆய்வு முறைகளின்படி எழுதப்படுகிறது. இவ்வாய்வுக்கான தரவுகள் நூல்களின் வழியும் நேர்காணல், உரையாடல், செய்திகள் என்பவற்றின் வழியும் பெறப்பட்டு சமூக விஞ்ஞானப் பார்வையினூடாக ஆக்கப்படுகின்றது.

# மாதா கோயில் அம்மன்

**தி.செல்வமனோகரன்**



யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்தின் சைவசித்தாந்த துறையின் முதுநிலை விரிவுரையாளராக தி. செல்வமனோகரன் திகழ்கிறார் . இந்திய மெய்யியல் கற்கை புலத்தில் கலாநிதிப் பட்டத்தை பெற்றுள்ளார். இந்துக்கற்கை புலம் சார்ந்து காஷ்மீர சைவமும் சைவ சித்தாந்தமும், இலங்கையில் சைவத்தமிழ் பண்பாட்டு வளர்ச்சியில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, நாயன்மார் பாடல்கள், தமிழில் மெய்யியல் எனும் நூல்களை எழுதியுள்ளார். பெறுதற்கரிதான இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை மீள்பதிப்புச் செய்துள்ளார். 'சொற்களால் அமையுலகு' என்னும் இவரது நூல் கலை, இலக்கியம் சார்ந்த விமர்சன நூலாகும்.

## அறிமுகம்

உலக அரங்கில் முதன்மை பெற்ற வழிபாடுகளில் ஒன்றாகப் பெண் தெய்வ வழிபாடு காணப்படுகின்றது. இயற்கை மீதான அச்சம், வியப்பு என்பவற்றின் வழிவந்த வழிபாடு, தெய்வம் எனும் கருத்துரு என்பவற்றின் வழியும் இனக்குழு, நிலம், கலை என்பவற்றின் வழியும் பல்தெய்வ வழிபாடுகள் உருவாக்கம் பெற்றன. அவற்றுள் பெண் தேவதையாக, அம்மனாக, கன்னியாக, குழந்தையாக எனப் பலவாறு வழிபடப்பட்டாள். உலகில் தோன்றிய பெரும்பாலான சமயங்கள் பெண் தெய்வ வழிபாட்டைக் கொண்டிருந்தன.

தெய்வங்கள் இயல்பிறந்த ஆற்றல்களை உடையன. அதேவேளை நாட்டார் தெய்வங்கள் மனிதர்களைப் போல ஆசாபாசங்களை உடையனவாக மனித நடத்தைகளைக் கொண்டனவாக அமைந்திருந்தன. அவை பற்றிய கதைகள் இதனை வலுப்படுத்துகின்றன. பிற்காலப் பெருந்தெய்வங்கள் பரிபூரணத்துவம் பெற்ற பரம்பொருள்களாகக் கருதப்பட்டன. ஆனால் நாட்டார் தெய்வங்கள் ஆவி, உயிரி, மானா, குறி, முன்னோர் போன்ற வடிவங்களில் இருந்தன; இனக்குழுமவியலின் தெய்வமாகப் போற்றப்பெற்றன. குறித்த இனக்குழுமத்தின் தெய்வத்தை மற்றைய இனக்குலத்தவர் அறிந்திருந்தனர் எனக் கூறுவதற்கில்லை. அறிந்திருந்தாலும் வணங்கினர் எனக் கூற முடியாது. அவரவர் தெய்வம் அவரவர்க்கானது. அது அவரது நம்பிக்கையாகும். காலவோட்டத்தில் வலுவுள்ளன நிற்க, ஏனையவை அருகிப்போயின. நாகரிகம், மேனிலையாக்கம் எனும் மனப்பாங்குகள் நாட்டார் தெய்வங்கள் அருகிச்செல்ல பெரிதும் காரணமாகி நிற்கின்றன.

ஆயினும் தம் குலதெய்வம் என்ற நம்பிக்கையூற்று வற்றிப்போகாத சமூகம் அல்லது இனக்குழுமம் இன்றும் நாட்டார் தெய்வங்களை - குல தெய்வங்களை ஏதோ ஒரு வகையில் பற்றிப்பிடித்து நிற்கின்றன. சமூக, கால மாற்றத்தின் வழி சிற்சில மாற்றங்கள் நிகழ்ந்திருப்பினும் அவை தம் அடிக்கட்டுமானத்தில் மாற்றமின்றி நிற்கின்றன. பாரம்பரிய வழிபாட்டுமுறைகளின் வழி வழிபடப்படுகின்றன. தெய்வவழிபாடுகள், சமயவியற்புலத்தில் மட்டுமின்றி, சமூகவியல், மானிடவியல், இனவரைவியல் ஆகிய ஆய்வுப்புலங்களுக்கும் முக்கியமான தரவுகளைக் கொடுக்கின்றன. குறிப்பாக, ஒரு சமூகத்தின் பொருளாதாரம், அரசியல் அமைப்பு, மொழிப்பயன்பாடு, உணவுப்பழக்கம், தொழில்கள் போன்ற கூறுகளின் வரலாற்றைப் புரிந்துகொள்வதற்கும், அந்தச் சமூகத்தின் தொன்மை மற்றும் சமூக அசைவியக்கங்களை அலசுவதற்கும் இவ்வழிபாடுகள் பெரிதும் உதவுகின்றன.

அந்தவகையில் யாழ்ப்பாணத்தின் வடமராட்சிப் பிரதேசத்தில் அம்பன் எனும் கிராமத்தில் இன்றும் நின்று நிலவும் தெய்வமாக ‘மாதா கோயில்’ அம்மன் காணப்படுகின்றது. அம்பனைத் தன் பிறந்த ஊராகக்கொண்ட சமூகவியலாய்வாளர், எழுத்தாளர் திரு.ந. மயூரரூபனின் வழிகாட்டலில் என்னோடு வழமைபோல ஆய்வு ஆர்வலர் திரு. கோ. விஜிகரனும் இணைந்து இந்தத் தெய்வம் பற்றிய களப்பணியினை மேற்கொண்டோம்.

## மாதா கோயில் அம்மன்

ஈழத்துத் தமிழ்ச்சூழலில் புழக்கத்தில் இல்லாத ஒரு வழிபாடு அம்பன் பகுதியில் காணப்படுகிறது. அதுவே மாதா கோயில் அம்மன் வழிபாடு. மாதா கோயில் என்பது ஈழத்தைப் பொறுத்தவரை கிறிஸ்தவ மேரி மாதாவின் கோயிலாகவே சுட்டப்படுகிறது. எவ்வாறு ‘வேதக்காரர்’ என்பது சைவர்களைச் சுட்டாது கிறிஸ்தவர்களையே சுட்டுகின்றதோ, அதுபோலவே மாதா கோயிலும் றோமன் கத்தோலிக்கக் கோயிலை சுட்டுவதாகவே அமைந்துள்ளது. அதிலும் விசேடம் என்னவெனில் கிறிஸ்தவ மாதா கோயில்கள் பொதுக்கோயிலாகவே பெரும்பாலும் அமைந்திருக்கும். மாதா சொரூபத்தை சிலர் வீடுகளில் வைத்திருப்பர். ஆனால் அம்பன் கிராமத்தில் வீட்டுவளவிலும் தனித்த இடத்திலும் சிறு மாதா கோயில் கட்டப்பட்டு வழிபடப்படுகின்றது. இது சற்று நூதனமாகவே இருந்தது. ஆதலால் மாதா கோயில் அம்மனை ஆய்வுக்கெடுத்துக் கொண்டோம்.

## கிறிஸ்தவ மாதா கோயிலா?

ஈழத்தில் காலனியகால ஐரோப்பியர் வருகையோடு றோமன் கத்தோலிக்கம் அரச மதமாக உட்புகுகிறது. அதேசமயம் சுதேச சமயங்கள் ஒடுக்கப்பட்டு கோயில்கள் யாவும் இடித்தழிக்கப்படுகின்றன. கற்கோயில்கள் இல்லாது ஒழிக்கப்பட்டன. ஐரோப்பியரிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றிய ஒல்லாந்தர்களும் சுதேச சமய ஒடுக்குமுறையை மட்டுமல்லாது, றோமன் கத்தோலிக்கத்தின் மீதும் ஒடுக்குமுறையை கையாண்டு அவர்களது கோயில்களையும் இடித்தழித்தனர். புரட்டஸ்தாந்து தேவாலயங்களைக் கட்டினர். ஒல்லாந்தரின் ஆட்சியின் இறுதியில் 1890களில் சைவக் கோயில்கள் கட்டப்பட்டன. அதன்பின் கத்தோலிக்கத் தேவாலயங்களும் கட்டப்பட்டன. பிரித்தானியராட்சியில் கிறிஸ்தவ ஆதி நூலான பைபிள் தமிழுக்கு மொழிபெயர்க்கப்படுகின்றது. அக்காலத்தில்

நிகழ்த்தப்பட்ட மொழிபெயர்ப்புகள் யாவற்றிலும் சமஸ்கிருதச் சொற்கள் விரவியிருந்ததை ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. வேதாகமம், மாதா, பிதா, சுதன், கர்த்தர் என இதனை உதாரணப்படுத்தலாம். இந்துக்களின் பெண் தெய்வ வழிபாடு அம்மனின் வழிபாடாகச் சுட்டப்பட்டது. பெண் தெய்வத்தை அம்மன், அம்மா, ஆச்சி, நாச்சியார், கன்னிமார் எனப் பல பொதுச்சொற்களால் சுட்டி வழிபடும் வழக்கமே இருந்துள்ளது. அதேவேளை கிறிஸ்தவ பெண் தெய்வமான மேரியை மேரியன்னை, மேரி மாதா எனச் சுட்டும் வழக்கம் தமிழர் மத்தியில் காணப்பட்டு வந்துள்ளது. இச்சொற்பிரயோகங்கள் ஈழத்தில் தெளிவான சமயப்பிரிநிலைச் சொற்களாகவே பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

## தென்னாசிய நாடுகளில் மாதா கோயில்

இந்திய சாக்த மதத்தவரின் 64 சக்திபீடங்களில் ஒன்றாகவும், முதலானதாகவும் வர்ணிக்கப்படும் 'ஹிங் குலாஜ்' மாதா சக்திபீடக் கோயில் தற்போது பாகிஸ்தானின் பலுரகிஸ்தான் மாகாணத்தில் லஸ்பெலா மாவட்டத்தில் ஹிங்கோர் தேசியப் பூங்காவில் அமைந்துள்ளது. ஹிங்குலி - முன்வகிடுக் குங்குமப்பொட்டு அல்லது செந்தூரம் எனப்படுகிறது. மகாசக்தி பீடேஸ்வரி தெய்வமாக வீற்றிருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த இந்துக் கோயில் 'மாதா கோயில்' என்றே கூறப்படுகிறது. அதேபோல நேபாளத்தில் உள்ள அம்மன் கோயிலும் 'பதிவரா மாதா கோயில்' என்று சுட்டப்படுகிறது. கால்நடை (ஆடு) வளர்ப்புடன் இணைந்த தெய்வ வழிபாடாக இது காணப்படுகிறது. இது ஆசைகளின் தெய்வம் என்றும், இங்கு வரும் அடியவர் ஆசைகளை நிறைவேற்றுவதனால் இப்பெயர் பெற்றதென்றும் கூறப்படுகின்றது.

இந்தியாவில் ராஜஸ்தான் மாநிலத்தில் பிகானேர் மாவட்டத்தில் 'ஹர்ணி மாதா கோயில்' காணப்படுகிறது. இங்கு வழிபடுதெய்வம் துர்க்கை. இது எலிக் கோயில் எனவும் அழைக்கப்படுகிறது. ஹரியானா மாநிலத்தில் 'பர்வானூ சீதள மாதா கோயில்' எனும் அம்மன் கோயில் காணப்படுகிறது. பாகிஸ்தானின் கராச்சியில் 50 வருடப் பழமை வாய்ந்த கோயில் 19.07.2023 இல் இடிக்கப்பட்டதாக பரபரப்பாகப் பேசப்பட்டமை யாவரும் அறிந்ததே. அது 'மாரி' மாதா கோயில் ஆகும்.

அண்மைக்காலத்தில் இந்திய ராஜஸ்தான் மாநிலத்தில் 'சதி மாதா' கோயிலும் உத்தரப்பிரதேசத்தில் 'கொரோனா மாதா' கோயிலும் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. வட இந்தியப் பண்பாட்டில் மாதா கோயில் என்பது இந்துக்களின் அம்மன் வழிபாட்டைக் குறிப்பதையும், இக்கோயில்கள் பெரும்பாலும் மலைப்பிரதேசங்களில் அமைந்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது. ஈழத்துத் தமிழ்ச்சூழல் இதற்கு மாறானது. தமிழகத்திலும் ஈழத்திலும் மாதா எனும் சமஸ்கிருதச் சொல்லின் சமயரீதியிலான தற்காலப் பொதுப்பயன்பாடு கிறிஸ்தவ மேரி மாதாவைக் குறிப்பதாகவே அமைந்துள்ளது.

## அம்பன் கிராமத்து மாதா கோயில் அம்மன்

வடமராட்சி அம்பன் கிராமத்தில் ஐந்து அம்மன் மாதா கோயில்கள் காணப்படுகின்றன. அவற்றுள் பழமையானது கிழக்கு அம்பன் பிரதேசத்தில் திருமதி தெய்வயானை வீரபாகு (வயது 82) அவர்களின் வீட்டில் உள்ளது. ஏனைய கோயில்களிலும் இந்த வீட்டில் உள்ள கோயில் தனித்துவமானதாக அமைந்துள்ளது. தனது அம்மம்மா காலத்திற்கு முன்பிருந்தே இந்த மாதா கோயில் வழிபாடு இருந்து வருவதாகவும் ஆரம்பத்தில் திறந்தவெளியிலும் பின்பு ஓலைக்கொட்டிலிலும் இருந்த தெய்வத்திற்கு, சிறிய சீமெந்துக் கட்டடம் அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது.

மாதா கோயில் என அழைப்பது ஏன் என வினவியதற்கு, யாவருமே தெரியாது என்று பதில் கூறினர். தொடக்ககால வரலாறு, இவ்வழிபாடு வந்தமுறை போன்ற எந்த வினாக்களுக்கும் அவர்களுக்கு விடை தெரிந்திருக்கவில்லை. மாதா கோயில் நூறு வருடத்திற்கு மேற்பட்டது என்ற வரியைக் கவனத்தில் கொண்டு சில அனுமானங்களுக்கு நாம் வரலாம்.

1. ஒல்லாந்தராட்சிக் காலத்தில் சுதேசிகளின் வணக்கமுறைக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. மீறி வழிபடுதல் தண்டனைக்குரிய குற்றமாக இருந்தது. இதற்குச் சுதேசிகள் சில மாற்றுத்திட்டங்களை முன்வைத்திருந்தனர். யாழ்ப்பாண நாட்டாரியல் வழிபாட்டில் கல், சூலம் என்பன அதிக செல்வாக்குப் பெறுவன. சூலத்தை வழிபடும் காலத்தில் ஒல்லாந்தரோ, அன்றி அவர்களுக்குக் காட்டிக்கொடுப்பவரோ வரின், சூலத்தின் மடிந்திருந்த இருகரைக் கம்பிகளையும் நேராக்கி விடுவர். அது சிலுவைபோல காட்சியளிக்கும். அதுபோல கற்களை புல், குழை, இலை போன்றவற்றால் மறைத்து விடுவர். அவ்வாறு செய்யமுடியாது பிடிபட்ட சந்தர்ப்பம் ஒன்றில் கல் வைத்து வழிபட்ட அம்மனை மாதா எனக் கூறியிருக்கலாம்.

2. ஏதோ ஒரு தேவையின் பொருட்டு அம்மனை மாதா எனக் கூறி வழிபட்டிருக்கலாம்.

3. கிறிஸ்தவச் சமூகத்தின் செல்வாக்கு அல்லது உதவி பெறுதற் பொருட்டு மாதா கோவில் எனும் சொல் புழக்கத்திற்கு வந்திருக்கலாம்.

4. மாதா என்பது அன்னை - அம்மன்; ஆகவே அம்மனை மாதா என அழைத்தல் தமது உரிமை, அது கிறிஸ்தவத்திற்குரியதல்ல என்ற எண்ணத்தினாலும் இப்பெயர் இடப்பட்டிருக்கலாம்.

5. மத நல்லிணக்க உணர்வினால் இவ்வாறு சுட்டியிருக்கலாம்.

இக்கோயில்கள் இருக்கும் இந்தவூரின் பெயர் அம்பன் எனப்படுகிறது. அதற்குத் தெளிவான காரணமெதுவும் கூறப்படவில்லை. அம்மன் - அம்பன் எனப் பேச்சுவழக்கில் திரிந்திருக்கலாம். இத்தெய்வ வழிபாட்டின் சிறப்பே ஊர்ப்பெயராக மாறியிருக்கலாம்.

ஈழத்தில் மாதா கோயில் என ஒரு சைவக் கோயில் யாழ்ப்பாணம் காரைநகர் கள பூமியில் இருக்கின்றது (பாலேந்திரன்,ச. ஆ., 2002, காரைநகர் தொன்மையும் வன்மையும், பாலாவோடை அம்மன் பதிப்பகம், காரைநகர்). காலனிய காலத்தில் சைவ வழிபாடு தடை செய்யப்பட்டிருந்த சூழலில் அம்மனை வழிபட்டு வந்ததாகவும், அந்நியர்கள் அக்கோவிலை உடைப்பதற்கு வருகை தந்தபோது மாதா சொரூபத்தை வைத்து வழிபட்டு அந்தக் கோயிலைக் காப்பாற்றியதாகவும், ஆதலால் அதனை மாதா கோயில் என்று அழைப்பதாகவும் அதன் உரிமையாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றார்கள். இந்தக் கோயிலுக்கும் முத்துமாரியம்மன் கோவிலுக்கும் இடையில் ஒரு தொடர்பு உண்டு என்றும், முத்துமாரியின் தாய் தான் மாதா என்றும் சொல்லுகிற வழக்கமும் அங்கு உண்டு.





மேனிலையாக்கம் பெற்ற மாதா கோவில்

இந்த வழிபாட்டு மரபு அம்பன் மாதா கோவில் அம்மன் வழிபாட்டில் இருந்து வேறானது என்பதனால் இந்த ஆய்வில் அக்கோயிலைப் பற்றி விரித்துரைக்கவில்லை.

## தெய்வவுரு

மாதா கோயில் அம்மனுக்கு உருவம் இல்லை. ‘கல்’ வைத்தே வழிபடப்படுகின்றது. தொன்மைக் கோயிலான வீரபாகு அவர்களின் வீட்டில் உள்ள அம்மனின் கல், வெள்ளைக் கல்லாகக் காணப்படுகிறது. சங்கொன்றின் நுனிப்பகுதியில் காணப்படும் சுருள் போன்ற அமைப்பில் கூம்புருவமாக ஒரு சாண் அளவுக்குட்பட்டதாகக் காணப்படுகிறது. சங்ககாலத்தில் அடி பெருத்து நுனி சிறுத்த கறுப்பு நிறத்தாலான கந்து, நந்தா விளக்கேற்றி வழிபடப்பட்டதை இவ்வடிவம் ஞாபகப்படுத்துகிறது. ஏனைய நான்கு கோயில்களிலும் கருங்கல்லாலான கூம்புருவக்கற்களே வைத்து வழிபடப்படுகின்றன. பரிவாரத் தெய்வங்களும் கூம்புருவக்கற்கள் வைத்தே வழிபடப்படுகின்றன. வீரபாகு வீட்டுக் கோயிலிலுள்ள வெள்ளைக்கல்லின் சுருள்க்கரையில் சிதைவு ஏற்படத் தொடங்கியுள்ளதெனினும், அது தனித்துவமான ஏனைய மாதா கோயில்களில் உள்ள கல்லைவிடச் சிறப்பானதாக அமைந்துள்ளது.

## கோயில் அமைப்பு

நாட்டார் தெய்வ வழிபாடுகள் பொதுவெளியில் மரத்தடி, குளத்தடி, கிணற்றடி போன்ற இடங்களில் அமைந்திருப்பது வழக்கம். அதுபோலவே இக்கோயில்களும் பொதுவெளியில் ஆரம்பிக்கப்பட்டன. இன்றும் திருமதி பானுமதி குணசிங்கம் அவர்களின் இல்லத்தில் சீமெந்துப்பீடம் அமைத்து, நடுவில் அம்மனும் நான்கு பரிவாரத் தெய்வங்களுமாக கூரையின்றி அமைந்து காணப்படுகிறது. திருமதி வீரபாகு தெய்வயானை, வன்னியசிங்கம் கனகநாதன், திருமதி பானுமதி குணசிங்கம் ஆகியோரின் காணிகளில் அமைந்துள்ள கோயில்கள் ஒரே நேர்கோட்டில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஏனைய எல்லாக் கோயில்களும் சீமெந்துக் கட்டடங்களாலான கூரையை உடைய சிறிய கோயில்களாக அமைந்துள்ளன. முதற்கோயில் மட்டும் மேற்குத்திசையை நோக்கியிருக்க ஏனையவை கிழக்குத்திசையை நோக்கியவையாக அமைந்துள்ளன. அவற்றுள் சாஸ்திர முறைப்படி - சோதிடர் ஆலோசனைப்படி கட்டப்பட்டவையும் உண்டு.

## மாதா கோயில் அம்மன் பற்றிய கதைகள்

- இந்த அம்மனுக்கு உருவமில்லையெனினும் வீட்டவருக்கு ஒரு விடயம் சொல்வதற்கோ, சிக்கலைத் தீர்ப்பதற்கோ இத்தெய்வத்தை வேண்டின், அதனை

உடனடியாக நிறைவேற்றும். பொழுது சாய்ந்ததன்பின் (இருட்டியபின்) கோயிலடிக்கு யாரும் செல்வதில்லை என்றும், இரவில் கிழவி ரூபத்தில் (வயதுபோன பெண்) வெள்ளை உடுப்பு உடுத்தவளாக உலாவுவாள் என்றும், எதிரில் வந்து ஏதும் சொல்லிவிட்டுப் போவாள் என்றும் திருமதி தெய்வயானை வீரபாகு (வயது, 82) கூறினார்.

- திருமதி பானுமதி குணசிங்கம், வீட்டின் மேற்குப்புற அலம்பல் வேலியை அகற்றி எல்லை அமைக்கும்போது இக்கோயிலையும் எடுத்துவிட்டார். இக்கோவிலுக்கு முன்பு விளக்குவைத்த வெளிநாட்டில் உள்ள அண்ணாவின் கனவில் இத்தெய்வம் தோன்றியதாகவும், அவர் அடுத்தநாள் கோயிலில் என்ன செய்தீர்கள் எனக்கேட்டு, நடந்ததை அறிந்து, கோயிலை மீள அமைக்கக் கூறியபடி இக்கோயிலை அமைத்ததாகவும் திரு.ஆ. குணசிங்கம் (வயது, 60) கூறினார்.
- யுத்த இடம்பெயர்வால் கைவிடப்பட்ட கோயிலை மீள ஆதரிக்கவில்லை. வீட்டில் நிறையப் பிரச்சினைகள் நடந்தன. கட்டுக்கேட்ட இடமெல்லாம் குலதெய்வத்தை ஆதரிக்குமாறு கூறினர். அதன்பின்பே மீளக் கோயில் அமைத்தோம். இப்போது பிரச்சினைகள் குறைந்துவிட்டன என திரு. வன்னிய சிங்கம் கனநாதன் (வயது, 72) குறிப்பிட்டார்.

இத்தெய்வத்தை வணங்கிய எவரும் இன்றுவரை இத்தெய்வ வழிபாட்டை நாட்டாரியல் பண்போடு அவ்வண்ணமே ஆதரித்து வருகின்றனர். கனவில் தோன்றி காட்சியளித்தல், கிழவி ரூபம், வெள்ளை ஆடை என்பன யாவரும் உரைக்கும் பொதுவிடயங்களாக உள்ளன.

## வழிபாட்டு முறைகள்

இவ்வாலயங்களில் வெள்ளிக்கிழமைகளில் விளக்கு வைத்தல் நிகழ்கிறது. திருமதி தெய்வயானை வீட்டில் திங்கட்கிழமைகளில் விளக்கு வைக்கும் வழக்கமும் இருக்கிறது. விளக்கு வைக்கும் நாட்களில் வெற்றிலை, பாக்கு, பழம் என்பன படையல் வைக்கப்படுகின்றன.

தைப்பொங்கல், சித்திரைப் பொங்கல், நவராத்திரி, திருவெம்பாவைக் காலங்களில் விசேட பூஜை, வழிபாடுகள் செய்யப்படுகின்றன. அயலிலுள்ளவர்களும் நேர்த்தி நிறைவேற்றும் நாட்களில் கலந்துகொள்கின்றனர். வருடத்தில் ஒரு நாள் மோதகப் பூசை நடைபெறும். விசேட தினங்களில் பொங்கல் பொங்கி, பலகாரங்கள் பல (வடை, மோதகம், முறுக்கு, பால்றொட்டி, சீனியரியாரம்...) வைத்து மா, பலா, வாழை, மாதுளை உள்ளிட்ட பழங்கள் படைத்துப் பூசை செய்யப்படுகிறது. இக்கோயில் பூசை ஆண்வழிச் சமூகத்தாலேயே நிகழ்த்தப்பட்டு வருகின்றது.





அம்பன் கிழக்கு திருமதி தெய்வயானை வீரபாகு வீட்டு வளவிலுள்ள மாதா கோவில்

வீட்டில் உற்பத்தியாகின்ற பொருள்களில் முதற் பொருளை (பழங்கள், தேங்காய், நெல்.....) இத்தெய்வத்துக்குப் படைத்தபின்பே பயன்பாட்டுக்கு எடுக்கும் வழக்கம் காணப்படுகின்றது.

## சமூக அடுக்கமைவு

மேற்சுட்டிய ஐந்து மாதா கோயில்களும் வேளாள சமூகத்தவர்க்கானவை. அதிலும் குறித்த இரத்த பந்தம் உள்ள குடும்பங்களுக்கானவை. விவசாய நிலமும் ஆடு வளர்ப்பும் உள்ள பிராந்தியத்தில் உள்ளவை. இவற்றைவிட இதேபகுதியில் சிறுகுடி வேளாளரான பள்ளர் சமூகத்தவரிடம் ஒரு மாதா கோயில் இருப்பதை அறிந்து அங்கு சென்றோம். அக்கோயில் பூசாரியான வேலுப்பிள்ளை சசிகரன் (வயது, 41) அக்கோயில் பற்றிய விபரங்களைக் கூறினார். தன்னுடைய தாத்தா காலத்துக்கு (சிதம்பரம்) முற்பட்ட கோயில் என்றும், கல் வைத்து அம்மனை வழிபட்டனர் என்றும், 2000 ஆம் ஆண்டு வரை மாமனார் பூசை செய்து வந்ததாகவும், 2010 இல் யுத்தம் நிறைவுற்றதன்பின் வந்து பார்த்தபோது கோயில் முற்றாக சிதைந்திருந்தது என்றும், தான் தான் தற்போதைய கோயிலைக் கட்டி எழுப்பியதாகவும் கூறினார். ஆகமக் கோயில்களைப்போல கருவறை, முன்மண்டபம்

உடையதாகவும் கல்லை அகற்றிக் கருங்கல்லாலான அம்மன் திருவுருவத்தை ஸ்தாபித்துக் கும்பாபிஷேகம் செய்ததாகவும், பரிவாரத்தெய்வமாக அண்ணமார் தெய்வம் இருப்பதையும் சுட்டிக்காட்டினார். இங்கு ஆடிப்பூரம், கும்பாபிஷேக தின மணவாளக்கோல விழா, பங்குனி உத்தரம் என்பன சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

விசேட தினங்களில் இவருக்குக் கலைவரினும் கட்டுச் சொல்வதில்லை. இவரின் அக்காவின் மகளே கலையாடி, கட்டுச் சொல்கிறார். முன்பு பில்லி சூனியம், வசியம், செய்வினை அகற்றல், பேய் - பிசாசு ஓட்டுதல் போன்ற நிகழ்வுகள் நடைபெற்றதாகவும், தனது தாய் மந்திரவித்தையில் வல்லவர் எனவும், இவை அனைத்தையும் அவர் செய்ததாகவும் கூறினார். ஆனால், தாயார் விமர்சனத்துக்குள்ளானதினால், அதனைத் தொடர்ந்து தாம் பழகவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

வீரபாகுவின் மகன் திரு.வீ. காந்தனும் பில்லிசூனியம், செய்வினை, வசியம் முதலான தீவினை நீக்கத்துக்காகவே இந்தத் தெய்வம் வழிபடப்படுகிறது எனக் கூறியமை இதனுடன் ஒத்துப்போகிறது.

## சில அவதானிப்புகள்

- மாதா கோயில் என்பது காலனித்துவத்தின் பேறாய் பயன்பாட்டு நிலையில் ஈழத்தில் இருந்து வந்திருக்கிறது. ஒடுக்குமுறைக்குப் பயந்து அல்லது அதற்கு எதிராக இது பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது.
- ஈழத்துச் சைவ வாழ்வில் அம்மன் வழிபாட்டுடன் தொடர்புடைய இச்சொல், குறித்த பரம்பரையினரின் குலதெய்வத்தை அல்லது முன்னோர் வழிபாட்டைச்சார்ந்த ஒன்றென்றே கருத முடிகிறது.
- இப்பரம்பரையினரிடம் பணிபுரிந்த சிறுகுடி வேளாளர் இத்தய்வத்தின் திருவருளை வியந்தோ அல்லது வேளாளரை ஒத்தவராகத் தம்மைக் கருதியோ, அன்றி விசுவாசத்தாலோ இத்தெய்வத்தை தம் குடியிருப்புப்பகுதியில் உருவாக்கியிருக்கலாம். இன்றும் கோயில் தண்டலுக்கு வேளாளரிடம் செல்லும் வழக்கம் உண்டு என்று பூசாரி கூறியமை குறிப்பிடத்தக்கது.
- வெவ்வேறு கற்களால் குறிப்பிட்ட பிரதேசத்தில் (அம்பன்) இத்தெய்வவுரு வழிபடப்படுகிறது.
- வீட்டுவளவில் சிறுகோயில் வழிபாடாகக் காணப்படுகின்றது. சிறுகுடி வேளாளரின் கோயில் மேனிலையாக்கத்துக்கு உள்ளாகியிருக்கிறது. இது சாதிய நீக்கம் - தம்மைத் துறத்தல் சார்ந்த செயற்பாடாகவே பூசாரியின் உரையாடல் வழி புரிந்துகொள்ள முடிந்தது.
- வேளாண்மை, ஆடு வளர்ப்பு என்பவற்றில் அப்பகுதி மக்கள் ஈடுபடுவதை - அவர்கள் வேளாண்மையாளர்களாக இருப்பதனை அவதானிக்க முடிந்தது. நேபாளத்தில் உள்ள பதிவரா மாதா கோயிலும் ஆடு வளர்ப்புடன் தொடர்புபட்டதாக இருப்பது குறிப்பிடத்தக்கது.
- தீவினைகளுக்கு எதிராகக் கோயிலமைத்து வழிபடப்படுகின்ற நேர்நிலைத் தெய்வம் இதுவாகும்.
- பெண் தெய்வமெனினும் ஆண்வழிப் பூசாரிகளே பூசை செய்து வருகின்றனர்.
- தாய்மையின் அடையாளமாக, தூய்மையின் சின்னமாக இத்தெய்வமிருத்தலை கிழவி ரூபம், வெள்ளை உடை எனும் சித்தரிப்புகள் புலப்படுத்துகின்றன.
- இந்தக் கோயில்கள் எதிலும் பலியிடலோ, மட்ச - மாமிசப் படையல்களோ இடம்பெறுவதில்லை.

## நிறைவுரை

குலதெய்வ வழிபாடுகளில் ஒன்றாக அம்பன் பிரதேசத்து மாதா கோயில் அம்மன் வழிபாடு காணப்படுகிறது. இது சைவ வேளாளர் சமூகத்தின் வழிபாடாகும். மாதா எனும் சொல் அன்னையைக் குறிக்கும் எனினும், யாழ்ப்பாணத்தில் மாதா கோயில் என்பது கத்தோலிக்க கிறிஸ்தவ மேரி மாதா கோயில்களையே பொதுவில் சுட்டுகின்றன.

ஆனால் இவை சைவக் கோயில்கள்; காலனிய ஆதிக்கங்களுக்குப் பயந்தோ, அன்றி எதிர்நிலை - நேர்நிலை எடுத்தோ இச்சொல் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். மாதா என்பது அன்னையே எனப் பொருள்கொண்டு இப்பெயரைச் சூட்டி இருக்கலாம். விவசாய நிலத்தோடு இணைந்து வேளாளர் மரபின் வீட்டுவளவில் இருக்கின்ற காவல் தெய்வம் இதுவாகும். தீவினைத் துன்பத்தில் இருந்து காக்கும் தெய்வம் இது. ஆரம்பத்தில் அம்மன் தெய்வத்துக்கான கல் மட்டுமே வைத்து வழிபடப்பட்டது. காலப்போக்கில் பிள்ளையார், முருகன் உள்ளிட்ட தெய்வங்களும் இணைத்து வழிபடப்பட்டன. பல்வகைக் கற்களால் இத்தெய்வ வழிபாடு நிகழ்த்தப்படுகின்றது. வேளாளரின் வழிபாடு சிறுகுடி வேளாளரிடம் சென்றமை அக்கால சமூக அடுக்கமைவை ஆதாரப்படுத்துகிறது. உணவுப் படையல் சமூக, பொருளாதார, பண்பாட்டு அடிப்படையில் நிகழ்த்தப்படுகிறது. குறித்த பரம்பரையினரின் வழிபடு தெய்வம் எனினும், மாதா கோயில் என்ற குறிப்பு கால, தேச, வர்த்தமானம் கடந்த அர்த்தப்பாடுகளை உணர்த்தி நிற்கிறது.

இனக் குழுமம், சமயம், மொழி, பண்பாடு ஆகியவற்றால் வேறுபாடுகளைக் கொண்ட பன்மைப் பண்பாட்டுச் சமூகங்களில் (MULTI – CULTURAL SOCIETIES) சமாதான வழிகளில் தீர்க்க முடியாதனவான சிக்கலான அரசியல் பிரச்சினைகள் தீவிரமடைந்து உள்நாட்டுக் குழப்பங்களிற்கும், உள்நாட்டு யுத்தங்களிற்கும் வழிவகுத்துள்ளன. இதனை மூன்றாம் உலக நாடுகளின் சமகால வரலாறுகள் உணர்த்தியுள்ளன. இவ்வரசியல் பிரச்சினைகளைப் பேச்சு வார்த்தைகள் மூலம் சமாதான வழியில் தீர்த்தல், சம்மந்தப்பட்ட நாடுகளின் அமைதிக்கும், சமூக – பொருளாதார – அரசியல் முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக அமைகிறது. அமைதி வழியான தீர்வை அரசியல் தீர்வாக (POLITICAL SOLUTION) அமைப்பதோடு அதிகாரப் பகிர்வு (POWER SHARING), சுயாட்சி (SELF RULE) ஆகியவற்றுக்கான ஆட்சிக் கட்டமைப்புக்களை, அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் மூலம் உருவாக்குவதும் இன்றியமையாத முன் தேவையாக உள்ளது. அந்த வகையில், ‘அதிகாரப் பகிர்வும் சுயாட்சியும் : மூன்றாம் உலக அனுபவம்’ என்னும் இப்புதிய தொடரில் மூன்றாம் உலக நாடுகளான இலங்கை, இந்தியா, மலேசியா, பாகிஸ்தான், நைஜீரியா, எத்தியோப்பியா, சூடான், மெக்சிக்கோ ஆகிய நாடுகளின் அனுபவங்களை விளக்கியுரைக்கும் கட்டுரைகளின் தமிழாக்கம் வெளியிடப்படும். பல்வேறு தீர்வு மாதிரிகள், அத்தீர்வு மாதிரிகளின் பின்னால் உள்ள அரசியல் கோட்பாடுகள் (POLITICAL THEORIES), அரசியல் யாப்புத் தத்துவங்கள் (CONSTITUTIONAL PRINCIPLES) என்பனவும் விளக்கிக் கூறப்படும்.

***ஆங்கில மூலம்: பெர்னாட் நைட்ஸ்மன்***

# நான்காம் உலகமும் அரசு இல்லாத தேசிய இனங்களும்

## 1

**கந்தையா சண்முகலிங்கம்**



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த ‘இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்’ என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.
‘நவீன அரசியல் சிந்தனை’, ‘கருத்தியல் எனும் பனிமூட்டம்’, ‘இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்’ ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

‘நா ன்காவது உலகம்’ (The Fourth world), அவ்வுலகிற்குள் சிறைப்பட்டிருக்கும் அரசு இல்லாத தேசிய இனங்கள் (Stateless Nations) என்ற இரு கருத்தாக்கங்கள் உலகின் புவி அரசியலை (Geo - Politics) புரட்சிகரமான புதிய கோணத்தில் நோக்குவதற்கு உதவிய எண்ணக்கருக்களாகும்.

*மிக்சிக்கன் பல்கலைக்கழகம் (1970-1977), பேர்க்லி பல்கலைக்கழகம் (1977-2009) ஆகிய இரு பல்கலைக்கழகங்களிலும் புவியியல் துறைப் பேராசிரியராகக் கடமையாற்றிய பேராசிரியர் பெர்னாட் நைட்ஸ்மன் (1941-2000) நான்காவது உலகம் பற்றிய ஆய்வுகளின் முன்னோடிகளில் ஒருவர். அவர் நான்காவது உலகம், அரசு இல்லாத தேசிய இனங்கள் ஆகிய இரு கருத்தாங்களையும் அறிமுகம் செய்யும் ஆய்வுகள் பலவற்றை எழுதியுள்ளார். அவரின் ஆங்கிலக் கட்டுரையொன்றினைத் தழுவித் தமிழில் எழுதப்பட்ட கட்டுரை இங்கே தரப்பட்டுள்ளது.*

## அறிமுகம்

இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் ஆசியா, ஆபிரிக்கா ஆகிய இரு கண்டங்களிலும் புதிய அரசுகள் உதயமாகின. கிழக்கு ஐரோப்பாவிலும், சீனாவிலும் கம்யூனிஸ்ட் அரசுகள் தோன்றின. இப்பின்புலத்தில்தான் மூன்றாவது உலகம் என்ற எண்ணக்கரு தோற்றம் பெற்றது. முதலாளித்துவ பொருளியல் மூலம் வளர்ச்சி பெற்ற ஐரோப்பிய நாடுகளையும், ஐக்கிய அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளையும் முதலாவது உலகம் என்றும்; சோவியத் ரஷ்யா தலைமையிலான கம்யூனிஸ்ட் நாடுகளை இரண்டாவது உலகம் என்றும் பிரித்து நோக்கியதோடு, இந்த இரண்டு உலகத்தினின்றும் வேறுபட்ட பொருளியல், சமூக, அரசியல் நிலைமைகளைக் கொண்டிருந்த நாடுகள் யாவற்றையும் ஒன்றுசேர்த்து மூன்றாவது உலகம் (The third world) என்றும் சமூக விஞ்ஞானிகள் கூறலாயினர். 1990களின் தொடக்க ஆண்டுகளில் சோவியத் ஒன்றியத்தின் உடைவுடன் இரண்டாவது உலகம் என்ற வகை பொருளற்றதாயிற்று. இக்கட்டத்தில் ‘நான்காவது உலகம்’ (The fourth world) என்ற வகையும் சேர்ந்து கொண்டது.

1980களின் பின்னர் உலகின் தேசிய இனங்களின் (Nations) போராட்டங்கள் வலுப்பெற்றன. 1945 ஆம் ஆண்டில் உலகளாவிய ரீதியில் 72 அரசுகள் இருந்தன. இந்த எண்ணிக்கை 1993 இல் 191 ஆக உயர்ந்தது. இந்த 191 அரசுகளின் எல்லைகளுக்குள் 5000 தேசிய இனங்களும், அவற்றின் வாழிடங்களும், தாயகங்களும் உள்ளடங்கி இருந்தன. 191 வரையான அரசுகளுள் 10க்கும் குறைவான அரசுகளே ஒரு தேசிய இனம், ஒரு அரசு (One Nation, One state) என்ற வரையறைக்குள் அடக்கக்கூடியனவாக இருந்தன. ‘நேஷன் ஸ்ரேற்’ (Nation State) என்ற கருத்துக்குப் பொருத்தமற்ற பல்தேசிய இன அரசுகளாகவே (Multi National States) உலகின் 95% ஆன அரசுகள் இருந்தன. தேசிய இனங்களை அடக்கி, ஒடுக்கி அவற்றின் பண்பாட்டை உருக்குலைத்து, மேலாதிக்கம் பெற்ற தேசிய இனத்தோடு உருத்தெரியாத வகையில் இணைத்துக்கொள்ளும் கொள்கைகளை அரசுகள் பின்பற்றின.

உலகின் 5000 வரையான தேசிய இனங்களின் நோக்கில், உலகின் அரசியல், பொருளியல், வரலாற்றையும், பண்பாட்டையும் நோக்கும் முறையை ‘நான்காவது உலகம்’ (The Fourth World) என்னும் கோட்பாடு முன்வைக்கிறது. அரசியல் புவியியல் (Political Geography) என்னும் கல்வித்துறையின் ஊடாக கிளைத்த கோட்பாடு இது. உலகின் நிலவரையை அல்லது தேசப்படத்தை மரபுவழிப் புவியியலும், வரலாறும், அரசியலும் 191 வரையான ஒடுக்குமுறை அரசுகளின் பார்வையில் விளக்கம் செய்கின்றன. அவ்விதம் இல்லாமல் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் பார்வையில் தேசப்படத்தை விளக்கும் கோட்பாடே நான்காவது உலகக் கோட்பாடு ஆகும். நான்காவது உலகக் கோட்பாடு 5000 வரையான தேசிய இனங்களின் துன்பத்தையும் துயரத்தையும் அவற்றுக்கு எதிரான இன அழிப்பு நடவடிக்கைகளையும் சமூக விஞ்ஞான ஆய்வுகளின் மையப்பொருளாக மாற்றியுள்ளது.

## தேசிய இனங்களும் மக்கள் சமூகங்களும்

புவியியல், அரசியல், வரலாறு தொடர்பான மரபுவழிப்பட்ட ஆய்வு நூல்களில் கையாளப்படும் அரசுகள் மையமுறை ஒன்று உள்ளது. இந்த முறைப்படி நாடுகள் (அரசுகள்) பிராந்தியங்கள், நாடுகளின் கூட்டுகள், வல்லாதிக்க அரசுகள் என்ற முறையிலேயே உலகப்படங்களைப் பார்க்கவும் விளக்கவும் நாம் பழக்கப்பட்டுள்ளோம். புவியியல், வரலாறு, அரசியல் ஆகிய துறைகளும் இவ்வாறுதான் உலக நிலவரையை விளக்கம் செய்கின்றன. இதற்கு மாறாக புவியியலையும், வரலாற்றையும், அரசியலையும், 5000 வரையான தேசிய இனங்களின் நோக்கில் பார்க்க முனைகின்றது இக்கோட்பாடு. இந்தப் பார்வையைத்தான் நான்காவது உலகம் என்ற கோட்பாடு வழங்குகின்றது. உலகப் பிரச்சினைகள், அவற்றிக்கான தீர்வுகள் யாவும் 5000 வரையான ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் நோக்கில் பார்க்கப்படும்போது, அத்தேசியங்களை மையப்படுத்தி நோக்கும் போது, மிகவும் வித்தியாசமான படம் ஒன்று விரிகிறது. இதுவே நான்காவது உலகம் வைக்கும் பார்வை. ஏனெனில் வழமையான பார்வை 191 வரையான உலகநாடுகள் அல்லது அரசுகள் என்ற சட்டமுறையான ஒரு வலையமைப்பை வைத்து இந்த

5000 தேசிய இனங்களைப் பார்ப்பதோடு, அவற்றை இனக்குழுமங்கள் (Ethnic groups) என்றும், சிறுபான்மையினர் (Minorities) என்றும் ஒதுக்கிவிடுகின்றது. காலனித்துவகால வல்லரசுகளும் நவீனகாலத்து அரசுகளும் எவ்வாறு இந்த 5000 வரையான தேசிய இனங்களையும், அவற்றின் நியாயபூர்வமான உரிமைகளையும், இருப்பையும் புறந்தள்ளி வந்துள்ளன என்பதை எடுத்துக்காட்டும் கோட்பாடே நான்காவது உலகம் என்னும் கோட்பாடு. உலகின் உயிரியல் பன்மைத்துவம், கலாசார பன்மைத்துவம் ஆகியவற்றை அழித்தொழிப்பதற்கான முயற்சிகள் எப்படி மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும், இறுதியில் இவை தேசங்களின் சிதைவுக்கும், உடைவுக்கும் காரணமாகின்றன என்பதையும் இக்கோட்பாடு விளக்குகிறது.

அரசியல் புவியியல் நோக்கில் உலகைப் புரிந்துகொள்வதற்கு சில கலைச்சொற்களின் பொருள் விளக்கம் மிக முக்கியமானது. தேசிய இனம் (Nation), அரசு (State), தேசிய அரசு (Nation State), மக்கள் சமூகம் (A People), இனக்குழுமம் (Ethnic Group) ஆகியனவே இந்த அடிப்படைக் கலைச்சொற்கள். இந்த கலைச்சொற்களையும் அவற்றின் வரைவிலக்கணத்தையும் அறிந்து, அவற்றை ஒன்றில் இருந்து ஒன்றை வேறுபடுத்தி பார்க்க வேண்டும். அதைவிடுத்து கண்டபடியும், பொருத்தமின்றியும் அச்சொற்களை உபயோகிக்கக்கூடாது. இச்சொற்கள் குறிக்கும் மக்களையும் அவர்களின் அடையாளத்தையும், வாழிடத்தின் புவியியல் வரையறையையும் பற்றிய கருத்துகளில் குழப்பத்தை உண்டாக்கும் முறையில் இச்சொற்களை உபயோகிப்பதன் மூலமே உலகின் பெரும்பாலான நாடுகளில் யுத்தங்கள், இன அழிப்புகள், இடப்பெயர்வுகள், அகதிகள் புலம்பெயர்வு, மனித உரிமை மீறல்கள் என்பன நடந்தேறுகின்றன. பாடநூல்கள், பத்திரிகைக் கட்டுரைகள், வானொலி, தொலைக்காட்சி யாவற்றிலும் இச்சொற்கள் மிகுந்த கருத்துக் குழப்பம் விளைவிக்கும் முறையில் உபயோகிக்கப்படுகின்றன. அகராதிகளும் குழப்பத்தைத் தீர்ப்பதாக இல்லை. குறிப்பாக Nation, State, Nation State என்பன குழப்பத்தோடு உபயோகிக்கப்படுகின்றன.

## தேசிய இனம் (Nation)

தேசிய இனம் என்ற சொல் ஒரு புவியியல் பிரதேச எல்லைக்குள் வாழும் ஓரினத்தன்மையுடைய சனக்குழுமத்திற்குப் பண்பாட்டு பிரதேச அடையாளம் ஒன்றையும் வழங்குகிறது. அவர்கள் தம்மை ஒன்றுபட்ட மக்கள் கூட்டம் (One People - 'ஒரு தாய் மக்கள் நாமே') என நினைக்கின்றனர். பொதுவான முன்னோர்களின் வழித்தோன்றல்கள் தாம் என்ற எண்ணம் இவர்களிடம் உண்டு. சமூகம், நிறுவனங்கள், கருத்தியல், மொழி, பிரதேசம் ஆகியவற்றாலும் தாம் ஒன்றிணைந்தவர்கள் என்ற எண்ணம் தேசிய இனம் என்ற கருத்தில் உள்ளடங்கி உள்ளது. சில சந்தர்ப்பங்களில் ஒரு தேசிய இனத்தினர் குறிப்பிட்ட ஒரு மதப்பிரிவைச் சேர்ந்தவர்களாகவும் அமைந்துவிடுவதுண்டு. திபெத்தியர் என்றும் பாஸ்க் (Basque) என்றும் கூறுகின்றோம். இவை தேசிய இனங்கள். இத்தேசிய இனங்களுக்கு ஒரு பண்பாட்டுத் தாயகம் உண்டு. திபெத்துக்குள் நுழைந்து ஒருவர் அங்கு வதிவதால் அவர் திபெத்தியர் ஆவதில்லை. அவர் அந்நியரே. இதேபோல பாஸ்க்மொழியைக் கற்பதால், அதனைப் பேசுவதால் ஒரு பிறத்தியான் பாஸ்க் தேசிய உறுப்பினர் ஆவதில்லை. ஆகவே தேசிய இனம் என்னும் போது, ஒரு மக்கள் கூட்டத்திற்கு ஒரு பண்பாட்டுத் தாயகம் என்று ஒன்றையும் குறிக்கிறோம். அந்தப் பண்பாட்டுத் தாயகத்தில் பிறப்பவன் அந்த தேசிய இனத்தவன். அடுத்து நாம் முக்கியமான சொற்கள் சிலவற்றின் பொருளைப் புரிந்துகொள்வோம்.

**State:** தமிழில் 'அரசு' என்கிறோம். புவியியல் எல்லை ஒன்றிற்குள் வாழும் மக்கள் தொகுதி மீது இறைமை கொண்டது அரசு. 1993 இல் உலகில் 191 அரசுகள் இருந்தன. 1945 இல் 72 அரசுகள் மட்டுமே இருந்தன. அரசு தோற்றம் பெற்ற ஆண்டு, திகதி என்பன உண்டு. அவை திட்டவட்டமாகக் கூறக்கூடியன (தமிழில் 'அரசு' என்பதை 'நாடு' என்ற சொல்லாலும் குறிப்பிடுவர்).

**Nation:** 'UNO' என்ற சுருக்கப்பெயராலும் 'United Nations Organisations' (ஐக்கிய நாடுகள் தாபனம்) என்ற தொடராலும் அழைக்கப்படும் உலக அரசுகளின் சங்கமான நிறுவனத்தின் பெயரில் உள்ள சொற்குழப்பத்தை அவதானியுங்கள். இங்கே 'States' என்ற சொல்லிற்குப் பதிலாக 'Nations' என்ற சொல் உபயோகிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். தமிழில் 'நாடு', 'அரசு' என்ற சொற்கள் ஒத்த கருத்துடையன. 'UNO' என்ற பெயரில் 'நாடுகள்' அல்லது 'அரசுகள்' என்ற சொல் இடம்பெறுவதற்குப் பதிலாக 'Nations' உபயோகிக்கப்படுகிறது. இன்று இச்சொல் வழக்கத்தில் வந்துவிட்டது. இன்று ஐ.நா தாபனத்தை எவரும் தேசிய இனங்களின் ஐக்கிய தாபனம் என்று பொருள் கொள்வதில்லை. ஆகவே UNO என்பதில் அடங்கும் 'அரசுகள்' Nations என்ற சொல்லால் பதிலீடு செய்யப்பட்டுள்ளது. நான்காவது உலகம் கோட்பாடு, Nation என்பதை State இல் இருந்து வேறுபடுத்தி நோக்குவதை அழுத்திக்கூறும். ஒரு அரசின் எல்லைக்குள் பல Nations அல்லது தேசிய இனங்கள் இருக்கும். உலகின் 95% ஆன அரசுகள் பல்தேசிய இனங்களைக் கொண்டவை.

**Nation State:** 'ஒரு அரசு, ஒரு தேசிய இனம்' என்ற கருத்தை Nation, State என்ற இரு சொற்சேர்க்கையாய்

அமையும் சொல் குறிக்கின்றது. 'நேஷன் ஸ்ரேற்' என்ற கருத்து வரலாற்றுரீதியாக ஐரோப்பாவில் உருவானது. இன்று உலகில் விரல்விட்டு எண்ணக்கூடிய சில அரசுகளே தம் எல்லைக்குள் முழுமையாக ஒரே ஒரு தேசிய இனத்தைக் கொண்டுள்ளன. போர்த்துக்கல், யப்பான் ஆகியன நேஷன் ஸ்ரேற்றுகளுக்கு உதாரணம். இத்தாலி பல அரசுகளாகச் சிதறுண்டு இருந்தது. இந்த அரசுகளின் ஒன்றிணைவால் இத்தாலி 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உருவானது. அப்போது இத்தாலிய அரசியல்வாதி ஒருவர் கூறினார்.

"இத்தாலியை உருவாக்கிவிட்டோம். இத்தாலியர்களை உருவாக்குவது இனிச் செய்யவேண்டிய வேலை."

மேலும் தேசிய இனம் தன்னைத்தானே அடையாளம் காட்டி நிற்கிறது. உதாரணமாக ஸ்பெயின் நாட்டிற்குள் கற்றலோனியர்கள் இருக்கின்றனர். அவர்களது தாயகமான கற்றலோனியா இருக்கிறது. அதை ஸ்பெயின் நாடோ, பிற எவரோ அங்கீகரித்தால் என்ன, அங்கீகரிக்காவிட்டால் என்ன, கற்றலோனியரின் இருப்பை, அதன் யதார்த்தத்தை யாரும் மறுக்க முடியாது. அது நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக இருந்து வருகிறது. தேசிய இனங்கள் பழைமையானவை. தமது தோற்றம் இன்ன ஆண்டு, திகதி நிகழ்ந்தது எனக்கூறி அவை விழாக்கள் நடத்துவதில்லை. படிப்படியாக, ஒவ்வொரு கண்டத்திலும் இத்தேசிய இனங்கள் உருவாகின. பல்வேறு அளவும், மக்கள் தொகையும் கொண்டனவாக 5000 வரையான தேசிய இனங்கள் உலகில் இன்று உள்ளன.

## மக்கள் சமூகம் (A people)

*A people* என்றதன் பொருள் பற்றி அடுத்துப் பார்ப்போம். இதன்மூலம் மக்கள் சமூகம் தன்னைத்தானே அடையாளம் செய்கிறது. ஒரு குறித்த மக்கள் சமூகம் பிறரில் இருந்து தம்மை வேறுபடுத்திக் கொள்கின்றது. இவர்களிடையே 'நாம்' என்ற எண்ணம் இருக்கும். அருகிலோ, தூரத்திலோ உள்ள பிறரை இவர்கள் தம்மில் இருந்து வேறுபடுத்துவர். பிறரும் இவர்களை வேறுபடுத்தி அடையாளம் செய்வர். பொதுவான வரலாறு, பொதுவான புவியியல் பிரதேசம், இனம், (Race), இனக்குழுமம் (Ethnicity) ஆகியவற்றால் ஓரினத்தன்மை, பிணைப்பு என்பன ஒரு மக்கள் சமூகத்திடம் காணப்படும். மொழி, மதம், கருத்தியல், கலாசாரப் பிணைப்புகள், பொதுவான பொருளியல் முறை என்பனவும் இருக்கும். தம்மை தனித்த குழுவாகத் தொடர்ந்து அடையாளம் காட்டக்கூடிய அளவுக்கு தேவையான சனத்தொகையைக் கொண்டவர்களாகவும் இவர்கள் இருப்பர். ஆகவே ஒவ்வொரு மக்கள் சமூகமும் ஒரு தேசிய இனம் ஆகும்.

## அரசு இல்லாத தேசிய இனங்கள் (Stateless Nations)

'தேசிய இனம்' (Nation), தேசிய அரசு (Nation State), அரசு (State), மக்கள் சமூகம் (A people) ஆகிய கலைச்சொற்களின் பொருளை நாம் மேலே விளக்கிக்கூறினோம். இப்போது அரசு இல்லாத தேசிய இனங்கள் (Stateless Nations) என்ற எண்ணக்கருவை எம்மால் இலகுவாகப் புரிந்துகொள்ள முடிகிறது. 191 வரையான உலக அரசுகளின் எல்லைக்குள் சிறைப்பட்டிருக்கும் தேசிய இனங்கள் ஒரு அரசுக்கு இருக்க வேண்டிய அனைத்துப் பண்புகளையும் கொண்டிருந்தபோதும் தமக்கென ஒரு அரசு இல்லாதவை; அவை அரசு இல்லாத தேசிய இனங்கள் (Stateless Nations) என நைட்ஸ்மன் விளக்கம் தருகிறார். இக்கட்டுரையில் இனிவரும் பகுதிகளில் இந்த எண்ணக்கரு பற்றிய மேலதிக விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

## அரசும் இனக்குழுமங்களும்

உலகின் நவீன அரசுகள் மூன்று வகையான வரலாற்று நிகழ்வுகளின் தொடர்ச்சியாக உருப்பெற்றன. அவை:

1. ஐரோப்பாவின் முடியாட்சி அரசுகளின் தோற்றம்
2. ஐரோப்பிய நாடுகள் கடல் கடந்து சென்று கைப்பற்றிய காலனித்துவ சாம்ராச்சியம்
3. காலனித்துவத்தின் முடிவில் உருவாகிய இன்றைய அரசுகள்

அரசு (State) என்ற சொல்லை மையப்பட்ட அதிகாரத்தைக் கொண்ட அரசியல்முறை என்ற பொருளிலேயே உபயோகிக்கிறோம். இத்தகைய அரசு தெளிவான புவியியல் எல்லையைக் கொண்டதாயும் உலக அமைப்பின் பிற அரசுகளால் அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளப்படுவதாகவும் இருக்கும். அரசுகளில் சிவில் பணித்துறையும், இராணுவம் ஒன்றும் இருக்கும். நாட்டின் நிர்வாகம் இவை இரண்டினாலும் நடத்தப்படும். சட்டங்களும், சட்டங்களினால் ஏற்கப்படும் நிறுவனங்களும் நாட்டில் செயற்படும். அரசின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட புவியியல் எல்லைக்குள் ஒரு மொழி, ஒரு பொருளாதாரம், ஒரு நாணயமுறை, ஒரு கொடி ஆகியவை காணப்படும்.

வளங்கள் யாவற்றின் மீதும் மத்தியில் உள்ள அரசுக்கு மட்டுமே உரிமை இருத்தல் கூடும். இதனைவிட அரசின் எல்லைக்குள் ஒரே ஒரு மதமே இருக்கவும் கூடும். இவ்விதமான ஒருமைத்தன்மையை அல்லது ஒரு நாடு, ஒரு மக்கள், ஒரு மொழி என்றவாறான

ஒற்றைத்தன்மையின் அழுத்தத்தையே பெரும்பான்மையான அரசுகள் போற்றுகின்றன. ஆனால் இந்த ஒற்றைத்தன்மை ஒரு திணிப்பு ஆகும். நீண்டகாலம் இருந்து வந்த தேசிய இனங்களையும், மக்கள் சமூகங்களையும் அழிக்கும் நோக்குடன் திணிக்கப்பட்டவையே இவை. இந்த ஒற்றைத்தன்மை தேசிய இனங்களின் வரலாற்றை திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்கிறது.

அரசு என்பது சட்டத்தினால் உருவாக்கப்பட்டது. ஒரு குறிப்பிட்ட திகதியில் இருப்புக்கு வருவது. தன் எல்லைக்குள் வாழும் ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட அந்தத் தினத்தில் இருந்துதான் ஒரு எல்லை, அடையாளம் ஆகியவற்றையும் அது வழங்குகிறது. ஆகவே அரசின்கீழ் உட்படும் நபர்களிற்குப் புதிய அடையாளங்கள் அதன் தோற்றகாலத்தில் இருந்து வழங்கப்படுகின்றன. இன்று பங்களாதேஷிகள் என்றோ, சேர்பியர்கள் என்றோ சொல்லப்படும் அடையாளங்கள் இப்படி உருவானவையே. 1960 ஆம் ஆண்டில் ஒரு திகதியில் 'நிக்கரகூவர்கள்' என்ற அடையாளத்துடன் வாழ்ந்த மிஸ்கிற்றோ (Miskito) இனத்தவர்கள் கொண்டுராவிற்கு உரியவர்கள் என்றுகூறி அவர்கள் வாழும் நிலப்பகுதியைக் கொண்டுராஸ் நாட்டுக்கு அளிக்கும் தீர்ப்பை சர்வதேச நீதிமன்றம் வழங்கியது. இதனால் 'நிக்கரகூவர்களாக' இரவு உறங்கச் சென்றவர்கள், மறுநாள் விடிந்ததும் தாம் 'கொண்டுராக்கள்' என்பதை அறிந்தனர். அமெரிக்க தேசத்தை உருவாக்கிய அமெரிக்கர்கள் தம் நாட்டின் மக்களிற்கு ஐக்கிய அமெரிக்கர்கள் (United Statesians) என்று ஒரு பெயரை வைத்துக்கொள்ளவில்லை. அமெரிக்கர்கள் என்றே பொதுச்சொல்லால் குறித்தனர். இதை ஒரு விதிவிலக்காகவே கருதலாம். ஏனைய எல்லா அரசுகளும் ஒரு பொதுப்பெயர் மூலம் தேசிய இனங்களைக் குறிப்பிடுகின்றன. ஹங்கேரியின் எல்லைகள் இருபதாம் நூற்றாண்டில் பல தடவைகள் மாறின. சுக்கா என்ற ஒருவரின் குடியிருப்பு ஹங்கேரி - ஸ்லோவாக்கிய எல்லையில் இருந்தது. 1918 இல் ஹங்கேரி ஐரோப்பாவின் வல்லரசுகளில் ஒன்றாக இருந்தபோது, சுக்கா ஹங்கேரியின் குடிமகனாக குறித்த இடத்தில் வாழ்ந்து கொண்டிருந்தார். அவருடைய ஜீவிய காலத்திற்குள், அவர் வேறு நான்கு நாடுகளின் குடிமகன் என்ற நாமத்துடன் வாழ வேண்டி ஏற்பட்டது. எல்லாமாக ஐந்து நாடுகளின் குடிமகனாக தன் சீவிய காலத்திற்குள் வாழும் தலைவிதி சுக்காவிற்குக் கிட்டியதாம். ஹங்கேரி அரசின் தோற்றமும், அதன் உடைவும், மாற்றமும் பற்றி இந்த சுக்கா என்பவரின் கதைமூலம் நாம் அறிந்து கொள்ளலாம்.

தேசிய இனங்களின் விருப்பங்களிற்கு மாறாக அவர்களின் சம்மதம் இன்றி உருவாக்கப்படும் அரசுகள் அத்தேசிய இனங்களுக்கு புதிய வரலாற்றை எழுதிக்கொடுத்தன.




**ஐரோப்பாவின் அரசு இல்லாத தேசிய இனங்களும் பிராந்தியங்களும்**

**Image Source - tamilnation.org**

பிரதேசம், மக்கள், வளங்கள் ஆகியவற்றின் மீது தேசிய இனங்களிற்கு இருந்த கோரிக்கை, உரிமைகள் யாவற்றையும் அரசுகள் கவனத்தில் கொள்ளாமல் உதாசீனம் செய்தன. தேசிய இனங்கள் அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து வருகின்றன என்ற மாயையை, பொய்மையை அவை உருவாக்கின. அரசுகளின் அதிகாரம், மிக அண்மைக்காலத்தில் தோன்றிய ஒன்றே. ஆனால் எந்த அரசும் இந்த உண்மையை ஏற்பதில்லை. அரசுகள் தங்கள் இராணுவங்களை, தமது பிரஜைகள் என்று உரத்துக் கூவிச் சொல்லும் மக்கள் மீது தாக்குதல் நடத்த அனுப்புகின்றன. உலகின் மூன்றில் இரண்டு பங்கு இராணுவத்தின் வேலையே தேசிய இனங்களை அடக்கி ஒடுக்குவதுதான். உலகின் மனித உரிமை மீறல்களில் பெரும் எண்ணிக்கையானவை தேசிய இனங்களுக்கு எதிரான அரசுகளின் செயற்பாடுகளின் விளைவுதான். 'அரசின் குரல்' ஒன்று எல்லா நாடுகளிலும் ஓங்கி ஒலிக்கின்றது. இதற்காகப் புலமையாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோரை அரசுகள் பணம் கொடுத்து வேலைக்கு வைத்திருக்கின்றன. அரசுகள் அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கின்றன. சரியான முறையில் சிந்தித்தல், பேசுதல், எழுதுதல் என்பன அவர்களின் வேலை. தேசிய இனங்களிற்கு எதிரான 'அரசின் குரல்' சதா ஒலிக்கிறது. சீன நாட்டைப் பற்றிய ஒரு தேசப்படத்தை எடுத்துப் பாருங்கள். அந்தப்படம் திபெத் பற்றி எப்படி வருணித்திருக்கும்? ஹான் (Han) இனத்தவர்களால் அந்த நாடு ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதை அது கூறமாட்டாது.

அதற்கு பதில் சீனாவிற்குள் திபெத்தியர்கள் இருக்கிறார்கள் என்ற விதமாகவே அந்த வருணனை இருக்கும். உதாரணமாக, சீனாவின் தேசப்பட வரலாறு (A Map History of China) என்ற நூலை பிரியன்கம்போல் என்பவர் எழுதியிருக்கிறார். அந்நூலில் 'சிறுபான்மையின மக்கள்' என்றொரு அத்தியாயம் உள்ளது. அதில் காணப்படும் ஒரு பந்தி சுவாரசியமானது.

"சீனா முழுவதுமாக 51 தேசிய சிறுபான்மை இனமக்கள் சிதறி வாழ்கிறார்கள். இவர்களுள் பெரும்பான்மையானவர்கள் சீனாவின் எல்லைப்புற மாகாணங்களில் (அயல் நாடுகளுடனான எல்லைகளை அண்டியுள்ள பகுதிகளில்) வாழ்கிறார்கள். இதனால் இவர்கள் வாழும் பகுதிகள் சீனாவின் பாதுகாப்புக்கு மிகவும் முக்கியமான பகுதிகள். சீனா இந்த மக்களின் விசுவாசத்தையும், ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்வதிலும் சீனாவுடன் அவர்களைப் பிணைத்து வைத்துக்கொள்வதிலும் அக்கறையாக உள்ளது. இன்றைய நாள்வரை வேட்டையாடும் அல்லது சேனைப்பயிர் செய்யும் பழைய சமூகங்களாக இருந்தவர்களைக்கூட விவசாயம் செய்பவர்களாக மாற்றி, கூட்டுப்பண்ணைகளில் இணைப்பதற்கு சீனா விரும்புவது இதனால்தான். தங்கள் வாழிடத்தில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த இடத்தில் உள்ள இயற்கை வளங்களையும் அங்குள்ள கைத்தொழில், விவசாய வாய்ப்புகளையும் பயன்படுத்தக்கூடியவர்களாக அவர்களை மாற்ற சீனா விரும்புகிறது."

மேலே குறிப்பிட்ட கதையை நான்காவது உலகப் பார்வையில் சொன்னால் எப்படி இருக்கும் என்று பார்ப்போம்.

"சீனாவில் ஆதிக்கம் செலுத்தும் ஹான் இனத்தவர்கள் சீன அரசின் எல்லையை விஸ்தரித்துக் கொண்டுள்ளார்கள். இந்த எல்லை விஸ்தரிப்புக்காக 51 தேசிய இனங்களை கூறுபடுத்துதல், அவர்கள் பகுதிகளை துண்டாடுதல், அம்மக்களையும் அவர்கள் பகுதிகளையும் தமது எல்லைக்குள் அகப்படுத்துதல் ஆகிய வேலைகளைச் செய்தார்கள். இந்த தேசிய இனங்களுள் பெரும்பாலானவை சீனாவின் எல்லைப்புறத்தில் வாழ்கின்றன. இவர்களின் வாழிடங்கள் சீனாவின் ஆக்கிரமிப்பில் உள்ளன. சீனா மட்டுமல்ல இந்தியா, வியட்னாம், பர்மா, மொங்கோலியா என்பனவும் இவர்களின் வாழிடங்களை ஆக்கிரமித்துள்ளன. சீனா இந்த மக்களின் பகுதிகளுக்கு இராணுவத்தை அனுப்புகிறது. இம்மக்களைத் தம் நாட்டின் பகுதியாக மாற்றுவதற்கு நிபுணர்களை அனுப்புகிறது. பெயிங்கில் உள்ள ஆட்சிக்கு விசுவாசம் காட்ட வேண்டும். தம் இறைமையை இந்த மக்கள் பெயிங்கிடம் கையளிக்க வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இதனால் தான் சீனா கூட்டுறவுப் பண்ணைகளை அமைக்கிறது. கசாக், கிரிகி, திபெத்தியன், உஸ்பெக், தஷிக், மிஆஓ, லிசு, லாகு ஆகிய பல்வேறு இன மக்களின் பொருளியல் வாழ்க்கை முறையை மாற்ற சீனா முயல்கிறது."

அதன்மூலம் அந்தப் பகுதிகளின் வளங்களைச் சுரண்டுவதற்கும் கொள்ளையடிப்பதற்கும் சீனா முயல்கிறது.

உலகின் எல்லா அரசுகளுமே தேசிய இனங்களின் வரலாற்றையும், புவியியலையும் அழித்துவிடவே முயற்சிக்கின்றன. தேசிய இனங்களிற்கு புதிய பெயர்கள் சூட்டப்படுகின்றன. ஊடகங்களும் வெவ்வேறு இன மக்களிற்கு புதிய பாடங்களைப் போதிக்கின்றன. நீங்கள் எல்லோரும் 'ஒரு மக்கள்' ஒரு தேசத்திற்குள் வாழ்பவர்கள். நீங்கள் சீனாவின் மக்கள் என்று அவர்களிற்குப் போதிக்கப்படுகிறது.

உலகின் அரசுகள் பெரும்பாலானவை தத்தம் நாடுகளை ஓரினத்தவர்களைக் கொண்டவை எனப் பிரகடனம் செய்கின்றன. மக்களை ஒரு தாய் மக்கள் என்று உரத்துச் சொல்கின்றன. ஆனால் உலகின் 191 நாடுகளில் 95% ஆனவை பல்தேசிய நாடுகளாகும். இவற்றின் எல்லைகளுக்குள் பல இனங்களும் மக்களும் வாழ்கிறார்கள். பல இன மக்களின் பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. சில வேளைகளில் இம்மக்களின் சம்மதம் இல்லாமலே இவர்களது பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. உலகின் 5000 வரையான தேசிய இனங்கள் தங்கள் உரிமைகளிற்காகப் போராடிக் கொண்டிருக்கின்றன. உலகின் 40% கடற்பரப்புக்கு இவர்கள் உரிமை கோருகிறார்கள். தம்மைச் சூழ்ந்துள்ள வளிமண்டலத்திற்கும்கூட உரிமை கோருகிறார்கள். இந்தத் தேசிய இனங்கள் பழைமையானவை. இவற்றோடு ஒப்பிடும்போது அரசுகள் புதியன. அரசுகள் பல்வேறு அளவும் பருமனும் உடையவை. நாயுறு (Nauru) என்ற அரசின் மக்கள் தொகை 10,000; பெலிஸ், பஹமாஸ் போன்ற சில அரசுகள் இரண்டு இலட்சம் மக்கள் தொகையை உடையவை. இவற்றோடு ஒப்பிடும்போது இந்தோனேசியா போன்றவை மிகப்பெரிய நாடுகள். உலகின் மக்கள் தொகையில் நான்காவது இடம்பெறும் இந்தோனேசியா 13,700 தீவுகளைக் கொண்டது. இந்த அரசுக்குள்ளே 250 தேசிய இனங்கள் உள்ளன. ஒரு அரசு, ஒரு இனம் என்ற வகையில் அமையும் அரசுகள் மிகச்சிலவே உள்ளன. உலகின் 5% ஆன அரசுகளே Nation State என்ற இந்த வகையின. ஐஸ்லாந்தும், போர்த்துக்கல் அரசும் ஒரே மக்கள் ஒரே அரசு என்ற வகைக்கு உதாரணங்கள். உலகின் பெரும்பாலான அரசுகள் பல்தேசிய அரசுகள். நைஜீரியா - 450, எத்தியோப்பியா - 50, இந்தியா - 350 என்றவாறு தேசிய இனங்களின் எண்ணிக்கை நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது.

அரசுகள் தேசங்களாக (Nation) தம்மை மாற்றிக்கொள்ள முயல்கின்றன. அரசியல், பண்பாட்டு விருத்தி, நாட்டை புவியியல் ரீதியில் ஒன்றிணைத்தல், பொருளாதார விருத்தி, கல்வி விருத்தி என்பன யாவும் தேசத்தைக் கட்டி எழுப்புதல் (Nation Building) என்ற தேவையை நோக்கியனவே. ஒரு தேசியக்கொடி, ஒரு தேசியகீதம், வரலாறு, பள்ளி மாணவர்களுக்கான தேசப்படப் புத்தகங்கள் என்பன யாவும் தேசத்தைக் கட்டி எழுப்பும் பணிக்காகவே நடைபெறுகின்றன. இத்தாலியை ஒன்றிணைத்த பின்னர் அந்த நாட்டு அரசியலாளர் ஒருவர் "இத்தாலியை நாங்கள் உருவாக்கிவிட்டோம். இத்தாலியர்களை உருவாக்குவதுதான் இப்போது நமக்குள்ள பணி" (We have made Italy. Now we have to make Italians) என்று கூறியது கருத்தாழம்மிக்க ஒரு கூற்று என்பதை நாம் கவனித்தல் வேண்டும். அரசுகள் 'தேசத்தை கட்டி எழுப்புதல்' பற்றியும் 'இனங்களை அழித்தல்' பற்றியுமே பேசுகின்றன. போர், எல்லை விஸ்தரிப்பு, ஆக்கிரமிப்பு, காலனித்துவம், முன்பிருந்த நாட்டை துண்டு போட்டு பிரித்தல் போன்ற பல வழிகளில் புதிய அரசுகள் தோன்றும். இவ்விதம் புதிய அரசுகள் தோன்றும் போது புதிய சொற்கள் உருவாக்கப்படும். தேசிய இனங்களிற்கு புதிய அடையாளங்கள் வழங்கப்படுகின்றன. தேசிய இனங்கள் எப்போதும் அடையாளங்களை கலாசாரம், குடும்பம், மொழி என்பனவற்றின் ஊடாகவே பெறுகின்றன. தேசிய இனங்கள் உக்ரேனியன், ஸ்லோவக், பொஸ்னியன் என்று பல்வேறு பெயர்களை பெறுகின்றன. தேசங்களைக் கட்டியெழுப்பும் போது தேசிய இனங்களின் சொந்த அடையாளங்கள் அழிக்கப்படுகின்றன. இதுதான் சோவியத் ரஷ்யா, செக்கோஸ்லவாக்கியா, யூகோசிலேவியா ஆகிய நாடுகளில் நிகழ்ந்தது. இது தொடர்பாக வரலாறு நல்ல படிப்பினைகளை எமக்குச் சொல்கிறது.

புலமைமையாளர்கள், கல்வியாளர்கள், பத்திரிகையாளர்கள், இராணுவ அதிகாரிகள் ஆகிய எல்லோரும் ஒன்று சேர்ந்து புதிய சொற்களை தேசிய இனங்களுக்கு வழங்குகிறார்கள். புதிய சொற்களை உருவாக்குவதில் அரசுகள் பின்னே நின்று இவர்களுக்கு ஊக்கம் கொடுக்கின்றன. இனக்குழுமங்கள் (Ethnic Group), சிறுபான்மையினர் (Minorities), குடியானவர்கள் (Peasants), குலங்கள் (Tribes), மந்தை வளர்ப்போர், விவசாயிகள், தாழ்த்தப்பட்டோர் இப்படியான புதிய அடையாளங்களை அவர்கள் மேல் சுமத்துகிறார்கள். சில வேளைகளில் குழுக்கள், சனக்கூட்டம், வறியோர் போன்ற பொதுச் சொற்களும் உபயோகப்படுத்தப்படும். இதனால்தான் உலகின் அரசுகள் தேசிய இனங்களின் பெயர்களை திரிபுபடுத்துகின்றன. அவற்றை முகமற்ற, பெயரில்லாத, குறித்த வாழிடத்தைக் கொண்டிராத மக்கள் குழுவாகக் காட்ட முயல்கின்றன. தேசிய இனங்கள் அரசுக்கு எதிராக ஆயுதம் தாங்கிப் போராடப் புறப்பட்டால் கிளர்ச்சியாளர்கள், பிரிவினையாளர்கள், தீவிரவாதிகள், அதிருப்தியாளர்கள், பயங்கரவாதிகள், கைக்கூலிகள், கம்யூனிஸ்டுகள் எனப் பல பெயர்களைச் சூட்டி அழைப்பர். அவர்களின் உண்மைப் பெயர்களை அரசுகள் கூறுவதில்லை. தென்சூடான், காஷ்மீர், பர்மா, ஈராக், துருக்கி, அங்கோலா, மேற்கு பப்புவா ஆகிய நாடுகளில் எந்த தேசிய இனங்கள் போராட்டத்தை 1980களிலும் 1990களிலும் தொடங்கின என்பது குழப்பமானதாகவே உள்ளது. காரணம் அரசுகள் உருவாக்கிய சொற்குழப்பமே. உலகின் உள்நாட்டுப் போர்கள், அதனால் ஏற்படும் இடப்பெயர்வுகள், இன அழிப்பு, படுகொலைகள் ஆகிய சொற்களும் ஒரே நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன. அரசு தேசிய இனங்களை ஒடுக்குவதற்கு உதவுவதுதான் அந்த நோக்கம். ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் ஒரு பெயர் உண்டு. அவற்றுக்கு ஒரு பிரதேசம், வாழிடம் உண்டு. இச்சொற்கள் இவற்றைக் குறிப்பிடத் தவறுகின்றன. உதாரணங்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

| தேசிய இனத்தின் பெயர் | அரசினால் உபயோகிக்கப்படும் பெயர் |
|---|---|
| ஹரேன் (Karen) | தாய்லாந்து மலைவாழ் இனம் |
| தைகிரியன் (Tigreans) | எதியோப்பியக் குடியானவர்கள் |
| பலஸ்தீனியர் | இஸ்ரேலிய இனக்குழுமம் |
| குர்தியர் (Kurds) | மலைவாழ் துருக்கர் |
| மேற்கு பப்புவா | இரியன் யயா |

இச்சொற்பிரயோகங்கள் தேசிய இனங்களின் வரலாற்றையும் புவியியலையும் திரிபுபடுத்துவதற்காக உபயோகிக்கப்படுகின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் 1514 ஆவது தீர்மானப்படி தேசிய இனங்களிற்கு சுயநிர்ணய உரிமை (Selfdetermination) உள்ளது எனக் கூறப்பட்டுள்ளது. இத்தீர்மானம் தேசிய இனங்களை 'A people' எனக் குறிக்கிறது. சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது, மனித உரிமை மீறல்கள், சூழல் அழிவு ஆகியவற்றின் பின்னணியில் உள்ள பிரச்சினைகள் 'நான்காவது உலகம்' பற்றியனவே. இந்த மக்களின் வரலாறு, புவியியல், அரசியல் பற்றிய கல்வியே 'நான்காவது உலகம்' என அழைக்கப்படும் விடயமாகும். 'Ethnic' என்ற சொல் ஆரம்பத்தில் யூத, கிறிஸ்தவ மதத்தைச் சாராத மக்களைக் குறிக்கப் பயன்பட்டது.

இன்று வெள்ளையர் அல்லாதவராயும், அரசியல் அதிகாரம் அற்றவர்களாயும் உள்ள பிற இன மக்களை சுட்டுவதாக இச்சொல் பயன்படுகின்றது. தம் சொந்த நாட்டை விட்டு வேறொரு நாட்டிற்கு புகுந்துள்ள மக்கள் குழுக்களைக் குறிப்பிடும் முறையில் Ethnic என்ற சொல் உபயோகிக்கப்படுகின்றது.

| தேசிய இனங்களுக்கும் அரசுகளுக்கும் இடையிலான சில வேற்றுமைகள் | | |
|---|---|---|
| | தேசிய இனம் | அரசு |
| 1. வரைவிலக்கணம் | பொதுவான பண்பாட்டைக் கொண்டவர்கள். பிரதேச ரீதியாக ஒரு வாழிடத்தைக் கொண்டவர்கள். அந்த வாழிடம் தாயகமாக இருக்கும். தம்மைப் பிறரில் இருந்து பிரித்தறியும் அடையாளங்களை வகுத்துக் கொண்டவர்கள். | பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட பிரதேசத்தில் அரசியல் சட்ட அதிகாரத்தைக் கொண்டு இயங்குவது. சிவில் நிர்வாகம், இராணுவம் என்ற இரண்டின் மூலம் குறிப்பிட்ட நில எல்லைகளுக்கு உட்பட்ட மக்களை கட்டுப்படுத்துவது; பிரதேச விஸ்தரிப்பு, படையெடுப்பு, போர்கள், ஒப்பந்தங்கள் மூலம் நில எல்லைகளை வரையறுத்துக் கொள்ளும். |
| 2. சொல்லின் மூலமும் பொருளும் | Nation, Nacio என்ற லத்தீன் சொற்களில் இருந்து National என்ற ஆங்கிலச்சொல் உருவானது. தமிழில் 'தேசிய இனம்' என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. Race, Ethnic group என்பவற்றில் இருந்து வேறான அர்த்தம் கொண்ட Nation என்ற சொல்லுக்கு 'தேசிய இனம்' என்பது பொருத்தமானது. | Status என்ற லத்தீன் சொல்லில் இருந்து பிறந்தது. State. மாக்கியவல்லி இதனை Stato எனக் குறிப்பிட்டார் தமிழில் 'அரசு' என்பர். |
| 3. எல்லைகள் | ஒரு தேசிய இனத்தின் எல்லைகள் பண்பாட்டின் அடிப்படையில் வரையறை செய்யப்படும். | ஒரு அரசின் எல்லைகள் அரசியல் இராணுவ அதிகாரத்தால் சட்டவழி வரையறை செய்யப்படும். |
| 4. உள்ளடக்கப்படும் மக்கள் தொகை (Populations) | மக்கள் தொகை முழுமையாக ஒரு தேசிய இனத்தைக் கொண்டிருக்கும். | அரசின் எல்லைக்குள் அடங்கும் மக்கள் தொகை பல தேசிய இனங்களைக் கொண்டிருக்கும். |
| 5. தோற்றம் | வரலாற்று ரீதியாக வளர்ச்சி பெற்றவை. குறிப்பிட்ட ஒரு திகதியில் குறிப்பிட்ட ஒரு ஆண்டில் தோற்றம் பெற்றவை எனக் கூற முடியாது. | அரசின் தோற்றத்திற்கான திகதியையும் ஆண்டையும் குறிப்பிட முடியும். |
| 6. அடையாள அங்கீகாரம் | தேசிய இனம் தன்னைத் தானே அடையாளப்படுத்திக் கொள்ளும். தனது அடையாளங்களைத் தன் மக்களுக்குப் பண்பாட்டின் ஊடாகப் பரம்பரை பரம்பரையாகக் கடத்தும். | சட்ட ரீதியான அடையாள அங்கீகாரம் உடையது.பள்ளிக் கூடங்கள், ஊடகங்கள் மூலம் அரசின் அடையாளங்கள் பிரசாரப்படுத்தப்படும்; கற்றுக் கொள்ளப்படும். அரசு, அதன் கீழ் உள்ள பிரசைகளைஇலட்சியங்கள் (Ideals), சட்டங்கள் (Laws), பலாத்காரம் (Force) என்பன மூலம்இணைக்கிறது. |
| 7. ஒன்றிணைப்பு | தேசிய இனத்தை அதன் பண்பாடு ஒன்றிணைக்கிறது. | பிரஜைகள் என்ற முறையில் மக்கள் இணைக்கப்படுவர். |
| 8. உறுப்புரிமை | பண்பாடு, இரத்த உறவுமுறை (Kinship) அடிப்படையில் | அரசுக்கு விசுவாசம் செலுத்தும் நாட்டுப்பற்று (Patriotism). |
| 9. கருத்தியல் | தேசியவாதம்; தம் தாயகத்தை பாதுகாத்தல், அதற்கான கருத்தியல். | ஆதிக்கமுடைய தேசிய இனத்தின் இனவாதம். |

| நான்காவது உலகப் பார்வையில் சொற்பொருள் விளக்கம் | |
|---|---|
| சொற்கள், தொடர்கள் | நான்காவது உலகப் பார்வையில் விளக்கம் |
| இனக்குழும் (An Ethnic group) | ஆக்கிரமிப்புக்குள்ளான தாயகத்தில் வாழ்பவர்கள் |
| குறித்த மொழியைப் பேசும் இனக்குழுமம் | மொழி தவிர்ந்த பிற எல்லாவற்றையும் இழந்து நிற்பவர்கள் |
| தேசத்தைக் கட்டியெழுப்புதல் | தேசிய இனங்களை அழித்து அரசைப் பலப்படுத்தல் |
| அரசியல் ஒருங்கிணைப்பு (Political Integration) | படைகளை அனுப்பி வாழிடத்தை கைப்பற்றல் |
| குடியான (Peasants) | பெயரில்லா தேசிய இனத்தின் பெயரில்லா மக்கள் |
| பிரிவினைவாதிகள் | அரசுடன் சேர மறுக்கும் தேசிய இனம் |
| தேசிய விடுதலை (National Liberation) | ஐரோப்பியர் அல்லாதோரின் காலனித்துவத்தில் இருந்து விடுதலை பெறுதல் |
| தேசிய பாதுகாப்பு | தேசிய இனங்களை அரச இராணுவம் ஆக்கிரமித்தல் |
| தேசிய நலன் | அரசின் நலன் |

ஒரு நாட்டைவிட்டு இன்னொரு நாட்டிற்குள் புகுந்துள்ள மக்கள் தம் தனித்த அடையாளத்தைப் பேணுபவராயும் அரசியல் அதிகாரம் அற்றவராயும் இருப்பர். ஆனால் திபெத் நாட்டிற்குள்ளே வாழும் திபெத்தியர்களை ‘இனக்குழுமம்’, ‘சிறுபான்மையினர்’ என்ற சொற்களால் குறிப்பிடுவது அம்மக்களின் தேசிய இனம் என்ற உரிமையை மறுப்பதாகவே இருக்கும். ஒரு மக்கள் சமூகம் தன் தாயகத்திற்குள் ஒரு தேசிய இனமாக இருக்கிறது. 1984 ஆம் ஆண்டில் கொலம்பியா நாட்டின் பொகோட்டோ (Bogota) நகரில் சான்டினிஸ்ராக்களின் அரசுப் பிரதிநிதிக்கும் மிஸ்கிட்டோ (Miskito) தேசிய இனத்தின் தலைவர் ரிவேராவிற்கும் பேச்சுவார்த்தை நடந்தது.

“உங்களுக்கு நிக்கராவ நாட்டின் இனக்குழுமம் (Ethnic group) என்ற அந்தஸ்தை நாம் தருகிறோம். இதை ஏற்றுக்கொள்வீர்களா?” என்று அரசுப் பிரதிநிதி ரிவோராவைப் பார்த்துக் கேட்டார்.

“இனக்குழுமங்கள் உணவகங்களை நடத்துகின்றன. நாம் ஒரு தேசிய இனத்தவர். நாம் ஒரு படையை வைத்துப் போராடுகின்றோம். எங்கள் மக்களுக்குத் தேவை சுயநிர்ணய உரிமைதான்.” என்று பதிலளித்தார் ரிவேரா. தேசிய இனங்களைக் குறிப்பிடுவதற்கு அரசுகள் உபயோகிக்கும் ‘சிறுபான்மையினர்’ என்ற சொல் தேசிய இனம் ஒன்றின் சுதந்திரத்திற்கான வரலாற்றைத் தெரிவிப்பதில்லை. சுய ஆட்சிக்காக அம்மக்கள் செய்த போராட்டங்களைக் குறிப்பிடுவதில்லை. அவர்களின் பிரதேசம், அப்பிரதேசத்தின் வளங்கள், பிரதேசத்தின் விருத்தி பற்றிக் குறிப்பிடுவதில்லை. சிறுபான்மையினரின் நிலம், வளங்கள், சுதந்திரங்கள் எல்லாவற்றையும் அரசுகள் பறித்தெடுத்துக் கொள்கின்றன.

இனக்குழுமம் (Ethnic group), சிறுபான்மையினர் (Minority) ஆகிய இரு பதங்களும் அரசுகளால் உபயோகிக்கப்படுபவை. எந்தவொரு மக்கள் சமூகமும் தம் தாயகம் பிறரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலையில் தம்மை இனக்குழுமம் என்றோ சிறுபான்மை என்றோ அழைத்துக்கொள்வதை விரும்புவதில்லை. தேசத்தைக் கட்டியெழுப்பும் அரசுகள் தேசிய இனங்களை அழித்தொழிக்கின்றன. இந்த அழித்தொழிப்பின் போது சில சொற்களையும், தொடர்களையும் உபயோகிக்கின்றன. நான்காவது உலக நோக்கில் இச்சொற்களும் தொடர்களும் வேறுபட்ட விளக்கத்தை கொண்டவை. சில உதாரணங்களை ‘நான்காவது உலகப் பார்வையில் சொற்பொருள் விளக்கம்’ என்ற தலைப்பில் மேலே அட்டவணைப்படுத்தியுள்ளோம்.

## தேசிய இனங்களின் வகைகள்

அரசியல் விஞ்ஞானத்திலும் அரசியல் புவியியலிலும் அரசுகள் பற்றியே பேசப்படும். தேசிய இனங்களின் வகைகள், அவற்றிற்கிடையான வேறுபாடுகள், அரசாங்க முறைகள், அரசுகளின் புவியியல்சார் பரிமாணம் ஆகிய விடயங்கள் இத்துறைகளில் விரிவாகப் பேசப்படுவதில்லை. இதற்கு மாறாக நான்காவது உலகம் இவ்விடயங்களைப் பற்றியே கவனம் செலுத்துகிறது. தேசிய இனங்கள் என்றால் என்ன? அவை எங்கெங்கே உள்ளன? அவற்றின் அரசியல், புவியியல், அவற்றின் வகைகள் என்பதை பற்றி இத்துறை ஆராய்கிறது. தேசிய இனங்களை பண்பாடு, அரசியல், பொருளியல் முறைமைகளோடு தொடர்புபடுத்தி பல வகைகளாகப் பிரித்து ஆராயலாம். இவை யாவற்றையும் விட தேசிய இனங்களை அரசோடு தொடர்புபடுத்தி வகைப்படுத்தலே முக்கியமானது.

| தேசிய இனங்களை வகைப்படுத்தல் | |
|---|---|
| **தேசிய இனங்களின் வகைகள்** | **தன்மை** |
| சுயாதீனமான தேசிய இனங்கள் | நீண்டகாலமாக தமது தனித்துவத்தை நிலைநாட்டி சுயாதீனமாக இருந்துவரும் தேசிய இனங்கள்; ஸ்பெயின் நாட்டின் கற்றலோனியர் இதற்கு உதாரணம். |
| மறுமலர்ச்சியுறும் தேசிய இனங்கள் | வரலாற்றுப் பழைமையுடையவை. மீண்டும் பண்பாட்டு மறுமலர்ச்சியை அரசியல் விழிப்புணர்ச்சியையும் பெற்று முன்னணிக்கு வருபவை. |
| அரசுகளின் மையமாக அமையும் தேசிய இனங்கள் | ஐக்கிய இராச்சியத்தில் இங்கிலாந்தும், முன்னாள் சோவியத் யூனியனில் ரஷ்ய தேசிய இனமும், இந்தோனேசியாவில் ஜாவாவும் மையமான தேசிய இனங்கள் (Core nations). |
| அங்கீகாரம் பெற்ற தேசிய இனங்கள் | நீண்டகாலம் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருந்து விடுதலை பெற்றவை. லாட்வியா, எஸ்டோனியா, லிதுவேனியா, எரிற்றியா என்பன. |
| துண்டாடப்பட்ட தேசிய இனங்கள் | பல அரசுகளின் எல்லைகளுக்குள் பிரிபட்டு போயிருக்கும் தேசிய இனங்கள். 5 நாடுகளுக்கு இடையில் (துருக்கி, ஈராக், சிரியா, ஈரான், ஆர்மினியா) பிரிபட்டுப் போயிருக்கும் குர்திஸ்தான் (Kurdistan) தகுந்த உதாரணம். |
| இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளான தேசிய இனங்கள் | தேசிய இனங்கள் பலவற்றின் தாயகப் பகுதிகள் அரசுகளின் இராணுவ கட்டுப்பாட்டுக்கு உட்பட்டனவாய் உள்ளன.உ+ம்: மிஸ்கிட்டோ (Miskito) இனத்தவரின் தாயகத்தின் மூன்றில் ஒருபகுதி கொண்டுராஸ் அரசின் ஆதிக்கத்தில் உள்ளது. |
| துண்டிக்கப்பட்ட தேசிய இனங்கள் | ஒரு தேசிய இனம், தான் எந்த அரசோடு இருக்க வேண்டுமோ அதில் இருந்து பிரிக்கப்பட்டுவிட்டதாக உணரும் நிலை (இது அபூர்வமாகத் தோன்றக் கூடியது).உ+ம்: வட அயர்லாந்து, அயர்லாந்தின் பாகமாக இல்லாது பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருத்தல். |
| உறங்கும் தேசிய இனங்கள் | நீண்டகாலம் உறங்கிப் போய் இயக்கமின்றி இருப்பவை. அயல் பகுதிகளின் உதாரணங்களைக் கண்டு விழித்தெழும் தேசிய இனங்கள். |
| ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடும் தேசிய இனங்கள் | (1993 ஏப்ரலில் உள்ள கணக்குப்படி) உலகில் 122 யுத்தங்களில் 80% ஆனவை இவ்வகை யுத்தங்களாக இருந்தன. |

## அரசைக் கட்டியெழுப்புதல்

உலகின் பெரும்பாலான அரசுகள் தோன்றுவதற்கு முன்பே தேசிய இனங்கள் இருந்தன. அரசுகள் உருவாக்கத்திற்கு முன்பே தேசிய இனங்கள் உருவாக்கம் பெற்று உலகெங்கும் பரவியிருந்தன. புவிப்பரப்பின் நிலப்பகுதி முழுவதுமே தேசிய இனங்களைக் கொண்டதாக இருந்தது. புதிதாக முளைத்த அரசுகள் இவற்றைத் தம்முள் சேர்த்துக் கொண்டன. இதுவே இன்றைய அரசுகளின் தோற்ற வரலாறு. ஆயிரக்கணக்கான தேசிய இனங்களில் ஒரு சில தேசிய இனங்கள் மட்டும் அதிகாரத்திலும், செல்வத்திலும் பிற தேசிய இனங்களை விட வல்லமை மிக்கனவாய் ஆகின. இந்த வல்லமை மிக்க தேசிய இனங்கள் பிற தேசிய இனங்களை தமக்குள் உட்படுத்திப் பேரரசுகளாயின; காலனிகளை உருவாக்கின. இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்கள் புதிய அரசுகளாக உருவாக்கப்பட்டன. அரசைக் கட்டியெழுப்புதல் (State Building) மூன்று உபாயங்கள் மூலம் செயற்படுத்தப்பட்டது.

1. தமது சுதந்திரத்தைக் கைவிடும்படி தேசிய இனங்களை இணங்கச் செய்து அந்நியர் தமது ஆட்சியை விஸ்தரித்தல்.
2. படையெடுப்புகள் மூலம் தேசிய இனங்களின் நிலப்பகுதிகளைக் கைப்பற்றி கலாசார மாற்றங்கள் மூலம் மக்களை உள்வாங்கிக் கொள்ளுதல். அரசு உருவாக்கித் திணிக்கும் அடையாளங்களையும் பண்பாட்டையும் மக்களை ஏற்றுக்கொள்ளச் செய்து அவர்களை உருமாற்றுதல்.
3. படையெடுப்புகள், ஆக்கிரமிப்புகள் மூலம் இன அழிப்புச் செய்தலும் தேசிய இனங்களை அழித்து நிர்மூலமாக்குதலும்.

இந்த மூன்று வழிகளில் நடைபெறுவதே அரசைக் கட்டி எழுப்புதல் செயல்முறையாகும். வரலாற்றுச் சமூகவியலாளர் சாள்ஸ் ரில்லி (Charles Tilly) என்பவர் இதனைப்பற்றிக் கூறும்போது "போரின் பயனாக அரசு உருவாகிறது. பின்னர் அரசு போரை உருவாக்குகிறது" என்றார். அரசுகளின் உருவாக்கம் ஒரு தொடர் நிகழ்வு. காலம், இடம் என்ற இருவேறு பரிமாணங்களில் இது நிகழ்கிறது. இது பல கட்டங்களாக நிகழ்கிறது. ஒவ்வொரு அரசுக்கும் தனித்தனியான வித்தியாசமான வரலாறு இருக்கும். ஆகவே ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் அரசுகளின் பல்வேறு வளர்ச்சிப்படி நிலைகளின் கலப்பாக உலக அரசுகள் முறைமை இருக்கும். சமகாலத்தில் பல பல படிநிலைகள் ஒருங்கே காணப்படுகின்றன.

## இனக்குழுமம், சிறுபான்மையினர், தேசிய இனம்

Nation (தேசிய இனம்) என்ற சொல்லைத் தவிர்த்து வேறு பல சொற்களால் தேசிய இனம் ஒன்றைக் குறிப்பிடுவதையே அரசுகள் விரும்புவதாக நான்காவது உலகம் கோட்பாடு சுட்டிக்காட்டுகிறது. கிளர்ச்சியாளர்கள், பயங்கரவாதிகள், கம்யூனிஸ்டுகள், மலைவாழ் மக்கள், குடியான்கள் (Peasants) எனப் பல சொற்கள் தேசிய இனங்களைச் சுட்டுவதற்கு உபயோகிக்கப்படுகின்றன. இவற்றுள் சிறுபான்மையினர் (Minorities), இனக்குழுமம் (Ethnic Group) என்ற இரு சொற்கள் அரசியல், புவியியல் அரசியல், சர்வதேச விவகாரம் ஆகிய துறைப் பாடநூல்களில் பரவலாக உபயோகிக்கப்படுகின்றன. இனக்குழும அரசியல் (Politics of Ethnicity), இனக்குழுமம் (Ethnic Group) ஆகிய சொற்கள் இலங்கையில் தமிழிலும் பரவலான சொல்லாடலுக்குள் புகுந்துள்ளது. ஒரு காலத்தில் 'சிறுபான்மையினர் பிரச்சினை' என்று பேசவும் எழுதவும் பட்ட விடயம் இனக்குழுமப் பிரச்சினை (Ethnic Problem) எனப்படுகிறது. இந்தச் சொற்பிரயோகத்தை நான்காவது உலகம் கோட்பாடு தவறானது எனக் சுட்டிக்காட்டுகிறது. கனடா, ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் குடியேறி வாழும் ஆசிய, ஆபிரிக்க, கரிபியன் மக்களை இனங்காண்பதற்கு Ethnic என்ற சொல் பயன்பட்டது. குறிப்பாக வெள்ளையர் அல்லாதவராயும், அரசியல் அதிகாரம் அற்றவர்களாயும், விளிம்பு நிலையினராயும் உள்ளோரை Ethnic Group என்று குறிப்பிட்டனர். திபெத்தியர்கள் பற்றிய உதாரணத்தை நாம் மீண்டும் குறிப்பிடலாம். இந்தியாவிற்குள் இடம்பெயர்ந்து வாழும் திபெத்தியர்களை திபெத்திய இனக்குழுமத்தினர் என அழைக்க முடியும். ஆனால் திபெத்திற்கு உள்ளே (சீன அரசின் கீழ்) வாழும் திபெத்தியர்கள் ஒரு தேசிய இனம் என்று அழைக்கப்படுவதை விரும்புவார்களே அல்லாமல் தம்மை ஒரு இனக் குழுமம் என்று அழைக்கப்படுவதை விரும்பமாட்டார்கள்.

## தேசிய இனங்களும் உயிர்ப்பல்லினத்தன்மையும்

உலகின் 5000 வரையான தேசிய இனங்களுள், மக்கள் சமூகங்கள் (Peoples) என்ற பெருவட்டத்திற்குள் அடங்கும் வளர்ச்சியடைந்த தேசிய இனங்கள் முதல், சிறியனவும், பெரியனவுமான சுதேசிய மக்களும் (Indigenous Peoples) அடங்குவர். தேசிய இனங்களிற்கு என ஒரு இயற்கைச் சூழல் உரிமையாக இருந்து வந்தது. தேசிய இனத்தின் உரிமையான சூழலை அரசுச் சூழல் அத்துமீறியும் அடாவடித்தனமாகவும் ஆக்கிரமிக்கிறது, அழிக்கிறது என்று நான்காவது உலகம் கோட்பாடு கூறுகிறது. குடியேற்றத்திட்டங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள், அனல்மின் நிலையங்கள், உருக்கு, சிமெந்து ஆலைகள் என்ற வடிவில் அபிவிருத்தி என்ற முகத்துடன் இனத்தின் சூழலும் அரசின் சூழலும் மோதிக் கொள்கின்றன. உயிர்ப்பல்லினத் தன்மையின் அழிவு உண்மையில் தேசிய இனங்களின் வாழிடத்தின் அழிவின் ஒரு வெளிப்பாடே என்று நான்காவது உலகம் பார்வை விளக்குகிறது. பன்மைத் தேசிய இனங்களைக் கொண்ட பெரும் தேசங்கள் 12 இன்று உலகில் உள்ளன. இந்தப் 12 பெருந்தேசங்களுள் (இவற்றை Mega diversity states என்பர்) உலகின் 2,310 தேசிய இனங்கள் உள்ளன. இது மொத்த தேசிய இனங்களில் 46% ஆகும்.

| பெருந்தேசம் (Mega Diversity State) | தேசிய இனங்கள் |
|---|---|
| அவுஸ்திரேலியா | 250 |
| பிரேசில் | 210 |
| சீனா | 150 |
| கொலம்பியா | 60 |
| ஈகுவடோர் | 35 |
| இந்தியா | 380 |
| இந்தோனேசியா | 670 |
| மடகாஸ்கர் | 20 |
| மலேசியா | 20 |
| மெக்சிக்கோ | 240 |
| பெரு | 65 |
| சயர்(Zaire) | 210 |
| மொத்தம் | 2310 |




திபெத்
Image source - www.youngpioneertours.com

பர்மா, எத்தியோப்பியா, இந்தோனேசியா, மொராக்கோ ஆகிய நாடுகளில் தேசிய இனங்களின் ஒடுக்குமுறையில் அரசுகள் கையாண்ட வழிமுறைகள், உலகம் முழுவதுமாக நடைபெற்று வந்திருக்கின்ற தேசிய இனங்களின் ஒடுக்குமுறையின் வரலாறு ஆகியவற்றின் துணையுடன் 12 படிநிலைகளை அடையாளம் காணமுடியும்.

1. அரசு தேசிய இனங்களை ஒடுக்கும் முறையிலான விஸ்தரிப்பை நியாயப்படுத்தும் வரலாற்றுக் காரணங்களையும், புவியியல் காரணங்களையும் கண்டுபிடித்தல்.

2. ஆக்கிரமிக்கும் நிலப்பகுதிகளை இணைப்பதற்கான உட்கட்டமைப்புகளை உருவாக்கல்.

3. ஆக்கிரமிப்புக்கான நியாயங்களை உருவாக்குதல்.

4. விடுதலை, அபிவிருத்தி என்ற போர்வையில் ஆக்கிரமிப்புச் செய்தல்.

5. தேசிய இனத்தின் சமூக, பொருளாதார, அரசியல், சமய கல்வி நிறுவன அமைப்புகளை அழித்தும், உருமாற்றியும் அரசின் தேவைகளுக்கு ஏற்ற வகையில் அமைத்தல், தேசிய இனத்தின் தலைமைத்துவத்தை அரசுக்குச் சாதகமானதாக மாற்றுதல்.

6. குடியேற்றத் திட்டங்களை உருவாக்கி அரசின் பிரசைகளைக் குடியேற்றுதல். சர்வதேச கம்பனிகள் சர்வதேச ஸ்தாபனங்களின் நிதி உதவிகளை இதற்காகப் பெற்றுக்கொள்ளல்.

7. அரசியல் ரீதியான எதிர்ப்புகள் முதற்தடவையாகத் தோன்றும்போது அவற்றை முளையிலேயே கிள்ளிவிடுதலுக்கான பிரசாரம் செய்தல்.

8. ஆயுதமேந்திய போராட்ட முயற்சிகள் முதற்தடவையாகத் தோன்றும்போது அவற்றை முளையிலேயே கிள்ளிவிடுதல்.

9. அரச இராணுவத்திலும், அரச நிர்வாகத்திலும் அரசின் பிரசைகளைக் குவித்தல்.

10. ஆயுதக் கிளர்ச்சி வலுப்பெற்ற இடங்களில் சிவிலியன்களைத் தண்டித்தல், அடக்குதல். 'அரிசி அல்லது துப்பாக்கி ரவை' என்ற கொள்கையை அமுல்படுத்தல்.

11. 'அட்டூழியங்கள்' நிகழ்கின்றன என்ற கூற்றில் உண்மை இல்லை என்பதை நிரூபிக்கும் வழிமுறைகளைக் கண்டுபிடித்தல்.

12. சிவிலியன்களை இடம்பெயரச் செய்து அரசு அமைத்த முகாம்களில் குவித்தல்.

## நான்காவது உலகில் நடைபெறும் யுத்தங்கள்

நான்காவது உலகத்திற்கு எதிராக அரசுகள் நடத்தும் யுத்தங்கள் பற்றிய மதிப்பீட்டின்படி (1993 ஆம் ஆண்டில்) 122 யுத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இவற்றில் 97 யுத்தங்கள் இனங்களுக்கு எதிராக அரசுகளால் நடத்தப்பட்டவை.

உலகில் நடைபெறும் யுத்தங்கள்

- **அரசு எதிர் தேசிய இனம் - 97**
- **அரசு எதிர் இன்னோர் அரசு - 01**
- **அரசுக்கு எதிரான ஆயுதக் கிளர்ச்சி - 15**
- **தேசிய இனம் எதிர் இன்னொரு தேசிய இனம் - 06**
- **தேசிய இனத்திற்குள் இடம்பெறும் யுத்தம் (கிளர்ச்சி) - 03**

***மொத்தம் – 122***

***யுத்தங்களின் சராசரி ஆயுள் காலம்***

அரசு எதிர் அரசு - 2.8 வருடங்கள்

அரசு எதிர் தேசிய இனம் - 10.2 வருடங்கள்

யுத்தத்தால் இடம்பெயர்ந்த அகதிகள் - 3.6 கோடிமக்கள் (அல்லது 36 மில்லியன் மக்கள்)

இக்கட்டுரை பெர்னாட் நைட்ஸ்மன் (*Bernard Niet schmann*) என்பவர் எழுதிய ஆங்கிலக் கட்டுரையொன்றைத் தழுவி தமிழில் எழுதப்பட்டது. *Reordering the World: Geopolitical Perspectives on the 21st Century, Edited by: George J. Demko and William B. Wood, West View Press, 1994, pp.225-242.*

‘வேந்தர் இல்லா வையகம்: இருபதாம் நூற்றாண்டு யாழ்ப்பாணம்‘ எனும் இத்தொடர் ‘ஒருவர் வாழ்க்கை ஊடாகத் தென்படும் காட்சிகள்‘ பற்றியதாகும். இத்தொடர் கட்டுரைகள் என் வாழ்க்கையில் கண்ட, கேட்ட, கேள்விப்பட்ட, வாசித்தறிந்த நிகழ்ச்சிகள் ஏற்படுத்திய மனப்பதிவுகள் பற்றியும் அவற்றால் என் மனதில் உருவாகிய கருத்துகள் பற்றியும் கூறுபவை. இவை வரலாற்று ஆய்வுக் கட்டுரைகள் அல்ல. இவை யாழ்ப்பாணத்தைப் பற்றியவை; 20 ஆம் நூற்றாண்டை மையமாகக் கொண்டவை. வரலாற்றை எழுதுவோர்க்குச் சான்றுகளைக் கொடுத்துதவும் சுவடிகள் போன்று இத்தகைய நினைவுப் பதிவுகளும் பயன்படும் என்ற நோக்கத்துடன் இவை எழுதப்படுகின்றன.

# போரும் புதிய போக்குகளும்

**கார்த்திகேசு இந்திரபாலா**



பேராசிரியர் கார்த்திகேசு இந்திரபாலா இலங்கையின் கல்வெட்டியலாளர், வரலாற்றாய்வாளர், மொழியியலாளர் ஆவார். இவர் இலங்கைத் தமிழரின் வரலாறு தொடர்பான நூல்களை தொல்லியல் சான்றுகளுடன் நிறுவியவரும் ஆவார். யாழ்ப்பாணக் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்ற இவர் தமிழ் மட்டுமன்றி ஆங்கிலம், யேர்மன், சிங்களம், பாளி, சமசுகிருதம், யப்பானியம் என பன்மொழி கற்றறிந்தவராவார். ஆதி இலங்கையில் இந்துமதம், இலங்கையில் திராவிடக் கட்டிடக்கலை, யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், The Evolution of an Ethnic Identity, இலங்கையில் தமிழர் ஆகியன இவரின் குறிப்பிடத்தக்க நூல்களாகும்.

## முதலாம் உலகப் போர்

ஐரோப்பாவிலும் மேற்கு ஆசியா, வட ஆபிரிக்கா ஆகிய அண்டைப் பிரதேசங்களிலும் நடந்த முதலாம் உலகப்போர் (1914 - 1918) யாழ்ப்பாணத்தை எந்தவிதத்திலும் தொடவில்லை என்று கூறமுடியாது. இப்போர் தென் ஆசியாவில் நடக்காவிட்டாலும் தென் ஆசியர் பிரித்தானியப் பேரரசின் படைகளில் சேர்க்கப்பட்டிருந்தனர். பிரித்தானியர் ஆண்ட இந்தியாவில் இருந்து ஏறத்தாழ 160,000 போராளிகள் பிரான்ஸில் ஜெர்மன் படைகளை எதிர்த்துப் போராட அனுப்பப்பட்டனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. போரில் இவர்களுள் 47,000க்கு மேற்பட்ட போராளிகள் இறந்துவிட்டனர் அல்லது காணாமல்போய்விட்டனர்.

யாழ்ப்பாணத்தவரைப் பொறுத்தமட்டில் இந்த உலகப்போர் எங்கோ ஒரு தூரப் பிரதேசத்தில், ஐரோப்பாவில், நடக்கும் நிகழ்வாக இருந்திருக்கலாம். எனினும், இப்பெருநிகழ்ச்சி யாழ்ப்பாணத்தவரைத் தொடாமல் இருக்கவில்லை. ஒரு சில யாழ்ப்பாணத்து இளைஞர்கள் பிரித்தானியப் படையில் சேர்ந்து போராடினர் என்பது குறிப்பிடப்படவேண்டியதாகும்.

இங்கிலாந்தில் பொறியியல் படிக்கச் சென்ற A. பரமநாதன் என்ற ஓர் இளைஞர் போர் மூண்டபோது பிரித்தானியர் படையில் சேர்ந்து, 1915 இல் எகிப்துக்கு அனுப்பப்பட்டார். பின்னர், அங்கிருந்து அவர் துருக்கியில் போராடிக்கொண்டிருந்த பிரித்தானியர் படையுடன் சேர்ந்து துருக்கியர் படையைத் தாக்குவதற்கு அனுப்பப்பட்டார். துருக்கியின் எல்லைப்புறத்தில் இவர்களுடைய போர்க்களம் இருந்தது. இப்பகுதியை 'Dardanelles' என்று பொதுப்பட அழைத்தனர். இங்கு ஆயிரக்கணக்கான பிரித்தானிய, பிரெஞ்சு, இந்தியப் போராளிகள் துருக்கியை வீழ்த்தப் போராடினர். 'Gallipoli' என்ற ஒரு பாகத்தில் ஆஸ்திரேலிய, நியூஸீலந்துப் போராளிகள் (ANZAC படை) துருக்கியருக்கு எதிராகத் தாக்குதல் நடத்தினர். இங்கு பல்லாயிரக்கணக்கான 'ANZAC' படையினர் இறந்தனர். இவர்களை நினைவுகூர ஆண்டுதோறும் 'ANZAC' நினைவுநாள் ஆஸ்திரேலியாவிலும் நியூஸீலந்திலும் இடம்பெறும்.

இத்தகைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சமரிலேதான் யாழ்ப்பாணத்துப் பரமநாதன் பங்குகொண்டு, இறுதியில் தன் போர்புரியும் ஆற்றலை இழந்த (Invalided) காரணத்தால் இங்கிலாந்துக்குத் திருப்பி அனுப்பப்பட்டார். இவர் முதல் உலகப் போரில் பங்குகொண்ட முதலாவது யாழ்ப்பாணத்தவராக அக்காலத்தில் கருதப்பட்டார்.

இன்னொரு யாழ்ப்பாணத்தவர் பேரரசின் படையில் சேர்ந்து, ஐரோப்பாவில் நடைபெற்ற போரில் பங்குபற்றிப் போர்க்களத்தில் உயிர் இழந்தார். இவர் லான்ஸ் கோப்பரல் (Lance Corporal) ஐயாத்துரை என்பவராவர். செல்வராஜா உவிண்டம் (Windham) என்ற இன்னொருவர் 'Middlesex Regiment' இல் சேர்ந்து போராடினார். வேறும் பல யாழ்ப்பாணத்தவர் பிரித்தானியர் படையில் சேர்ந்திருக்கலாம்.

வேறொரு வகையிலும் யாழ்ப்பாணத்தவருக்கும் முதல் உலகப் போருக்கும் தொடர்பு இருந்தமை கவனிக்கத்தக்கது. பிரித்தானியப் பேரரசுக்கு ஆபத்து நேர்ந்த வேளையில் தாம் ஏதாவது ஒரு வகையில் உதவவேண்டும் எனச் சில யாழ்ப்பாணத்தவர் எண்ணினர். அவர்கள் யாழ்ப்பாணத்தில் இருக்கவில்லை. மலாயாவில் வேலைசெய்துகொண்டு இருந்தவர்கள்.

விமானங்கள் முதல் தடவையாக போரில் பயன்பாட்டுக்கு வந்த அக்காலத்தில் பிரித்தானிய விமானப்படைக்கு ஒரு போர் விமானத்தை வாங்கி அன்பளிப்புச் செய்ய இவர்கள் திட்டம் வகுத்து, அதற்கான பணத்தை மலாயாவில் வாழ்ந்த இலங்கையரிடம் இருந்து சேகரித்து, ஒரு விமானத்தை வாங்கினர். அந்த விமானம் 'JAFFNA' எனப் பெயரிடப்பட்டு 'Royal Air Force' படைக்குக் கொடுக்கப்பட்டது.

முதல் உலகப் போரின் மறையாத ஓர் எச்சமாகத் தமிழில் ஒரு புதுச்சொல் புகுந்தது. அதுதான் எம்டன். சென்னைத் துறைமுகத்தைத் தாக்கிச் சேதம் உண்டுபண்ணிய ஜெர்மன் போர்க் கப்பலின் பெயர் அது. அக்கப்பல் இந்து சமுத்திரத்தில் செய்த அட்டகாசங்கள் பொதுமக்கள் மனதைக் கவர்ந்தவை. பிரித்தானியக் கடற்படைக் கப்பல்களை ஏமாற்றி இலகுவில் கைப்பற்றப்படாது இந்து சமுத்திரத்தில் பல இடங்களில் சேதம் விளைவித்த எம்டன் கப்பலைப் பற்றிக் கேள்வியுற்ற தென்னிந்தியரும் இலங்கையரும் வியப்படைந்தனர். அப்படிப் பலரை ஏமாற்றி, இலகுவில் பிடிபடாமல் ஓடித் திரிபவனை 'எம்டன்' என்றனர். யாழ்ப்பாணப் பேச்சுவழக்கில் 'எம்டன்' ஒரு நிரந்தர இடத்தைப் பிடித்துக்கொண்டது.

## போர்களுக்கு இடைப்பட்ட காலம்

உலகப் போர் 1918 இல் முடிவுக்கு வந்தது. ஆனால் அமைதி நீண்டகாலத்துக்கு நீடிக்கவில்லை. மீண்டும் ஓர் உலகப் போர் 20 ஆண்டுகளின்பின் மூண்டது. இந்த 20 ஆண்டுகளும் நவீன இலங்கையும் இந்தியாவும் உருவாகுவதற்கு வழிவகுத்த பல முக்கியமான நிகழ்வுகள் இடம்பெற்ற காலமாகும். சுதந்திரகாலத் தென் ஆசியாவின் வடிவத்தை நிர்ணயிப்பதற்கு இவை பல வகைகளில் உதவின.

போக்குவரத்து வசதிகளைப் பொறுத்து மெதுவாக மாற்றங்கள் ஏற்பட்டன. மோட்டார் வண்டியின் பயன்பாடு கொழும்பில் உள்ளதைப்போல் இல்லாவிட்டாலும், அது அனைவரும் அறிந்த, அதிசயிக்கத்தக்க ஒன்றாகக் கருதப்படாத சாதாரண வாகனமாக மாறிவிட்டது என்று கூறலாம். அரசாங்க அதிபர் போன்ற மேல்மட்ட அதிகாரிகள் மட்டுமல்லாது சில தனியார் நிறுவனங்களும் மோட்டார் வண்டியை வைத்திருந்திருப்பர். எடுத்துக்காட்டாக, யாழ்ப்பாணக் கல்லூரிக்கு 1914 இல் அமெரிக்காவில் இருந்து வந்த மிஷனரி ஒருவர், சாள்ஸ் மில்லர் (Charles Miller) என்பவர், அமெரிக்காவில் இருந்து ஒரு மோட்டார் வண்டியைக் கல்லூரிக்குக் கொண்டுவந்திருந்தார்.

போக்குவரத்தைப் பொறுத்து பொதுமக்களைத் தொட்ட முன்னேற்றம் மோட்டார் பஸ் (பேருந்து) வண்டியின் வருகை எனலாம். கொழும்புக்கு முதலாவது மோட்டார் பஸ் (Motor omnibus) 1907 இல் வந்திருந்தாலும், 1920 வரை பஸ் போக்குவரத்து வளர்ச்சியடையவில்லை எனலாம். உலகின் மிகப்பெரிய நகராக அக்காலத்தில் விளங்கிய லண்டனில்கூட 1919 இலேதான் குதிரைகள் இழுத்த பஸ் வண்டிகள் இல்லாது போய் முற்றிலும் மோட்டார் பஸ் சேவைகள் இடம்பெற்றன.

இலங்கையில் 1930 அளவில் 2,960 லொறி (Lorries) வண்டிகளும், 2,603 மோட்டார் பஸ் வண்டிகளும் பதிவு செய்யப்பட்டிருந்தன. நாட்டின் பல பாகங்களிலும் இவை பயன்பாட்டுக்கு வந்திருந்தன என்பதை இதில் இருந்து அறியலாம். யாழ்ப்பாணத்திலும் இந்த வண்டிகள் பயன்பாட்டுக்கு வந்திருந்தாலும், மாட்டுவண்டிகளே பெரும் அளவில் 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை பயன்பட்டன.

போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் பொதுமக்கள் வாழ்வில் செல்வாக்குப் பெறும் வலிமை உடைய இரு தொழில்நுட்ப ஆக்கங்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்தன. ஒன்று பேசும்படம்; மற்றது வானொலி. மௌனப்படமாக மக்களுக்கு அறிமுகமாகிய சினிமா, 1930களில் யாழ்ப்பாணத்தவர் பார்த்தும், கேட்டும் மகிழும் திரைப்படமாகியது. தமிழில் வெளியாகிய முதல் பேசும்படமாகிய 'காளிதாஸ்' யாழ்ப்பாணத்திலும் காட்டப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

பொதுமக்களுக்கு அவர்கள் வீட்டுக்குள்ளேயே இசையையும் செய்திகளையும் எடுத்துச் செல்லக்கூடிய தொழில்நுட்ப ஆக்கமாக வானொலி 1920களில் வந்தது. கொழும்பு வானொலி (Colombo Radio 1925), திருச்சிராப்பள்ளி வானொலி நிலையம் (1939) ஆகியவற்றின் நிகழ்ச்சிகள் யாழ்ப்பாணத்திலும் கேட்கக்கூடியவையாக இருந்தபோதிலும், வானொலிப் பெட்டிகளைப் பொதுமக்கள் வாங்கக்கூடிய நிலையில் இருக்கவில்லை. இதனால் போருக்குப் பிற்பட்ட காலம்வரை யாழ்ப்பாணத்தில் வானொலி குறிப்பிடத்தக்க செல்வாக்கைச் செலுத்தவில்லை எனலாம்.

போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் போக்குவரத்து வசதிகள் முன்னேற்றம் அடைந்தமை யாழ்ப்பாணத்துக்கும் நாட்டின் தென்பாகத்துக்கும் இடையில் பல வகையான உறவுகளும் தொடர்புகளும் ஏற்படுவதற்கு உதவியது எனலாம். எடுத்துக்காட்டாக, கல்வித்துறையில், யாழ்ப்பாணத்துப் பட்டதாரிகள் தெற்கில் இருந்த சில பாடசாலைகளுக்கு ஆசிரியர்களாகச் செல்வதையும், தெற்கில் இருந்து யாழ்ப்பாணத்துப் பாடசாலைகளுக்கு மாணவர்கள் வருவதையும் காணலாம்.

தெற்கில் இருந்து வந்த சிங்கள மாணவர்கள் பற்றிய தகவல்களை விரிவாக அறிவது கடினம். எனினும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளிலும் வேறு செயற்பாடுகளிலும் சிறப்பிடம் பெற்ற சில சிங்கள மாணவர்களுடைய பெயர்களை யாழ்ப்பாணப் பாடசாலைகளின் சஞ்சிகைகளில் காணலாம். எடுத்துக்காட்டாக, 1930களில் இந்துக் கல்லூரியில் அமரஸிங்ஹ மற்றும் தர்மபால, St. Henry's கல்லூரியில் விக்ரமஸிங்ஹ, St. John's கல்லூரியில் கருணாரத்ன, St. Patrick's கல்லூரியில் பீரிஸ் மற்றும் ஸமரவிக்ரம, யாழ்ப்பாணக் கல்லூரியில் சி. ஜயஸிங்ஹ ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணக் கல்லூரியில் 1950கள் வரை சிங்கள மாணவர்கள் இருந்தனர் (இக்கல்லூரியில் நான் படித்த காலத்தில் என் வகுப்பில் குருநாகலில் இருந்து பர்னாந்து என்பவரும், வாத்துவவில் இருந்து ஆர்.டி. பெரேரா என்பவரும், மேல் வகுப்பில் மாத்தளையில் இருந்து ஸரத் ஹேவாபதிரண என்பவரும் இருந்தனர்.) அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் படித்த ஒரு சிங்கள மாணவர் பின்னர் அரசியலில் முக்கியத்துவம் பெற்ற அமைச்சர் மைத்திரீபால சேனாநாயக்க ஆவார். இவர் St. John's கல்லூரியில் படித்தவர்; தமிழை நன்கு பேசியவர்.

இக்காலகட்டத்தில் பாடசாலைகளுக்கான அனைத்து இலங்கை நிகழ்ச்சிகள் சில தொடக்கப்பட்டதால் யாழ்ப்பாணத்து மாணவர்கள் தெற்கு நோக்கிச் செல்வதற்கும் சிங்கள மாணவர்களுடன் உறவாடுவதற்கும் வழி திறக்கப்பட்டது. எடுத்துக்காட்டாக, 1937 இல் கொழும்பில் 'All Ceylon Sports Meet' நடைபெற்றது. அதில் யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த 'V.G. George' என்ற மாணவன் உயரம் தாண்டுதலில் (High jump) சாதனை ஈட்டியது மட்டுமல்லாது, இங்கிலாந்துப் பாடசாலைகளின் சாதனையையும் (English Public Schools record in high jump)

முறியடித்தான். சில பாடசாலைகளில் மாணவர்களுக்கு இக்காலகட்டத்தில் சாரணர் இயக்கமும் (Scouts Movement) தொடக்கப்பட்டது. இதனால் நாட்டின் தென்பாகத்தில் சாரணர் ஒன்றுகூடல் (Scouts Jamboree) நடைபெறும்போது, யாழ்ப்பாணத்து மாணவர் சிலர் சிங்களச் சாரணர்களுடன் சில நாட்கள் வாழ்ந்து கலந்துரையாட வாய்ப்பு ஏற்பட்டது. சிலவேளைகளில் இந்தியாவுக்கும் ஒன்றுகூடலுக்காகச் செல்ல முடிந்தது. எடுத்துக்காட்டாக, 1937 இல் யாழ்ப்பாணத்துச் சாரணர் கொழும்புக்குப் போய், அங்கு பிறமாணவர்களுடன் கூடி, அங்கிருந்து இந்தியாவுக்கு ஒரு சாரணர் ஒன்றுகூடலுக்குச் சென்றனர். இலங்கையில் இருந்து 61 பேர் சென்றிருந்தனர்.

வடக்கு - தெற்குப் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளும் இக்காலத்தில் தொடங்கின. யாழ்ப்பாணக் கல்லூரியின் கால்பந்து அணி 1935 இல் தர்மராஜக் கல்லூரி அணியுடன் போட்டியிடக் கண்டிக்குச் சென்றது.

யாழ்ப்பாணத்துப் பாடசாலை மாணவர்கள் தென்பாகத்துக்குச் சுற்றுலாபோகும் வழக்கமும் இக்காலகட்டத்தில் தொடங்கியது. யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்கள் 1940 இல் கண்டிக்குச் சுற்றுலா சென்றதை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்குத் தெற்கில் இருந்து பல கல்விமான்கள் பிரதம விருந்தினராகவோ சிறப்புரை ஆற்றுவோராகவோ இக்காலகட்டத்தில் வந்து செல்லும் வழக்கமும் தொடங்கியது. பிரபல பௌத்த நிறுவனமாகிய கொழும்பு ஆனந்தாக் கல்லூரியின் அதிபராக இருந்து, பின்னர் கண்டி தர்மராஜக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிகொண்டிருந்த பி.டி.எஸ். குலரத்ன 1935 இல் யாழ்ப்பாணக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். வரலாற்று விரிவுரையாளரும் நூலாசிரியருமாக விளங்கிய கலாநிதி ஜி.சி. மெண்டிஸ் 1940 இல் யாழ்ப்பாணக் கல்லூரிக்குச் சென்று சிறப்புரைகளை வழங்கினார். இவரைப்போல கொழும்பில் இருந்த பல்கலைக்கழகக் கல்லூரியின் அதிபர் (பிற்காலத்தில் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தர்) 'Ivor Jennings' யாழ்ப்பாணக் கல்லூரிக்குச் சிறப்புரை ஆற்றச் சென்றிருந்தார்.

மேலும் ஒரு போக்கும் கவனிக்கத்தக்கது. யாழப்பாணத்தவர் பலர் தெற்கில் இருந்த பாடசாலைகளுக்கு ஆசிரியர்களாகச் செல்லும் வழக்கம் இக்காலகட்டத்தில் காணப்பட்டது. எடுத்துக்காட்டாக, 1940 இல் மாத்தறை 'St. Thomas' பாடசாலைக்கு ஜே.ஏ. நவரத்தினம் என்பவரும், நுவர



1942 இல் கொழும்பு வீதி ஒன்றின் காட்சி
Image Source : www.awm.gov.au

எலிய 'Holy Trinity' பாடசாலைக்கு ஜே.ரீ. செல்லையா மற்றும் லிலி செல்லையா என்பவர்களும், மட்டக்களப்பு 'Central College' இற்கு எஸ்.ரீ. சீவரத்தினம் என்பவரும் ஆசிரியர்களாகச் சென்றிருந்தனர்.

இவ்வாறாகக் கல்வித்துறையில் யாழ்ப்பாணத்துக்கும் தெற்குக்கும் இடையில் உறவுகள் வளரத் தொடங்கிய காலமாகப் போர்களுக்கு இடைப்பட்டகாலம் காணப்பட்டது. இது வெளித்தோற்றம். இதன்கீழ் அரசியலைப் பொறுத்துப் பல குமுறல்கள் எழத் தொடங்கியிருந்தன. இவை பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

### மலாயாத் தொடர்பின் துண்டிப்பு

1942 பெப்ரவரி 15; பிரித்தானியப் பேரரசின் தென்கிழக்காசியப் படைபல மையமான சிங்கப்பூர் ஜப்பானியரால் கைப்பற்றப்பட்டது. பேரரசின் தென்கிழக்காசியப் பாகம் பிரித்தானியர் கையில் இருந்து வழுகி ஜப்பானியர் மடியில் வீழ்ந்தது. வியட்நாமில் பிரெஞ்சு ஆதிக்கத்தை 1940 இல் அடக்கிவிட்டு, மலாயாமீது கவனம் செலுத்திய ஜப்பானியர், சிங்கப்பூரைக் கைப்பற்றியதுடன் நில்லாது, ஒல்லாந்தர் ஆண்ட கிழக்கு இந்தியத் தீவுகளையும் (இன்றைய இந்தோனேசியா) 1942 இல் இலகுவில் தம்வசப்படுத்தினர். இதே ஆண்டில் பிலிப்பைன் தீவுகளில் அமெரிக்கர் தங்கள் இறைமையை இழந்து பின்வாங்க, அங்கும் ஜப்பானியர்

ஆதிக்கம் நிறுவப்பட்டது. தென்கிழக்கு ஆசியாவில் மேலைத்தேச வல்லரசுகளின் ஆதிக்கம் திடீரென மறைந்தது.

இந்த நிகழ்வுகள் நடந்த 1942, யாழ்ப்பாணத்தைப் பொறுத்தும் ஒரு முக்கிய திருப்பம் ஏற்பட்ட ஆண்டாகும். இரண்டாம் உலகப் போர் மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கியிருந்தாலும், 1942 இல் இருந்துதான் யாழ்ப்பாணம் அதன் விளைவுகளை உணரத் தொடங்கியது எனலாம்.

இரண்டாம் உலகப் போர் 1939 செப்டம்பர் 1 இல் ஜெர்மனியின் படைகள் போலந்தைத் தாக்கியதுடன் தொடங்கியது. அப்பொழுது ஆசியாவில் ஜப்பானியர், சீனக் குடியரசுக்கு எதிரான கடும் போர் ஒன்றை நடத்திக்கொண்டிருந்தனர். அதன் படர்ச்சியாக, 1941 இன் இறுதியில் ஜப்பானியர் பிரித்தானியப் பேரரசுக்கு எதிராக ஆசியாவில் போர் தொடுக்க, இரண்டாம் உலகப் போர் ஆசியாவிலும் மூண்டது.

சிங்கப்பூர் கைப்பற்றப்பட்டதும், அடுத்ததாக இந்தியாவை ஜப்பான் தாக்கும் எனப் பிரித்தானியர் எதிர்பார்த்தனர். அவர்களுடைய கடற்படையைச் சேர்ந்த கப்பல்களும் (Royal Navy) விமானப் படையைச் சேர்ந்த சில போர்விமானங்களும் (Royal Air Force) கொழும்பிலும் திருகோணமலையிலும் நின்றன. ஜப்பான் 1942 ஏப்ரல் தொடக்கத்தில் கொழும்பைத் தாக்குவதற்குத் திட்டமிட்டு இருந்ததை உளவறிந்ததும் கொழும்புத் துறைமுகத்தில் நின்ற போர்க்கப்பல்கள் வெளியே கொண்டுசெல்லப்பட்டன.

ஏப்ரல் 5 (உயிர்த்த ஞாயிறு) காலை 7:30 அளவில் கொழும்புத் துறைமுகத்திலும் ரத்மலானை விமானத்தளத்திலும் ஜப்பானியர் விமானங்கள் குண்டு வீசத் தொடங்கியதும் சில மணிநேரம் முதல் தடவையாகக் குண்டுவீச்சும் விமானப்போரும் இலங்கையில் நடைபெற்றது. இப்படியான போரை அறியாத கொழும்பு மக்கள் வெளி ஊர்களுக்கு ஓடத் தொடங்கினர். கடைகளும் உணவுச்சாலைகளும் மூடப்பட்டன; அவற்றின் சொந்தக்காரர் பலர் கொழும்பைவிட்டு ஓடிவிட்டனர். இந்த நிலைமையைப் பயன்படுத்திக் கொள்ளையடிப்போர் நடமாடினர்.

நகரவாழ்க்கை இவ்வாறு சீர்குலைக்கப்பட்டதும், மீண்டும் ஓரளவு உறுதிநிலையைக் கொண்டுவருவதற்கு அரசாங்கம் சில நடவடிக்கைகளை எடுத்தது. அத்தியாவசியப் பொருட்களை விற்பதற்கும் உணவைப் பெறுவதற்கும் சில கடைகளையும் உணவகங்களையும் பலாத்காரமாகத் திறந்து நடத்துவதற்குச் சிலருக்கு



இரண்டாம் உலகப்போர் காலத்தில் கொழும்புத்துறைமுகத்தில் தரித்து நிற்கும் கப்பல்கள்
Image Source : www.awm.gov.au

அதிகாரம் வழங்கப்பட்டது. அப்படி அதிகாரம் பெற்று அரசாங்கத்துக்கு உதவியோருள் ஒருவர் யாழ்ப்பாணத்தவர். இவர் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தில்லைநாதன் உருத்திரா என்பவராவர்; வெள்ளவத்தையில் வசித்தவர். உடற்பயிற்சியில் பெரிதும் ஈடுபட்ட இவர் ஒரு பயில்வான் போன்று கருதப்பட்டவர். மூடப்பட்டிருந்த ஆனந்தபவன் என்ற பிரசித்தி பெற்ற உணவுச்சாலையை மீண்டும் இவர் திறந்து நடத்தியும், வேறுவகைகளில் உதவியும் கொழும்பில் புகழ்பெற்றார். இப்புகழின் விளைவாகப் பின்னர், 1953 இல், கொழும்பின் 'மேயராக' நகரத்தேர்தலில் வெற்றிபெற்றார். அந்த ஆண்டு இலங்கைக்கு வந்த எலிஸபெத் மகாராணியை கொழும்பின் முதல்வராக வரவேற்கும் வாய்ப்பையும் பெற்றார். வெள்ளவத்தையில் உள்ள உருத்திரா மாவத்தை என்ற தெரு இவர் ஞாபகார்த்தமாக விளங்குகிறது.

மலாயாவும் சிங்கப்பூரும் ஜப்பானியர் ஆட்சிக்கு உட்பட்டதும் அந்த இடங்கள் யாழ்ப்பாணத்துடன் கொண்டிருந்த நெருங்கிய தொடர்பு முற்றாகத் துண்டிக்கப்பட்டது. என் தாயார், தன் சகோதரர் ஒருவருக்கு எழுதிய கடைசிக் கடிதம் என் கண்முன் இன்றும் நிற்கிறது. அது எழுதப்பட்ட காலம் 1941 இன் இறுதி என்று நினைக்கின்றேன். எனக்கு நாலு வயது. அம்மா ஒரு சாதாரணக் கடதாசியில் பென்சிலால் எழுதிய ஒரு கடிதம். தான் எழுதுவதை எனக்குச் சொன்னார். அம்மாவுடைய வழமையான கடிதத் தொடக்கம்: 'அன்பும் பட்சமும் மறவாத —'; நான் இன்னும் மறக்காத சொற்கள். இதன்பின் கடிதங்கள் மலாயாவுக்கு அனுப்பப்படவுமில்லை, அங்கிருந்து கிடைக்கவும் இல்லை. மூன்று ஆண்டுகளுக்கு மேலாக யாழ்ப்பாணத்தவர்க்கும் மலாயா/ சிங்கப்பூரில் வாழ்ந்த அவர்கள் உறவினர்களுக்கும் இடையில் இருந்த தொடர்பு முற்றாகத் துண்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தின் ஆரம்பகால வரலாற்றுக்கான நேரடி எழுத்துப் பதிவுகள் குறைவாக இருந்தாலும், தொல்லியல் அகழாய்வுகள் இதன் பழங்காலக் குடியேற்றங்கள், பண்பாடு, மற்றும் சமூக – பொருளாதார வளர்ச்சி பற்றிய மதிப்புமிக்க தகவல்களை வெளிக்கொணருகின்றன. அதன் அடிப்படையில் கந்தரோடை, பண்டைய யாழ்ப்பாண நாகரிகத்தின் ஆதிகேந்திரமாக விளங்கிய ஒரு முக்கியப் பகுதி ஆகும். தொல்லியல் ஆய்வுகள், பொ.யு.மு. 500 ஆம் ஆண்டளவில் கந்தரோடை ஒரு நகரமாகி விட்டதை எடுத்துக்காட்டுகின்றன. இந்த இடத்தில் அடர்த்தியான மக்கள் குடியேற்றம் அன்றிலிருந்து இன்றுவரை, மத்திய காலத்தில் ஒரு சிறு இடைவெளியைத் தவிர, தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கிறது. நாணயவியல், தொல்லியல் மற்றும் இலக்கியச் சான்றுகள் பொ.யு. எட்டாம் நூற்றாண்டுவரை கந்தரோடை பண்டைய யாழ்ப்பாணமான நாகநாட்டின் தலைநகரமாக விளங்கி வந்திருப்பதைக் காட்டி நிற்கின்றன. கந்தரோடையில் மேற்கொண்ட அகழாய்வுகளின் அறிக்கைகளைக் கொண்டு எழுதப்படும் 'பண்டைய யாழ்ப்பாணத்தின் கந்தரோடை நாகரிகம்' எனும் இக்கட்டுரைத் தொடர் வடஇலங்கையின் வரலாற்றிற்கு முற்பட்ட காலங்களிலும், வரலாற்று உதய காலங்களிலும், வரலாற்றுக் காலங்களிலும் வாழ்ந்த மக்களின் வாழ்வியல், பண்பாடு, பெருமுயற்சி, துணிவாண்மை என்பவற்றின் பரந்த காட்சிப் பதிவாக விளங்கும்.

# கந்தரோடைத் தொல்லியல்

## (Archaeology of Kantarodai)

**பகுதி 1**

**சிவ.தியாகராஜா**



கலாநிதி சிவ தியாகராஜா மருத்துவம், மரபணுவியல், தொல்லியல், வரலாறு ஆகிய கற்கைத் துறைகளில் பட்டங்கள் பெற்று பல ஆய்வு நூல்களை எழுதியுள்ளார். இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் (University of Ceylon) B.Sc பட்டத்தையும், இலங்கைப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலிருந்து M.B.B.S பட்டத்தையும், இலண்டன் பல்கலைக்கழகத்திலிருந்து Ph.D. பட்டத்தையும் பெற்றவராவார். கலாநிதி சிவ தியாகராஜா கடந்த ஐம்பது ஆண்டுகளில் இருபத்து ஆறு நூல்களைப் படைத்திருக்கிறார். Peoples and Cultures of Early Sri Lanka, Genetic Origins of the Tamils, Kantarodai Civilization of Ancient Jaffna 500 BCE800CE, The Tamils of Lanka – A Timeless Heritage, Archaeological Excavations at the Jaffna Fort, பௌத்தத்தை வளர்த்த பண்டைய தமிழர்கள் ஆகியவை அவற்றுள் சிலவாகும்.

*"அவர்களின் இந்த (யாழ்ப்பாண) மண்ணிற்கு உள்ளே, அவர்கள் கனவிலும் கண்டிருக்க முடியாத உள்ளத்தை உவகையாக்கும் மதிப்புமிக்க தொல்வரலாற்றுச் சான்றுகள் புதைந்து கிடக்கின்றன என்பதை தமிழ் மக்கள் உணர்ந்து கொள்வார்கள் என நம்புகிறேன்."*

*Paul E. Pieris*
*Ceylon Daily News*
***22.02.1919.***

*"பண்டைய கிரேக்கர்களும், உரோமர்களும் வர்த்தகத் தொடர்பு வைத்திருந்த தொலமியால் கௌரூலா என்றும், பெரிப்பிளஸ்ஸின் ஆசிரியரால் கமாரா எனவும் குறிப்பிடப்படும் நகரம் கந்தரோடை என்பதில் எனக்கு எதுவிதமான ஐயப்பாடும் கிடையாது."*

*C. Rasanayagam*
***1926.***

*"(கந்தரோடை அகழ்வுகளில்) ஒரு ஸ்தூபியின் கீழே அகழாய்வு செய்யப்பட்டபோது அங்கே புதைக்கப்பட்ட ஓர் ஈமக் கிண்ணத்தில் அழுகிய எலும்பு காணப்பட்டது...அந்த ஸ்தூபியின் கீழே அழுகிய நிலையில் மற்றுமொரு எலும்புத் துண்டும் காணப்பட்டது."*

*C.E. Godakumbura*
*7th November* ***1967.***
***1968: p. 72.***

"கந்தரோடையில் குடியேற்றம் பெற்ற மக்கள் தென்னிந்திய மக்களின் கலாசார சமுதாயச் சூழலின் வழித்தோன்றல்களாகவோ அல்லது அவர்களோடு நெருக்கமான கலாசார உறவைக் கொண்டவர்களாகவோ இருந்திருக்க வேண்டும்."

*Vimala Begley*
*1973.*

## அறிமுகம்

யாழ்ப்பாணத்திலுள்ள 3.2 சதுரகிலோமீட்டர் பரப்பளவைக் கொண்ட கந்தரோடைக் கிராமம் அனைத்துமே ஒரு தொல்லியல் மையம்தான். கந்தரோடைக் கிராமத்தை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம்: (1) மக்களின் வதிவிடப் பகுதி, (2) தென்மேற்காக அமைந்த பனந்தோப்பு. இந்தக் கிராமத்தின் மிகப்பழமையான நகரம் அதன் நடுவே இரண்டு மீட்டர் உயரத்தில் 25 ஹெக்டயர் (62 ஏக்கர்) பரப்பளவில் அமைந்த மேட்டு நிலமாகும். அதன் பள்ளமான பரப்பு நெல்வளரும் செழிப்பான விளைச்சல் நிலம். அந்த விளைநிலத்தினருகே 40 ஏக்கர் பரப்பளவிலான கந்தரோடைக் குளம் காணப்படுகிறது. அக்கிராமத்தினூடாகச் செல்லும் வழுக்கை ஆறு எனப்படும் கடற்கால்வாய் தென்மேற்காக வளைந்து, மேற்கே கல்லுண்டாய் வழியாக நாவாந்துறைக்கருகே யாழ்ப்பாணக் கடலேரியில் சங்கமமாகிறது.

கந்தரோடையின் வரலாற்று முக்கியத்துவம் இருபதாம் நூற்றாண்டின் முதல் இருபது ஆண்டுகளில்தான் மக்களின் கவனத்தை ஈர்த்தது. ஆனால், இது இத்தனை பழமையான நடுவம் என்பதை எவருமே எண்ணிப்பார்த்திருக்க மாட்டார்கள். 1916 ஆம் ஆண்டில் வட இலங்கையில் தொல்லியல் மேலாய்வுகளை மேற்கொண்ட வடமாகாண அரசாங்க அதிபராகவிருந்த ஜே.பி. லூயிஸ், யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் கந்தரோடை, வல்லிபுரம் ஆகிய இடங்களிலிருந்த புராதனக் கட்டட அழிபாடுகளைக்கொண்டு இந்த இரு இடங்களும் வரலாற்றுக்காலத்திற்கு முற்பட்ட குடியேற்ற மையங்களாக இருந்திருக்க வேண்டும் என அறிவித்திருந்தார். 1917-1919 ஆண்டுகளில் ஸேர். போல் எட்வார்ட் பீரிஸ் இங்கே அகழாய்வுகளை மேற்கொண்டு "கந்தரோடை ஒரு சிறிய அளவினதான அநுராதபுரம்" என அறிவித்தார் (Pieris, P. E. 1919).

"அழிந்து கிடக்கும் கட்டடங்களின் அடையாளங்களாலும், கண்டெடுக்கப்பட்ட கற்சிலைகள், கற்றூண்களினாலும், பரவிக்கிடக்கும் ஓடுகளின் துண்டுகளினாலும், கதிரமலை (கந்தரோடை) எனப்படும் இப்பழைய நகரம் மிகவும் விசாலமானதும், அழகிய வீதிகளையும், மாடமாளிகைகள், கூட கோபுரங்களுமுடையதுமாய், கண்ணைக் கவரும் வனப்பு வாய்ந்ததுமாய் இருந்திருக்க வேண்டும் என ஊகிக்கலாம்" என வரலாற்றாசிரியர் முதலியார் இராசநாயகம் கந்தரோடை நகரத்தை வருணித்தார் (இராசநாயகம், செ. 1933: 1415). அக்கால வரலாற்றாசிரியர்களான முதலியார் இராசநாயகம், சுவாமி ஞானப்பிரகாசர் இருவரும் பண்டைய யாழ்ப்பாணத்தின் தலைநகராகக் கந்தரோடையை இனம் கண்டார்கள்.

## தொல்லியலாய்வுகள்

கடந்த ஒரு நூற்றாண்டிற்கும் மேலாகக் கீழ்க்காணும் ஆய்வாளர்கள் கந்தரோடையில் தொல்லியல் மேலாய்வுகளையும், தொல்லியல் அகழாய்வுகளையும் இலங்கை அரசின் தொல்லியல் திணைக்களத்தின் அனுமதியுடன் மேற்கொண்டிருக்கிறார்கள். இவற்றில் சில ஆய்வுகளின் அறிக்கைகள் இதுவரை வெளிவரவில்லை. ஆய்வுகளில் கண்டெடுத்த தொல்பொருட்களில் பெரும்பாலானவை அநுராதபுர, மற்றும் கொழும்பு அருங்காட்சியகங்களுக்கும், யாழ்ப்பாண அருங்காட்சியகத்திற்கும், சில தனியாரிடமும் சென்றடைந்திருக்கின்றன.

கடந்த நூறு ஆண்டுகளுக்கும் மேலாக கந்தரோடையில் தொல்லியல் மேலாய்வுகளையும், அகழாய்வுகளையும் மேற்கொண்டவர்கள்:

*போல் பீரிஸ்: 1917, 1919.*
*கொடகும்புர, C.E: 1966-1967 - அறிக்கை 1968.*
*விமலா பெக்லி: பெப்ரவரிமார்ச் 1967.*
*விமலா பெக்ளி, பென்னெற் புரொன்ஸன்: யூன்ஆகஸ்ட் 1970.*
*இலங்கைத் தொல்லியல் திணைக்களம்: 1971.*
*இந்திரபாலா, சிற்றம்பலம், இரகுபதி: 1983.*
*பொன்னம்பலம் இரகுபதி: 1987.*
*கிருக்ஷ்ணராஜா: 1994 - 1995.*
*புக்ஷ்பரட்ணம், நிமால் பெரேரா: 2011.*
*பார்பரா ஹெல்விங், நிமால் பெரேரா: 2018-19.*
*கந்தரோடைத் தொல்லியல் மேலாய்வுகள்*

1917-1919 ஆம் ஆண்டுகளில் கந்தரோடையில் போல் பீரிஸ் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வுகளின் பின்னர் அரைநூற்றாண்டுகளாகக் கந்தரோடைத் தொல்லியல் மையம் கவனிப்பாரற்றுக் கிடந்தது. 1956 முதல் 1967ஆம் ஆண்டுவரை இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தின் ஆணையாளராக (Commissioner of Archaeology) பணியாற்றிய சாள்ஸ் எட்மண்ட் கொடகும்புர (Charles Edmund Godakumbura) தனது பதவிக்காலத்தின் இறுதிப்பகுதியில் கந்தரோடையில் கவனம் செலுத்தினார். 1917-1919 ஆம் ஆண்டுகளில் கந்தரோடையில் தொல்லியலாய்வுகளை மேற்கொண்ட போல் பீரிஸ் முக்கியமாக மேலாய்வுகளையும், சில கிடைமட்ட அகழ்வுகளையுமே (Horizontal excavations) செய்திருந்ததை அறிந்திருந்தார். இவ்விடங்களில் முறையான அடுக்கமைவு அகழ்வுகள் செய்ய வேண்டிய தேவையை உணர்ந்தார். இலங்கை அரசின் அனுமதியோடு, தமிழ்நாட்டில் அரிக்கமேட்டில் தொல்லியலாய்வை மேற்கொண்டிருந்த அமெரிக்க பென்ஸில்வேனியப் பல்கலைக்கழக அரும்பொருட்காட்சியகத்தின் தொல்லியலாளர்களை இலங்கை வந்து பொம்பரிப்பிலும், கந்தரோடையிலும் தொல்லியல் அகழாய்வை நிகழ்த்தித்தருமாறு அழைத்திருந்தார். அத்துடன் 1966 ஆம் ஆண்டில் கந்தரோடையில் தொல்லியல் திணைக்கள அகழாய்வுகளையும் தானே ஆரம்பித்திருந்தார்.

இலங்கைத் தொல்லியல் திணைக்கள ஆணையாளரான கொடகும்புரவின் அழைப்பை ஏற்றுக்கொண்ட அமெரிக்கப் பென்ஸில்வேனியப் பல்கலைக்கழகத்தினர் முதலில் 1967 ஆம் ஆண்டில் கந்தரோடையில் ஒரு தொல்லியல் மேலாய்வை மேற்கொள்ளுவதாகவும், அது ஆக்கவளமுடையதாக (Productive) இருப்பின் பின்னால் விரிவான அகழ்வை மேற்கொள்ளவும் முடிவடுத்தனர்.

1967 ஆம் ஆண்டு பெப்ரவரிமார்ச் மாதங்களில் பென்ஸில்வேனியப் பல்கலைக்கழக அருங்காட்சியகத்தின் தலைவராக இருந்த தொல்லியலாய்வாளர் விமலா பெக்லி கந்தரோடை வந்து தொல்லியல் மேலாய்வுகளை மேற்கொண்டார்.

இலங்கையில் அதுவரை காலமும் (1967 வரை) மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளில் தொல்பொருட்களின் சரியான காலக்கணிப்புகளோ, அல்லது அவற்றின் பண்பாட்டு வளர்ச்சி அடுக்குகளோ (Culture sequences) வரையறுக்கப்படவில்லை. அதன் காரணமாக அதுவரை ஆய்வு செய்யப்பட்ட பிராந்தியங்களின் காலக்கிரமமான வரலாற்று வளர்ச்சியை அதுவரை மேற்கொண்ட தொல்லியல் ஆய்வுகள் மூலம் கண்டறிவது இயலாத காரியமாக இருந்தது.

கந்தரோடைக் கிராமம் தெளிவாகப் பிரிக்கக்கூடிய இரு பகுதிகளைக் கொண்டிருந்தது: ஒன்று மக்களின் வதிவிடக் கிராமம், மற்றது அதற்குத் தெற்கேயுள்ள பனந்தோப்பு. அந்தப் பனந்தோப்பில் இருந்த மண்மேடுகள் பௌத்த தாதுகோபங்கள் இருந்த இடங்களாக இருக்கலாம் என போல் பீரிஸ் கருதினார் (Pieris, P.E. 1917: 11-30: 1919: 40-67). பீரிஸ் மேற்கொண்ட சிறிய அளவிலான அகழ்வுகளில் பளபளப்பாக மெருகிட்ட ஓடுகள், சுண்ணாம்புக் கற்கள் என்பன காணப்பட்டன. அக்கிராம மாணவர்களிடமிருந்து முத்திரை குத்திய மற்றும் ரோமாபுரி நாணயங்களையும் பெற்றுக்கொண்டதாகப் பதிவு செய்திருந்தார் (Begley, V. 1967: 23).

விமலா பெக்லி கந்தரோடையில் மேலாய்வுகளை மேற்கொண்ட மாதங்களில் இலங்கைத் தொல்லியல் திணைக்கள ஆய்வாளர்கள் தெற்கேயிருந்த பனந்தோப்புப் பகுதியில் அகழ்வுகளை மேற்கொண்டிருந்தார்கள். அது பற்றிக் குறிப்பிட்ட விமலா பெக்லி "அந்த அகழ்வுகள் சிறிய அளவிலான தாதுகோபங்களின் அடித்தளங்களையும், அக்கட்டடங்களின் துண்டுப்பகுதிகளையும் வெளிச்சத்திற்குக் கொண்டுவந்திருந்தன." (This excava tion has so far brought to light the bases and architectural fragments of several small dagobas) எனப் பதிவு செய்திருந்தார் (Vimala Begley, V. 1967: p. 23).

"எங்களது அப்பிராந்திய மேலாய்வுகளில் மக்களின் வதிவிடம் தாதுகோப மையத்திலிருந்து வடக்கே சில பர்லாங்கு தூரத்தில் கந்தரோடைக் கிராமத்தில்

காணப்பட்டது. கிராமத்தின் கரையில் வெட்டப்பட்ட ஒரு கிடங்கில், அக்கிராம ஒழுங்கைகளை அமைத்தபொழுதில் பெற்றுக்கொண்ட பெருந்தொகையிலான மட்பாண்ட ஓடுகளைக் குப்பையாகப் போட்டிருந்தார்கள். இம்மட்பாண்ட ஓடுகள் இரும்புக்கால, ஆரம்ப வரலாற்றுக்கால தென்னிந்திய மட்பாண்டங்களை ஒத்திருந்தன - அவையாவன பெருங்கற்கால கறுப்புசிவப்பு மட்பாண்டங்களும், அரிக்மேட்டு வகை ரௌலெற்றெட் மட்பாண்டங்களுமாகும்." (*Vimala Begley, V.* ***1967: 24***).

"அவ்விடத்தில் ஒரு சிறு குழியைத் தோண்டி ஆராய்ந்தபொழுது அக்குழி 12 அடி அழம்வரை வெவ்வேறு காலப்பகுதிகளுக்குரிய மக்களின் வதிவிடக் கழிபொருட்களைக் காட்டியது. அக்குழியின் அடிமட்டக் கன்னிநிலம் வரை அகழ முடியவில்லை. அக்குழியின் மேல் மட்டங்களிலேயே கி.பி. முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகளுக்குரிய தொல்பொருட்களைக் காணமுடிந்தது. இவைதவிர இரும்புத் தாது, 'கோறல்' கற்கள், லக்ஷ்மி பதக்கவில்லைகள் (*Lakshmi plaques*) என்பன அக்குழியிலிருந்து கண்டெடுக்கப்பட்டன." (*Vimala Begley, V.* ***1967: 24***).

"கந்தரோடைக் கிராமத்திற்கு அப்பாலும் சில மேலாய்வுகளை மேற்கொண்டிருந்தோம். மேற்கே கந்தரோடைக் கிராமத்திலிருந்து கடல்வரை செல்லும் கால்வாய்க்குப் பக்கத்தில் அம்மன் கோயிலுக்குச் சமீபமாகப் பல மண்குன்றுகள் காணப்பட்டன. இன்னும் சற்றுத்தள்ளி பழைய கட்டடங்களின் இடிபாடுகள் காணப்பட்டன." (*Begley, V.* ***1967***). இந்த மேலாய்வின் அறிக்கை பென்ஸில்வேனியப் பல்கலைக்கழக 1967 ஆம் ஆண்டின் கோடைகால அறிவிப்பு வெளியீடாக வெளிவந்தது.

**தொல்லியல் ஆய்வுகளை அடிப்படையாகக்கொண்ட கந்தரோடை வரலாற்றியல்**

1970 ஆம் ஆண்டு யூன்ஆகஸ்ட் மாதங்களில் அமெரிக்கப் பென்ஸில்வேனியப் பல்கலைக்கழக அருங்காட்சியகத்தின் தொல்லியலாளர்கள் கந்தரோடையில் மேற்கொண்ட அகழாய்வுகளின் கண்டுபிடிப்புகளும், அக்குழுவிற்குத் தலைமை தாங்கிய விமலா பெக்லி 1967 ஆம் ஆண்டு பெப்ரவரிமார்ச் மாதங்களில் கந்தரோடையில் மேற்கொண்ட மேலாய்வுகளும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினர் 1980-1981 டிசம்பர்பெப்ரவரி மாதங்களில் கந்தரோடைக்கு அருகாமையிலுள்ள ஆனைக்கோட்டையில், பேராசிரியர் இந்திரபாலாவின்



கந்தரோடைக் கிராம வதிவிடப்பகுதி பின்னணியில் காணப்படுகிறது. அதற்கு முன்னால் தொல்லியல் மேடும், அதன் நடுவில் உள்ள விளாத்திமரமும் காணப்படுகின்றன.

Image Source : Vimala Begley, 1967.

தலைமையில் மேற்கொண்ட அகழாய்வுகளின் கண்டுபிடிப்புகளுமே கந்தரோடை வரலாற்றியலின் (*Historiography* - வரலாற்று மெய்மை) கருப்பொருளாக அமைகின்றன. இந்த ஆனைக்கோட்டை அகழாய்வு அடுத்து வரும் இயலில் விரிவாகப் பேசப்படும்.

மேலே கூறப்பட்ட ஆய்வுகளோடு 1917-1919 ஆண்டுகளில் போல் பீரிஸ் கண்டெடுத்த தொல்பொருட்களும், 1967 ஆம் ஆண்டில் இலங்கைத் தொல்லியல் திணைக்கள ஆணையாளராகவிருந்த கொடகும்புர அவர்களது அகழாய்வின் கண்டுபிடிப்புகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. 1980களில் கலாநிதி இரகுபதியின் தொல்லியல் மேலாய்வுகளும், 1994-1995 ஆண்டுகளில் யாழப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த செல்லையா கிருக்ஷ்ணராசா கந்தரோடையில் உச்சாப்பனை என்ற இடத்தில் இலங்கைத் தொல்லியல் திணக்களத்தினரின் அனுமதியோடு மேற்கொண்ட அகழாய்வுகளும், 2011 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் பரமு புக்ஷபரட்ணம் இலங்கைத் தொல்லியல் திணைக்கள உதவி ஆணையாளராகவிருந்த நிமால் பெரேராவுடன் இணைந்து மேற்கொண்ட கந்தரோடை அகழாய்வின் கண்டுபிடிப்புகளும், 2018 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலிய சிட்னிப் பல்கலைக்கழகத் தொல்லியல் பேராசிரியர் பார்பரா ஹெல்விங் கந்தரோடையில் மேற்கொண்ட அகழாய்வின் தொல்பொருட்களும், 2018 ஆம் ஆண்டில் இலண்டன் பல்கலைக்கழகப் பேராசிரியர் டொறியன் புல்லர் மேற்கொண்ட கந்தரோடைத் தொல்தானியங்களின் கதிரியக்கக் கரிம ஆய்வுகளும் இங்கே கூறப்படுகிறது. இக்கண்டுபிடிப்புகள்

அனைத்தும் கந்தரோடை வரலாற்றியலின் உருவாக்கத்திற்கு உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

கந்தரோடையின் சமீபகால அகழாய்வுகளில் கதிரியக்கக் கரிமக் காலக்கணிப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் அதன் பெறுபேறுகள் இலங்கை அரசின் தொல்லியல் திணைக்கள அதிகாரிகளால் அறிக்கைகளில் வெளியிடப்படுவதில்லை. அவர்களில் ஒரு சிலர்தான் விதிவிலக்கானவர்கள். கந்தரோடையில் முதன்முதலாக விஞ்ஞானஅறிவியல் ரீதியிலான அகழாய்வை மேற்கொண்ட அமெரிக்கப் பென்ஸில்வேனியப் பல்கலைக்கழகத்தின் தொல்லியளாளர்களை இலங்கைக்கு வரவழைத்ததில் கலாநிதி கொடகும்புர, கலாநிதி சத்தமங்கல கருணரத்தின இருவரினதும் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

**காலப்பகுதி I: ஆதி இரும்புக்காலம் - கி.மு. 1350-600. வரலாற்றிற்கும் முற்பட்டகாலப் பெருங்கற் பண்பாட்டுப் பரவல்**

அமெரிக்காவின் பென்ஸில்வேனியப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விமலா பெக்லியின் தலைமையிலான குழுவினர் 1970 ஆம் ஆண்டில் யூன்யூலைஆகஸ்ட் மாதங்களில் கந்தரோடையில் மேற்கொண்ட அறிவியல்பூர்வமான அகழாய்வே வெளிநாட்டவர்களின் முயற்சியால் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது அகழாய்வாகும். இந்த அகழ்வில் கண்ட முக்கியமான தொல்பொருட்கள் அமெரிக்காவிற்கு கதிரியக்கக் கரிமக் காலக்கணிப்பிற்கு (Radiocarbon C14 Dating) அனுப்பிவைக்கப்பட்டன. விமலா பெக்லியின் விவரமான 1970 ஆம் ஆண்டின் கந்தரோடை அகழாய்வு அறிக்கை அன்றைய அரசினால் தடைசெய்யப்பட்டது. அது இன்றுவரை வெளியிடப்படவில்லை. ஆனால் விமலா பெக்லி, 1970 இல் கந்தரோடை அகழாய்வில் கண்டெடுத்த முக்கியமான சில தொல்பொருட்களைப் பற்றி அமெரிக்க கோர்ணல் பல்கலைக்கழகம் 1973 இல் வெளியிட்ட ஒரு நூலில் கூறியிருந்தார் (Begley, V. 1973).

**ஆரம்பகாலக் குடியிருப்புகள்: கி.மு. 1350**

தென்னாசியாவில் 'ஹோமோ செப்பியன்ஸ்' (Homo sapiens) எனப்படும் நவீன மனிதர்களின் சமூகங்கள் வாழ்ந்து வரும் பிரதேசங்களுள் யாழ்ப்பாணத் தீபகற்பமும் ஒன்றாகும். இப்பிரதேசத்தில் இம்மனிதக் குடியிருப்புகளின் சரியான ஆரம்பகாலத்தை அறிய முடியாது போனாலும், இற்றைக்கு 3350 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இங்கே நவீன மனிதர்களின் குடியிருப்புகள் இருந்தன என்பதை தொல்லியலாய்வுகளில் கண்டெடுத்த அம்மனிதர்களின் பாவனைப்பொருட்களின் தேதிக்கணிப்புகளைக் கொண்டு கண்டறிய முடிகிறது. இவற்றுள் ஆரம்பப் பெருங்கற்கால கறுப்புசிவப்பு நிற மட்பாண்ட ஓடுகள் உபயோகத்திலிருந்த காலப்பகுதியை இப்பிராந்தியத்தில் மக்களின் குடியேற்றங்கள் ஆரம்பித்த காலமாகக் கொள்ளலாம். இதை அறிந்து கொள்வதற்கு இம்மட்பாண்டங்களின் காலக்கணிப்பு அவசியமாகிறது.

1970 ஆம் ஆண்டு யூன்யூலை மாதங்களில் கந்தரோடையில் அறிவியல்பூர்வமான அகழாய்வை மேற்கொண்ட அமெரிக்கப் பென்ஸில்வேனியப் பல்கலைக்கழகத் தொல்லியலாளர்கள், அங்கே கண்டெடுத்த தொல்பொருட்களை அமெரிக்காவின் கதிரியக்கக் கரிம ஆய்வுகூடத்திற்கு அனுப்பி வைத்தார்கள். அதன் பெறுபேறு பற்றி நீண்டகாலமாக இலங்கையின் தொல்லியல் திணைக்களத்தினர் எதுவிதமான அக்கறையும் காட்டவில்லை.

1977 ஆம் ஆண்டில் இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தின் ஆணையாளராக நியமிக்கப்பட்ட பிரபல தொல்லியராளரான சிரான் தெரனியகல, 1970 ஆம் ஆண்டில் கந்தரோடை அகழ்வுகளில் பங்கு பற்றிய பென்னெற் புரொன்ஸனைத் தொடர்புகொண்டு கந்தரோடையில் கண்டெடுத்த தொல்பொருட்களின் கதிரியக்கக் கரிமக் கணிப்புத் திகதிகளைப் பெற்றுக்கொண்டார். இந்த அறிவிப்பு 08.02.1982 திகதியிட்ட இலங்கைப் பத்திரிகை 'Weekend' இலும், பின்னர் இரகுபதியின் 1987 ஆம் ஆண்டின் யாழ்ப்பாணத் தொல்லியலாய்வு நூலிலும் வெளியானது.

இத்தொல்லியல் பொருட்களில் P2515, P2525 என அடையாளமிட்ட கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் முறையே கி.மு. 1290±60 ஆண்டையும், கி.மு. 980±220 ஆண்டையும் தந்திருக்கின்றன. இக்காலக்கணிப்பின்படி கி.மு. 1350 ஆண்டளவில் உபயோகப்படுத்தப்பட்ட மட்பாண்டங்கள், அக்காலத்தில் இங்கே பெருங்கற்கால மக்களின் குடியேற்றங்கள் இருந்திருப்பதை உறுதிப்படுத்துகின்றன (Ragupathy, P. 1987:205, Thiagarajah, S. 2016: 42)

**இலங்கையில் பெருங்கற் பண்பாட்டின் நுழைவாயில் கந்தரோடை**

கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் அவ்விடத்தில் பரவியிருந்த பெருங்கற்பண்பாட்டின் முக்கியமானதொரு அங்கமாகும். முதன்முறையாக 1970 ஆம் ஆண்டில் விமலா பெக்லியின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட கந்தரோடை அகழ்வாராய்ச்சியின்போது

பெருங்கற்காலப் பண்பாட்டுச் சுவடுகள் பல இங்கே கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த இடத்தில் கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் பற்றியும், பெருங்கற் பண்பாட்டில் அவற்றின் சிறப்பிடம் பற்றியும் சில வரிகள் கூறுவது அவசியமாகிறது. முதன்முதலாக சிந்துவெளி நகரங்களில் கி.மு. 3000-2800 ஆண்டு காலங்களில் இனங்காணப்பட்ட இவ்வகையான மட்பாண்டங்கள் பின்னர் இந்தியத் துணைக்கண்டம் எங்கும் பரவி, பின்னர் கி.மு. 1800 ஆண்டளவில் கர்நாடகத்தில் பிரம்மகிரி, மஸ்கி ஆகிய மையங்களில் காணப்படும் பெருங்கற் புதையல்களில் காணப்படுகின்றன. தென்னாசியச் சூழமைவில் பெருங்கற் பண்பாடும், அதன் ஓர் அம்சமான கறுப்புசிவப்பு மட்பாண்டமும் திராவிட மக்களுக்குரிய தனித்துவமான பண்புகளாகும் (இது பற்றிப் பின்னொரு இயலில் விரிவாகப் பேசப்படும்).

பெருங்கற் பண்பாடானது முக்கியமாக இறந்த மக்களை அடக்கம் செய்யும் பெருங்கற்களைக்கொண்ட கல்லறைகளை உள்ளடக்கியது. இறந்தவர்களை அடக்கம் செய்த பின்னர் பெரிய கற்பாறைகளை கற்பலகைகளாக வெட்டியோ, அல்லாமலோ அடக்கத்தைச் சுற்றிவர நட்டு மேலாக மற்றொரு கற்பலகையால் மூடிவிடுவார்கள். இந்த அடிப்படை முறையிலிருந்து பலவகையான மாறுபாடுகள் காணப்படுகின்றன. தமிழகத்தின் தாழிப்புதையல்கள் இப்பண்பாட்டின் மற்றொரு அங்கமாகும். இம்மாதிரி பெருங்கற்களைக் கொண்ட சமாதிகளும், வழிபாட்டு நடுகற்களும் பண்டைய உலகின் பல பகுதிகளில் காணப்படுகின்றன. இந்தியத் துணைக்கண்டத்தைப் பொறுத்தவரையில் தென்னிந்தியாவில் வாழ்ந்த திராவிட மொழிகளைப் பேசும் மக்களே இந்த அடக்க முறைகளைக் கடைப்பிடித்தவராவர்.

பெருங்கற் பண்பாடு என்பது மேற்கூறப்பட்ட பெருங்கற்களைக்கொண்ட கல்லறைகள் அல்லது தாழிப் புதையல்களோடு இரும்பின் தொழில்நுட்பம், குளம் மற்றும் அணைக்கட்டு ஆகியவற்றின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் நீர்ப்பாசன விவசாயம், உழுவதற்கான ஏர், நெற் பயிர்ச்செய்கை, மட்பாண்டம் வனையும் சில், கறுப்புசிவப்பு மட்பாண்டம், அம்மட்பாண்டங்களில் காணப்படும் எழுத்துகள் ஆகிய பண்புகளை உள்ளடக்கியதாகும்.

செக்கோசிலாவாக்கிய நாடு தந்த சமஸ்கிருத, தமிழ் மொழிகளின் மொழியியல் விற்பன்னர், பேரறிஞர் கமில் ஸ்வெலபில்லின் கூற்று இது:



கந்தரோடை: கறுப்பு-சிவப்பு மட்பாண்டம்.
Image Source : P.Pushparatnam

“கறுப்புசிவப்பு மட்பாண்டம் திராவிடமொழி பேசும் மக்கள் காவிச்சென்ற பண்பாட்டு அடையாளம். அதன் அகில இந்திய பரவல், இவர்கள் ஒருகாலத்தில் இந்தியா முழுவதிலும் பரவி இருந்தார்கள் என்பதற்கான சான்று. கறுப்புசிவப்பு மட்பாண்டங்களும், வேதகாலப் பண்பாட்டின், தீட்டப்பட்ட சாம்பல் நிற மட்பாண்டங்களும் ஒன்றாகக் காணப்படும் கி.மு. 500 ஆம் ஆண்டுகாலப்பகுதி பெருவாரியான திராவிடமொழிச் சொற்கள் சமஸ்கிருத மொழியில் உட்புகுந்த காலமாகும்” (Kamil Zvelebil 1965: 65-69).

இலங்கையின் பெருநிலப்பரப்பில் காணப்படும் பெருங்கற் சமாதிகளினதும், தாழிப்புதையல்களினதும் அவற்றோடு காணப்படும் கறுப்புசிவப்பு மட்பாண்டங்களினதும் காலக்கணிப்புகள் கி.மு. 1000 ஆண்டையும், அதற்குப் பிந்திய ஆண்டுகளையுமே தருகின்றன. இவற்றை நோக்குமிடத்து இப்பெருங்கற் பண்பாடும், அதனோடு சேர்ந்த கறுப்புசிவப்பு மட்பாண்ட உபயோகமும் கந்தரோடை வழியாகவே இலங்கைக்குப் பரவியிருக்கின்றன என எண்ணத் தோன்றுகிறது.

## பெருங்கடல் வர்த்தக - பண்பாட்டுப் பரிமாறல்கள்

யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் மூன்று கரையோரங்களிலும் அமைந்திருந்த இறங்குதுறைகள், துறைமுகங்களான யாழ்ப்பாணப்பட்டினம், யம்பு கோவளம், காயாத்துறை, கல்கோவளம் (பருத்தித்துறை) என்பன பல்வேறு நாடுகளுடன் வர்த்தக - பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பரிமாறிக்கொள்ளும் வாயில்களாக விளங்கின. யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் கரையோரங்களில் உள்ள இறங்குதுறைகளினதும், துறைமுகங்களினதும் பெயர்களைக் கவனிக்கும்போது இந்த உண்மை நன்கு புலப்படும்.

அன்றைய யாழ்ப்பாணத் தீபகத்திற்கு மிக அருகிலிருந்த தமிழகத்துடனேயே ஆரம்பகாலக் கடல் தொடர்புகள் ஏற்பட்டிருந்தன. அதன் காரணமாக தமிழகத்தின் வரலாற்றுப்போக்கு யாழ்ப்பாணக் குடாநாட்டின்



கந்தரோடை: சாம்பல் நிற, ஆரம்பகால சிவப்பு மட்பாண்டங்கள்.
Image Source : P.Pushparatnam

வரலாற்றுப் பண்புகளைப் பெருமளவுக்கு இயக்கியிருக்கிறது. கி.மு. 1350 ஆம் ஆண்டளவில் கந்தரோடையில் காணப்படும் கறுப்புசிவப்பு மட்பாண்ட உபயோகம், ஆனைக்கோட்டையில் கண்ட தாழிப்புதையல் (பின்னர் பேசப்படும்), விவசாயத்தின் வருகை ஆகிய பெருங்கற் பண்பாட்டு அம்சங்கள், அதற்குப் பல ஆயிரத்தாண்டுகள் முன்பிருந்தே தமிழகத்திற்கும், யாழ்ப்பாணத்திற்குமிடையே எற்பட்டிருந்த கடல்வழித் தொடர்புகளின் பெறுபேறுகளாகும். கந்தரோடையின் நிரந்தரக் குடியிருப்புகள்; குளத்து நீரைப் பாச்சி, ஏர் பிடித்து உழுது மேற்கொண்ட நெற்பயிர் விவசாயம்; செம்பு, வெண்கலம், இரும்பு ஆகிய உலோகங்களை உபயோகித்த தொழில்நுட்பம்; உருளும் சில்லை உபயோகித்து வனைந்தெடுத்த மட்பாண்டங்கள்; நீண்டதூர நெடுங்கடல் வர்த்தகம்; சமூக அமைப்பு; எழுத்துருவாக்கம்; ஆட்சிபுரியும் ஓர் அரச வர்க்கம் என்பன பெருங்கற் பண்பாட்டு வழியாகப் பெற்றுக்கொண்ட கந்தரோடை நாகரிகத்தின் பேரெழுச்சியாகும். இந்தக் காலகட்டங்களை எடுத்துரைக்கும் தொல்லியல் சான்றுகள் இனிமேல் உரைக்கப்படும்.

## கந்தரோடை உள்நாட்டு மட்பாண்டங்கள்

கந்தரோடையில் பென்ஸில்வேனியப் பல்கலைக்கழகத்தினரால் நடாத்தப்பட்ட தெல்லியலாய்வின் அடிப்படையில் இப்பிரதேசத்து மட்பாண்டங்களின் தன்மை, தொன்மை பற்றி அறியக்கூடியதாகவுள்ளது. அமெரிக்கப் பல்கலைக்கழகத் தொல்லியலாளர்கள் கந்தரோடையில் கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்ட வகைகளை மூன்று பெரும் பிரிவுகளாக வகுத்து தமது ஆய்வினைச் செய்துள்ளனர் (Orton, N. 1995; கிருக்ஷ்ணராசா, செ. 1998).

இதில் முதலாவது வகையினை ‘A’ என வகுத்துள்ளனர். இவ்வகையைச் சேர்ந்த மட்பாண்டங்களின் கழுத்து வளையங்கள் (Rim) ரோமச்சிவப்பு நிறத்தினைக் (Roman Red) கொண்டிருக்கின்றன. இவ்வகையான சிவப்பு மட்பாண்டங்கள் அரிக்கமேட்டு மட்பாண்டங்களிலிருந்து வேறானவை. இம்மட்கலன்களை இரகுபதி ‘ஆரம்ப கால சிவப்பு மட்கலன்கள்: கி.மு. 1200 - கி.மு. 300’ என வகைப்படுத்தியிருக்கிறார் (Ragupathy, P. 1987: 9).

இரண்டாவது ‘B’ வகையான மட்பாண்டங்களை கறுப்புசிவப்பு வண்ண மட்பாண்டங்கள் என வகுத்துள்ளனர். இவை பெருமளவுக்கு தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களுக்குரிய மட்பாண்ட வகைகள் எனவும் கொள்ளப்பட்டுள்ளன. இவ்வகையான மட்பாண்டங்கள் தென்னிந்தியாவில் அரிக்கமேட்டில் கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டங்களை ஒத்துக் காணப்படுகின்றன எனவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இவ்வகையான மட்பாண்டங்களின் பரவலான உபயோகம் தென்னிந்தியாவில் இரும்பின் உபயோகத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டது (Orton, N. 1995; கிருக்ஷ்ணராசா, செ. 1998: 39).

மூன்றாவது ‘C’ வகையைச் சேர்ந்த மட்பாண்டங்களே அதிகளவில் கிடைத்துள்ளன. இவற்றினைச் சமையல் மற்றும் அன்றாட உபயோகங்களுக்காக மக்கள் கொண்டிருந்தமையால் இவை தடிப்பாகவும், தடிப்பான விளிம்புகளை உடையனவாகவும், பெரிய உருவத்தைக் கொண்டனவாகவும் உருவாக்கப்பட்டன. ‘சாடி’ வகையான மட்பாண்டங்களும் இவற்றில் அடங்கும். சில மட்பாண்டங்களில் ‘கிராபிற்றி’ கீறல் குறியீடுகள் காணப்பட்டன (Orton 1995; கிருக்ஷ்ணராசா 1998).

இந்த மட்பாண்டங்களின் வடிவமைப்புகளும், அவற்றில் காணப்பட்ட கீறல் குறியீடுகளும் (Graffiti marks) இலங்கையின் மற்றைய தொல்லியல் மையங்களான அநுராதபுரம், பொம்பரிப்பு, திவுல்வேவா, மகேவித்த ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட பெருங்கற்பண்பாட்டு மட்பாண்டங்களை ஒத்திருந்தன (Sitampalam, S.K. 1993: 12). இவற்றுள் காணப்பட்ட கறுப்புசிவப்பு மட்பாண்டங்களைப் பற்றி கருத்துக்கூறிய விமலா பெக்லி இந்த கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் தென்னிந்திய இரும்புக்கால மட்கலன்களை ஒத்திருப்பதாகவும், “கந்தரோடையில் குடியேற்றம் பெற்ற மக்கள் தென்னிந்திய மக்களின் கலாசார சமுதாயச் சூழலின் வழித்தோன்றல்களாகவோ, அல்லது அவர்களோடு நெருங்கிய கலாசாரத் தொடர்பு கொண்டவர்களாகவோ இருந்திருக்க வேண்டும்” எனக் கூறியுள்ளார் (*The people of Kantarodai have either descended from the same cultural milieu as the South Indians or have had very close cultural contacts with them*) (Begley, V. 1973).

கந்தரோடையில் மிகப்பழமையான உள்ளூர், மற்றும் வெளியூர் மட்பாண்டங்கள் காணப்படுகின்றன. அவ்விடத்தில் பெருங்கற்கால முறிவளைவு கொண்ட கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் (கி.மு. 1500 - கி.மு. 300), மற்றவகை கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் (கி. மு. 700 - கி.பி. 300), ஆரம்பகால சிவப்பு மட்கலன்கள் (கி.மு. 1200 - கி.மு. 300) என்பனவற்றோடு கி.மு. 500 ஆம் ஆண்டிற்குரிய பளிங்கு மெருகூட்டப்பெற்ற கிரேக்க 'ரௌலெற்றெட்' கலனொன்றும் காணப்பட்டது (Ragupathy, P. 1987: 58).

இந்த ஆதி இரும்புக்கால அகழாய்வு மட்டத்தில் இரும்பு ஆணிகள், இரும்புக் கருவிகள், மற்றும் செம்பு, வெண்கலக் கருவிகளும் காணப்படுகின்றன. வெண்கலப் பொருட்களில் திரிசூலம், இலை போன்ற வடிவில் அமைந்த வேல் என்பன குறிப்பிடத்தக்கவை. திரிசூலம், வேல் என்பன தென்னிந்தியப் பெருங்கற் புதையல்களிலும் காணப்படுகின்றன. இவை சைவ மதத்தின் முன்னோடியான பெருங்கற்காலச் சமய வழிபாட்டிற்குரிய பொருட்களாகும். (Sitampalam, S.K. 1993: 11-12).

இங்கே வெண்கலத்தினாலும் செம்பினாலும் செய்யப்பட்ட, முனைகள் சற்றுத் தடித்த உருண்டையான குச்சிகள் பல நீளங்களில் கண்டெடுக்கப்பட்டன. இவற்றில் நீளமானவை, 45 அங்குல நீளம் கொண்டவை. இம் மாதிரியான குச்சிகள் அலெக்ஸாந்தர் காலத்தில் ரக்ஸிலாவில் (தக்ஷசீலம்) உபயோகத்தில் இருந்தன என பீரிஸ் குறிப்பிடுகிறார் (Pieris, P.E. 1919: 61). இவற்றைப் பரிசீலனை செய்த சிற்றம்பலம் இவை பெண்கள், தங்கள் கண்களுக்கு மை தீட்டுவதற்காக உபயோகித்த 'கோலக்குச்சிகள்' (Kohl sticks) என அடையாளம் காண்கிறார். இப்படியான ஒரு செப்புக் குச்சியில், நெல்லின் அடையாளம் பதிந்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார் (Sitrampalam, S.K. 1993: 11-12). இப்படியான கோலக்குச்சிகள் பண்டைய எகிப்தியப் பெண்களிடையே கி.மு. 1500 ஆம் ஆண்டுகளில் பாவனையில் இருந்திருக்கிறது.

அகழ்வாராய்ச்சியாளர் போல் பீரிஸ் தனது கந்தரோடை அகழ்வாராய்சிக்காக ரூபா 150 மட்டுமே தரப்பட்டதாகவும், அப்பணம் முடிந்ததும் தனது அகழ்வுகளை நிறுத்திவிட்டதாகவும் கூறியிருக்கிறார் (Pieris, P.E. 1919: 40). அகழ்வு செய்த இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட வெண்கலத்தினால் செய்யப்பட்ட ஆறு அங்குல உயரமான ஒரு பெண் தெய்வத்தின் உருவம், அதன் வலது கரம் 'அபயஹஸ்த' முத்திரையையும் (காத்தல் அடையாளம்), இடது கரம் 'வரதஹஸ்த' முத்திரையையும் (செல்வம் அளிக்கும் அடையாளம்) காட்டி நின்றது எனக் குறிப்பிட்டிருக்கிறார் (Pieris, P.E. 1919: 60). இத்தெய்வம் லக்ஷ்மி என அடையாளம் காணப்படுகிறது. இப்படியான செப்பு, அல்லது வெண்கலப் பட்டயங்களை அக்கால மக்கள் தங்கள் வீடுகளில் வைத்து வணங்கி வந்தார்கள்.



கந்தரோடை: பலவகை மட்பாண்ட ஓடுகள்.
Image Source : P.Pushparatnam

அகழ்வுகளில் பலவகையான இரும்புத் துண்டுகளும், இரும்பை உருக்கி வேலை செய்ததற்கான அடையாளங்களும் காணப்பட்டன. இவற்றில் மிகப்பழமையானது எது, பழமையில்லாதது எது என அடையாளம் காண முடியவில்லை. மேலும், அங்கே காணப்பட்ட சிவப்பு நிறமான இந்தியத் தங்கத்துண்டுகள் தங்க ஆபரணங்களின் உடைந்த துண்டுகள் என இனங்காணப்பட்டன (Pieris 1919: 62).

கந்தரோடையின் பெருங்கற்பண்பாட்டுக்காலம் கால்நடைகள், பசு, நாய் ஆகிய பிராணிகளை வீட்டுச்சூழலில் பழக்கியெடுத்து, அவற்றை அச்சூழலில் பற்றுக்கொள்ள வைத்த காலப்பகுதியுமாகும். அகழ்வுகளில் காணப்பட்ட பெருவாரியான கால்நடை எலும்புகள், எருதுகள் விவசாய நடவடிக்கைகளுக்காக உபயோகிக்கப்பட்டதை எடுத்துக்காட்டுகின்றன. நாய்களின் எலும்புகள், அவை பழக்கப்பட்ட வீட்டு மிருகங்களாக வளர்க்கப்பட்டதைக் காட்டுகின்றன. பறவைகளின் எலும்புகள், மீன் முள்ளுகள் அவை உணவாக உட்கொள்ளப்பட்டதைக் காட்டிநிற்கின்றன. ஆட்டெலும்புகளில் காணப்படும் கூர்மையான வெட்டுகள், அவை உணவாக உட்கொள்ளப்பட்டதற்கான சான்றுகள் ஆகும். அருகிலுள்ள ஆனைக்கோட்டைக் கிராமத்தில் காணப்பட்ட பெருங்கற் பண்பாட்டுப் புதையல்கள், பெருவாரியான கறுப்புசிவப்பு மட்பாண்ட ஓடுகளின் இருப்பு, இரும்பின் பாவனை, வயல்கள், குளங்கள், விவசாய நடவடிக்கைகள் என்பன அனைத்தும் ஒரு பெருங்கற் பண்பாட்டின் புராதன நடைமுறைகளை எடுத்துக்காட்டுகின்றன (சிற்றம்பலம், சி.க. 1993: 1013).

**காலப்பகுதி II : ஆரம்ப வரலாற்றுக் காலம் 1. நகரமயமாக்கம் கி.மு. 600-300.**

வரலாற்றுக்கால ஆரம்பம் என்பது ஒரு பிரதேசத்தில் பதிய வைத்திருக்கும் கல்வெட்டுகளிலோ அல்லது வேறு பொருட்களிலோ காணப்படும் வாசிக்கக்கூடிய ஒரு மொழியின் ஆரம்பகாலத்தைக் கொண்டு வரலாற்றாசியர்கள் கொடுக்கும் காலத்தைக் குறிப்பிடுகிறது. அந்தவகையில் கந்தரோடையில் இதுவரை கண்டெடுத்த பானை ஓடுகளில் காணப்படும் தமிழ்ப்பிராமி எழுத்துகளின் வடிவமைப்பு, இயற்பியல் ஆகியவற்றைக் கொண்டு, அந்த எழுத்துகள் கி.மு. 300 ஆம் ஆண்டிற்கு உரியதாகத் தீர்மானிக்கப்படுகிறது. ஆனால் இதேவகையான ஆரம்பகாலப் பிராமி வடிவங்களைக் கொண்ட எழுத்துகள் காணப்படும் ஆதிச்சநல்லூர், அழகன்குளம், கொடுமணல், பொருந்தல், கீழடி ஆகிய தொல்லியல் மையங்களில் காணப்பட்ட கலவோடுகளின் கதிரியக்கக் காலக்கணிப்புகள் கி.மு. 600-500 ஆண்டுகள் எனக் காட்டுகின்றன. இக் காலக்கணிப்புக்களைத் தொடர்ந்து தமிழ்நாட்டின் பிராமி எழுத்தின் ஆரம்பகாலம் கி.மு. 600 ஆம் ஆண்டாகக் கொள்ளப்படுகிறது (இரா. சிவானந்தம் 2019: 8).

இலங்கையிலும் அநுராதபுரத்தில் கண்டெடுத்த பானை ஓட்டில் காணப்படும் தமிழ்ப்பிராமி எழுத்து கி.மு. 700 இற்கும் - கி.மு. 500 இற்குமிடையே பதியப்பட்டிருப்பதாக கதிரியக்க ஆய்வுகள் காட்டுகின்றன (Dreraniyagala, S.U. 1992).

எழுத்துகளின் வடிவமைப்பை மட்டும் கொண்டு அந்த எழுத்து எழுதிய காலத்தைத் தீர்மானிப்பது ஒரு பொது விதியே ஒழிய, அக்கணிப்பு தவறாகக்கூட இருக்கலாம். அந்த எழுத்துப் பதியப்பட்டிருக்கும் பொருளை அறிவியல்ரீதியிலான காலக்கணிப்புச் செய்வதன் மூலமே அதன் சரியான காலத்தைக் கண்டறிய முடியும். உதாரணமாக அநுராதபுரத்தில் பெருங்கற்காலம் கி.மு. 1000 ஆண்டளவில்தான் ஆரம்பமானபோதிலும், அங்கே கண்டெடுத்த தமிழ்ப்பிராமி எழுத்துகளைக் கொண்ட பானை ஓட்டின் அறிவியல்ரீதியான காலக்கணிப்பு கி.மு. 700-500 ஆண்டு காலத்தைக் காட்டியிருக்கிறது. கந்தரோடையிலும் இந்த எழுத்துகள் பதிந்த ஓடுகளை, முதலிலேயே திட்டமிட்டுக் கதிரியக்கக் காலக்கணிப்புச் செய்வதன் மூலமே இந்த மொழிப்பதிவின் சரியான காலத்தைக் கண்டறிய முடியும். மேலும், பெரும்பாலான தொல்லியல் மையங்களில் ஆரம்ப வரலாற்றுக் காலத்திலேயே நகரமயமாக்கலும் ஆரம்பமாகிறது. இதையும் கவனத்தில் கொண்டே ஆரம்ப வரலாற்றுக்காலத்தைத் தீர்மானிக்க முடியும்.

2 தென்னாசியாவின் தொல்லியல் மையங்களில் நகரமயமாக்கலின் முக்கிய அம்சங்களாக பின்வரும் பண்புகள் எடுத்துரைக்கப்படுகின்றன: அப்பிராந்தியத்திலுள்ள குடியிருப்புகளில் நிரந்தரமான ஒரு பெரிய குடியிருப்புப் பகுதி, அம் மக்களின் வாழ்வாதாரத்திற்கான உணவு உற்பத்தி, நகரத்திட்ட அமைப்பு, பொது மக்களுக்கான கட்டடங்கள், குடியிருப்பு மட்டங்களில் உயர்வான ஓர் ஆட்சிக்குழு அல்லது தலைவன், எழுத்துக்கலை, தனித்துறைகளாக விளங்கும் கைத்தொழில்கள்\ தொழில்நுட்ப வேலைப்பிரிவுகள், நெடுந்தூர வர்த்தகம், பெருகிவரும் மக்கள் தொகைக்கான வாழ்வாதார முன்னேற்பாடுகள் (Allchin, 1995: 57). இவற்றை ஆதாரமாகக்கொண்டு கந்தரோடையின் ஆரம்ப வரலாற்றுக்காலம் கி.மு. 600 ஆம் ஆண்டுக்காலமாக இந்த ஆய்வில் தீர்மானிக்கப்படுகிறது. கந்தரோடையின் நகரமயமாக்கல் அம்சங்கள் இங்கே சுருக்கமாக எடுத்துரைக்கப்படுகிறது. பின்னர் இடம்பெறும் ஓர் இயலில் இவை மேலும் விரிவாகப் பேசப்படும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆதிக்குடியிருப்புகள் இடம்பெற்ற மையங்களில் கந்தரோடை முக்கியமானது. பெருங்கற்பண்பாட்டைப் பேணிய இம்மக்கள் தென்னிந்தியாவிலிருந்து இடம்பெயர்ந்து வந்தார்களா அல்லது இங்கு ஏற்கனவே குடியேறியிருந்த மக்கள் இந்தப் பண்பாட்டை மேற்கொண்டார்களா என்பது தெரியவில்லை. ஒருசமயம் தென்னிந்தியாவிலிருந்து இந்த விவசாயப் பண்பாட்டை மேற்கொண்ட ஒரு பகுதியினர் இங்கே வந்து, இங்கே ஏற்கனவே குடியிருந்தவர்களுடன் சேர்ந்து இதைக் கடைப்பிடித்திருக்கலாம்.

இந்த மக்களது குடியிருப்பு 40 ஏக்கர் பரப்பளவு கொண்ட கந்தரோடைக் குளத்திற்குச் சமீபமாக நடைபெற்றிருக்கிறது. இது தனியாக இயங்கும் ஒரு குளமல்ல. இதிலிருந்து செல்லும் கால்வாய்கள் - மனிதர்களால் வெட்டப்பட்ட அகன்ற வாய்க்கால்கள் - இதனோடு பல சிறு குளங்களை இணைக்கின்றன (Cascaded lake system). குளங்களுக்கு அருகே நீண்டு அகன்ற நெல் வயல்களுக்கு அப்பால்தான் மக்களின் வதிவிடங்கள் காணப்படுகின்றன. இதைக் கவனித்து நோக்குமிடத்து பெரியதொரு மக்கள் தொகையைப் பராமரிப்பதற்காகத் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட விவசாய அமைப்பு இது என்பதை உணர முடிகிறது.

**கந்தரோடைத் தானியங்களின் காலக்கணிப்பு**

2018 ஆம் ஆண்டின் கந்தரோடை அகழ்வுகளின்போது இலண்டன் பல்கலைக்கழகக்கல்லூரியைச் சேர்ந்த (University College, London) தொல் தாவரவியலாளர் டொறியன் புஃல்லர், கந்தரோடை அகழ்வுகளில் கண்ட

சில தானியங்களைத் தன்னுடன் எடுத்துச்சென்று இலண்டன் கதிரியக்கக் கரிம ஆய்வு கூடத்தில் ஆய்வு செய்திருக்கிறார். அவர் எடுத்துச்சென்ற மாதிரித் (Sample) தானியங்களில், அரிசி கி.மு. 380 ஆண்டிற்கு உரியதாகவும், தினை கி.மு. 350-305 ஆண்டிற்கு உரியதாகவும், சாமை கி.மு. 180-40 ஆண்டிற்கு உரியதாகவும் கணிக்கப்பட்டிருக்கிறது.

கந்தரோடைக் கிராமத்தினூடாக யாழ்ப்பாணக் கடலின் மேற்குக்கரைவரை செல்லும் வழுக்கை ஆறு எனப்படும் கால்வாய், வடக்கே கட்டுவன் கிராமத்தில் ஆரம்பமாகி, மேற்கு நோக்கி ஓடி வறுத்தலைவிளான், தெல்லிப்பழை ஊடாக அளவெட்டியை அடைந்த பின்னர், தெற்கு நோக்கித் திரும்பி கந்தரோடை வழியாக கட்டுடைக் கிராமத்தை அடைந்து, மீண்டும் மேற்கு நோக்கித் திரும்பி நவாலி, கல்லுண்டாய் வழியாக நாவாந்துறைக்குச் சமீபமாக கடலை அடைகிறது. இன்று வெள்ள வாய்க்காலாகச் செயலாற்றும் இக்கால்வாய் எப்போதும் இப்படியிருந்ததில்லை. அக்கிராம மக்களின் மரபு ஞாபகங்களின்படி முற்காலத்தில் கடலுடன் இணைந்து கடல்நீரைக் கொண்டிருந்த இக்கடற்கால்வாய் பெரியதொரு பண்டமாற்றுப் பாதையாக இயங்கிவந்திருக்கிறது. இதன்மூலமாக சிறிய படகுகள் நாவாந்துறையிலிருந்து கந்தரோடை வரை பொருட்களைக் கொண்டுவந்தும், எடுத்துச்சென்றும் பணியாற்றியிருக்கின்றன.

## புராதன முத்திரை நாணயங்கள்

நெடுந்தூர வர்த்தகத்திற்கான சான்று கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட இந்திய முத்திரை நாணயங்கள் (Punchmarked coins) ஆகும். புத்த பகவான் காலத்தில் புழக்கத்திலிருந்த இந்த நாணயங்கள் கிறிஸ்தாப்தத்திற்கு 600 ஆண்டுகள் முற்பட்ட 'புராண நாணயங்கள்' எனவும், சில கி.மு. 1000 ஆண்டுக் காலத்தவையாக இருக்கலாம் எனவும், நாணய வல்லுனர் ஸேர். கன்னிங்காம் (Sir A. Cunningham) குறிப்பிடுவதாக போல் பீரிஸ் பதிவு செய்திருக்கிறார். இவ்வகையான 35 நாணயங்களை கந்தரோடையிலிருந்தும், இரண்டை வல்லிபுரத்திலுமிருந்தும் பெற்றுக்கொண்டதாகப் பதிவு செய்திருக்கிறார். இந்த நாணயங்கள் வெள்ளி, செம்பு, வெள்ளி பூசப்பட்ட செம்பு ஆகிய உலோகங்களில் நீள் சதுர வடிவு கொண்டவை. அந்த நாணயங்களில் பதிக்கப்பட்ட உருவங்கள் அவை உலோகத் துண்டுகளாக வெட்டிய பின்னர் அவற்றின்மேல் குத்திப் பதிக்கப்பட்டவை. அதன் காரணமாக அவை முத்திரை நாணயங்கள் அல்லது 'அச்சுக்குத்திய நாணயங்கள்' என அழைக்கப்படுகின்றன. இந்த நாணயங்கள் ஒரே நிறையில் இருக்கவேண்டும் என்பதற்காக சிலவேளைகளில் அதன் மூலைகளில் ஒரு துண்டு



அநுராதபுர அகழ்வில் கண்டெடுத்த இக்கல ஓட்டில் தமிழ்ப்பிராமி எழுத்தில் 'தயா குடே' (தயாவின் குடம்) என்ற வாசகம் காணப்படுகிறது. வேப்பேற்றுக் கதிரொளி வீச்சு இதன் காலத்தை கி.மு. 700-500 எனக் கணிப்பிட்டிருக்கிறது.

Image Source: S.U. Deraniyagala.

வெட்டப்பட்டிருக்கும் (Pieris, P.E. 1919: 46-47). சமீபகாலங்களில் யாழ்ப்பாணக் கோட்டை அகழ்வுகளில் கி.மு. 500 ஆம் ஆண்டிற்குரிய கிரேக்க மதுச்சாடிகள் கண்டுபிடிக்கப்பட்டமை, பீரிஸ்ஸின் இந்த கடல் - வர்த்தகக் காலக்கணிப்பை ஏற்கச்செய்கிறது.

மேற்குறிப்பிட்ட முத்திரை நாணயங்களைப் போன்ற உள்ளூர் முத்திரை நாணயங்களும் உருவாக்கப்பட்டதை கிருஷ்ணராசா தனது கந்தரோடை அகழாய்வுகளில் எடுத்துக்காட்டியிருக்கிறார். ஒரு வெள்ளி முத்திரை நாணயத்தில் நாகபாம்பின் உருவத்தோடு பன்னரண்டு கதிர்களைக் கொண்ட சூரிய உருவமும் பதிக்கப்பட்டிருக்கிறது. கந்தரோடையில் கண்ட இது போன்ற நான்கு நாகத்தலை நாணயங்களை கிருஷ்ணராசா பதிவிட்டிருக்கிறார். இவற்றை ஆதாரமாகக் கொண்டு கந்தரோடை நாக மன்னர்களுடைய ஆட்சிப்புலத்தின் தலைநகரமாக இருந்திருக்க வேண்டும் என உறுதிப்படுத்துகிறார் (கிருஷ்ணராசா, செ. 1998: 65-69).

கந்தரோடையில் போல் பீரிஸ் கண்டெடுத்த நாணயங்களினிடையே கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்குரிய கொற்கைப் பாண்டிய நாணயங்களையும் கண்டெடுத்திருக்கிறார். ஒரு நாணயத்தின் முன்பக்கத்திலுள்ள யானையின் தலைமேல் காணப்படுவதை ஒரு வீடு எனவும், எதிர் முனையில் மூன்று வளையங்கள் கொண்டு காணப்படுவது ஒரு சைத்தியம் எனவும் கூறியுள்ளார். நாணயத்தின் மறுபக்கத்தில் கோடுகளாகப் பதித்திருக்கும் பாண்டியரின் மீன் சின்னத்தை அவரால் இனம் கண்டுகொள்ள முடியவில்லை (Pieris 1919: 50).

## எழுத்துக்கலை

தமிழ்மொழியின் பேச்சுவழக்கு பெருங்கற்காலப் பண்பாட்டின் பரவலுடனேயே - முக்கியமாக விவசாய நடவடிக்கைகள் மூலமாகவே - முதலில் மக்கள்

மத்தியில் பரவியதாக ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். அப் பேச்சுவழக்குகள் தமிழ்நாட்டில் ஆதிச்சநல்லூர், அழகன்குளம், கொடுமணல், பொருந்தல், கீழடி ஆகிய தொல்லியல் மையங்களில் கி.மு. 600 ஆம் ஆண்டுக்காலத்திலே தமிழ்ப்பிராமியாக எழுத்து வடிவம் பெற்றிருப்பதை ஆய்வுகள் அறியத்தருகின்றன. கந்தரோடையில் பிராமி எழுத்துகள் பாவனைக்கு வரமுன்னர் அப்பிராந்தியத்தில் ஒரு வகையான குறியீட்டு எழுத்துகளை (*Graffiti*) மக்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள். இக்குறியீடுகள் அவர்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் ஒரு தொடர்பு மொழியின் எழுத்துப்பதிவுகளாக இருக்கலாம்.

## முடிவுரை: ஆரம்ப வரலாற்றுக்காலம் 1.

நீர்ப்பாசன வேளாண்மையிலும், நெல் விளைவித்தலிலும் தொழில்புரியும் உழவுத் தொழிலாளர்கள்; வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் வர்த்தகர்கள்; கறுப்புசிவப்பு மற்றும் பலவகையான மட்பாண்ட வேலைகளைச் செய்யும் குயவர்கள்; செம்பு, வெண்கலம், இரும்பு ஆகிய உலேகங்களைக் கொண்டு வேலை செய்யும் கொல்லர்கள்; முத்திரை நாணயங்களை வெளியிடும் ஆளும் வர்க்கத்தினர், கண்களுக்கு மை தீட்டும் உயர்குலப் பெண்கள் - இவை அனைத்தும் வேலைப் பிரிவினையையும், தொழில்நுட்ப ஆற்றலையும், சமூக அமைப்பாண்மையையும், அன்றைய சமூகப்படிநிலை அமைப்பையும் எடுத்துக்காட்டுகின்றன. நாடெல்லாம் காணப்படும் கறுப்புசிவப்பு மட்பாண்ட ஓடுகளும், உலோகப் பொருட்களும் நாடெங்கும் பரந்துகிடக்கும் ஒரேமாதியான பொருளியல் கலாசாரத்தை எடுத்துக்காட்டுகின்றன. உள்ளூர் நாணயங்களின் வெளியீடு ஓர் அரசியல், பொருளாதார அமைப்பின் எழுச்சியை எடுத்துரைக்கிறது.

புத்த பகவான் காலத்தில் நாகதீபத்தை ஆண்ட மகோதரனைப் பற்றி மகாவம்சம் கூறும் கதை ஐதீகமாக இருந்தபோதிலும், சாஞ்சுநியாத்தன் எழுதிய கி.மு. 700 ஆம் ஆண்டுக்காலத்தைய பீனீசியர் வரலாறு (*Phoenician History of 700 BCE by Sanchuniathon*) என்ற கிரேக்க நூலில் அக்காலத்திய இலங்கையின் (*Taprobane*) வடபகுதியில் ஓர் அரசு இருந்தது பற்றிக் குறிப்பிடப்படுகிறது (*Baumgarten, A.I. 1981*).

## காலப்பகுதி III : ஆரம்ப வரலாற்றுக்காலம் 2: கி.மு. 300-200. எழுத்துப் பதிவுகள் - உரோம நாணயங்கள் உரோமக்கலன்கள்

வரலாற்றுக்கால ஆரம்பம் என்பது ஒரு பிரதேசத்தில் பதிய வைத்திருக்கும் கல்வெட்டுகளிலோ அல்லது வேறுபொருட்களிலோ காணப்படும் வாசிக்கக்கூடிய ஒரு மொழியின் ஆரம்பகாலத்தைக் கொண்டு வரலாற்றாசியர்கள் கொடுக்கும் காலத்தைக் குறிப்பிடுகிறது. அந்தவகையில் கந்தரோடையில் இதுவரை கண்டெடுத்த பானை ஓடுகளில் காணப்படும் தமிழ்ப்பிராமி எழுத்துகளின் வடிவமைப்பு, இயற்பியல் ஆகியவற்றைக் கொண்டு அந்த எழுத்துகள் கி.மு. 300 ஆம் ஆண்டிற்கு உரியதாகத் தீர்மானிக்கப்படுகிறது.

## கந்தரோடைத் தமிழ்ப்பிராமிப் பதிவுகள்

1995 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினர் தொல்லியலாளர் கிருஷ்ணராசாவின் தலைமையில் கந்தரோடையில் உச்சாப்பனை என்ற பகுதியில் மேற்கொண்ட அகழாய்வுகளில் தமிழ்ப்பிராமி எழுத்துகள் பதித்த பல கறுப்புசிவப்பு மட்பாண்ட ஓடுகளைக் கண்டெடுத்திருக்கிறார்கள். இவற்றில் நான்கு ஓடுகளில் எழுத்துப் பொறிப்புகள் முழுமையாக வாசிக்கக்கூடியதாக இருந்தன (கிருஷ்ணராசா, செ. 2004).

சடராசன்: சடராசன் என்ற பெயர், தென்னிலங்கையில் அக்குறுகொட என்ற இடத்தில் ஒஸ்மண்ட் போப்பேராய்ச்சி கண்டெடுத்த ஒரு நாணயத்தில் - கலாநிதி புக்ஷபரட்ணத்தின் வாசிப்பின்படி - தமிழ்ப்பிராமி எழுத்துகளில் சடநாகராசன் என்ற பெயர் பொறித்த ஒரு நாக அரசனின் பெயரை ஞாபகப்படுத்தியது. இந்தப் பெயரைக் கொண்டவன் ஒரு நாக அரசனாகவோ, அல்லது தலைவனாகவோ இருந்திருக்கலாம். இந்த ஓட்டின் காலம் கி.மு. 300 ஆம் ஆண்டாகக் கணிக்கப்படுகிறது.

பலூார்: தமிழ் இலக்கியங்களில் கலிங்க நாட்டிலிருந்த 'தந்திரபுர' பலூர் என அழைக்கப்பட்டது. இந்த வாசகம் காணப்பட்ட மட்பாண்டத்தில் கலிங்க நாட்டின் பலூரிலிருந்து பொருட்கள் கொண்டுவரப்பட்டிருக்கலாம். அக்காலத்தில் பெரிய பானைகளில் பொருட்களை ஏற்றி கப்பல்களில் கொண்டுவருவது வழக்கமாக இருந்தது. இந்த மட்கலன் கலிங்கத்துடனான வர்த்தக உறவுகளுக்குச் சான்றாக இருக்கலாம்.

ஆபதி: ஒரு மட்கலன் துண்டில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்குரிய தமிழ்ப்பிராமி எழுத்தில் ஆபதி என்ற பெயர் காணப்பட்டது. இப்பெயர் அப்பாத்திரத்திற்கு உரிமையானவரின் பெயராக இருக்கலாம், அல்லது அப்பாத்திரத்தில் பொருட்களை ஏற்றிவந்த வர்த்தகரின் பெயராக இருக்கலாம்.

குனி: உடைந்த மட்பாண்டத் துண்டில் 'குனி' எனக் காணப்பட்ட தமிழ்ப்பிராமி வாசகம், ஒரு பெண்ணின் பெயரின் கடைசி இரு எழுத்துகளாகும். இதில்

காணப்படும் ஆரம்பகால பிராமி எழுத்து வடிவம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு உரியது.

2011 ஆம் ஆண்டில் கந்தரோடையில் இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தைச் சேர்ந்த நிமால் பெரேராவுடன் இணைந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் புஷ்பரட்ணம் மேற்கொண்ட ஆகழாய்வுகளில் கி.மு. 300 ஆண்டிற்குரிய தமிழ்ப்பிராமி எழுத்துகளும் வாசகங்களும் கொண்ட பல மட்பாண்ட ஓடுகளைக் கண்டெடுத்திருக்கிறார்கள். மட்பாண்ட ஓடுகளில் காணப்படும் பெயர்களை அம்மட்கலன்களின் உரிமையாளர்கள், அதிலிருக்கும் பொருட்கள் தங்களுடையது எனக் காட்டுவதற்காகப் பொறிப்பார்கள்; அல்லது அப்பாண்டங்களில் பொருட்களைக் கொண்டுவரும் வர்த்தகர்கள் தங்கள் பெயர்களைப் பொறிப்பார்கள். தமிழ்ப்பிராமி எழுத்துகளின் தொகையைக் கொண்டு பார்க்குமிடத்து தமிழ்மொழியை எழுத, வாசிக்கத் தெரிந்த கணிசமான தொகையினர் கி.மு. மூன்றாம் நூற்றாண்டுப்பகுதியில் கந்தரோடையில் வாழ்ந்தார்கள் என்பதை உணர முடிகிறது.

### மதிப்புமிக்க கற்கள்

கந்தரோடையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட கற்களிடையே அகேற் (Agate), நீலமணி (Sapphire), கார்னெற் எனப்படும் மணிக்கல் (Garnet), மரகதம் (Beryl), சோப்ஸ்ரோன் எனப்படும் மென்கல் (Soapstone) ஆகிய மதிப்புமிக்க கற்கள் காணப்படுகின்றன. இக்கற்கள் தமிழகத்திலிருந்து வர்த்தகள் மூலமாகத் தருவிக்கப்பட்ட கற்களாக இருக்கலாம். சில கற்களின் வரிசையாகப் பெருகும் அளவுகளைக் கொண்டும், அவற்றில் காணப்படும் துவாரங்களைக் கொண்டும், அவற்றைக் கோர்த்து மாலைகளாக அணிந்திருந்தார்கள் எனக் கணிப்பிட முடிகிறது. இவற்றை நோக்குமிடத்து அக்காலத்தில் இவ்விடத்தில் வாழ்ந்த மக்கள் பொருளாதாரரீதியாக உயர்நிலையில் வாழ்ந்தார்கள் என்பதையும் ஊகிக்க முடிகிறது.

### உரோம நாணயங்கள்

கந்தரோடையில் கண்டெடுக்கப்படும் நாணயங்களில் மிக அதிகமானவை கி.மு. 300க்கும், கி.பி. 200ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய உரோமப் பேரரசின் நாணயங்களாகும். கடந்த நூறு ஆண்டுகளில் தனிப்பட்ட சேகரிப்பாளர்கள் ஆயிரக்கணக்கான பண்டைய உரோம நாணயங்களை இங்கிருந்து எடுத்து வெளியே விற்றிருக்கிறார்கள். மழைக்காலங்களில் மண்ணைக் கரைத்துக்கொண்டு வரும் வெள்ளத்திலிருந்து பாடசாலை மாணவர்கள் பொறுக்கியெடுக்கும் இந்த நாணயங்களை பெரியவர்களிடம் கொடுத்துவிட்டுச் சில சில்லறைக் காசுகளைப் பெற்றுக்கொள்வார்கள். கந்தரோடையில் அகழ்வை மேற்கொள்ளும் அனைவருக்கும் தவறாமல் கிடைப்பது உரோம நாணயங்கள்தாம்.

கந்தரோடையில் போல் பீரிஸ் தொல்லியலாய்வை மேற்கொண்டபோது அவருக்கு முதன்முதலில் கிடைத்தது இரு உரோம நாணயங்கள். இதை அவரிடம் கொடுத்த பெண்ணின் பெயர் ராஜலக்ஸ்மி எனப் பதிவு செய்திருக்கிறார். அப்பெண் தனது தந்தையார் வீட்டு முற்றத்தைக் களிமண்ணால் மெழுகியபோது அதில் கண்ட நாணயங்களை பீரிஸ்ஸிடம் கொண்டுவந்து கொடுத்திருக்கிறார் (Pieris, P.E. 1919: 46).

அகழாய்வு செய்யாமலே தனது மேலாய்வுகளின் மூலமாகவும், மாணவர்களிடமிருந்து பெற்றும், இரு மாத காலத்தில் போல் பீரிஸ் 150 உரோம நாணயங்களைச் சேகரித்துக் கொண்டார் என்பது ஆச்சரியமாக இருக்கிறது. இதைக்கொண்டே கந்தரோடையின் உரோம வர்த்தகம் பல நூற்றாண்டுகளுக்கு நீடித்து இருந்தது என்பதை நிச்சயமாக நம்பலாம்.

இந்த நாணயங்கள் வெவ்வேறு தேய்ந்த நிலையிலே காணப்பட்டன. மிகப்பழைய நாணயங்கள் முற்றாகத் தேய்ந்த நிலையிலே காணப்பட்டன. சற்றுப் பிற்கால நாணயங்கள் பாதுகாப்பான நிலையில் காணப்பட்டன. இந்த நாணயங்கள் நாணயவியல் வல்லுநர் கொட்டிங்ரனால் (H.W. Codrington) பரிசீலனை செய்யப்பட்டு இனம் காணப்பட்டன. நாணயங்களில் பதிவிடப்பட்ட உரோமச் சக்கரவர்த்திகள்: வலன்ரினியன் (கி.பி. 321-375), கொன்ஸ்ரன்ரைன் (கி.பி. 379-395), தியொடோசியஸ் I (கி.பி. 379-395), ஆர்க்கேடியஸ் (கி.பி. 395-408), தியொடோசியஸ் II (கி.பி. 408-450). இவர்களில் வலன்ரினியனுக்கும், இரண்டாம் தியோடோசியஸ்க்குமிடையிலே 40 நாணயங்கள் காணப்பட்டன (Pieris, P.E. 1919: 57). இந்த நாணயங்களைக் கொண்டு கந்தரோடையுடனான உரோமாபுரி வர்த்தகம் ஏறக்குறைய கி.பி. 450 ஆண்டுகள் வரை நீடித்ததாகக் கொள்ள முடிகிறது.

கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட உரோம மட்பாண்டங்களையும் உரோம நாணயங்களையும் நோக்குமிடத்து கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் மத்திவரை 700 ஆண்டுகளுக்கும் மேலாக கந்தரோடை (யாழ்ப்பாணம்) உரோம வர்த்தகத்தின் ஒரு முக்கிய மையமாக இருந்தது புலனாகிறது. கந்தரோடையின் நெடுங்கடல் வர்த்தகப் பொருளாதாரத்தில் உரோம வர்த்தகம் ஒரு முக்கிய பங்கினை வகித்திருக்கிறதையும் புரிந்துகொள்ள

முடிகிறது. கந்தரோடை அகழ்வுகளில் அதிகமாகக் காணப்படும் ஈயத்தினால், செப்பினால் அல்லது வெண்கலத்தினால் ஆன ஒரு பெண் தெய்வத்தின் உருவம் பதித்த இருபது முதல் முப்பது செ.மீ. (ஒரு அங்குலம்) உயரமான பட்டயங்கள், நாணயங்களா அல்லது வழிபாட்டிற்குரிய பதக்கவில்லைகளா என்ற சர்ச்சை ஆய்வாளர்களிடையே இருந்து வருகிறது. முன்னர் குறிப்பிட்ட இதுபோன்ற ஆறு அங்குல உயரமான பட்டயங்கள் நிச்சயமாக வணக்கத்திற்குரிய உருவங்கள். ஆனால் அதைப்போன்ற சிறிய உருவவில்லைகள் நாணயங்களாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றன.

இப்பட்டயங்களை நாணயங்களாகக் கருதி அவற்றிற்கு 'லக்ஷ்மி நாணயங்கள்' என்ற பெயரை வழங்கியவர் ஆய்வாளர் போல் பீரிஸ். அவர் கண்டெடுத்த பட்டயத்திற்கு அப்படிப் பெயரிட்டமைக்காக அவர் கூறும் காரணம் இது:

இப்படியான நாணயங்களை முன்னர் சிலாபத்தில் ஒரு தடவை கண்டதாகக்கூறும் பீரிஸ் கந்தரோடை நாணயம் தனித்தன்மையான கலைத்திறனும், சிறந்த வேலைப்பாடும் கொண்டதாகக் (*Singularly artistic and of good workmanship*) கூறுகிறார். 'இந்த நாணயத்தின் முன்பக்கத்தில் ஒரு பெண்ணின் முழுஉருவம் காணப்படுகிறது. காதுகளில் தடித்த வளையமான காதணிகள் காணப்படுகின்றன. தனங்கள் முழுமையாக, எடுப்பாகவுள்ளன. இடுப்பில் அணிந்திருக்கும் மணிக்கற்கள் பதித்த கடிபந்தத்தின் ஒரு தலைப்பு இடது பக்கத்தில் தொங்குகிறது. கால்களின் அடியில் சலங்கைகள் காணப்படுகின்றன. முதல் பார்வையில் இந்த உருவம் நிர்வாணமாகத் தோற்றமளித்த போதிலும், உடலின் மேல் மெல்லிய ஆடையின் மடிப்புகளைக் காண முடிகிறது. கரங்கள் நீண்டு மணிக்கட்டுகளில் கங்கணங்கள் (காப்புகள்) காணப்படுகின்றன. இரு கைகளும் நீண்ட மரக்கொடியைப் பற்றியுள்ளன. இக்கொடியின் அடியிலுள்ள ஒரு கிளை, ஒரு மலர் மொட்டில் முடிகிறது. இருபக்கமும் உள்ள முக்கிய தண்டுகளில், மலர்கள் அந்த உருவத்தின் தோள்மட்டத்தில் இருபக்கத்திலும் பூத்திருக்கின்றன. இருபக்கமும் பூத்திருக்கும் மலர்களின்மேல் உட்கார்ந்திருக்கும் இரு யானைகள் அதன் துதிக்கைகளை அந்தப் பெண்ணின் தலைக்கு மேலாக அரைவளையமாகப் பிடித்திருக்கின்றன. இந்த உருவம் விஷ்ணுவின் துணைவியான, செல்வத்தின் தெய்வமான லக்ஷ்மியின் வடிவம். வழக்கமாக இரு யானைகள் இரு குடங்களிலிருந்து அவள்மீது நீர் வார்ப்பதாகச்



கி.மு. 300 ஆம் ஆண்டிற்குரிய கொற்கைப் பாண்டிய நாணயம். முன்பக்கத்தில் யானையும், மேலே இடது பக்க மூலையில் தியானத்தில் உட்கார்ந்திருக்கும் மனித உருவமும், வலது பக்க மேல் மூலையில் மூன்று வட்டங்களும் உச்சியில் முடியும் கொண்ட தாதுகோப வடிவில் அமைந்த கட்டிடமும், நாணயத்தின் மறுபக்கத்தில் இரு கோடுகளும், அடுத்து கோடுகளினால் வரையப்பட்ட மீன் உருவமும் காணப்படுகின்றன.

Image Source: Paul E. Pieris.

சித்திரிக்கப்படும். இது ஒரு வைக்ஷ்ணவச் சின்னமாகும் (*Pieris, P.E.* 1919: 5253).

கந்தரோடையின் முக்கியத்துவம் அங்கே பெருவாரியாகக் காணப்படும் லக்ஷ்மி பட்டயங்கள் அல்லது நாணயங்களாகும். பெரும்பாலானவை செப்பினால் நீள்சதுர வடிவத்தில் செய்யப்பட்டவை. முன்பக்கத்தில் கையில் தண்டொன்றைப் பிடித்திருக்கும் பெண் தெய்வமும், மறுபக்கத்தில் ஒரு தண்டின்மேல் நிற்கும் சுவாஸ்திகா சின்னமும் கொண்டவை அதிகமாக உள்ளன. இதைத்தவிர பல்வேறு வடிவங்களில் இந்த நாணயங்கள் காணப்படுகின்றன. கந்தரோடையில் இவற்றின் தொகையைக் காணும் ஆய்வாளர்கள் இந்த நாணயங்கள் செய்யப்பட்ட இடமே கந்தரோடை எனக் கருதுகிறார்கள். இந்த நாணயங்கள் கி.மு. 300 ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 300 ஆம் ஆண்டுவரை 600 ஆண்டுகளாகத் தயாரிப்பில் இருந்திருக்கின்றன.

இந்த நாணயங்களில் காணப்படும் சுவாஸ்திகா சின்னம், தமிழ்நாட்டின் பெருங்கற் புதையல்களில் உலோக உருவங்களாகவும், மட்பாண்டத் துண்டுகளில் 'கிராபிற்றி' கீறல்களாகவும், இந்திய - இலங்கையின் பிராமிக் கல்வெட்டுகளிலும் காணப்படுகிறது (*Ragupathy, P.* 1987: 57). லக்ஷ்மி நாணயங்கள் ஆனைக்கோட்டைப் பெருங்கற் புதையல்களிலும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.

'ரௌலெற்ரெட்' கலன்கள் பொதுயுகத்திற்கு முற்பட்ட ஆயிரத்தாண்டில் கிரேக்க - உரோம - இந்தியத் துணைக்கண்ட வர்த்தகத்தின் தனித்துவமான அடையாள உருவங்களாகக் (*Iconic markers*) கணிக்கப்படுகின்றன. இவ்வகைக் கலன்கள்

கிண்ணங்களாகவும், தட்டுகளாகவும் காணப்படுகின்றன. தூய்மையான மெருகேறிய களிமண்ணிலாலான இக்கலன்களின் உட்பக்கம் பளபளப்பான கறுப்பு நிறமாகவும், வெளிப்பக்கம் மினுமினுக்கும் குங்குமப்பூ நிறமாகவும் காணப்படும். கலன்களின் உட்பக்கத்தில் காணப்படும் நேர்த்தியான கோலங்கள் 'ரௌலெற்றுகள்' எனப்படும். அதன் காரணமாக இவை 'ரௌலெற்ரெட்' கலன்கள் என அழைக்கப்படுகின்றன. இக்கலன்களைச் சில்லில் வைத்து வனையும் காலத்திலே, பாத்திரம் வனைந்து முடிந்து சூளையில் இடமுன்னர், சில்லில் வைத்து மெல்ல உருட்டியபடியே இந்த 'ரௌலெற்ரெட்' கோலங்கள் வரையப்படுகின்றன. இக்கோலங்கள் பல வகையான கோடுகளையும் உருவரைகளையும் (Designs) கொண்டிருக்கும். ஏராளமான ரௌலெற்ரெட் கலவோடுகள் கந்தரோடை, ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணக்கோட்டை, பூநகரி மற்றும் யாழ்ப்பாணக் கடற்கரை மையங்களிலும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. இக்கலன்களில் ஆதியான பாண்டங்கள் பொ.யு.மு. 500 ஆம் ஆண்டுக் காலத்திலிருந்து கிரேக்க மாலுமிகளால் கொண்டுவரப்பட்டவை. பெ.யு.மு. 300 ஆம் ஆண்டிலிருந்து பொ.யு. 300 ஆம் ஆண்டுவரை, 600 ஆண்டுகளாக உரோமாபுரி வர்த்தகத்தின் முக்கியமானதொரு ஏற்றுமதிக்கலனாக இது விளங்கியிருக்கிறது (Krishnan & Coningham 1997: 9-25).

தமிழ்நாட்டில் அரிக்கமேட்டில் அகழாய்வை மேற்கொண்ட பிரித்தானியத் தொல்லியலாய்வாளர் மோட்டிமர் வீலர் இம்மாதிரியான ரௌலெற்ரெட் மட்பாண்டங்கள் உரோம 'அறிற்றைன்' பாண்டங்களுடனும், உரோம மதுச்சாடிகளுடனும் ஒரே அகழ்வு மட்டத்தில் காணப்பட்டபடியினால் இவை உரோம மட்பாண்டங்கள் என முடிவெடுத்தார் (Ford et al. 2005: 9-11).

காலப்போக்கில் இதை நிகரொத்த (Duplicate) ரௌலெற்ரெட் மட்பாண்டங்கள் அரிக்க மேட்டிலும், இலங்கையில் அநுராதபுரத்திலும், வட இந்தியாவின் வங்காளத்தில் சந்திரகேதுகார் என்ற இடத்திலும் தயாரிக்கப்பட்டன (Krishnan & Coningham 1997: 9-25; Gogte, V.D. 1997). இவை கி.மு. 200 ஆம் ஆண்டிலிருந்து அரிக்கமேட்டிலும் தயாரிக்கப்பட்டதாக ஆய்வாளர் விமலா பெக்லி கணித்துள்ளார் (Begley 1983; Schenk 2006). இவை "உள்ளூரில் தயாரிக்கப்பட்டபோதிலும், அதன் அலங்கார வடிவில் மத்தியதரைச் செல்வாக்கு காணப்படுகிறது" எனக் குறிப்பிட்டிருக்கிறார் (Begley, V. 1983, 1988).



தமிழ்ப் பிராமி எழுத்துக்களில் 'ஆபதி' என்ற பெயர் பொறித்த மட்கலன் துண்டு.
Image Source - S.Krishnarasa

அகழாய்வுகளின்போது கந்தரோடையில் காணப்படும் 'ரௌலெற்ரெட்' மட்பாண்டங்கள் உரோம நாணயங்களுடன் அதே அடுக்கமைவுப் படுகை மட்டங்களில் காணப்படுவதனால், இந்த மட்பாண்டங்களை மெய்யான உரோமக்கலன்களாகக் (Genuine Roman ware) கொள்ளலாம். 1967 ஆம் ஆண்டில் தனது கந்தரோடை மேலாய்வுகளில் இக்கலன் துண்டுகளைப் பரிசோதித்த விமலா பெக்லி இவற்றை உரோமக்கலன்களாகவே கருதினார் (Begley, V. 1967).

இரகுபதி தனது 1987 ஆம் ஆண்டின் ஆய்வுகளில் கந்தரோடையைத் தவிர ரௌலெற்ரெட் மட்பாண்டங்கள் காணப்பட்ட இடங்களெல்லாம் கடற்கரையை அண்டிய மையங்கள் எனக் கூறியுள்ளார். இவற்றில் கந்தரோடையில் காணப்பட்ட பெருந்தொகையான உரோம மட்பாண்டக் கலவோடுகளை அடிப்படையாகக்கொண்டு, இது ஒரு பெரிய வர்த்தக மையமாகவும் இருந்திருக்க வேண்டும் என எண்ண வேண்டியுள்ளது. இந்த மட்பாண்டங்கள் ஆரம்பகால கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள், மற்ற வகையான கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள், ஆரம்பகால சிவப்பு மட்கலன்கள், தடித்த விளிம்புக் கலன்கள் ஆகியவற்றுடன் வெவ்வேறு அடுக்கமைவு மட்டங்களில் காணப்படுவதால், இவற்றின் ஆரம்பகாலம் கி.மு. 500 ஆம் ஆண்டுக்காலம் எனக் கொள்ளலாம்.

கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட உரோம மட்கலன்களில் 'உரோமச் சிவப்பு' என அழைக்கப்படும் மட்கலன்கள் முக்கியமானவை. இக்கலன்கள் செய்யப்பட்ட களிமண்ணில் அதிகளவில் இரும்புக் கனிமங்கள் கலந்திருப்பதனால், அவற்றைச் சூளையிலிட்டுச் சுடும்போது கடுஞ்சிவப்பு நிறத்தைப் பெறுகிறது. கந்தரோடையில் இம்மட்கலன்கள் உரோம ரௌலெற்ரெட் கலன்களுடனும், மற்றைய உள்ளூர் கறுப்புசிவப்பு மட்பாண்டங்களுடனும், அதே அகழ்வு மட்டங்களில் காணப்படுவதனால், இவை ரௌலெற்ரெட் மட்பாண்டங்களின் காலத்திற்கு உரியவை எனக் கணிப்பிடலாம்.

### காலப்பகுதி IV: வரலாற்றுக்காலம்
### 3: கி.மு.200கி.பி.300.
### பௌத்த மதத்தின் வருகை

கி.மு. 200 ஆம் ஆண்டுக்காலம் கந்தரோடையில் பௌத்தமதம் அறிமுகமான காலப்பகுதி எனக் கொள்ளலாம். கி.மு. 250 ஆம் ஆண்டளவில் இலங்கைக்கு புத்தபகவான் சமாதியடைந்த அரசமரக் கிளையைக் கொண்டுவந்த சங்கமித்தையை வரவேற்க யம்புகோளத்துறைக்கு வருகைதந்த அநுராதபுர அரசன் தேவநம்பியதீசன் திரும்பிச் செல்லும்போது கட்டிய 'பாஸீன விகாரை' இருந்த இடம் கதிரமலையாகிய கந்தரோடை என இராசநாயகம் அடையாளம் காண்கிறார் (இராசநாயகம், செ. 1933: 14). ஆனால் பெரிய அளவிலான ஒரு விகாரை இருந்ததற்கான அடித்தளம் கந்தரோடை அகழ்வுகளில் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

### தத்தரின் பாத்திரம்

1970 ஆம் ஆண்டில் அமெரிக்கப் பென்ஸில்வேனியப் பல்கலைக்கழகத்தினர் கந்தரோடையில் நடத்திய அகழாய்வில் பேராசிரியர் இந்திரபாலா பார்வையாளராகக் கலந்துகொண்டார். அங்கே கண்டெடுத்த மட்பாண்ட ஓடு ஒன்றில் முழுமையாக எழுதப்பட்ட பிராமி எழுத்துப் பதிவு கிடைத்தது. அது பற்றி 1973 இல் வெளியான பூர்வகலா இதழில் அவர் எழுதியிருந்தார்:

"பென்சில்வேனியப் பல்கலைக்கழகத்து அரும்பொருளகத்தினால் நடத்தப்பட்ட அகழாய்வின்போது யூலை 1970 இல் கந்தரோடையில் 'விளாமரத்தடி' என்ற தலத்தில் ஒரு மட்பாண்ட ஓட்டில் தெளிவாகக் கீறப்பட்ட பிராமி எழுத்துகளைக்கொண்ட இச்சிறு கல்வெட்டுக் கிடைத்தது. இம்மட்பாண்ட ஓடு ஒரு துறவியின் பாத்திரம் எனக் கொள்ளலாம். இந்த மட்பாண்டத்தில் காணப்படும் எழுத்துகள் கி.மு. (பொ.ஆ.மு.) இரண்டாம் நூற்றாண்டளவில் வழக்கில் இருந்த எழுத்துகள். கல்வெட்டின் வாசகம் 'தத ஹ பத' என்பதாகும். 'தத' என்பது சமஸ்கிருதத்தில் 'தத்த' எனப்படும் பெயராகும். 'ஹ' என்பது உடைய என்று பொருள்படும். 'பத' என்பது சமஸ்கிருத்தில் 'பாத்ர' என்று வரும் சொல். இது தமிழில் பாத்திரம் என வழங்கும். ஆகவே கல்வெட்டு வாசகத்தின் பொருள் 'தத்தருடைய பாத்திரம்' என்பதாகும் (இந்திரபாலா, கா. 2006: 33-12).

தத்தர் என்ற பெயர் ஒரு பௌத்த துறவியின் பெயராகக் கருதப்படுகிறது. அக்காலத்தைய பௌத்த துறவிகள் உணவு கொள்வதற்குத் தங்கள் சொந்த பிக்ஷா பாத்திரங்களை வைத்திருந்தார்கள். மேற்குறிப்பிட்ட ஓடு அவரது பாத்திரத்தின் ஒரு துண்டாக இருக்கலாம்.

3

### அபிசிதன்

2004 ஆம் ஆண்டில் கந்தரோடையிலிருந்து கல்லுண்டாய்வரை சென்று கடலில் தொடுக்கும் வழுக்கையாற்றின் வடிநிலப் பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர் கிருக்ஷ்ணராசா 'அபிசிதன்' என்ற தமிழ்ப்பிராமிப் பெயர் பதித்த மட்பாண்ட ஓடு ஒன்றைக் கண்டெடுத்தார் (கிருக்ஷ்ணராசா, செ. 2004). அந்த கலவோட்டைப் பரிசீலித்த பேராசிரியர் பத்மநாதன் கீழ்க்காணும் கருத்தைத் தெரிவித்திருந்தார்.

"அபிசிதன்' என்பது 'அபிசித' என்ற பிராகிருதச் சொல்லின் தமிழ் வடிவமாகும். அதன் உபயோகத்தை இருவிதமாக விளக்கலாம். ஒன்று, அது எதுவிதமான சிறப்பான காரணமுமின்றிப் பெற்றோர் தங்கள் பிள்ளைக்கு இட்ட பெயர் எனக் கொள்ளலாம். மற்றது, அது 'அபிக்ஷித்த' என்ற சமஸ்கிருதச் சொல்லுக்கு நிகரான 'அபிசித' என்ற பிராகிருதச் சொல்லின் தமிழ் வடிவம் என்பதாகும். அவ்வாறாகில் அச்சொல்லில் ஒரு பெருங்கதை அடங்கியுள்ளது.

அது ஞானஸ்நானம் பெற்ற ஒருவரின் பட்டப்பெயராகக் கொள்ளத்தக்கது. அந்தவகையில் அது பௌத்த சங்கத்திலுள்ள ஒருவரின் பெயராகும். அபிசிதன் என்ற பெயர் எழுதப்பட்ட கலவோடு ஒருவரின் பிக்ஷாபாத்திரத்தின் துண்டமாதல் கூடும். அது பிக்ஷாபாத்திரமொன்றின் துண்டமென்று கொள்ளப்படுமாகில் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலே அங்கே வாழ்ந்த தமிழர் சிலர் பௌத்தராகிவிட்டமைக்கு அது சான்றாகும். அதுமட்டுமின்றி அவர்களில் சிலர் சங்கத்தாராக இருந்தனர் என்பதும் அதனால் உணரப்படும் (பத்மநாதன், சி. 2011: 29-30)."

### கந்தரோடைப் புத்த சிற்பங்கள்

கந்தரோடையில் போல் பீரிஸ் மேற்கொண்ட மேலாய்வுகளினதும், அகழாய்வுகளினதும் பயனாக பல புத்த சிற்பங்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. இவற்றில் சில யாழ்ப்பாண அரும்பொருளகத்திற்கும், சில அநுராதபுர அரும்பொருளகத்திற்கும் எடுத்துச்செல்லப்பட்டன.

இச்சிற்பங்கள் யாவும் தென்னிந்தியச் சிற்பக்கலை மரபின் செல்வாக்கினைப் பிரதிபலித்து நிற்பதனை நன்கு அவதானிக்க முடிகிறது. கந்தரோடை அகழ்வுகளின் போது வெளிப்படுத்தப்பட்ட வெண்வைரக்கல்லினாலான புத்தர் சிலைகள் அமராவதிக் கலை மரபின் கலைச்செழிப்பினை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன. கந்தரோடைப் பௌத்த மதமானது தென்னிந்தியாவிலிருந்தே இங்கே வருகை தந்ததை உறுதிப்படுத்தும் சின்னங்களாகவே இச்சிற்பங்கள் அமைகின்றன.

ஆசனநிலையில் அமைக்கப்பட்ட வெண் வைரக்கல்லினாலான புத்தர் சிற்பத்தின் சிறப்பியல்புகள் இங்கு நோக்கத்தக்கவை. சுமார் 15 அந்தர் நிறையுடைய இச்சிற்பமானது ஐந்தரை அடி அகலமான மார்புப் பகுதியைக் கொண்டுள்ளது. சிற்ப அமைப்பு முறையை நோக்கும்போது இங்கு அமராவதிக் கலைமரபில் பின்பற்றப்பட்ட 'ஒட்டும்முறை' பின்பற்றப்பட்டிருந்தமையைக் காண முடிகிறது. அதாவது கைகள், கால்கள் என்பன வெவ்வேறாகச் செய்யப்பட்டு அவற்றை உடலோடு பொருத்துகின்ற முறை ஒன்று இருந்தமையினை கந்தரோடையிலிருந்து பெற்றுக்கொண்ட புத்தர் சிற்பங்கள் காட்டிநிற்கின்றன (கிருக்ஷ்ணராசா, செ. 1998: 35). அநுராதபுரத்தில் காணப்படும் ஆரம்பகாலப் பௌத்தச் சிற்பங்களும் இந்த அமராவதிக் கலைமரபின் ஒட்டும் முறையில் தயாரிக்கப்பட்டிருப்பதாக ஆனந்தா குமாரசாமி குறிப்பிட்டிருக்கிறார் (Coomaraswamy, A. K. 1935, 1980).

நிற்கும் வகையைச் சேர்ந்த புத்தர் சிற்பமொன்று 1917 இல் போல் பீரிஸ்ஸினால் சுன்னாகத்திற்கு அண்மையில் அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்டது. சுன்னாகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட இச்சிற்பமே ஓரளவுக்குப் பூரணத்துவமான நிலையில் பாதுகாக்கப்பட்டிருந்தது. சிற்பத்தின் தலைப்பகுதி வேறாக அருகே காணப்பட்டது (Pieris, P.E. 1917: 2021). இச்சிற்பமானது 12 அடி உயரம் கொண்டதாகும். அதன் மார்பகம் 20 அங்குலங்களாகும். தனி வெண்வைரக்கல்லினால் அமைக்கப்பட்ட இச்சிற்பத்தின் அமைதி அமராவதிக் கலைப்பாணியை மாதிரியாகக் கொண்டுள்ளது (கிருக்ஷ்ணராசா, செ. 1998: 35).

இச்சிற்பத்தின் அமைப்பு முறையைப் பொறுத்தமட்டில், வலது மார்பு, தோள் ஆகிய பகுதிகள் தவிர ஏனைய பகுதிகள் போர்வையினால் மறைக்கப்பட்ட நிலையில் தோற்றமளிப்பதனைக் காணலாம். போர்வையின் அமைப்பு பாதத்தினை மறைத்தநிலையில் பாதத்திலிருந்து மடிக்கப்பட்டு மீண்டும் இடது கரத்தினூடாக கீழ்நோக்கித் தொங்குவதாகச் செதுக்கப்பட்டுள்ளது. மடிப்புகள் யாவும் மிகத் தெளிவாகவும், ஒன்றுக்கொன்று சமாந்தரமாகவும் செதுக்கப்பட்டுள்ளன. இச்சிற்பத்தின் தலையமைப்பு காந்தாரக்கலை மரபின் சுருள்கேச முறையில் வடிக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. அதேநேரத்தில் மதுராக்கலை மரபில் காணப்படும் உச்சிக்கொண்டை முறையும் இச்சிற்பத்தில் பின்பற்றப்பட்டுள்ளது (கிருக்ஷ்ணராசா, செ. 1998: 35-36).

நிற்கும் நிலையிலுள்ள புத்தர் சிற்பங்களில் பல தலையற்றவையாகவே அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அவையாவும் வெண்வைரக்கல்லினாலேயே செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றுள் ஒன்று மைத்திரேயர் வகையைச் சேர்ந்தது. இதன் உயரம் 3 அடி 6 அங்குலங்களாகும். மைத்திரேய புத்தரின் ஆடையலங்காரமும், உடைந்த நிலையில் வேறாகக் கிடைத்த அதன் தலையின் அமைப்பும், கலைவனப்பு வாய்ந்தவையாக உள்ளன. இங்கு மைத்திரேய புத்தரின் மேலாடையானது வலது கரத்தினூடாகக் கீழே தொங்குவது குறிப்பிடத்தக்கது. இச்சிற்பத்தில் புத்தரின் சுருள் சுருளான கேச அமைப்பு காந்தார கலைப்பாணியை வெளிப்படுத்துவதாக உள்ளது (கிருக்ஷ்ணராசா, செ. 1998: 36).

## கந்தரோடை பனந்தோப்பு அகழாய்வுகள்

கந்தரோடைக் கிராமத்தின் தெற்கேயிருந்த பனந்தோப்புப் பகுதியிலிருந்த மண்மேடுகளை 1917 ஆம் ஆண்டில் கவனித்த போல் பீரிஸ் அவை பௌத்த தாதுகோபங்களிலிருந்த மேடுகளாக இருக்கலாம் என எண்ணினார் (Pieris, P.E. 1917: 24). ஆனால் அந்த இடமெல்லாம் பற்றையும் பறகும் மூடப்பட்டுக் காடாக இருந்தபடியினால் அங்கே அகழாய்வு எதையும் அவர் மேற்கொள்ளவில்லை. மேலும் அவரது மேலாய்வுகள் கந்தரோடை, மல்லாகம், சுன்னாகம், வல்லிபுரம் ஆகிய பகுதிகளையும் உள்ளடக்கியிருந்தது. அவரது ஆய்விற்காக ரூபா. 150 மட்டுமே வழங்கப்பட்டிருந்த படியினால் அப்பணம் முடிந்ததும் அவரது ஆய்வுகள் நிறுத்தப்பட்டன (Pieris, P.E. 1919: p. 40).

1966 - 1967 ஆம் ஆண்டுகளில் இலங்கைத் தொல்லியல் திணைக்கள ஆணையாளராகவிருந்த சாள்ஸ் எட்மண்ட் கொடகும்புர கந்தரோடையின் தெற்குப்பக்கத்தில் பனந்தோப்புகளிடையே காணப்பட்ட மேட்டை முதல் தடவையாக அகழாய்வு செய்யும்படி பணித்தார். 24 ஏப்ரல் 1966 ஆம் ஆண்டு அகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. அவ்விடத்தில் பற்றையும் பறகுமாகக் காடு பற்றியிருந்தமையால் அவற்றை நீக்கி நிலத்தைச் சுத்தம் செய்வதற்கே சில மாதங்கள் பிடித்தது. மேலும், இடையில் வளர்ந்திருந்த இளம் பனை வடலிகளையும் தறிக்கவேண்டியிருந்தது.

அகழ்வுகள் திட்டமிட்ட வலைச்சட்ட முறையில் (Grid basis) மேற்கொள்ளப்பட்டன. முதலில் கிழக்கு - மேற்காக 100 அடி நீளமும், வடக்குத் - தெற்காக 100 அடி நீளமும் கொண்ட நிலம் அளந்து ஆப்புக்கட்டை அடிக்கப்பட்டது. அகழ்விற்கு எட்டடிச் சதுரங்கள் அமைக்கப்பட்டு, இரண்டடி அகல நடைபாதைகள் இடைவெளியாக விடப்பட்டன. அகழ்வுச்சதுரங்கள் மேற்கிலிருந்து கிழக்காக D1, D2, D3, D4 என அடையாளப்படுத்தப்பட்டன (Godakumbura, C. E. 1968: 71).

1967 ஆம் ஆண்டு யூலை மாதம் முதல் வாரம் வரை 20 ஸ்தூபங்களின் அடித்தளங்கள் காணப்பட்டன. இவற்றில் பெரியது 23 அடி அகலமும் சிறியது 6 அடி அகலமும் கொண்டிருந்தன. இங்கே முக்கியமாகக் கவனிக்க வேண்டியது அகழாய்வில் இந்த ஸ்தூபங்களின் மேல் கட்டுமானம் எதுவும் காணப்படவில்லை என்பதே.

அவை காலப்போக்கில் அழிவுற்றிருக்கலாம், அல்லது செங்கட்டிகள் மக்களால் தங்கள் தேவைக்காக அகற்றப்பட்டிருக்கலாம். அடுத்துக் கவனிக்க வேண்டியது சில அடித்தளங்களின் பகுதிகள் வெவ்வேறு உயர மட்டங்களில் ஒன்றிற்கு மேல் ஒன்றாக - ஒன்றோடு ஒன்று செருகிய வண்ணம் அமைந்திருந்ததாகும்.

1967 ஆம் ஆண்டு பெப்ரவரி - மார்ச் மாதங்களில் கந்தரோடைக்கு மேலாய்வு செய்வதற்காக வந்த விமலா பெக்லி இந்த இடத்தில் இலங்கை தொல்லியல் இலாகா அகழாய்வு செய்ததாகவும், இந்த அகழ்வுகளில் தாதுகோபங்களின் அடித்தளங்கள் காணப்படுவதாகவும் மற்றும் குழிகளிலிருந்து முத்திரை நாணயங்கள், உரோம நாணயங்கள், லக்ஷ்மி பட்டயங்கள் கிடைத்திருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார் (Begley, V.S. 1967).

## கந்தரோடை ஈமக்கல்லறைகள்

இந்த ஸ்தூபங்களின் அடித்தளங்களைப் பரிசோதித்த கொடகும்புர, அவை ஏற்கனவே வார்ப்படமாக (Moulded) வெட்டப்பட்ட கோறல் கற்களால் நான்கு அடுக்குகளாகச் சுற்றிவைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுகிறார். அவற்றின நடுவே கோறல் கற்களின் குப்பைத் துண்டுகள் காணப்பட்டன. 'இவற்றின் மேல் கட்டுமானம் கோறல் கற்களினால் அமைக்கப்பட்டிருக்கலாம். அதன் உச்சியில் சதுரமாகப் பெட்டிவடிவில் சுண்ணாம்புக்கல்லில் வெட்டப்பட்ட ஹாமிக்கா (Harmika) தளத்தின் மேல் ஸ்தூபத்தில் முடிகள் (Finials) பெருத்தப்பட்டிருக்கும்' எனக் குறிப்பிட்டிருக்கிறார் (Godakumbura, C. E. 1968: 72).

ஒரு ஸ்தூபத்தின் அடித்தளத்தின் கீழே அகழ்ந்தபோது ஒரு ஈமப்பேழையில் அழுகிய நிலையிலிருந்த எலும்புத்துண்டு காணப்பட்டது. அந்த ஸ்தூபத்தில் அதற்கும் கீழே அழுகிய நிலையிலிருந்த மற்றொரு எலும்பும் காணப்பட்டது (Godakumbura, C. E. 1968: p. 72).

கந்தரோடையில் கிடைத்த பௌத்தச் சின்னங்களின் தோற்றம் என்ன என்ற கேள்வி அடுத்து எழுகின்றது. இச்சின்னங்கள் ஒருவகையான ஈமச்சின்னங்களே ஆகும். பல்வேறு பரிமாணங்களில் அமைந்துள்ள, பல்வேறு காலப்பிரிவுகளுக்குரிய இத்தூபிகளில் இறந்த பௌத்த பிக்குமாரின் சாம்பல், எலும்புகள் என்பன முருகைக்கற்களிலமைந்த பேழைகளில் அடக்கம் செய்யப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகிறது. ஒருவகையில் இப்பகுதியில் நிலவிய பெருங்கற்கால ஈமச்சடங்குமுறை பௌத்தத்தின் வருகையோடு அதில் சங்கமமாகியதையே (Syncretism of Megalithism with Buddhism) இவை எடுத்துக்காட்டி நிற்கின்றன. இத்தூபிகள் காணப்படும் இடங்கூட முன்பொருகாலத்தில் பெருங்கற் பண்பாட்டிற்குரிய ஈமக்காடாகவும் விளங்கியிருக்கலாம் (சிற்றம்பலம், சி.க. 1993: 15).

கந்தரோடையிலுள்ள பௌத்த சின்னங்கள் தனியான பண்புகளைக் கொண்டவை. அவை அநுராதபுரம், மிகுந்தலை, மாகமை முதலான இடங்களில் உள்ளவற்றைக் காட்டிலும் வேறுபட்டவை. கந்தரோடையில் சிறிய அளவிலான தூபிகள் பல நெருக்கமாக அமைக்கப்பட்டுள்ளன. அங்கே வழிபாட்டுத்தலங்களான சேதியங்களுக்குரிய அமைப்புக்காணப்படவில்லை. அவற்றின் மேற்பாகம் அண்டவடிவமானது. அவை உயிர்நீத்த சங்கத்தாரின் பள்ளிப்படைகளாக அமைக்கப்பட்டவை. பௌத்த சமயக் கோட்பாடுகளுக்கு ஏற்ப, பெருங்கற் பண்பாட்டுக்குரிய ஈமக்கிடங்குகளுக்கு மேலாக அமைந்த கட்டுமான முறையினை மாற்றிவிட்டனர் போலத் தெரிகின்றது. இவற்றைப் போன்ற அண்டவடிவமான கட்டுமானங்கள் ஆந்திர தேசத்து அமராவதி, நாகர்ஜுனாகொண்ட போன்ற இடங்களிற் காணப்படுகின்றன. அங்குள்ளவை உயிர் துறந்த சங்கத்தாரின் சடலங்களைப் புதைத்த குழிகள் மேல் அமைந்தவை (பத்மநாதன், சி. 2011: 55).

## மற்றைய பௌத்த சின்னங்கள்

கந்தரோடையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பௌத்த மரபுச் சின்னங்களில் புத்தரின் பாதச்சுவடுகள் பொறித்த சிற்பம் முக்கியமானதாகும். சிறிபதுல் எனக் குறிப்பிடப்படும் இப்பாதச்சுவட்டு வணக்கமுறையானது புத்தருடைய சிற்பங்களின் தோற்றத்திற்கு முன்னர் வழக்கிலிருந்த வழிபாட்டுமுறையாகும். இது தமிழ்ப் பௌத்த மரபில் நன்கு பிரபல்யம் பெற்றிருந்தது என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக மணிமேகலையில் இடம்பெறும் புத்த பீடிகையைக் கண்டு தொழுத காட்சி அமைகிறது. பௌத்த வழிபாட்டில் புத்தருடைய பாதச்சுவடுகளை உரு அமைத்து வழிபடும்முறை காலத்தால் முற்பட்டது என்பதனை சாஞ்சி, பாரூட் ஸ்தூபிகளில் காணப்படும் புடைப்புச் சிற்பக் காட்சிகள் எடுத்துக்காட்டுகின்றன (கிருஷ்ணராசா, செ. 1998: 36).

கந்தரோடை அகழ்வுகளில் வெளிப்படுத்தப்பட்ட இன்னொரு சிற்பவடிவம் சந்திரவட்டக்கல் ஆகும். பௌத்தமரபில் சந்திரவட்டக் கற்கலையானது தத்துவ

அடிப்படையிலும், கலைரீதியாகவும் முக்கியமான இடத்தினைப் பெற்றுள்ளது. இலங்கையில் வளர்ச்சி பெற்றிருந்த தனித்துவமான பௌத்தக்கலை மரபுக்கு சிறந்த உதாரணமாகவும் சந்திரவட்டக் கற்கலையினையே கலைவல்லுநர் எடுத்துக்காட்டுவர். அவ்வகையில் கந்தரோடையில் வெளிப்பட்ட சந்திரவட்டக்கல்லின் தனிப்பண்புகளையும் நோக்கவேண்டும். இங்கு வெளிப்படுத்தப்பட்ட சந்திரவட்டக் கல்லானது மூன்று பிரதான கற்துண்டுகளால் ஆனது. எந்தவிதமான அலங்கார வேலைப்பாடுகளுமற்ற நிலையில், அரைவட்ட வடிவத்தில் வெறுங்கோடுகள் மாத்திரம் செதுக்கப்பட்டதாகக் காட்சியளிக்கிறது. இத்தன்மையானது ஆந்திரக் கலைமரபில் நாகர்ஜுனாகொண்டாவில் காணப்பட்ட சந்திரவட்டக்கல்லின் தன்மையை நினைவூட்டுவதாக உள்ளது. எனவே, கந்தரோடைக்கும் நாகர்ஜுனாகொண்டாவிற்குமான தொடர்பு காலத்தால் முற்பட்டது என்பதனையும், கலைப் பாரம்பரியங்கள் இவ்விரண்டு மையங்களுக்குமிடையே நெருக்கமானவை என்பதையும் தெளிவாக உணர்ந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது (கிருஷ்ணராசா, செ. 1998: 36-37).

### காலப்பகுதி V: வரலாற்றுக்காலம் 4: கி.பி.300கி.பி.500. பொருளாதாரப் பெருக்க காலம்

கி.பி. 300க்கும், கி.பி.500க்கும் இடைப்பட்டகாலம் கந்தரோடையில் அமைந்த அரசு செல்வச்செழிப்பு மிக்க ஓர் அரசாக விளங்கிய காலப்பகுதியாகும். கந்தரோடையில் கண்டெடுத்த உரோம நாணயங்களில், உரோமச்சக்கரவர்த்தி இரண்டாம் தியோடோசியஸ்ஸின் (கி.பி. 401-450) உருவங்கள் பதித்த நாணயங்கள் வரை காணப்படுவதால், உரோம வர்த்தகம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் மத்திய காலம்வரை நடைபெற்றதாகக் கருத இடமிருக்கிறது. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து அரேபிய, பாரஸீக, சீன வர்த்தகம் யாழ்ப்பாணத் துறைகளில் பெரிய அளவில் இடம் பெற்றிருக்கிறது (இது ஆறாவது இயலில் விரிவாகப் பேசப்படும்). கந்தரோடை அரசின் சமுதாய - பொருளாதாரக் கட்டமைப்பு அதன் பெருங்கடல் வர்த்தகத்திலும், முத்து வியாபாரத்திலும், விவசாய நடவடிக்கைகளிலும் தங்கியிருந்தது. அதன் பெருங்கடல் வர்த்தகம் உரோமாபுரி, அரேபியா, பாரஸீகம், சீனா, இந்தியா ஆகிய நாடுகளுடன் நடைபெற்றது.

கந்தரோடை அரசு வடகிழக்கே திருகோணமலை வரையும், வடமேற்கே மாந்தை வரையும் பரவியிருந்தது. மன்னார் வளைகுடாவின் முத்துக்குளிப்பு நீண்டகாலமாக யாழ்ப்பாண அரசர்களின் கட்டுப்பாட்டில் இருந்து வந்திருக்கிறது. 3000 ஆண்டுகளுக்கும் மேலாக வட இலங்கைத் தமிழ் அரசர்களின் முக்கிய வருவாய் முத்துக்குளிப்புத் தொழில் என இலக்கியச்சான்றுகள் உரைக்கின்றன. பண்டைய உரோமாபுரியின் தத்துவஞானியும், ஆசிரியருமான பிளினி முத்துக்குளிப்பதை 'உலகின் மிகப்பெரிய வருவாய் தரும் தொழில்' (World's most productive occupation) எனக் கூறிச் சென்றிருக்கிறார். அன்றைய கிரேக்கர், வெனிஸியர், ஜெனோவா மக்கள் (Genoese) மத்தியில் மன்னார் முத்து மிகவும் பிரபலமாக இருந்தது. முத்துப் படிவகம் (pearl banks - paars) மன்னாரிலிருந்து சிலாபம் வரை கடற்கரைக்குச் சமீபமாக 15 இருகைப்பாவு (fathoms) ஆழத்தில் பரவிக்கிடந்தது. முத்துக்குளிப்போர் மூச்சை அழுத்திப் பிடித்துக்கொண்டு படகிலிருந்து தொங்கும் கயிறு வழியே அடிக்குச்சென்று இடுப்பில் தொங்கும் பையில் முத்துச் சிப்பிகளைப் பொறுக்கி எடுத்துப் போட்டுக்கொண்டு கயிற்றைப் பலமாக ஆட்ட, மேலே இருப்பவர்கள் அவர்களை வெளியில் இழுத்து எடுப்பார்கள்.

இலங்கையின் பண்டைய பிராமிக்கல்வெட்டு ஒன்றில் 'நாக நகரம்' என்ற எழுத்துப்பொறிப்பு காணப்படுகிறது (Epigraphia Zeylanica II, No. 82). இந்த நகரம் கந்தரோடையைக் குறிப்பதாகக் கருதப்படுகிறது. பௌத்த மகாதுறவியான ஆச்சாரிய புத்தகோசர் (கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு) எழுதிய சம்மோகவிநோதனி என்ற நூலில் கூறப்படும் ஒரு கதையில் (443), தீபராஜா என்ற அரசன் நாகதீபத்தை ஆட்சிபுரிவதாகக் கூறப்படுகிறது.

### கந்தரோடை முத்திரை

இக்காலத்திற்குரிய, கந்தரோடையிற் கிடைத்த ஒரு முத்திரை (Seal) பற்றி பேராசிரியர் கா. இந்திரபாலா இவ்வாறு குறிப்பிடுகிறார்: யாழ்ப்பாணத்திலுள்ள தொல்பொருட் தலங்களுள் மிக முக்கியமானது கந்தரோடையாகும். கந்தரோடையிற் கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்பட்ட ஒரு சிறு முத்திரை எங்கள் பல்கலைக்கழகத்திற்கு, தொல்லியல் கலாநிதி பரணவிதான அவர்களின் உதவியால் வாசிப்பதற்காகக் கொண்டுவரப்பட்டது. அதன் சொந்தக்காரர் யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் கலாநிதி W.R. ஹோம்ஸ் (W.R. Holmes) என்னும் அமெரிக்க மகனாவார். இவர் கந்தரோடையிலிருக்கும் ஒரு சிறுவனிடமிருந்து இம்முத்திரையைப் பெற்றுக்கொண்டதாக் கூறப்பட்டது. அதிலுள்ள எழுத்துகளை எளிதாக வாசித்த பேராசிரியர் அதன் முக்கியத்துவத்தையும் விளக்கிக்கூறினார்.

இம்முத்திரை சிவப்புக் 'கார்ணிலியன்' (Red carnelian) எனப்படும் மணிவகையைச் சேர்ந்த பொருளினாலானது. இதன் நீளம் 1.02 செ.மீ., அகலம் ஒரு செ.மீ. இதிலுள்ள சாசனம் 'விக்ஷ்ணு பூதிஸ்ய' (Vishnubhutiaya) என்னும் வடமொழிப் பெயராகும். இச்சாசனம் வளர்ச்சியடைந்த தென்பிராமி எழுத்தில் எழுதப்பட்டது. இவ்வெழுத்துகள் நாகர்ஜுனாகொண்டாவிலுள்ள 3 ஆம், 4 ஆம் நூற்றாண்டுச் சாசனங்களின் எழுத்துகளை ஒத்திருக்கின்றன. இக்காரணத்தினால் இம்முத்திரை கி.பி. 3 ஆம், அல்லது 4 ஆம் நூற்றாண்டில் தென்னிந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டிருக்க வேண்டுமென்று பேராசிரியர் பரணவிதான அபிப்பிராயம் தெரிவித்தார். அவர் அறிந்த மட்டில், இதுவே இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட ஒரேயொரு எழுத்துப்பொறித்த முத்திரையாகும். தற்போது இது தொல்பொருளாராய்ச்சிப் பகுதியினரிடம் உள்ளது. இதுபோன்ற பல முத்திரைகள் கந்தரோடையிற் புதைந்திருக்கக்கூடும் (இந்திரபாலா. கா. 2006: 331). இந்த முத்திரை இப்போது காணாமல் போய்விட்டது.



1970ஆம் ஆண்டு அகழ்வுகளில் கந்தரோடையில் கண்டெடுத்த 'தத ஹ பத' என்ற பிராமிப் பதிவுகள் கொண்ட மட்பாண்ட ஓடு.

Image Source - Vimala Begley & K. Indrapala 1973

## காலப்பகுதி VI: வரலாற்றுக்காலம் 5: கி.பி. 500கி.பி.800. அரசியல் குழப்ப காலம்

கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்காலத்தில் நாகர் என்ற ஓர் இனம் வட இலங்கையில் இருந்ததாக எதுவிதமான ஆதாரங்களையும் காண முடியவில்லை. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பின்னர் நாக நாணயங்களையோ நாக இலச்சினைகளையோ, நாகச் சின்னங்களையோ காணமுடியவில்லை. அக்காலகட்டத்தில் அவர்கள் இலங்கைத் தமிழர்களுடனும், சிங்கள இனங்களுடனும் இணைந்துவிட்டார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது.

இலங்கையின் பாளி இலக்கியங்கள் வட இலங்கையை, இலங்கையின் மற்றைய பிராந்தியங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன. அநுராதபுரத்தின் ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்ற எதிர்க்கிளர்ச்சி செய்யும் அரசகுமாரர்களுக்கும், கலகக்காரர்களுக்கும் வடஇலங்கை அரசர்களின் ஆதரவு கிடைத்தது. அதற்கு முந்திய காலங்களைப் போலல்லாது தென்னிந்தியாவிலிருந்து ஆக்கிரமிப்பாளராக வருவோரின் படைகள் வட இலங்கையில் வந்திறங்கி, தங்கள் படைகளை வலுப்படுத்திக்கொண்டு அப்பால் அநுராதபுரத்திற்குப் படைநடத்திச் சென்றன. இதனால் வடஇலங்கையின் அமைதியும், திடநிலையும் சீர்குலைந்து போயிற்று.

## பல்லவர் செல்வாக்கு

ஏழாம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் சிலாமேகவண்ண மன்னன் (கி.பி. 619- 628) அநுராதபுரத்தில் ஆட்சி புரிந்தபோது சிரிநாக என்பவன் தமிழர் படை ஒன்றின் உதவியுடன் அநுராதபுரத்து அரசனைத் தாக்கி அரசைக் கைப்பற்ற முயன்றான். அவனுடைய படை உத்தரதேசத்திலிருந்தே (வட இலங்கை) தெற்கு நோக்கி அநுராதபுரத்திற்கு முன்னேறியது. ஆட்சியைக் கைப்பற்ற எண்ணிய தலைவன் ஒருவன் வட பகுதியிலிருந்து படை நடத்திச் சென்றமை கவனிக்கத்தக்க ஒரு நிகழ்ச்சியாகும். இதன்பின்னர் இப்படியான நிகழ்ச்சிகள் அடிக்கடி வடக்கிலிருந்து நடைபெற்றன. இவற்றுள் மிகவும் முக்கியமான நிகழ்வு பல்லவப் பேரரசர் உதவியுடன் மானவர்மன் என்ற சிங்கள இளவரசன் நடத்திய படையெடுப்புகள் எனலாம். இக்காலத்து அரசியல் குழப்ப நிலையை விளங்கிக்கொள்ளவும், இதில் உத்தரதேசம் கொண்டிருந்த பங்கினை மதிப்பிடவும் மானவர்மன் படையெடுப்புகள் உதவுகின்றன (இந்திரபாலா, கா. 2006: 231).

அநுராதபுரத்தில் கி.பி. 650 தொடக்கம் கி.பி. 659 வரை ஆண்ட இரண்டாம் கஸ்ஸப மன்னனின் மகனான மானவர்மன் அவனது தந்தை இறந்தபோது ஏற்பட்ட அரசியல் குழப்பங்களின் விளைவாக அநுராதபுரத்தை விட்டு ஓடி ஒளித்தான். இப்படியாக உரிமையிழந்த இளவரசர்கள் அநுராதபுரத்தைவிட்டு ஓடி ஒளிவது ஒன்றும் புதிய நிகழ்ச்சி அல்ல. அப்படி ஓடும்போது பெரும்பாலும் இளவரசர்கள் தெற்கு நோக்கி மலைப்பிரதேசத்திற்கு அல்லது அப்பால் ரோஹணத்துக்குச் செல்வதே வழக்கம். வழமைக்கு மாறாக மானவர்மன் வடக்கு நோக்கி ஓடி உத்தரதேசத்தில் அடைக்கலம் புகுந்தான். இதற்கு ஒரு முக்கியமான காரணம் இருந்திருக்க வேண்டும். வடபகுதி இவனுக்குக் கூடுதலான பாதுகாப்பைக் கொடுத்தமை காரணமாகலாம். ஆனால் அவன் அங்கு

தஞ்சமடைந்திருந்ததை அநுராதபுரத்தில் ஆட்சிநடத்திய ஹத்ததாட்டா அறிந்து, அவனைக் கைப்பற்ற முயன்றபோது, மானவர்மன் வடபகுதியை விட்டுப் பல்லவ அரசுக்குச் சென்று பல்லவப் பேரரசனின் பாதுகாப்பைப் பெற்றுக்கொண்டான் (இந்திரபாலா 2006: 232).

மானவர்மன் இலங்கையின் வடபகுதியில் அடைக்கலம் புகுந்தமைக்கும், பின்னர் ஆபத்துத் தோன்றியபோது அங்கிருந்து காஞ்சிக்குச் சென்றமைக்கும் பல்லவர் செல்வாக்கு வடபகுதியில் பரவியிருந்தமை காரணமாக இருந்திருக்கும் எனக் கொள்ளலாம். வடபகுதியில் காணப்பட்ட அரசியல்நிலை பல்லவருக்குச் சாதகமாக இருந்திருக்கும் எனத் தோன்றுகிறது. ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் ஆட்சிபுரிந்த பல்லவ மன்னன் சிம்மவிஷ்ணு இலங்கையை வெற்றி கொண்டதாக தென்னிந்தியக் கல்வெட்டுச் சான்று உள்ளது. அவன் காலத்திலிருந்து வடபகுதியில் பல்லவர்களுடைய செல்வாக்கு இருந்தது எனலாம் (இந்திரபாலா 2006: 232).

மானவர்மன் பல்லவர் தலைநகராகிய காஞ்சியில் பல ஆண்டுகள் தங்கியிருந்தான். அங்கிருந்த காலத்தில் பல்லவர்கள் தங்கள் பகைவர்களாகிய சாளுக்கியர்களுக்கு எதிராக நடந்த போர்களில், மானவர்மன், முதலாம் நரசிம்மவர்மனின் படைத் தளபதிகளில் ஒருவனாகப் போர் புரிந்தான். பின்னர் இரண்டாம் நரசிம்மவர்மன் ஆட்சிக்காலத்தில் பல்லவப் படையுடன் வட இலங்கை வந்து தனது நிலையை வலுப்படுத்திக்கொண்டு அநுராதபுரத்தின்மீது படையெடுத்துச் சென்றான்.

அக்காலத்தில் பொத்தகுட்டன் என்ற தமிழ்த் தலைவன் அநுராதபுரத்தில் மிகுந்த அரசியல் ஆதிக்கத்துடன் ஹத்ததாட்ட என்பவனை மன்னனாக நியமித்து வலுவுடன் நிர்வாகம் நடத்திக்கொண்டிருந்தான். மானவர்மன் படை அநுராதபுரத்தை அடையுமுன் பொத்தகுட்டனுடன் ஹத்ததாட்டனும் வடக்கு நோக்கிச் சென்று மானவர்மனை எதிர்த்தனர். ஆனால் பல்லவப் படையை இவர்களால் வெற்றிகொள்ள முடியவில்லை. இருவரும் கொல்லப்பட்ட பின்னர் மானவர்மன் 684 ஆம் ஆண்டில் அநுராதபுரத்தில் மன்னனாக முடிசூடிக்கொண்டான் (இந்திரபாலா 2006: 233).

பல்லவர் படைகள் வடபகுதியில் வந்திறங்கிய நிகழ்ச்சிகளும், பல்லவர் ஆதரவைப்பெற்ற சிங்கள இளவரசன் ஒருவன் அநுராதபுரத்தில் ஆட்சிபெற்ற நிகழ்ச்சியும் இக்காலத்து வரலாற்றையும் வடக்கு இலங்கையின் அரசியல்நிலையையும் விளங்கிக்கொள்வதற்கு முக்கியமானவை. ஆறாம் நூற்றாண்டின் பின்னர் தமிழ்நாட்டில் பல்லவப் பேரரசும், பாண்டியப் பேரரசும் எழுச்சிபெற, அவற்றிற்கு அண்மையில் இருந்த வடக்கு இலங்கை, தெற்கு இலங்கையைக் காட்டிலும் கூடுதலான தமிழ்ச் செல்வாக்கிற்கு இலக்காகியது. பல்லவ அரசில் வளர்ந்த பண்பாடு வடக்கு, வடகிழக்கு வழியாக இலங்கையில் பரவியது. தமிழ் நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையில் இருந்த கடல் மீண்டும் ஒரு ஒற்றுமைப்படுத்தும் காரணியாகச் செயற்பட்டது. முதலில் தமிழ் நாட்டின் செல்வாக்கு பௌத்தம் சார்ந்ததாகவும், சைவம் சார்ந்ததாகவும், தமிழ்மொழி சார்ந்ததாகவும் அமைந்தது. பின்னர் அது பெரும்பாலும் சைவமும் தமிழும் சார்ந்ததாக மாறியது. இவ்விரண்டு காரணிகளும் வடக்கிலும், கிழக்கிலும் உருவாகிய இனக்குழுவை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகித்தன (இந்திரபாலா 2006: 234).

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக, கி.மு. 1300 ஆம் ஆண்டளவில் கந்தரோடையில் ஆரம்பமாகி, பின்னர் நாடெங்கும் பரந்த பெருங்கற் பண்பாண்டின் காலகட்டத்திலிருந்து, முதலில் தமிழ்மொழி பேசிய நாக மன்னர்களின் ஆட்சிகளிலும், தொடர்ந்து தமிழ் அரசர்களின் ஆதரவுடனும் அங்கு உருப்பெற்றுக்கொண்டிருந்த இனக்குழுக்கள், எட்டாம் நூற்றாண்டின் இறுதியில் உறுதிபெற்று ஒருங்கிணைந்த இலங்கைத்தமிழ் இனமாக உருவெடுத்தது.

### உக்கிர சிங்கன்

யாழ்ப்பாண வரலாற்று நூல்களான கைலாய மாலை, யாழ்ப்பாண வைபவ மாலை மற்றும் வையா பாடல், மட்டக்களப்பு மான்மியம், திரிகோணாசல புராணம், கோணேசர் கல்வெட்டு என்பன உக்கிரசிங்கன் என்ற பெயர் கொண்ட அரசனையே கந்தரோடையின் கடைசி மன்னனாகக் குறிப்பிடுகின்றன. மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் ஆதீனத்திலுள்ள தலத்தோற்ற வரலாற்றுச்சுவடிகள் அந்தக் கோயிலைக் கட்டுவித்தவனாக உக்கிரசிங்க அரசனையே குறிப்பிட்டுக் கூறுவதனால், இவனது வரலாற்றின் சில பகுதிகளை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

உத்தரதேசத்திற்கும் அநுராதபுர மன்னர்களுக்கும் பிரச்சினைகள் ஏற்பட்டுக்கொண்டிருந்த காலப்பகுதியில் அநுராதபுர அரசன் இரண்டாம் மகிந்தன் (கி.பி. 777-797) உத்தரதேசத்தின் தென்பகுதியைக் கைப்பற்றிக் கொண்டான். அச்சமயம் கலிங்கநாட்டிலிருந்து பெரும்படையுடன் வந்த உக்கிரசிங்கன், மகிந்தனுடன் போரிட்டு அவன் கைப்பற்றிய பகுதிகளை மீட்டுக்கொண்ட பின்னர்,

*கி.பி. 785 முதல் கதிரமலையினைத் (கந்தரோடை) தலைநகராகக் கொண்டு உத்தரதேசத்தை ஆண்டுவந்தான் (யாழ்ப்பாண வைபவ மாலை 18).*

*உக்கிரசிங்கனின் வரலாறு ஐதீகங்களுடனும், மரபுவழிக் கதைகளுடனும் கலந்து எழுதப்பட்டிருக்கிறது. அவற்றிலிருந்து பெறக்கூடிய வரலாற்றுப் பகுதி இது:*

*உக்கிரசிங்கன் கதிரமலையிலிருந்து ஆட்சிசெய்த காலத்தில், சோழ இளவரசியாகிய மாருதப்பிரவல்லி என்பவள் தீர்த்தயாத்திரை மேற்கொண்டு கீரிமலைக்கு வந்தாள். அவளை வலிந்து சிறைகொண்டு உக்கிரசிங்கன் மணந்து கொண்டான். அவளின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து மாவிட்டபுரத்தில் கந்தனுக்கு ஆலயம் சமைப்பித்தான். சோழநாட்டிலிருந்து கோயிலுக்குரிய விக்கிரகங்களையும், பெரியமனதுளார் என்ற பிராமணோத்தமரையும் வரவழைத்தான். சாலிவாகன சகாப்தம் 721 ஆம் ஆண்டு (கி.பி. 799) ஆனி மாத உத்தரநாளில் கொடியேற்றத்துடன் இக்கோயில் மக்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டது. பின்னர் உக்கிரசிங்கன் தலைநகராகவிருந்த கதிரமலையை விட்டு, சிங்கைநகருக்குத் தனது தலைநகரை மாற்றிக்கொண்டான் (யா.வை.மா 1823, இராசநாயகம், செ. 1933: 28. குணராசா, க. 1996: 5859).*

*பெரியமனதுளாரின் சந்ததியினரே இன்றுவரை மாவிட்டபுரக் கந்தவேள் ஆலயத்தின் சொந்தக்காரர்களாயும் அர்ச்சகர்களாகவும் இருக்கிறார்கள் என்கிறார் இராசநாயகம் (இராசநாயகம், செ. 1933: 29). 1970களில் மாவிட்டபுர ஆதீனத்தின் தலைமைக்குருவாக இருந்த பிரம்மஸ்ரீ சு. துரைச்சாமிக் குருக்கள், தான் பெரியமனதுளாரின் சந்ததியில் வந்ததவராகக் கூறியுள்ளார்.*

*உக்கிரசிங்கன் தனது இராசதானியின் தலைநகராக இருந்த கந்தரோடையை விட்டு சிங்கைநகருக்கு மாறியதற்கான காரணத்தைக் குறித்து வரலாற்றாசிரியர் இராசநாயகம் இவ்வாறு விளக்கமளிக்கிறார். "தன் இனத்தவர்களும், சனத்தவர்களுமாகிய கலிங்கர் அவ்விடத்திற் குடியேறியிருந்தபடியாலும், அது கடற்கரைத் துறைமுகமாகவிருந்தபடியாலும், தான் சிவ வழிபாடுடையவனானபடியாலும், புத்தபள்ளிகள் நிறைந்திருந்த கதிரமலையிலுஞ் சிங்கைநகரே சிறந்ததென நினைத்தான் போலும்" (இராசநாயகம், செ. 1933: 29).*

## தலைநகரம் கந்தரோடை

*யாழ்ப்பாண வரலாற்று நூல்களான கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை என்பன கந்தரோடையை (கதிரமலை) பண்டைய யாழ்ப்பாணத்தின் தலைநகரமாகக் கொள்கின்றன. ஆரம்பகால ஆய்வாளர்களான முதலியார் இராசநாயகம், சுவாமி ஞானப்பிரகாசர் இருவரும் கந்தரோடைதான் பெரும்பாலும் புராதன யாழ்ப்பாணத்தின் தலைநகராக இருக்கலாம் (Most likely capital) என்றார்கள். 1917-1919 ஆம் ஆண்டுகளில் கந்தரோடையில் தொல்லியல் ஆய்வுகளை மேற்கொண்ட போல் பீரிஸ் "கந்தரோடை ஒரு சிறிய அளவினதான அநுராதபுரம் எனவும், அது யாழ்ப்பாணத்தின் ஆதித் தலைநகரமாக இருந்திருக்கலாம்" என்றும் கூறினார்.*

*1987 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் 41 ஆரம்பகாலக் குடியேற்றங்களின் தொல்லியல் மேலாய்வுகளை மேற்கொண்ட கலாநிதி இரகுபதி இக்குடாநாட்டின் ஆதிக்குடியேற்ற மையங்களின் நடுவம் கந்தரோடை என்றும், இந்நாட்டில் முதன்முதலாக நகரமயமாக்கப்பட்ட குடியிருப்பு மையம் கந்தரோடையே எனவும், அந்த நகரமே இங்குள்ள ஆதித்தலைநகரம் என்பதையும் கீழ்க்காணும் காரணங்களைக் கொண்டு முன்மொழிந்தார் (Ragupathy 1987:169).*

1. *இந்த யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் மிகப்பெரிய தொல்லியல் தலம் கந்தரோடை. இங்கே கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருட்களின் பரந்த விரிபரவலால் அது உணரப்படுகிறது.*
2. *ஒரு குறிப்பிட்ட சிறு குழியில் தொல்பொருட்கள் காணப்படும் அடர்த்தியினாலும், அவை கிடைக்கும் ஆழத்தினாலும் யாழ்ப்பாணத்தில் காணப்படும் மற்றெந்தத் தொல்லியல் மையத்தைக் காட்டிலும் இது அதிகமான வளம்மிக்கது.*
3. *இங்கே காணப்படும் பிற நாடுகளிலிருந்து இறக்குமதியாகிவந்த வர்த்தகப் பொருட்கள், நாணயங்கள், உயர்விலை மணிகள், இன்ப வாழ்க்கைப் பொருட்கள் என்பன இந்நாட்டின் முக்கியமான வர்த்தக மையமாக கந்தரோடையை இனம் காணுகின்றன. உதாரணமாக மிகச்சிறந்த உயர்தர உரோம நாட்டின் 'ரௌலெற்றெட்' மட்பாண்டங்கள் பெருமளவில் கிடைப்பது கந்தரோடையில்தான். மற்றைய இடங்களில் அருமையாக ஒன்றிரண்டு துண்டுகளே கிடைக்கின்றன.*
4. *பண்டைய யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக நகரமயமாக்கப்பட்ட தலம் கந்தரோடை. அது நகரமயமாக்கப்பட்ட காலம் மற்றைய*

தென்னிந்திய, இலங்கை மையங்களுக்கு ஒப்பானது.

5. கந்தரோடையின் அமைவிடம் இந்தத் தீபகற்பத்தின் மிகச்சிறந்த செயல் விளைவினையாற்றல் தரக்கூடிய இடம். அதன் குளங்கள், நெல்வயல்கள், வடிகால்கள், வதிவிடங்கள் எனபன கணிசமான மக்கள்தொகையை ஆதரிக்கக்கூடிய வளங்களாகும்.

6. தொல்லியல் சான்றுகள் கிறிஸ்தாப்தத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே மத சம்பந்தமான ஒரு தொழுகைத்தலமாக கந்தரோடையைக் காட்டுகின்றன.

7. காலத்தொடர்பைக் காட்டும் வழியாக கந்தரோடையின் தொடர்ச்சி கி.மு. 500 ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாண அரசுவரை தொடர்ந்திருக்கிறது.

## உசாத்துணை நூல்கள், சஞ்சிகைகள்


1. ALLCHIN, BRIDGET & RAYMOND (1993): The Birth of Indian Civilization, Penguin Books, India.

2. ALLCHIN, F.R. (1990): “Patterns of City Formation in Early Historic South Asia”, South Asian Studies, 6: 163-73.

3. ARDICA, I.W., BELLWOOD, P.S., EGGLETON, R.A. and ELLIS, D.J. (1993): “A Single Source for South Asian Exportquality Rouletted Ware?”, Man and Environment, XVII, pp. 101-109.

4. BAUMGARTEN, ALBERT, I. (1981): The Phoenician History of Philo of Byblo, E.J. Brill & Co., Leiden, Netherlands.

5. BEGLEY, VIMALA (1967): “Archaeological Exploration in Northern Ceylon; Expedition Summer 1967”, (9)4; Bulletin of the University Museum, University of Pennsylvania, Philadelphia.

6. BEGLEY, VIMALA (1973): “ProtoHistoric Material from Sri Lanka and Indian Contacts” in Kennedy, K.A.R & Possehl, G.L. (eds.), Ecological Backgrounds of South Asian Prehistory, Occasional Papers and Thesis, Cornell Universi ty.

7. BEGLEY, V. (1988): “Rouletted Ware at Arikamedu: a new approach”, American Journal of Archaeology, 92, pp. 427-440.

8. BRITO, C. (1879): YalpanaVaipavaMalai: The History of the Kingdom of Jaffna, Colombo; Reprint 1999, Asian Educa tional Services, New Delhi.

9. COOMARASWAMY, ANANDA K. (1935): Elements of Buddhist Iconography, Harvard University Press.

10. COOMARASWAMY, ANANDA K. (1980 reprint): The Origin of the Buddha Image, Coronet Books Inc., India.

11. DERANIYAGALA, S.U. (1992): The Prehistory of Sri Lanka: An Ecological Perspective, 2 parts, Colombo.

12. DERANIYAGALA, S.U. (2011): “Megalithic Culture of Kantarodai belongs to 2,500 years ago”, Press Interview, Uthayan, Tuesday 21 June 2011.

13. DERANIYAGALA, S.U. (2013): “Iron Age at Mantai”, in John Carswell (Ed.), Mantai - City by the Sea, Linden Soft Verlag, Aichwald, Germany.

14. GODAKUMBURA, C. (1968): “Kantarodai”, Journal of the Royal Asiatic Society, Ceylon Branch, Vol.12, Colombo.

15. GOGTE, V.D. (1997): “The ChandraketugarhTamluk region of Bengal: Source of the early historic Rouletted Ware from India and Southeast Asia”, Man and Environment, XXII, pp. 69-85.

16. HELWING, BARBARA and PERERA, NIMAL (2018): Exploring Ancient Kantarodai: Report on the First Field Season, February 2018.

17. INDRAPALA, K. (1973): “A Brahmi potsherd inscription from Kantarodai”, Purvakala, Bulletin of the Jaffna Archaeologi cal Society, No. 1, Jaffna.

18. INDRAPALA, K. (2006): The Evolution of an Ethnic Identity, Kumaran Book House, Chennai.

19. KENNEDY, K.A.R. (1965): “Human Skeletal Material from Ceylon with an Analysis of the Island's Prehistoric Contempo rary Populations”, British Museum Geological (Palaeontolog ical Series), Vol.2, No. 4.

20. KENNEDY, K.A.R. (1975): The Physical Anthropology of the Megalithic Builders of South India and Sri Lanka, Canberra.

21. KRISHNAN, K. & CONINGHAM, R.A.E. (1997): “Microstruc tural Analysis of Samples of Rouletted Ware and Associated Pottery from Anuradhapura, Sri Lanka”, in E.R. Allchin & B. Allchin (eds.), South Asian Archaeology, 1995, Vol.2: 925-37, Oxford and IBH, New Delhi.

22. KRISHNARAJAH, S. (2004): “Scripts from Valukkai Aru Basin” (in Tamil), Virakesari, 08.02.2004, 29.02.2004 & 14.03.2004.

23. KUNARASA, Dr KANDIAH (2001): Yalpna Vaipava Mlai, A Retelling, Kamalam Pathippakam, Jaffna.

24. MAHADEVAN, IRAVATHAM (2003): Early Tamil Epigra phy, Harvard University, USA.

25. MAHAVAMSA, Ed. WILHELM GEIGER (Reprint 1950): Colombo.

26. MANIMEKALAI by Chattanar; ed. U.VE. CHAMINATAIYAR (1965): Aram Pathippu, Chennai. / English Transl. ALAIN DANIELOU (1989): New Directions Publishing Corp., New York.

27. MOORTI, U.S. (1994): Megalithic Culture of South India, Ganga Kaveri Publishing House, Varanasi.

28. ORTON, N. (1995): "The Early Ceramics of Kantarodai", Ancient Ceylon, 13.

29. PARANAVITANA, S. (1959): A History of Ceylon, Part I, University of Ceylon, Colombo.

30. PARANAVITANA, S. (1961): "The Arya Kingdom in North Ceylon", Journal of the Royal Asiatic Society (C.B.), New Series Vol. VII, Part 2: 174-224, Colombo.

31. PATHMANATHAN, S. (2011): Kingdom of Jaffna: A Concise History (in Tamil), Kumaran Book House, Colombo.

32. PIERIS, PAUL E. (1917): "Nagadipa and Buddhist Remains in Jaffna", Part I, Journal of the Royal Asiatic Society (C.B.), Vol. XVI, No. 70, Colombo.

33. 33. PIERIS, PAUL E. (1919): "Nagadipa and Buddhist Remains in Jaffna", Part II, Journal of the Royal Asiatic Society (C.B.), Vol. XVIII, No. 72, Colombo.

34. POSSEHL, G.L. (1994): Radiometric Dates for South Asian Archaeology, Occasional Publication of the Asia Section, University Museum, University of Pennsylvania, Philadel phia.

35. PUSHARATNAM, P. (2002a): Naka Dynasty as Gleaned from the Archaeological Evidences in Sri Lanka, Science Association, Jaffna.

36. PUSHPARATNAM, P. (2002): Ancient Coins of Sri Lankan Tamil Rulers, Bavani Publishers, Chennai.

37. RAGUPATHY, P. (1987): Early Settlements in Jaffna, Mrs. Ragupathy, Madras.

38. SITRAMPALAM, S.K. (1983): "Ancient Jaffna: An Archaeo logical Perspective", Journal of South Asian Studies, Vol.3, No. 182.

39. WHEELER, R.E.M., GHOSH, A. & DEVA, K. (1946): Arikamedu: An IndoRoman Trading Station on the East Coast of India, Ancient India, 2: 17-124.

40. WHEELER, R.E.M (1947): "Brahmagiri and Chandravalli: Megalithic and Other Cultures in Mysore State", Ancient India, 4.

41. ZVELEBIL, KAMIL (1965): "Harappa and the Dravidians: An Old Mystery in a New Light", New Orient, 4 (3): 65-69.

42. இந்திரபாலா, கா. (2006): இலங்கையில் தமிழர், குமரன் புத்தக இல்லம், சென்னைகொழும்பு.

43. இரா. சிவானந்தம் (பதிப்பாசிரியர்) (2019): கீழடி: வைகை நதிக்கரையில் சங்ககால நாகரிகம், தொல்லியல் துறை, தமிழ்நாடு அரசு, சென்னை.

44. இராசநாயகம், செ. (1933): யாழ்ப்பாணச் சரித்திரம், சென்னை., (மறுபதிப்பு 1999): ஏசியன் எடுகேக்ஷனல் சர்வீசஸ், புதுதில்லி - சென்னை.

45. கிருக்ஷ்ணராசா, செ. (1998): தொல்லியலும் யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டுத் தொன்மையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

46. கிருக்ஷ்ணராசா, செ. (2004): வழுக்கையாற்று வடிநிலத்தில் கண்ட தொல்தமிழ் எழுத்துகள், வீரகேசரி, 08.02.2004, 29.02.2004, 14.03.2004.

47. சிவசாமி, வ. (1974): யாழ்ப்பாணக் காசுகள், தெல்லிப்பழை.

48. சிற்றம்பலம், சி.க. (1993): யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி.

49. சிலப்பதிகாரம் (இளங்கோ அடிகள்): புலியூர்க்கேசிகன் பதிப்பு (2017): ஸ்ரீ செண்பக பதிப்பகம், சென்னை.

50. புக்ஷபரட்ணம், ப. (1993): பூநகரி தொல்பொருளாய்வு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி.

51. மணிமேகலை (சாத்தனார்): உ.வே. சாமிநாதய்யர் பதிப்பு (1965): அறம் பதிப்பகம், சென்னை.

52. யாழ்ப்பாண வைபவமாலை - மயில்வாகனப் புலவர் (1949): குல சபாநாதன் பதிப்பு, சுன்னாகம்.

53. யாழ்ப்பாண வைபவமாலை - மயில்வாகனப் புலவர் (1950): குல சபாநாதன் பதிப்பு, கொழும்பு.

கிழக்கிலங்கை இலங்கையில் முஸ்லிம்கள் செறிந்து வாழ்கின்ற பிரதேசமாகும். இங்கு வாழ்கின்ற முஸ்லிம்களின் பண்பாட்டுக்கூறுகள் மட்டக்களப்புத் தமிழர்களின் பண்பாட்டுக்கூறுகளோடு பல விடயங்களில் ஒத்ததாகவும் வேறுப்பட்டும் காணப்படுவதோடு பிற முஸ்லிம் பிராந்திய கலாசாரகூறுகளிலிருந்தும் தனித்துவமாகக் காணப்படுகின்றன. கிழக்கிலங்கை முஸ்லிம்கள் கிழக்கின் பூர்வ பண்பாட்டுக்கூறுகளினை தமது மத நம்பிக்கைக்கு ஏற்ப மதத்தின் அடிப்படைக்கூறுகளில் பாதிப்பு ஏற்படாத வண்ணம் பண்பாட்டுக் கட்டமைப்பை தகவமைத்துக் கொண்டனர். இப்பண்பாட்டுப் மறுமலர்ச்சியின் கூறுகளினை கலந்துரையாடுவதாக 'கிழக்கிலங்கை முஸ்லிம்களின் பண்பாட்டசைவுகள்' என்ற இக்கட்டுரைத்தொடர் அமையும். இதன்படி, கிழக்கிலங்கை முஸ்லிம்களின் தாய்வழி குடிமரபு முறை, முஸ்லிம் குடிவழிமரபில் உள்ள மாற்றங்கள், கிழக்கிலங்கை முஸ்லிம்களின் திருமண சம்பிரதாயங்கள் அவற்றில் தற்காலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், பாரம்பரிய பரிகார முறைகள், உறவுமுறைகள் மற்றும் குடும்ப அமைப்புகள், உணவுமுறைகள், ஆடை அணிகலன்களும் மரபுகள், வீடுகள் மற்றும் கட்டடக்கலை மரபுகள், பாரம்பரிய அனுஷ்டானங்கள், கலைகள் எனப் பல்வேறு விடயங்கள் தொடர்பில் இந்தத் தொடர் பேசவுள்ளது.

# சுன்னத்துக் கலியாணம்

**எம்.ஐ.எம். சாக்கீர்**



அம்பாறை மாவட்டம் சம்மாந்துறையைச் சேர்ந்த முஹம்மட் சாக்கீர் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி (சிறப்பு) பட்டம் பெற்றவர் தற்போது மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளராக பணிபுரிகிறார்.

வரலாறு, பண்பாட்டு ஆய்வு, நாட்டாரியல், ஆவணப்படுத்தல் போன்ற துறைகளில் தீவிரமாக இயங்கி வருபவர். இவரது 21வது வயதில் 'சம்மாந்துறை பெயர் வரலாறு' என்ற ஆய்வு நூலை வெளியிட்டார், சம்மாந்துறை பெரியபள்ளிவாசல் வரலாற்று ஆவணப்படம் போன்றவற்றிற்கு வசனம் எழுதியுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸின் இன்கிலாப் சஞ்சிகை மீளுருவாக்க குழுவின் முன்னோடியான செயற்பாட்டாளரான இவர் 2019 இல் வெளியான சம்மாந்துறை வரலாறும் வாழ்வியலும் எனும் நூலின் பதிப்பாசிரியர்களிலொருவரும் கட்டுரையாசிரியருமாவார். இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, கலை, பண்பாடு, முதலான கருபொருள்களில் கட்டுரைகள் பல எழுதியுள்ளார்.

இலங்கையின் கிழக்கு மாகாண முஸ்லிம்களிடையே மிகுந்த மத மற்றும் பண்பாட்டு முக்கியத்துவம் கொண்ட ஒரு வாழ்க்கை நிகழ்வாக சுன்னத்துக்கலியாணம் காணப்படுகிறது. இது வெறும் மருத்துவ நடைமுறையாகவோ சடங்காகவோ மட்டுமல்லாமல்; சமூக அடையாளம், தூய்மை மற்றும் ஆண்கள் பருவத்திற்கு நுழைவதற்கான ஏற்பாட்டு விழாவாகவும் இடம்பெற்றுள்ளது. மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை போன்ற பகுதிகளில் வாழும் முஸ்லிம்களிடையே இந்த விழா பல்வேறு பண்பாட்டு நிகழ்வுகள், மரபுகள் மற்றும் சமூகப் பங்கேற்புகளோடு கொண்டாடப்படுகிறது. இக்கட்டுரை ஆரம்பகால சுன்னத்விழா வழக்குகளை சுருக்கமாக அறிமுகம் செய்கின்றது. மத நம்பிக்கைகள் மற்றும் சுதேச கலாசார வெளிப்பாடுகள் எப்படி ஒன்றோடு ஒன்று இணைந்து இக்கொண்டாட்டத்தை அர்த்தமுள்ளதாக மாற்றுகின்றன என்பதை உரையாடுகின்றது.

விருத்தசேதனம் என்பது ஆண்களின் பிறப்புறுப்பில் உள்ள முன்தோலை அகற்றும் செயன்முறையாகும். இது உலகளாவிய முஸ்லிம்களிடையே காணப்படுகின்ற பிரதான ஒற்றுமைகளிலொன்று. இந்நடைமுறை இலங்கை முஸ்லிம்களிடையேயும் காணப்படுகின்றது. இஸ்லாமிய மார்க்கத்தின் வருகைக்கு முன்பிருந்தே இந்நடைமுறை பல்வேறு இனக்குழுக்களிடையேயும் மதங்களைப் பின்பற்றுவோரிடையேயும் நடைமுறையில் இருந்துள்ளது.

செமித்திய இனக்குழுக்கள், அரேபியர்கள், யூதர்கள் போன்ற மத்தியகிழக்கு வாசிகளிடமும், எகிப்தியக் கொப்டிக் கிறிஸ்தவர்கள், எதியோப்பிய மரபுவழிக் கிறிஸ்தவர்கள் மற்றும் மதம்சாராத பழங்குடி மக்களிடையேயும் வழக்கில் இருந்து வருகின்றது. குறிப்பாக தென் சஹாராவின் ஆபிரிக்கத் தொல்குடிகள், வடஅமெரிக்க அஸ்டெக்குகள், மாயன்கள், பிஜி, ஆவுஸ்திரேலிய தொல்குடிகள் என்று உலகின் பல பாகங்களிலும் இவ்வழக்குக் காணப்பட்டு வந்துள்ளது.

கிழக்கிலங்கை முஸ்லிம்கள் ஷாபி சிந்தனைப்பள்ளியைப் பின்பற்றுபவர்களாக காணப்படுவதனால் அனைவரும் விருத்தசேதனம் செய்வதைக் கட்டாயக் கடமையாக கைக்கொண்டு வருகின்றனர். இம்மரபு இஸ்லாத்தின் அறிமுகக்காலத்திருந்தே தொடர்ந்து வருகின்றது.

இறைத்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள், 'விருத்தசேதனம் செய்வது, இலிங்க உரோமங்களைக் களைவது, அக்குள் முடிகளை அகற்றுவது, நகங்களை வெட்டிக்கொள்வது, மீசையைக் கத்தரித்துக் கொள்வது ஆகிய இந்த ஐந்து விஷயங்களும் இயற்கையான மரபுகளில் அடங்கும்' என்று கூறியதாக கிரந்தங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது (ஸஹீஹ் புகாரி 58-89, 58-91, 62-97).விருத்தசேதனம் என்பது இலக்கியச் சொல்லாடலாகப் பயன்பட்டு வருகின்ற அதேவேளை, 'கத்னா', 'சுன்னத்' என்ற சொற்களே பேச்சுவழக்கில் உள்ளன. அரபுமொழியில் இது 'கிதான்' என்ற சொல்லால் அழைக்கப்படுகின்றது. கிழக்கிலங்கையில் இச்சடங்கு 'சுன்னத்துக்கலியாணம்' என்றே வழங்கப்படுகின்றது. அதேபோன்று இச்சடங்கு ஒரு பெரு வைபவமாகவே கொண்டாடப்படுகின்றது.

பொதுவாக ஆண் பிள்ளைகளுக்கு 3 - 12 வயதிற்குள் சுன்னத் செய்யப்படும். தற்காலத்தில் பிறந்து ஏழாம் நாள், ஒன்பதாம் நாள், 40 ஆம் நாள் அல்லது 04 மாதங்களில் சுன்னத் செய்யப்படுகின்றது. இந்த வயது வரம்புகள் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்டும் காணப்படுகின்றன. இருப்பினும் பிள்ளையின் திடகாத்திரத்தன்மைக்கு ஏற்ப பெற்றோரே அதனைத் தீர்மானிக்கின்றனர்.

சுன்னத் செய்துவைப்பவர்கள் ஒய்தா, ஒய்தாமாமா என்று அழைக்கப்படுகின்றனர். இவர்கள் பெரும்பாலும் சிகையலங்காரம் செய்பவர்களாகவே காணப்படுகின்றனர். பரம்பரை பரம்பரையாக இவர்களே இச்சடங்கை செய்வதற்காக அழைக்கப்பட்டனர். தற்காலத்தில் ஆங்கில வைத்தியர்கள் இதனை மேற்கொள்கின்றனர். ஒஸ்தாத் என்ற வார்த்தையிலிருந்து இச்சொல் பிறந்ததாகக் கருதப்படுகின்றது.

ஒரு வீட்டில் சுன்னத்துச் செய்வதாக இருந்தால் முதலில் வீடுகள் மெழுகப்பட்டு, சுவர் பூசி மினுக்கப்பட்டு, சுண்ணாம்பு அடிக்கப்படும். ஆற்றிலிருந்து மாட்டுவண்டியில் குருத்துமணல் ஏற்றிவந்து வாசலில் பரவுவார்கள். வீட்டின் சாப்புவீடு, உள்வீடு, திண்ணைவாசல் ஆகிய இடங்களில் மேற்புறமாக வெள்ளைச்சீலை கட்டுவார்கள். வண்ணான் மாற்றுச் சீலைகளால் பந்தல் அலங்காரம் செய்யப்படும். இதனைக் குடும்ப வண்ணாணே பொதுவாகச் செய்வதுண்டு. இதனை 'வெள்ளை கட்டுதல்' என்று அழைப்பர். சாப்பு வீட்டின் மத்தியில் ஒரு சணலைக் கட்டித் தொங்கவிடுவார்கள். அதன் நுனியில் வெள்ளைத்துணியொன்றின் மத்தியில் கொட்டைப்பாக்கை வைத்துக் கட்டி வைப்பார்கள். வீடானது இலாம்புகள், வண்ணவண்ண வெளிச்ச விளக்குகள் ஏற்றப்பட்டு அலங்கரிக்கப்படும். உயரமான தென்னை மரங்களில் ஒலி பெருக்கிகள் கட்டப்பட்டு பாடல்கள் ஒலிபரப்பப்படும். வீட்டு அலங்கார வேலைகள் நடைபெறுகின்றவேளை, ஆலிம் ஒருவரிடம் நாள் குறித்துக்கொண்டு வரும் வழக்கமும் இருந்துள்ளது. குறித்த நாளில் பெரும்பாலும் அஸர் தொழுகைக்குப் பின்னர் ஒஸ்தாமாமா அழைக்கப்படுவார்.

## அழைப்பு

வாய்வழியாகச் சொல்லப்படுவதோடு, அழைப்பிதழ்களாக அச்சிட்டும் கொடுக்கப்படும். ஆரம்பகால அழைப்பிதழ்கள் 'விருத்தசேதன விஞ்ஞாபனம்', 'விருத்த சேதன அழைப்பிதழ்' என்று அச்சிடப்பட்டன. பின்னர் 'சுன்னத் அழைப்பிதழ்', 'கத்னா அழைப்பிதழ்' என்று அச்சிடப்படலாயின. தற்காலத்தில் இவ்வைபவம் மிகவும் எளிமையாகவே கொண்டாடப்படுகின்றது. ஆரம்பகாலங்களில் ஒரு வாரமளவுக்கு இச்சடங்கும் கொண்டாட்டமும் நீடித்துக் காணப்பட்டாலும், தற்காலத்தில் ஒரே நாளிலேயே எல்லாம் நிறைவேற்றப்பட்டு முடிகின்றது. மேலும் சிலர் சடங்கை மட்டுமே நிறைவேற்றி விடுகின்றனர்.

பல பெற்றோர்கள் தமது நெருங்கிய வயதுடைய இரு புதல்வர்களுக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்டவர்களுக்கு ஒரே தடவையில் கத்னா வைபவத்தை நடாத்தியுள்ளனர். தற்காலத்தில் பிறந்து சில நாட்களிலேயே இது நிறைவேற்றப்படுவதோடு தனித்தனியாகவே செய்யப்படுகின்றது.

அழைப்புக் கொடுப்பதற்கு முன்பதாக பள்ளிவாசலில் அனுமதிபெறும் வழக்கும் சில பிரதேசங்களில் காணப்பட்டுள்ளது. இதற்காக வெற்றிலை - பாக்குத் தட்டத்துடன் தந்தை அல்லது உறவினர் ஒருவர் பள்ளிக்குச் சென்று அனுமதி பெறவேண்டியும் இருந்துள்ளது (நிந்தவூர்). பின்னர் பெற்றோர், ஒவ்வொரு வீடாகச்சென்று அழைப்பு விடுப்பார்கள். உதாரணமாக நற்பிட்டிமுனை வரலாறும் வாழ்வியலும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள அழைப்பு முறையை இங்கு குறிப்பிடுகின்றேன்.

"வாற சனிக்கிழமை அஸறுக்குப் பொறகு எங்கட புள்ளைய உரல்ல வைக்கப்போறம் அயத்துப் போகாம வந்திருங்க" என்று அழைப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பால், பழம் கொடுத்தல்

அழைப்புக் கிடைத்ததும், வேளைகளில் முறைக்காரர்கள் (மாமா, மாமி முறையானவர்கள்) வெற்றிலை - பாக்கு வைத்து வட்டா கொண்டு வருவார்கள். அதனோடு அரிசி, நாட்டு முட்டை போன்றவற்றையும் எடுத்து வருவார்கள். பின்னர் மாப்பிள்ளைக்குத் தண்ணீர் வார்ப்பார்கள். தேங்காய்பால் பிழிந்து, அதில் வாழைப்பழம் சக்கரை இட்டுப் பிசைந்து அருந்தக் கொடுப்பார்கள்.

## மருதோன்றிக் கலியாணம்

முறைக்காரர்கள் மாப்பிள்ளைக்கு மருதோன்றியிடும் நிகழ்வு மருதோன்றிக் கலியாணம் எனப்படும். மாப்பிள்ளையை நடுவில் இருக்கச்செய்து அவரின் தலையின்மீது வெள்ளைநிறச் சீலையொன்றைப் போட்டு வைப்பார்கள். பின்னர் மாட்டுக்கொழுப்பை உருக்கி, குச்சிகளால் உள்ளங்கைகளிலும் நகத்திலும் அலங்காரம் இட்டபின்னர் அரைத்துவந்த மருதோன்றியை உள்ளங்கையில் பூசி விடுவார்கள். பத்து விரல்களுக்கும் தொப்பி போன்று மருதாணி இடுவார்கள். இதன்பின்னர் உறவினர்களுக்கு விருந்துபசாரம் நடைபெறும்.

மருதோன்றி சிவந்து காய்ந்ததும், அடுத்தநாள் மாப்பிள்ளை ஊர்வலம் நடைபெறும். உறவினர்கள் கலியாண வீட்டில் தங்கி, பலகாரம் சுடுதல் மற்றும் பிற காரியங்களில் ஒத்தாசையாகச் செயற்படுவார்கள். தொதல், முறுக்கு, பணியாரங்கள் தயாரித்தல், வேலி கட்டுதல் போன்றன இடம்பெறும்.

## வளவுகாவல் பண்ணுதல்

கத்னா நடைபெறுவதற்கு முன்பு பிரிகாரி ஒருவர் அழைக்கப்பட்டு வளவு காவல் பண்ணுதல் செய்வார்கள். வீட்டு வளாகத்தின் நான்கு எல்லைகளிலும் குழிவெட்டி அதனுள் மந்திரித்த தகடு அடங்கிய கண்ணாடிச் சீசாக்களையும், ஓதிய எலுமிச்சை போன்றவற்றையும் புதைத்துவிடுவார்கள். இதன்மூலம் கெட்ட சக்திகள் வீட்டினுள் நுழைவது தடுக்கப்படுவதாக நம்பினர்.

## மாப்பிள்ளை ஊர்வலம்

அடுத்தநாள் காலைவேளையில் மாப்பிள்ளையை நன்றாகச் சோடித்து புதுச்சாரம், சட்டை, தொப்பி, கண்ணாடி, கைக்கடிகாரம், வார்ச்செருப்பு அணிவித்துக் குதிரையில் அல்லது மாட்டுவண்டியில் ஊர்வலம் கூட்டிச்செல்வார்கள். கூட்டுவண்டியாயின் வண்டிலினுள் கதிரையில் வெள்ளை விரித்து அதில் மாப்பிள்ளையை அமரச்செய்வார்கள். மாப்பிள்ளையின் வண்டிலின் பின்னால் உறவுக்காரர்கள் - மச்சான், மைத்துனர்கள் - நான்கைந்து வண்டிகளில் தொடுவமாக வருவார்கள். முன்னும் பின்னும் பக்கீர் பாவாக்களும், பொல்லடிக் கோஷ்டியினரும் ஆடல் பாடல்களுடன் செல்வார்கள். ஊரிலுள்ள பிரதான பள்ளிவாயில்கள், தைக்காக்கள், ஸியாரங்களுக்கு அழைத்துச்சென்று காணிக்கை போடுவார்கள். அருகில் இருப்பவர்கள் கால்நடையாக ஊர்வலம் செல்வார்கள். ஊர்வலம் செல்லும்போது மாப்பிள்ளைக்கு ரொபி மாலை, காசு மாலை போன்றவற்றையும் உறவினர்கள் அணிவிப்பார்கள்.

பள்ளிவாசல் காணிக்கை போட்ட பின்னர், மோதினார் (முஅத்தின்) 'துஆ' பிரார்த்தனை செய்வார். அதன்பின்னர் அவருக்கும் காணிக்கை கொடுத்துவிட்டு வீட்டுக்கு வருவார்கள். இந்தவேளைகளில் உறவினர்கள் சந்திகளில் வெடி கொழுத்துவதும், குரவை இடுவதுமாக மாப்பிள்ளையை வரவேற்பார்கள். பின்னர் வீட்டிற்கு திரும்பியதும் ஆரத்தி எடுத்து வரவேற்பார்கள். ஆரத்தி மூன்றுமுறை எடுக்கப்படும். முதலாவதாக பால்

ஆரத்தியும், பின்னர் மஞ்சள் ஆரத்தியும், அடுத்ததாக மஞ்சளும் சுண்ணாம்பும் கலந்த சிவப்பு ஆரத்தியும் எடுக்கப்படும். பின்னர் ஆரத்தி தெருமூலையில் ஊற்றப்படும்.

## ஒஸ்தாமாமாவுக்கு வட்டா கொண்டுபோதல்

தந்தையும், உறவினர்களும் ஒஸ்தாமாமாவின் வீட்டுக்கு வெற்றிலை, பாக்கு, வாசனைத்திரவியங்கள், பொருட்களுடன் வட்டா கொண்டு செல்வார்கள். அதன்போது அவருக்குத் திகதியையும் அறிவித்துவிட்டு வருவார்கள். சுன்னத்து நடைபெறுவதற்கு முதல் நாளிரவு முஅத்தின், ஒஸ்தா, அதிகாரி ஆகியோருக்கு விருந்து வைக்கப்பட்டு பாத்திஹாவும் ஓதப்படும்.

## கத்னா வைபவம்

கத்னா தினத்தன்று உறவினர்கள் அனைவரும் அழைக்கப்பட்டு, மாடறுத்து விருந்து வைக்கப்படும், மதியத்திற்குப் பின்னர் மாப்பிள்ளைக்கு புத்தாடை அணிவித்து அலங்கார மேடையில் இருப்பாட்டுவார்கள். வாழ்வுக்கலியாண மாப்பிள்ளையைப் போல, சுன்னத்துக்கலியாண மாப்பிள்ளையும் அலங்கரிக்கப்படுவார். வாழைநார்ப்பட்டு, மொகினிப்பட்டு, சேலைநார்ப்பட்டு சாரன் அணிவிக்கப்படும். துருக்கித்தொப்பி அல்லது குல்லா அணிவிக்கப்படும். தொப்பி அளவு போதாதபோது வெள்ளைத்துணியை தோப்பியினுள் வைத்து அறுக்கி அணியப்படும். பிற்காலத்தில் வலைத்தொப்பிகள், கோட்சூட் என்பனவும் அணியப்பட்டது. இவற்றோடு வெள்ளி மோதிரம், கழுத்திலே வெள்ளியிலான கறை, காலிலே தண்டை என்பனவும், தோல் செருப்பும் அணிவிக்கப்படும்.

பின்னர் மாப்பிள்ளை, மச்சி முறையானவர்களுக்கு உள்ளங்கையில் அத்தர் தடவிவிடுவதோடு, அன்பளிப்புகளையும் கொடுப்பார். உம்மம்மா, வாப்பம்மா முறையானவர்களுக்கும் அன்பளிப்புகளைக் கொடுப்பார். வருகைதந்த உறவினர்கள் மாப்பிள்ளைக்கும், மாப்பிள்ளையின் தாய்க்கும் பணம், நகை உள்ளிட்ட அன்பளிப்புகளை வழங்குவார்கள்.

இந்தவேளையில் ஒஸ்தாமாமா வீட்டிற்கு வந்து சாம்பல் ஓதி வளவை மீண்டும் காவல் பண்ணுவார். தன்னுடன் கத்திக்கூடு, மருந்துப்பைகளையும் எடுத்து வந்திருப்பார். தன்னோடு உதவியாளர் ஒருவரையும் கூட்டி வந்திருப்பார். பின்னர் மாப்பிள்ளையைச் சிறுநீர் கழிக்கச் செய்துவிட்டு, அவரது இடுப்பில் வெள்ளைத்துணி அணிவிக்கப்படும். மாப்பிள்ளையை அழைத்து வந்து கத்னா செய்யும் அறையில் உரல் ஒன்றைக்



விருத்த சேதனம் செய்யும் கருவிகளும் உபகரணங்களும்

கவிழ்க்கச்செய்து, அதன்மீது வெள்ளைத்துணியொன்றை விரித்து அமரச்செய்வார்கள். உரலின்கீழே அருகில் சாம்பல் தட்டொன்று வைக்கப்படும். சிந்துகின்ற இரத்தம் மற்றும் கழிவுத்தோல் ஆகியன அதில் இடப்படும். பின்னர் அவை புதைக்கப்படும்.

உறவினர்களில் வலுவானவர்கள், மாப்பிள்ளையின் கை, கால்கள், தொடை ஆகியவற்றை வலுவாகப் பிடித்திருக்க இன்னொருவர் தலையைத் திருப்பிப் பராக்குக்காட்டும் வண்ணம் கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருப்பார். ஆண்கள் சுற்றிவரநின்று சீலைகளால் மறைத்துக் கொண்டிருப்பார்கள். இந்தவேளையில் வெளிப்பக்கம் பெண்கள் குரவை ஓசை எழுப்பிக்கொண்டிருப்பார்கள். பக்கீர் பாவாக்கள் தஹறாகட்டை (றபான்) மூலம் பாடல்களை இசைப்பார்கள். ஒஸ்தாமாமா கணப்பொழுதில் கத்தியினால் இலிங்க உறுப்பின் முன்தோலை அகற்றிவிட்டு மருந்தைக்கட்டி சீலையைச் சுற்றிவிடுவார். இவ்வேளை வீரிட்டுக் கத்திய சத்தமும் குரவை ஒலியுடன் மறைந்துவிடும். பின்னர் மாப்பிள்ளையை வெள்ளைச்சீலை விரிக்கப்பட்ட பாயினில் படுக்கவைப்பார்கள்.

இவ் அறுவைச்சிகிச்சை முறைக்காக விசேடமான கத்தரிக்கோல்கள் பயன்படுவதுண்டு. இவை பற்றி 11 ஆம் நூற்றாண்டைய மருத்துவத்துறைச் சத்திரசிகிச்சை நிபுணரான அல் ஜஹ்ராவின் நூலில் வரைபடக்குறிப்புகளும் உள்ளன.

மாப்பிள்ளைக்கு அசௌகரியம் ஏற்படக்கூடாது என்பதற்காகவும், காயம் இலகுவில் ஆற வேண்டும் என்பதற்காகவும், படுக்கைக்கு மேலே கூரையிலிருந்து ஒரு கயிற்றைக்கட்டி அதன் நுனியில் பாக்கு ஒன்றை வெள்ளைத்துணியின் மையத்தில் முடிந்து, போர்வைபோல இடுப்பிற்கு கீழே உள்ள பகுதியை

மறைத்துத் தொங்கவிடுவார்கள். இதன்பின்னர் உறவினர்களுக்கு இனிப்புகளும், சர்பத்தும் வழங்கப்படும். கத்னா நடைபெற்ற தினத்திலிருந்து சீலையைக் கழற்றி, மீண்டும் தண்ணீர் வார்க்கும்வரை வாசலில் வேப்பங்கொத்து கட்டப்படும். குறித்த வீட்டில் விசேட கவனிப்புக்குரிய நபர்கள் உள்ளனர்; எனவே, தீட்டுடையவர்கள் நுழையக்கூடாது என்று சைகைச்செய்தி அளிப்பதற்காகவே இவ்வாறு செய்யப்படுகின்றது. மேலும் கெட்ட சக்திகள் நுழைவதை இது தடுக்கும் என்றும் நம்பப்படுகின்றது.

## பத்தியம்

சுன்னத் செய்யப்பட்ட நபருக்கு காயம் ஆறும்வரை கிரந்தியை (அழற்சி) உண்டாக்கக்கூடிய உணவுகளைத் தவிர்க்கின்றனர். தக்காளி, கத்தரி, ஆழ்கடல் மீன்கள், இறால், மாட்டிறைச்சி போன்றவற்றைத் தவிர்ப்பதோடு, மூன்று நாட்களுக்கு தண்ணீரும் மட்டுப்படுத்தப்பட்டே வழங்கப்படும். மூன்று, நான்கு தேக்கரண்டி நீரே வழங்கப்படும். சிறுநீர்த்தொற்று மற்றும் காயத்தில் கிருமித்தொற்று ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக இவ்வாறு செய்யப்படுவதாகக் கூறுகின்றனர்.

அத்தோடு தேங்காய்ப்பூ சிறிதளவு போட்ட முருங்கையிலைச்சுண்டல், அரை அவியலில் நாட்டுக்கோழி முட்டை போன்றன விசேடமாக வழங்கப்படும். மேலும் நல்லெண்ணையினால் இடுப்பில் நீவிவிட்டு இளம்சூட்டுடன் கூடிய பிட்டினால் ஒத்தடம் இடப்படும்.

### இரவுக்காவலும் பஜனையும்

சுன்னத் செய்யப்பட்டவர் இரவுவேளைகளில் புரண்டு காயத்தைச் சேதமாக்கிவிடக்கூடும் என்பதற்காக, ஆண் உறவினர்கள் இரவுவேளைகளில் காவல் இருப்பார்கள். அவர்களின் அயர்ச்சியைப் போக்குவதற்காக தினமும் இரவுவேளைகளில் பஜா அல்லது பஜனை எனப்படும் பாட்டுக்கச்சேரி நடைபெறும். இதற்காக பஜா கோஸ்டியினர் அழைக்கப்படுவார்கள். பக்கீர் பாவாக்களும் பாடல்களைப் பாடுவார்கள் இவர்கள் இஸ்லாமிய வரலாறு, உபதேசச்சிந்துகள், தத்துவப்பாடல்கள் போன்றவற்றைப் பாடுவார்கள். நள்ளிரவு தாண்டியும மாறிமாறி பாட்டிசைத்துக் கொண்டிருப்பார்கள். தொடர்ந்து தேநீர், பிட்டு, நொருக்குத்தீனிகள் போன்றவை பரிமாறப்பட்டுக்கொண்டிருக்கும். பிற்காலங்களில் தொலைக்காட்சிப்பெட்டி தருவிக்கப்பட்டு, திரைப்படங்கள் ஒளிபரப்பப்பட்டு வந்துள்ளன.

ஆரம்பகாலங்களில் வெளியூர்களில் இருந்து நட்டுமுட்டுக்காரர்கள் (நட்டுவாங்கம், மேளம்) இசைக்கும் தமிழர்கள் அழைக்கப்பட்டு, இசைக்கச்செய்து, வெகுமதிகள் கொடுக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளதாகவும் குறிப்புகள் உள்ளன.

சம்மாந்துறையில் முதல்நாள் இரவு பதம் படிப்பார்கள்; இரண்டாம் இரவு கவி படிப்பார்கள்; மூன்றாம் இரவு பொல்லடி; நான்காம் இரவு புஸ்தகம் படித்தல் என்றவாறாக இடம்பெற்றுள்ளதாக மீராலெவ்வை எழுதிய குறிப்புகளிலிருந்து அறிய முடிகின்றது. இங்கு கண்டி ஒப்பாரி, கல்லாத்து ஒப்பாரி, நற்பிட்டிமுனையாள் காவியம், அலிபாதுஷா நாடகம், காசிம்படைப் போர், ராசமணிமாலை போன்றவை படிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பின்னர் தினமும் காலைவேளை ஒஸ்தாமாமா வீட்டிற்கு வந்து காயத்திற்கு மருந்திட்டு இரத்தச்சீலையைக் கழற்றி புதுச்சீலை மாற்றிவிட்டுச் செல்வார். எண்ணைச்சீலை மருந்து கட்டப்படுவதோடு, தழும்பாக உள்ளபோது சிரட்டைக்கரி, சாம்பல் என்பன இடப்பட்டதாகவும் குறிப்பிடுகின்றனர். மேலும் புளியம் இலை, குப்பிளா, குண்டுமணி இலை ஆகியவற்றை அவித்த நீரினால் உறுப்பைக்கழுவிய பின்னரே தூள் இட்டு மருந்து கட்டப்படும். இதன்போது ஒவ்வொரு நாளும் அவருக்கு அன்பளிப்பாகப் பணமும் பொருட்களும் வழங்கப்படும். ஆரம்பகாலங்களில் ஒவ்வொரு நாளும் ஒஸ்தாவின் வீட்டுக்கு சோறு, நிய்யத்துப் புக்கை என்பன கொண்டு சொல்லப்பட்டதாகவும் குறிப்பிடுகின்றனர்.

## தண்ணிவார்த்தல்

காயம் ஆறியபின்னர், ஏழாம்நாள், தண்ணீர்வார்த்தல் இடம்பெறும். இதற்காக முதலில் மஞ்சள் தண்ணீரும், பின்னர் தேங்காய்ப்பாலும் தலையில் ஊற்றப்படும். பின்னர் வெதுவெதுப்பான வெந்நீரில் மாப்பிள்ளையை நீராட்டி, புத்தாடை அணிவித்து, அன்றைய தினம் பாற்சோறு, நாட்டுக்கோழிக் கறியுடன் மாப்பிள்ளைக்கு விருந்துவைப்பார்கள். பின்னர் பள்ளிவாசலுக்குச் சென்று பாத்திஹா ஓதிவிட்டு வருவார்கள்.

### தற்கால நடைமுறைகளில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள்

தற்காலத்தில் இச்சடங்கு ஒரு வைபவமாகக் கொண்டாடப்படுவதில்லை. பிள்ளைகள் புத்தியறிவதற்கு முன்னரேயே, குழந்தைப்பராயத்தில் இது செய்யப்படுகின்றது. இது இலகுவாக இருப்பதோடு, காயமும் விரைவாக ஆறுகிறது. மேலும் தற்போது ஒஸ்தாமாமாவிடம் செல்லாமல், வைத்தியசாலைகளிலேயே இதனைச் செய்துகொள்ளக் கூடியதாகக் காணப்படுவதால், அலோபதி வைத்தியர்களே இதனைச் செய்கின்றனர். பெரும்பாலும் நெருங்கிய உறவினர்கள் மட்டும் அழைக்கப்பட்டு நடைபெறும் ஒரு விருந்துடனேயே இது நிறைவுபெற்றும் விடுகின்றது.

மலையகத் தமிழரின் சமூக, அரசியல் விடுதலைக்காகத் தன் வாழ்வின் பெரும்பாகத்தை அர்ப்பணித்த நடேசய்யர் குறித்த ஆய்வுகள் அவரது பங்களிப்பை அறிமுகப்படுத்தல், அவற்றை மதிப்பிடுதல் என்ற தளங்களில் முன்னோடி முயற்சிகளாக விளங்குகின்றன. இருந்தபோதிலும் அவை குறிப்பிட்ட சில மட்டுப்பாடுகளையும் கொண்டுள்ளன. நடேசய்யரின் மூல ஆவணங்கள் பல கிடைக்கப்பெறாத காலத்தில், கிடைக்கப்பெற்ற சான்றுகளை அடிப்படையாகக் கொண்டும், சில புதிய மூலங்களைக் கண்டறிந்தும் அந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதனால் அவற்றுள் நடேசய்யரின் மொத்தப் பங்களிப்புகளும், அவரின் கருத்தியல் தளத்தில் ஏற்பட்டுவந்த மாற்றங்களும் இன்னும் முழுமையாக வெளிப்படுத்தப்படாத நிலையே தொடர்கிறது. அந்தவகையில், ஏற்கனவே கிடைக்கப்பட்டுள்ள நூல்களையும் புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள நூல்களையும் மதிப்பிடுவதன் மூலம் நடேசய்யரின் பங்களிப்புகளையும், அவர் காலத்து சமூக, அரசியல் அசைவையும் கண்டுகொள்ளவும் நடேசய்யர் பற்றிய ஆய்வுகளில் நிலவும் இடைவெளியை நிரப்பவும் எதிர்கால ஆய்வுகளுக்கான திசைகாட்டல்களை வழங்கவும் 'கணக்குப் பதிவு நூல் முதல் கதிர்காமம் வரை' எனும் இத் தொடர் எழுதப்படுகிறது.

# நீ மயங்குவதேன்: சுயமுன்னேற்றத்துக்கான வழித்தடம்


**எம்.எம்.ஜெயசீலன்**



எம்.எம். ஜெயசீலன் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணி, முதுதத்துவமாணிப் பட்டங்களைப் பெற்றுள்ள இவர், இந்தியப் பொதுநலவாய நாடுகளின் புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் (தஞ்சாவூர்) கலாநிதிப் பட்ட ஆய்வைச் சமர்ப்பித்துள்ளார். கல்வெட்டியல், பண்பாட்டு வரலாறு, இலக்கிய விமர்சனம், நவீன இலக்கியம் முதலான துறைகளில் ஆர்வமுள்ள இவர், அத்துறைசார்ந்த ஆய்வுக் கட்டுரைகளைத் தேசிய மற்றும் சர்வதேச ஆய்வரங்குகளில் சமர்ப்பித்து வருவதுடன் ஆய்விதழ்களிலும் சஞ்சிகைகளிலும் தொடர்ந்தும் எழுதிவருகிறார்.

“எவன் குற்றமற்றவனாதற்குக் கற்கிறானோ எவன் தூய அகத்தினனாதற்கு முயல்கிறானோ எவன் சாந்தியும் ஞானமும் சான்றாக நோக்குந் தன்மையும் பொருந்திய மனதை அடைவதை இலக்ஷியமாகக் கொண்டிருக்கிறானோ அவன் மனிதர் செய்யக்கூடிய செயல்கள் எல்லாவற்றினும் மேலான செயலைச் செய்து கொண்டிருக்கிறான். அவனது அச்செயலின் பயன் ஒழுங்கும் இன்பமும் அழகும் வாய்ந்த ஒரு வாழ்க்கையாக அவன் பால் அமையும்.” (ஜேம்ஸ் ஆலன்)

அகவிடுதலை இல்லாமல் புறவிடுதலை சாத்தியமில்லை. புறக்கட்டுப்பாடுகளிலிருந்து விடுதலைபெறுதல், அடக்கப்பட்ட வாழ்விலிருந்து வெளியேறுதல், ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுதல் முதலானவற்றுக்கு அகவிடுதலையே அடிப்படையானதாக விளங்குகிறது. தெளிந்த அறிவும் மனத்திடமும் மானுட வாழ்வு குறித்த விரிந்த தேடலும் அகவிடுதலைக்கு இட்டுச்செல்கின்றன. “மனதிற் சலனமில்லாமல், மதியில் இருளே தோன்றாமல், நினைக்கும் பொழுது நின்மவுன நிலை வந்திட நீ செயல் வேண்டும்” எனப் பாரதி மணக்குள விநாயகரிடம் அகவிடுதலையே வேண்டிநிற்கிறார். அதுவே புறவிடுதலைக்கான ஆத்மபலத்தைத் தரக்கூடியது.

தனிமனித நிலையிலும் சமூக நிலையிலும் வாழ்வை வெற்றிகரமாக்கும் அகத்தூண்டலுக்கும் அதனை நோக்கிய பயணத்துக்கும் தன்நம்பிக்கையும் தெளிவும் விழிப்பும் ஊக்கப்படுத்தலும் உந்துசக்தியாகத் தொழிற்படுகின்றன. அவற்றைச் சமூகத்தில் விதைப்பதை இலக்காகக் கொண்டு சுயமுன்னேற்ற நூல்கள் எழுதப்பட்டு வருகின்றன. தனிப்பட்ட இலக்குகளை உருவாக்குதல், இலக்கினை நோக்கித் தொடர்ந்து பயணித்தல், கல்வியில் உயர்தல், தொழிலில் அமர்தல், தன்நம்பிக்கையை வளர்த்தல், சுயமரியாதை உணர்வைத் தூண்டுதல், உடன்படான சிந்தனைகளை ஊட்டுதல், எதையும் எதிர்கொள்ளும் உளவியல் வலுவைக் கட்டியெழுப்புதல், தோல்வியிலிருந்து கற்றுக்கொள்ளத் தூண்டுதல், பின்னடைவிலிருந்து எழுச்சியடைய வழிகாட்டுதல் முதலானவையூடாக அக மற்றும் புறத் தடைகளை வெற்றிகொள்ளவும் சுய ஒழுக்கம், கட்டுப்பாடு, நம்பிக்கை முதலானவற்றை ஊக்குவித்து மனப்பாங்கில் மாற்றங்களை ஏற்படுத்தவும் சுயமுன்னேற்ற நூல்கள் பங்களித்து வருகின்றன.

தனிமனிதர்களுக்கு மட்டுமன்றி ஒடுக்குமுறைக்கு உள்ளாகிவரும் சமூகத்திற்கும் இச்சுயமுன்னேற்றச் சிந்தனைகள் பெரும்பயனளித்து வருகின்றன. எல்லாவிதத் தடைகளைத் தாண்டி மேலெழுவதற்கும், சமூக விழிப்பைக் கட்டியெழுப்புவதற்கும் ஒடுக்கும் சக்திகளை எதிர்ப்பதற்கும், தம் இருப்பை உறுதிப்படுத்துவதற்கும் துணைசெய்யும் அக்கருத்துகள், அடிமை மனப்பாங்கை மாற்றி தன்நம்பிக்கையை வளர்க்க உதவுகின்றன; புதிய நம்பிக்கையை விதைக்கின்றன. அவ்வகையில் சமூக மாற்றத்துக்கான, மேல்நோக்கிய அசைவுக்கான சக்திமிக்க கருவியாகச் சுயமுன்னேற்றச் சிந்தனைகள் விளங்குகின்றன.

இந்திய சுதந்திரப் போராட்டக் களத்தில் வீறார்ந்த செயற்பாடுகளை முன்னெடுத்த பலரும் சுயமுன்னேற்றக் கருத்துகளை அழுத்தமாக வெளிப்படுத்தி வந்துள்ளதைக் காணமுடிகிறது. சிலர் சுயமுன்னேற்றம் பற்றிய முக்கியமான நூல்களைப் பிறமொழிகளிலிருந்து மொழிபெயர்த்தும் உள்ளனர். பாரதியின் எழுத்துகளில் சுயமுன்னேற்றச் சிந்தனைகள் பரவலாக இடம்பெற்றுள்ளன. சான்றாக,

“...எவனும் உடம்பை உழைப்பினாலும் அசைவினாலும் சுறுசுறுப்பாக வைத்துக்கொள்ள வேண்டும். மனதை உத்ஸாக நிலையில் வைத்துக்கொண்டால் உடம்பிலே தீவிரமுண்டாகும். உடம்பைத் தீவிரமாகச் செய்துகொண்டால் மனது உத்ஸாகத்துடனிருக்கும். மனத்தளர்ச்சிக்கு இடம்கொடுக்கலாகாது. கவலை மனிதனை அரித்துக்கொன்றுவிடும். பயத்தை உள்ளே வளர்ப்பவன் பாம்பை வளர்க்கிறான்...

மனவுறுதி, ஸந்தோஷம், உலகை நடத்தும் சக்தி நமக்கு நன்மை செய்யுமென்ற நம்பிக்கை, சரீரவுழைப்பு முதலிய நற்குணங்களைக் கைக்கொண்டு ஊக்கத்தை வழக்கப்படுத்த வேண்டும். உடம்பிலே நோயில்லாமல் வலிமையுடன் இங்கே நூறாண்டு வாழலாம்.”

என்ற குறிப்பை எடுத்துக்காட்டலாம். சுயமுன்னேற்ற நூலாக்க வரலாற்றில் மிகப்பெரும் ஆளுமையாகக் கொண்டாடப்படும் ஜேம்ஸ் ஆலனின் முக்கியமான நூல்களை வ.உ. சிதம்பரம்பிள்ளை தமிழில் மொழிபெயர்த்துள்ளார். ஜேம்ஸ் ஆலனின் கருத்துகள் சுயமுன்னேற்றத்துக்கான சிந்தனைகளை அழுத்தமாக வெளிப்படுத்தியுள்ளன. சான்றாக, வ.உ.சி. மொழிபெயர்த்த ‘அகமே புறம்’ என்ற நூலின் ஒரு சிறு பகுதியைச் சுட்டிக்காட்டலாம்:

“ஒரு மனிதன் தனது வாழ்வு முழுதும் தனது மனத்தினின்றே வருகிறதென்று அறிவானானால் அப்பொழுதே அவனுக்குப் பேரின்பவீட்டின் வழி திறக்கப்பட்டிருக்கிறது. அவன் அப்பொழுது தனது மனத்தை ஆள்வதற்கும் தனது இலட்சியத்திற்குத் தக்கபடி தன்னைத் திருத்திக்கொள்வதற்கும் தக்க வலிமை தன்னிடத்தில் இருப்பதைக் காண்பான். அப்படியே அவன் முற்றும் மேம்பாடான நினைப்பையும் செயலையும் மேற்கொண்டு நேராகவும் உறுதியாகவும் நடப்பான். அவனுக்கு வாழ்க்கை இனியதாகவும்

தூயதாகவும் அமையும். அவன் சிறிது முன்னாகவோ பின்னாகவோ சகல தீமைகளையும் சகல கவலைகளையும் சகல துன்பங்களையும் போக்கிவிடுவான். ஏனெனில் தனது அகத்தின் வாயிலைத் தளராத ஊக்கத்துடன் காத்து வருகிற ஒரு மனிதன் ஞானத்தையும் துக்க நிவிர்த்தியையும் சுகப் பிராப்தியையும் அடையாமல் இரான்."

வ.உ.சி. இன் மொழிபெயர்ப்புகள் மூலம் ஜேம்ஸ் ஆலனின் நூல்கள் தமிழ்நாட்டில் மிகுந்த பிரபல்யம் பெற்றுள்ளன. அம்மொழிபெயர்ப்புகள் பற்றிய கருத்துகளைப் பலரும் பதிவுசெய்துள்ளனர். 'மனம்போல் வாழ்வு' என்ற நூல் குறித்துப் பாரதியார், "...அறிவினிலே தெளிவும் நெஞ்சிலே உறுதியும் கொண்டு தம் வாழ்நாளைப் பொருளும் பயனும் உடையதாக்கவிரும்பும் தமிழர்களெல்லோரும் இந்தப் புஸ்தகமொன்று வாங்கி எப்போதும் திரும்பத்திரும்பப் படித்துவரவேண்டும்" எனக் கூறியுள்ளார். சூரியோதயம், இந்தியா, விவேகசிந்தாமணி, தென்னிந்தியா மித்திரன், தென்னிந்தியா மெயில், இந்து முதலான பத்திரிகைகளில் அந்நூலின் முக்கியத்துவம் குறித்த செய்திகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

மேற்படி மொழிபெயர்ப்புகள்வழி சுயமுன்னேற்றம் குறித்த நூல்கள் தமிழ்ச் சூழலில் மிகுந்த கவனத்தைப் பெற்றன. காலனிய காலத் தமிழ்ச் சமூகத்தின் வாழ்க்கைநிலைமை அந்நூல்களின் தேவையை மிகுவித்தன. அதனால் பலரும் அத்தகைய நூலாக்க முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். அதன்போது கோ. நடேசய்யரும் அம்முயற்சியில் இறங்கியுள்ளார்.

வங்கப்பிரிவினை முயற்சிகளையொட்டி எழுச்சிபெற்ற விடுதலைத்தாகத்தின் குழந்தையாக விளங்கிய நடேசய்யர், இந்திய விடுதலைப் போராட்டத்தின் பங்காளராகத் தொழிற்பட்டுள்ளார். இந்திய அரசியல் நகர்வுகளையும் தமிழ்நாட்டில் இடம்பெற்றுவந்த விடுதலைச் செயற்பாடுகளையும் ஆழமாக அவதானித்து வந்துள்ள அவர், அவற்றையொத்த நடவடிக்கைகளை இலங்கையில் முன்னெடுத்துள்ளார். அவற்றின் ஒரு விளைவாகவே, தமிழ்நாட்டில் முனைப்புபெறத் தொடங்கிய சுயமுன்னேற்ற நூல்களையொத்த நூல்களை வெளியிட்டுள்ளார் எனலாம்.



Image source - noolaham.net

இதழியலாளன், சமூகச் செயற்பாட்டாளன், தொழிற்சங்கவாதி, அரசியல்வாதி முதலான பல தளங்களில் இலங்கைவாழ் இந்திய மக்களுடன் ஊடாடி அம்மக்களின் அகமும் புறமும் அறிந்த நடேசய்யர், அவர்களிடத்தும் ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டு இளைஞர்களிடத்தும் விழிப்புணர்வையும் மனோதைரியத்தையும் ஏற்படுத்துவதை இலக்காகக் கொண்டு நீ மயங்குவதேன் (1931), வெற்றியுனதே (1934) ஆகிய அகயெழுச்சி நூல்களை ஆக்கியுள்ளார். இளைஞர்களின் அகயெழுச்சியைத் தூண்டுவதாக அமைந்துள்ள அந்நூல்கள் மிகவும் எளிமையான வகையில் எல்லோரும் புரிந்துகொள்ளக்கூடிய முறையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. வெற்றியடைந்த பெரியோர்கள் பலரின் வாழ்க்கைச் செய்திகளை நூலின் பொருண்மையோடு இணைத்து வெளிப்படுத்தியுள்ள நடேசய்யர், சாதாரண வாழ்க்கைச் சம்பவங்களைச் சான்றாகக் கொண்டு வாழ்வில் வெற்றி பெறுவதற்கான வழிகளை விளக்கிக் காட்டியுள்ளார்.

ஹட்டன் சகோதரி பிரஸ்ஸினால் வெளியிடப்பட்டுள்ள இந்நூலை, சென்னை பி.என்.கே. அச்சகம் 1947 ஆம் ஆண்டு மறுபிரசுரம் செய்துள்ளது. முதற்பதிப்புக்கான அணிந்துரையை திரு. சி. சரவணனார் வழங்கியுள்ளார். அவர் தன் குறிப்பில் இந்நூலின் சிறப்புகளை,

*"பாரதப் போரிடை யோதிய கீதையோ?*
*சீரிய பாரதி கூறிய நூலோ?*
*தமிழ ருறுதி யமிழ்தக் குறளோ?*
*எனவெனத் தியங்க, எழுந்தது இன்னூல்"*

எனச் செய்யுள் வடிவிலும் "மயக்கத்தாற் சிறைப்பட்டு மாழும் மக்களின் நெஞ்சத்தே புகுந்து அம்மக்களை உலகின் முன்னணிக்கு கொணரும் வீறுடைய இந்நூற்கு அமைந்த கட்டளைகளோ அளப்பெரிய ஆற்றல் வாய்ந்தவை. இக்கட்டளைகள் பரந்தாமன் பார்த்தனுக்கருளிய கீதையிலே தோன்றி, வள்ளுவனார் வழங்கிய திருக்குறட் பரப்பிலே தவழ்ந்து, தமிழ் நாட்டின் வீரத்தெய்வமாகிய பாரதியின் பாக்களுடன் தோழமை பூண்டு, இந்நூல் விடிவினிற் பெயர்ந்து

வருதலைச் சிந்தை செய்வார் கண்டு மகிழ்வார்" என வசனத்திலும் விதந்துரைத்துள்ளார். "பாரதியை இழந்த தமிழ்நாடு இந்நாள் வேண்டி நிற்கும் நூற்கள் எவையோ? அவைகள் இந்நூலின்கண் கட்டளைகளாக உயிர் பெற்றிருத்தலைப் புலவர்கள் கண்டு வாழ்த்துவர்" என நூலின் முக்கியத்துவத்தை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இக்குறிப்புகள் இந்நூல் குறித்ததாக மட்டுமின்றி நடேசய்யரின் ஆளுமையையும் அவரின் செயற்பாடுகளையும் புரிந்துகொள்ளத் துணைசெய்கின்றன. பாரதியின் செயற்பாடுகளோடு இணைத்து நடேசய்யரின் பங்களிப்புகளை ஆராய்வதற்கான வாயிலை அவை திறந்துள்ளன.

தமிழகத்திலும் இலங்கையிலும் நடேசய்யர் முன்னெடுத்துள்ள இதழியல் செயற்பாடுகளையும் சமூக, அரசியல் செயற்பாடுகளையும் அவதானிக்கும்போது, நடேசய்யருக்குமுன் இதழியல் களத்திலும் சமூக, அரசியல் தளத்திலும் தீவிரமாக இயங்கிய பாரதியின் தாக்கத்துக்கு அவர் நேரடியாகவும் மறைமுகமாகவும் உள்ளாகியிருப்பதைக் கண்டுகொள்ளமுடிகின்றது. பாரதி உயிருடன் வாழ்ந்த காலத்தில் தனது இளமைக் காலத்தைத் தமிழகத்தில் கழித்த கோ. நடேசய்யர், அக்காலத்திலேயே காலனித்துவ எதிர்ப்பாளராகவும் பத்திரிகை மற்றும் நூல் வெளியீட்டு முயற்சிகளில் ஈடுபடுபவராகவும் விளங்கியுள்ளார். அதனால் தமிழ்நாட்டில் இருக்கும்போதே நடேசய்யர் பாரதியின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்திருப்பார் எனலாம்.

நடேசய்யர் தனது பத்திரிகைகளிலும் எழுத்துகளிலும் பாரதியின் பாடல்களையும் சிந்தனைகளையும் பயன்படுத்தி வந்துள்ளதைக் காணமுடிகின்றது. உதாரணமாக, தனது பத்திரிகைகளில் திருக்குறட் பாக்களையும் ஔவையின் ஆத்திசூடி வரிகளையும் மகுட வாசகங்களாகப் பயன்படுத்திவந்த நடேசய்யர், தேசபக்தனின் மூன்றாவது இதழிலிருந்து (08.09.1924) வலது பக்க மேல் மூலையில்,

*"ஜாதி மதங்களைப் பாரோம் - உயர்*
*ஜன்மமித் தேசத்தி லெய்தினராயின்*
*வேதிய ராயினும் ஒன்றே - அன்றி*
*வேறுகுலத்தின ராயினு மொன்றே"*
*என்ற பாடலையும் இடது பக்க மேல் மூலையில்,*
*"செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்*
*தேன்வந்து பாயுது காதினிலே எங்கள்*
*தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு*
*சக்தி பிறக்குது மூச்சினிலே"*

என்ற பாடலையும் பிரசுரித்துள்ளதோடு அப்பாடல்களின்கீழ் சி.சு. பாரதி என இரண்டு பக்கங்களிலும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் தேசபக்தன் இரண்டாம் ஆண்டில் காலடி வைத்தபோது, "இராஜீய விஷயங்களிலோ பக்தன் தாய்நாட்டுப் பொதுமக்கள் கழகமான காங்கிரஸ் மகாசபையைப் பின்பற்றி நிற்பவன். சமூகச் சீர்திருத்தத்திலோவெனின் அவனது கொள்கைகள் மிகவும் முற்போக்கானவை. பிறப்பினால் மனித வர்க்கத்துள் ஏற்றத்தாழ்வுகளுளவெனக் கற்பிக்கும் மூடவைதீகர்களுக்குப் பக்தன் வைரி. சமத்துவம், சகோதரத்துவம் என்பதே அவனுடைய மணி மந்திரம். எம்மதத்தினராயினும் எச்சாதியினராயினும் எக்கட்சியினராயினும் யாவரும் பாரதத் தாயின் புதல்வர்களென்றே பக்தன் நினைத்துத் தொண்டியற்றுபவன்" (தேசபக்தன் - 02.09.1925) என்று கூறியுள்ளதோடு 'ஜாதி மதங்களைப் பாரோம்...' என்ற பாடலைக் குறிப்பிட்டு அதன்கீழ், "என்ற பாரதியாரின் அரியமொழிகளைத் தன்னிதயத்திறுத்தியுள்ளான்" எனத் தேசபக்தனின் கொள்கையை வெளிப்படுத்தியுள்ளார், நடேசய்யர். இக்கொள்கைப் பிரகடனம், பாரதியில் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டையும் பாரதியின் தாக்கத்துக்குத் தேசபக்தன் உட்பட்டிருந்தமையும் வெளிப்படுத்தி நிற்கிறது. நடேசய்யர், நீ மயங்குவதேன் என்ற நூலாக்கத்துக்கான தேவையையும் நோக்கத்தையும் பின்வருமாறு எடுத்துரைத்துள்ளார்:

"தற்காலம் நாட்டில் கொடுக்கப்பட்டுவரும் கல்விமுறையின் காரணமாயும், நாடு அரசியலில் அடிமைப்பட்டிருக்கும் காரணமாயும், நம் நாட்டு வாலிபர்கள், யாதொரு லட்சியமும் இல்லாமல் இன்னது செய்வதென்ற வகையறியாமல் சோம்பேறிகளாய்க் காலங்கழிக்கின்றனர்... உறக்கத்திலிருக்கும் வாலிபர்களைத் தட்டி எழுப்பி, ஊக்கம்பெற்று முன்னேறும்படிச் செய்யவே இச்சிறுநூல் எழுதப்பெற்றது. 'தன்னைக்கெடுப்பதும் தன் நினைவேயல்லாது வேறில்லை' என்பதை அவர்களுக்கு வற்புறுத்தித் தங்கள் வருங்கால உயர் அரியவாழ்வு தங்கள் தங்கள் கையிலேயே இருக்கிறதென்பதைக்காட்ட இந்நூல் பயன் பெறுமானால் அதுவே நான் எதிர்பார்க்கும் கைமாறாகும்."

மேற்படி வரையறையிலும் பாரதியின் தாக்கம் உள்ளுறைந்து இருப்பதைக் காணலாம். ஆங்கிலேயர் வழங்கிய கல்வியின் பிற்போக்குத்தனத்தை, அதன் அரசியலைப் பாரதி பல சந்தர்ப்பங்களில் அம்பலப்படுத்தியுள்ளார். சான்றாக,

*"ஆங்கிலம் பயில் பள்ளியுள் போகுநர்*
*முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும்*
*மூண்டிருக்கும் இந்நாளின் இகழ்ச்சியும்*
*பின்னர் நாடுஉறு பெற்றியுந் தேர்கிலார்*
*பேடிக்கல்வி பயின்றுழல் பித்தர்கள்"*

என்ற வரிகளை எடுத்துக்காட்டலாம். சுதேசிய விடுதலைக்கு, தேசிய உணர்வெழுச்சிக்கு எதிர்திசையிலே பயணித்த ஆங்கிலக் கல்விமுறையை முழுமையாக நிராகரித்த பாரதி, 'மடமைக் கல்வியில் மண்ணும் பயனில்லை' என அக்கல்விமுறையின் போதாமையை வெளிப்படுத்தியுள்ளார்.

"உனக்கு வயதாகவில்லையா?, உனக்கு வயதாகிவிட்டதா?, பொருளில்லையானா லென், ஊக்கமுடையோன் ஆக்கமுடையான், உண்மை நீங்கத் திண்மை நீங்கும், நில் ஓடாதே, கற்றுக்கொள் - செய் - செய்துபார், இன்றும் இன்னே செய், கெடுவான் கேடு நினைப்பான், அதிருஷ்டம்" எனும் பத்து அத்தியாயங்களில் பத்துக் கட்டளைகளை நீ மயங்குவதேன் எடுத்துரைத்துள்ளது. நூலின் இறுதியில் இப்பத்துக் கட்டளைகளைக் கடைப்பிடிப்பவன் வாழ்வில் எத்தகைய வெற்றி பெறுவான் என்பதை, 'திரு. இராமசாமி சேர்வையின் சரிதம்' என்ற தலைப்பில் விபரிக்கப்பட்டுள்ளது. அப்பகுதியின் தொடக்கத்திலும் இறுதியிலும் இடம்பெறும் குறிப்புகள், திரு. இராமசாமி சேர்வையின் சரிதம் உண்மை நிகழ்வுகளின் பதிவு என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றன. இந்நூலை திரு. இராமசாமி சேர்வையின் நினைவாக வெளியிடுவதற்கு அவரின் பிள்ளைகள் பொருளுதவி புரிந்தார்கள் என்பதையும் நடேசய்யர் பதிவுசெய்துள்ளார்.

இலக்கியத் தகவல்கள், தொன்மக் குறிப்புகள், உலக நிகழ்வுகள், சமகாலச் செய்திகள், தனிமனித வரலாற்றுச் சம்பவங்கள் முதலான பல்வேறு செய்திகளைச் சான்றாகக் கொண்டு, தான் எடுத்துரைக்க முனைந்த கட்டளைகளை நடேசய்யர் விபரித்துள்ளார். அவர் கையாண்டுள்ள எடுத்துரைப்பு உத்திகள், இலக்கு வாசகர்களிடம் தன் நோக்கங்களைக் கொண்டு சேர்க்கும் வகையிலும் வாசிப்போரின் மனப்பாங்கில் மாற்றங்களை ஏற்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளன. தொடக்கத்திலேயே வினாக்களை எழுப்பி, அவற்றுக்கான விடைகளை அடுக்கிச் செல்லுதல், அவ்விடைகளில் வரலாற்று நிகழ்வுகள், தனிமனிதர்களின் சாதனைகள், இலக்கியத் தகவல்கள் முதலானவற்றை மேற்கோள் காட்டுதல், எல்லோராலும் சாதிக்க முடியும் - சாதிக்க வேண்டும் என்ற நம்பிக்கையை விதைத்தல் முதலானவாறு விரியும் எடுத்துரைப்புகள், வாசகரை நூலின் பொருண்மையோடு ஒன்றிக்கச் செய்கின்றன. சான்றாக, 'உனக்கு வயதாகிவிட்டதா' என்ற அத்தியாயத்தின் ஆரம்பப் பகுதியை எடுத்துக்காட்டலாம்:

"நீ யேன் தயங்குகிறாய்? இதுவரை செய்த காரியங்கள் உனக்குத்தக்க பலன் கொடுக்கவில்லையா? உனது லட்சியம் கைகூடிவரவில்லையா? ஊக்கம் ஏன் குன்றிவிட்டது? நீ ஊக்கமில்லாதவனா? முன்னேறும் வழி உனக்குத் தெரியாதா? காரணந்தான் என்ன?

இனியும் நீ முயலலாம். முன்னேறலாம். முன்னேறுங்காலம் ஓடிப்போய்விடவில்லை. முயற்சி செய். தயங்காதே. எக்காரணம் பற்றியும் உன் முயற்சியைக் கைவிடாதே.

"நான் என்ன சிறுபிள்ளையா? எனக்கு வயதாகவில்லையா? ஆங்காலமெல்லாம் கழித்த பிறகு முயற்சி யென்னவிருக்கிறது? இதுவரை பட்டதெல்லாம் போதும்; படமுடியாது இனித்துயரம் 'காடு வா வா என வீடு போ போ என்கிறது. நான் முன்னேறியாகவேண்டுவதென்ன' என்று ஏன் புலம்புகிறாய்?

இளம் வயதில் நீ கஷ்டப்பட்டிருப்பாய். இனியும் கஷ்டப்படுவானேன் என்ற எண்ணம் உனக்கு ஏற்பட்டுவிட்டது போலும்! ஆம்! அது சகஜந்தான், உனக்கு வயதாகிவிட்டது என்கிறாயா? என்னவயதாகிவிட்டது? இது பொருளில்லாத வார்த்தை! எந்தக்காரியத்தை எவ்வயதில் செய்வதென்ற வரையறை ஏற்பட்டிருக்கிறதா? இன்னின்ன வயதில் இன்னின்ன முயற்சிகளைத்தான் செய்யவேண்டும் பிறசெய்யலாகாது என்ற நிர்ணயம் உனக்கு உண்டா?

உன் லட்சியத்தை யடையவோ, அல்லது உன் வாழ்க்கையை விருத்தி செய்யவோ வயது ஓர் எல்லையல்ல. இன்ன வயதிற்குமேல் இதைச்செய்யலாகாது என்று எல்லையிட்டு தடுத்திருப்பவர் ஒருவருமில்லை."

என வினாக்களை அடுக்கி, அவற்றுக்கான விடைகளையும் சுட்டிச்செல்லும் நடேசய்யர், இந்தியளவிலும் உலகளாவிய நிலையிலும் வயதைப் பொருட்படுத்தாது சாதித்தவர்கள் பற்றிய தகவல்களை எடுத்துக்காட்டி, உயர்வதற்கு - உழைப்பதற்கு வயது ஒரு பொருட்டில்லை என்பதை ஆதாரபூர்வமாக வெளிப்படுத்தியுள்ளார். சான்றாக,

"40 வயது வரையில் ஏழைக்குடியானவனாக உழுது கொண்டிருந்த 'கிராம் வெல்' என்பவர் யுத்த வீரனாகக் கிளம்பி இங்கிலாந்திற்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுக்க வில்லையா? 'நான் ஓர் ஏழைக்குடியானவன் நான் உழுது என் குடும்பத்தைக் காப்பாற்றினால் போதும்' என்று சும்மாவிருக்கவில்லையே! சமூகக்காரியம் வந்ததும் தன் வயதையும் தன் குடும்பத்தையும் அவர் மறந்து வெளிக்கிளம்ப வில்லையா? 45 வயதிற்றானே 'பிராங்கிளின்' என்பார் தத்துவ ஆராய்ச்சியில் ஊன்றிக் கவனம் செலுத்தினார். 46வது வயதிற்றானே

வாட்டர்லூ சண்டையை 'வெல்லிங்டன் பிரபுவும்' டிரபால்கர் சண்டையை 'நெல்சனும்' ஜயித்தார்கள். 'கல்வீனி' என்பவர் 52 வயதில் மின்சாரசக்தியைக் கட்டிவைக்கும் பாட்டரி என்னும் பெட்டியைக் கண்டு பிடித்தார்.

நமது தாய் நாட்டில் விடுதலைக்காகத் தற்காலம் பாடுபடும் வீரர்களை எடுத்துக்கொள். சிறைசென்றுள்ள 'அப்பாஸ் தயாப்ஜி' அவர்கள் வயதென்ன? 'மகாத்மாவின் வயதையும், அவருடைய சரீரநிலைமையையும் கவனித்திருக்கிறாயா? கனம் படேல் அவர்களுடைய வயதையும் சரீர நிலையையும் நீ அறியாயோ? பெசண்ட் அம்மையாரின் வயதென்ன? தனது கொள்கைகளும் லட்சியங்களும் நிறைவேறும் வண்ணம் பால்யர்களுக்குள்ள ஊக்கத்தைவிட அதிக ஊக்கம் கொண்டு உற்சாகத்துடன் இன்றும் உழைத்து வரவில்லையா?"

என நடேசய்யர் காட்டும் சான்றுகள், தம் வயதை எண்ணி இயங்காமல் இருக்கும் - இயங்கத் தயங்கும் நபர்களைத் தட்டியெழுப்பிச் செயலாற்றத் தூண்டுகின்றன. இந்திய விடுதலைப் போராட்டத்துடன் இணைந்த தகவல்கள், உணர்வுபூர்வமாகத் தாக்கம் செலுத்தக்கூடியனவாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

நடேசய்யர் தான் எடுத்துரைக்க முனையும் விடயத்துடன் இணைந்த திருக்குறள்களைப் பரவலாக எடுத்தாண்டுள்ளார். அவை நடேசய்யர் வெளிப்படுத்த விழையும் சுயமுன்னேற்றக் கருத்துகளைத் தமிழ்ச் சிந்தனை மரபுடன் இணைத்து வெளிப்படுத்தியுள்ளதுடன் அக்கருத்துகளைத் தமிழரின் வாழ்வியலறமாகக் காண்பதற்கு வழிசமைத்துள்ளன.

நடேசய்யர் இயன்றவரை பேசுவது போல எழுதும் உத்தியை நூல் முழுதும் கையாண்டுள்ளார். அந்த எடுத்துரைப்பு முறை ஒவ்வொரு அத்தியாத்தையும் உரையாடல் போலவும், பிரசங்கம் போலவும் மாற்றியமைத்துள்ளன. சாதாரண உரையாடல்களில் வெளிப்படும் பழமொழிகள், சொலவடைகள் முதலானவற்றை யதார்த்தம் குன்றாமல் பயன்படுத்தியுள்ளார். இந்த உத்திகள் நூலின் செய்திகளை வாசகருக்கு நெருக்கமாக்குகின்றன. இந்நூலில் நடேசய்யர் முன்வைத்துள்ள சுயமுன்னேற்றம், தனிமனித நிலையில் மட்டுப்பட்டதாக அமையவில்லை.


பொருளடக்கம்


| அத்தியாயம் | பக்கம் |
|---|---|
| 1. உனக்கு வயதாகவில்லையா? | 5 |
| 2. உனக்கு வயதாகிவிட்டதா? | 18 |
| 3. பொருளில்லையானு லென். | 19 |
| 4. ஊக்கமுடையோன் ஆக்கமுடையான். | 32 |
| 5. உண்மை நீக்கத் திண்மை நீங்கும். | 42 |
| 6. கில் ஓடாதே. | 53 |
| 7. கற்றுக்கொள் - செய் - செய்துபார். | 61 |
| 8. இன்றும், இன்னே செர். | 71 |
| 9. கெடுவான் கேடு நினைப்பான். | 77 |
| 10. அதிருஷ்டம். | 83 |
| 11. திரு. இராமசாமி சரிதம். | 87 |


Image source - noolaham.net

தனிமனித முன்னேற்றத்தைச் சமூக முன்னேற்றத்தின் ஓர் அங்கமாக முன்நிறுத்தியுள்ளதுடன் தனிமனித முன்னேற்றம் என்பதே சமூக முன்னேற்றத்தை அவாவியதாக அமைய வேண்டும் என்பதை எடுத்துரைத்துள்ளது. சுயமுன்னேற்றத்துக்கான ஒவ்வொரு கட்டளையும் சமூக முன்னேற்றத்துடன் இணைத்தே நடேசய்யர் வியாக்கியானம் செய்துள்ளார். சமூக முன்னேற்றத்தை மறுத்த தனிமனித முன்னேற்றம் பொருளற்றது - பயனற்றது என்பது அவரின் நிலைப்பாடாக இருந்துள்ளது. சான்றாக, "சுயநலத்தின் பொருட்டா அல்லது உன் சமூக நலத்தின் பொருட்டா உன் அறிவை உபயோகிக்கப் போகிறாய்? உன்நாடோ அல்லது உனது சமூகமோ விருத்தியடையுமானால் அவற்றினுள் ஒருவனான நீயும் விருத்தியடையமாட்டாயோ! ஆகவே உயிருள்ளளவும், உன்னாலியன்றளவும் உன்கடமையைச் செய்?" என்ற குறிப்பைச் சுட்டிக்காட்டலாம். இக்குரலின் சாரம் ஒவ்வொரு அத்தியாயத்திலும் வெவ்வேறு விதங்களில் ஒலித்துள்ளது. சுயமுன்னேற்றத்தை வலியுறுத்தும் நூல்களானவை இம்மைப் பயன், மறுமைப்பயன், இம்மை மற்றும் மறுமைப் பயன் ஆகிய மூன்றுவித நோக்கங்களை மைய இழையாகக் கொண்டுள்ளன. இவற்றுள் நடேசய்யர் இம்மை - இவ்வுலக வாழ்வின் முன்னேற்றத்துக்கான சிந்தனைகளையே இந்நூலில் வெளிப்படுத்தியுள்ளார். அவரின் சமூகநிலைப்பட்ட நோக்கின் பிரதிபலிப்பாக அது அமைந்துள்ளது.

முடிவாக, தொகுத்து நோக்குகின்றபோது, சுயமுன்னேற்றத்துக்கான வழித்தடத்தை வரைய முயன்றுள்ள இந்நூல், சுயமுன்னேற்றம் என்பது தனிமனிதரோடு சுருங்கியது இல்லை. அது சமூக முன்னேற்றத்தையும் உள்ளடக்கியது என்ற விரிந்த பார்வையை - உயர்ந்த சிந்தனையை அழுத்தமாக வலியுறுத்தியுள்ளதுடன் காலனியம் முன்னெடுத்த அடக்குமுறையையும் சுரண்டலையும் எதிர்ப்பதற்கும் காலனியம் கட்டியெழுப்பிய அடிமை மனப்பாங்கை அகற்றுவதற்கும் எல்லாவித இக்கட்டுகளையும் தாண்டி, வாழ்வில் உயர்வதற்கும் தேவையான சிந்தனைகளைச் செறிவாக எடுத்துரைத்துள்ளதைக் காணமுடிகிறது. அவை காலனியக் காலத்துக்கு மட்டும் உரியனவாகவன்றி எக்காலத்திற்கும் பொருத்தமானவையாக அமைந்துள்ளன.

இலங்கையில், குடியேற்றவாத காலத்திலிருந்துதான் நிலப்படங்களும் வரைபடங்களும் நமக்குக் கிடைக்கின்றன. குறிப்பாக ஒல்லாந்தர் காலத்தைச் சேர்ந்தவை இலகுவாகக் கிடைக்கின்றன. எழுத்துமூல ஆவணங்கள், புழங்கு பொருட்கள், ஓவியங்கள், தொல்லியற் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றையும் இவற்றைப்போன்ற இன்னோரன்ன பழைய நிலப்படங்கள், வரைபடங்கள் வரலாற்றுத் தகவல்கள் என்பனவும் இங்கு பொதிந்துள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த நிலப்படங்களும் வரைபடங்களும் இவற்றுள் அடங்கும். எனினும், யாழ்ப்பாணப் பிரதேசத்தின் வரலாற்றுத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இவற்றைப் பயன்படுத்துவது குறைவாகவே உள்ளது. வரலாற்றுத் தகவல்களை வழங்குவதில் குடியேற்றவாதக் கால நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதாகவும், யாழ்ப்பாணத்தின் வரலாற்றுத் தகவல்களை நிலப்படங்கள் வரைபடங்களிலிருந்து விளக்குவதாகவும், நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் தகவல் உள்ளடக்கங்கள் குறித்து ஆராய்வதாகவும் 'யாழ்ப்பாணப் பிரதேசத்தின் குடியேற்றவாதக் காலத்து வரலாற்றுத் தகவல் மூலங்களாக நிலப்படங்களும் வரைபடங்களும்' என்ற இத்தொடர் அமையவுள்ளது.

# லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில் வலிகாமம் - தெல்லிப்பழை


**இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்**



இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் அவர்கள் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கச் சூழல் துறையில் விஞ்ஞான இளநிலைப் பட்டத்தையும் (B.Sc. (BE)) பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் கட்டடக்கலையில் விஞ்ஞான முதுநிலைப் பட்டத்தையும் (M.SC. (Arch)) பெற்றார். அத்துடன் இலங்கைக் கட்டடக்கலைஞர் சங்கம் (AIA (SL)), பிரித்தானியக் கட்டடக் கலைஞர்களின் அரச சங்கம் (RIBA) ஆகியவற்றில் பட்டயம் பெற்ற உறுப்பினராவார்.
தமிழ் விக்கிப்பீடியா தொடங்கிய காலத்திலிருந்து அதன் முதற் பயனராகப் பங்களிப்புச் செய்து வருகின்றார். தமிழ் விக்கிப்பீடியாவில் 4500இற்கும் மேற்பட்ட கட்டுரைகளைத் தொடங்கியுள்ளதுடன், மேலும் பல ஆயிரம் கட்டுரைகளின் விரிவாக்கத்திலும் பங்களிப்புச் செய்துள்ளார்.
தமிழ் விக்கிப்பீடியாவில் இவரது பங்களிப்புக்காக கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2015 ஆம் ஆண்டின் வாழ்நாள் சாதனையாளருக்கான இயல்விருது பெற்றுக்கொண்டார். தொடர்ந்து தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் ஆனந்தவிகடன் இதழ் வழங்கும் நம்பிக்கை விருதுகளில் 2016 ஆம் ஆண்டுக்கான சிறந்த 10 மனிதர்களுள் ஒருவராக தெரிவு செய்யப்பட்டு விருதை பெற்றுள்ளார்.

லெயுசிக்காமின் வலிகாமப் பிரிவைக் காட்டும் நிலப்படத்தில் மல்லாகம் கோவிற்பற்றுத் தொடர்பாகக் காணப்படும் தகவல்களையும், அவற்றோடு தொடர்புடைய வரலாற்றுக் குறிப்புகளையும் சென்ற கட்டுரையில் பார்த்தோம். இந்தக் கட்டுரையில், தெல்லிப்பழைக் கோவிற்பற்றுத் தொடர்பாக நிலப்படத்திலுள்ள விவரங்களை ஆராயலாம்.

தெல்லிப்பழைக் கோவிற்பற்று, யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடக்குக் கரையோரத்தில் அமைந்துள்ளது. இது தெல்லிப்பழை, மாவிட்டபுரம், பழை, வீமன்காமம், கட்டுவன் என ஐந்து துணைப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கோவிற்பற்றின் வடக்குக் கரையோரமாகக் மேற்கிலிருந்து கிழக்காகத் தெல்லிப்பழை, மாவிட்டபுரம், பழை ஆகிய மூன்று துணைப்பிரிவுகளும் வரிசையாக அமைந்துள்ளன. கிழக்கு எல்லையை அண்டித் தெற்கில் கட்டுவனும் அதற்கு வடக்கே வீமன்காமமும் உள்ளன. முதலில் குறிப்பிட்ட மூன்று பிரிவுகளும் கடல் முகப்புகளைக்




**படம்-1: லெயுசிக்காமின் வலிகாமத்தைக் காட்டும் நிலப்படத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தெல்லிப்பழைக் கோவிற்பற்றுப் பகுதி.**

கொண்டவை. இறுதி இரண்டும் நிலத்தால் சூழப்பட்டவை (படம்1).

## எல்லைகள்

தெல்லிப்பழைக் கோவிற்பற்றின் வடக்கு எல்லையாக, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் உள்ள பாக்கு நீரிணை அமைந்துள்ளது. கிழக்கில் மயிலிட்டியும்; தெற்கில் மல்லாகமும்; மேற்கில் மல்லாகம், பண்டத்தரிப்பு ஆகிய கோவிற்பற்றுகளும் எல்லைகளாக அமைந்துள்ளன (படம்2).

நிலப்படம் காட்டும் தெல்லிப்பழைக் கோவிற்பற்றின் பகுதிகள் தற்காலத்தில் தெல்லிப்பழைப் பிரதேசச் செயலர் பிரிவுக்குள்ளும், உள்ளூராட்சி நிர்வாக முறைமையில் இன்றைய வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் எல்லைக்குள்ளும் அடங்குகின்றன.

## வீதிகள்

லெயுசிக்காமின் நிலப்படத்தின்படி, தெல்லிப்பழையில் மூன்று வீதிகள் சந்திப்பதைக் காண முடிகிறது. ஒன்று யாழ்ப்பாண நகரத்திலிருந்து வடக்கு நோக்கித் தெல்லிப்பழை வரை வருகிறது. அடுத்தது, தெல்லிப்பழையிலிருந்து கிழக்குப் பக்கமாக வல்லையூடாக வடமராட்சிக்குச் செல்லும் வீதி. மூன்றாவது, தெல்லிப்பழையிலிருந்து மேற்குப் பக்கமாகப் பண்டத்தரிப்புக்குச் செல்கிறது. இவை சந்திக்கும் இடத்தை இன்றைய தெல்லிப்பழைச் சந்தியுடன் அடையாளம் காணலாம். மேற்படி மூன்று வீதிகளூடாகவே தெல்லிப்பழையில் அமைந்த யாழ் குடாநாட்டின் தலைமைக் கோவிற்பற்றுத் தேவாலயம் குடாநாட்டின் பிற தேவாலயங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. தற்காலத்தில் முக்கிய வீதிகளாகவுள்ள தெல்லிப்பழை - காங்கேசந்துறை வீதியும் கரையோரமாகச் செல்லும் புன்னாலை பருத்தித்துறை வீதியும் நிலப்படத்தில் இல்லை.

## கட்டடங்கள்

ஏனைய கோவிற்பற்றுகளில் உள்ளது போலவே தெல்லிப்பழைக் கோவிற்பற்றிலும் தேவாலயத்தையும் அதனோடிணைந்த தேவாலய இல்லத்தையும் நிலப்படம் குறித்துக் காட்டுகிறது. அத்துடன், கரையோரத்தை அண்டி மடங்கள் போன்ற அமைப்புகள் இருப்பதையும் நிலப்படம் காட்டுகிறது.

### தேவாலயமும் தேவாலய இல்லமும்

போர்த்துக்கேயர் காலத்திலும் ஒல்லாந்தர் காலத்திலும் தெல்லிப்பழைத் தேவாலயமே யாழ்ப்பாணக் குடாநாட்டின் தலைமைத் தேவாலயமாக இருந்தது (படம்3). நிலப்படத்தில் இது மூன்று முக்கியமான வீதிகள் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ளது. ஒல்லாந்தர்காலத் தொடக்கத்தில் தேவாலயமும் இல்லமும் எவ்வாறிருந்தன என்பதைப் பற்றி போல்தேயஸ் பாதிரியார் விளக்கியுள்ளார். தெல்லிப்பழைத் தேவாலயம் நல்ல இட வசதியுடன் கூடிய பெரிய கட்டடம் என்றும் அதன் நடுவே சிறப்பாகக் கட்டப்பட்ட இரண்டு தூண்வரிசைகள் காணப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.[1] இது போர்த்துக்கேயக் கட்டடக்கலைப் பாணியில் மூன்று




**படம்-2: லெயுசிக்காமின் வலிகாமத்தைக் காட்டும் நிலப்படத்தைத் தழுவி வரையப்பட்ட தெல்லிப்பழைக் கோவிற்பற்றின் படம்.**

பகுதிகளாக அமைந்த மண்டபத்தைக் கொண்டது என்பது தெளிவாகிறது.

போர்த்துக்கேயர் காலத்தில் யேசுசபையைச் சேர்ந்த பாதிரியார்களால் கட்டப்பட்ட தேவாலய இல்லம் கம்பீரமானது என்றும், அங்கே சிறப்பான திராட்சை, இந்தியாவைச் சேர்ந்த பல்வேறு பழ மரங்கள், நல்ல தண்ணீர்க் கிணறுகள் ஆகியவற்றுடன் கூடிய மனதுக்கு இதமான தோட்டமும் வளவும் இருந்தது எனவும் அவர் கூறுகிறார். தெல்லிப்பழைத் தேவாலயத்தை அண்டிப் பெரிய அரங்கம் இருந்ததாகவும், போர்த்துக்கேயப் பாதிரியார்கள் கட்டிய இவ்வரங்கத்தில் விசேட நாட்களில் சமயம்சார்ந்த நாடகங்களை நிகழ்த்திக் காட்டியதாகவும் தெரிகிறது.[2]

பிரித்தானியர் காலத்தில் தெல்லிப்பழை அமெரிக்க மிசன் மதப் பணியாளருக்கு ஒதுக்கப்பட்டது. 18 ஆம் நூற்றாண்டில் அவர்கள் கையேற்றுத் திருத்திய முதல் இரண்டு ஒல்லாந்தத் தேவாலயங்களில் தெல்லிப்பழைத் தேவாலயமும் ஒன்று.[3] மற்றது வட்டுக்கோட்டை என ஏற்கெனவே முன்னைய கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டோம். தெல்லிப்பழையில் ஒல்லாந்தர்காலத் தேவாலயமும் இல்லமும் அமைந்திருந்த இடத்திலேயே முன்னர் அமெரிக்க மிசன் நிறுவிய யாழ்ப்பாணத்தில் மிகப் பழைய பாடசாலைகளுள் ஒன்றான யூனியன் கல்லூரியும் அமெரிக்க மிசன் தேவாலயமும் இன்றும் காணப்படுகின்றன.

## மடங்கள்

நிலப்படத்தில் தெல்லிப்பழைக் கோவிற்பற்றின் கடற்கரை ஓரமாகவுள்ள மூன்று இடங்களில் மடங்களைக் குறிக்கும் குறியீடுகள் காணப்படுகின்றன. ஒன்று இளவாலைத்துறை எனப் பெயர் குறித்துள்ள இடத்திலும், மற்றது பட்டிக்குடா என்ற இடத்திலும், மூன்றாவது கீரிமலைக்குக் கிழக்கே ஓரிடத்திலும் காணப்படுகின்றன. இவை தவிர, வலிகாம நிலப்படத்தில் வரித்தூண்டல் (*Wari Toendel*), பட்டிக்கடவை எனக் குறித்துள்ள இடங்களில் குளங்களும் அருகே மரங்களும் இருப்பதுபோல் காட்டியிருந்தாலும், யாப்பாணக் குடாநாடு முழுவதையும் காட்டும் நிலப்படத்தில் இவ்விரண்டு இடங்களிலும்கூட மடங்கள் குறிக்கப்பட்டுள்ளன. இளவாலைத்துறை, பட்டிக்குடா, வரித்தூண்டல், பட்டிக்கடவை ஆகியவை படகுத்துறைகள் என்பதில் ஐயமில்லை. இவை தெல்லிப்பழைத் துணைப்பிரிவுக்குள் காணப்படுகின்றன. இப்போதும் அவற்றுட் சில மீன்பிடித்துறைகளாகப் பயன்படுகின்றன. முற்காலத்தில் இந்தியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையேயான பயணிகள் போக்குவரத்துக்கும் இத்துறைகள் பயன்பட்டிருக்கக்கூடும். லெயுசிக்காமின் நிலப்படங்களில் பல இடங்களில் காட்டியுள்ளதுபோல் மேற்காட்டிய இடங்களில் உள்ள மடங்களும் பயணிகளினதும் மீனவர்களினதும் தேவைக்கானவையே எனலாம்.

ஐந்தாவதாக ஒன்று அம்பலம் என்ற குறிப்புடன் காணப்படுகிறது. இது மாவிட்டபுரம் துணைப்பிரிவுக்குள் கரையோரமாக அமைந்துள்ளது. லெயுசிக்காமின் வலிகாமத்தைக் காட்டும் நிலப்படத்தில் இதற்கான குறியீடும் பெயரும் தெளிவாக இல்லை. ஆனால், இத்தொகுப்பிலுள்ள இன்னொரு நிலப்படத்தில் ‘அம்பலம்’ என்ற பெயர் தெளிவாக உள்ளது. அவ்விடத்தில் மடத்தைக் குறிக்கும் சிறிய கட்டடமும் அதனருகே ஒரு மரமும் குறியீடாகக் காட்டப்பட்டுள்ளன. இந்த அம்பலம் இவ்விடத்தில் ஏன் கட்டப்பட்டது என்பது தெரியவில்லை. இது கீரிமலைக்கு அருகாமையில் உள்ளது. கீரிமலையில் புகழ்பெற்ற பழைய சிவன்கோவில் இருந்துள்ளது.

**போர்த்துக்கேயர் காலத்திலும் ஒல்லாந்தர் காலத்திலும் தெல்லிப்பழைத் தேவாலயமே யாழ்ப்பாணக் குடாநாட்டின் தலைமைத் தேவாலயமாக இருந்தது (படம்3). நிலப்படத்தில் இது மூன்று முக்கியமான வீதிகள் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ளது. ஒல்லாந்தர்காலத் தொடக்கத்தில் தேவாலயமும் இல்லமும் எவ்வாறிருந்தன என்பதைப் பற்றி போல்தேயஸ் பாதிரியார் விளக்கியுள்ளார். தெல்லிப்பழைத் தேவாலயம் நல்ல இட வசதியுடன் கூடிய பெரிய கட்டடம் என்றும் அதன் நடுவே சிறப்பாகக் கட்டப்பட்ட இரண்டு தூண்வரிசைகள் காணப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.**




**படம்-3: போல்தேயஸ் பாதிரியாரின் நூலில் உள்ள தெல்லிப்பழைத் தேவாலயத்தையும் தேவாலய இல்லத்தையும் காட்டும் படம்.**

*அத்துடன், இன்றும் இப்பகுதியில் உள்ள கேணி மிகப் பழங்காலத்திலிருந்தே புனிதமானது என்று கருதப்பட்டது. அக்காலத்திலேயே அக்கேணியில் நீராடுவதற்கு யாத்திரீகர்கள் வருவதுண்டு. பிரித்தானியர் காலத்தில் இப்பகுதியில் பல யாத்திரீகர் மடங்கள் நிறுவப்பட்டன. உள்நாட்டுப் போர்க்காலத்தில் அவற்றுட் பெரும்பாலானவை அழிந்துவிட்டன. நிலப்படத்தில் குறித்துள்ள அம்பலம் மேலே குறிப்பிட்ட கோவிலுடனும் கேணியுடனும் தொடர்புடையதா என்பது ஆய்வுக்குரியது. இங்கே எடுத்துக்கொண்ட நிலப்படம் வரையப்பட்ட காலத்தில் கீரிமலைச் சிவன்கோவில் ஒரு யாத்திரைத்தலமாக இருந்திருக்க வாய்ப்பில்லை. கேணியில் குளிப்பதற்காக மக்கள் வருவது தொடர்ந்திருக்கக்கூடும். ஆனால், இப்பகுதியில் கேணி எதையும் நிலப்படம் காட்டவில்லை.*

**பட்டிக்குடா**

*இந்தக் கட்டுரைத் தொடரின் முன்னைய கட்டுரை ஒன்றில் தொலமியின் நிலப்படத்தைப் பற்றி ஆராய்ந்தபோது அந்நிலப்படத்தின் வடகிழக்குக் கரையோரத்தில் பட்டிக்குடா என்னும் ஓரிடத்தைக் காட்டியிருப்பது பற்றிக் குறிப்பிட்டோம். அத்துடன், சில ஆய்வாளர்கள் தொலமியின் நிலப்படத்தில் வடகிழக்குக் கரையில் காட்டியுள்ள இடங்கள் உண்மையில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடக்குக் கரையில் உள்ளவையே என்ற கருத்தை முன்வைத்திருப்பதையும் எடுத்துக்காட்டினோம். எனவே, தொலமியின் நிலப்படம் காட்டும் பட்டிக்குடா, லெயுசிக்காமின் நிலப்படம் காட்டும் பட்டிக்குடாவுடன் பொருந்துமா அல்லது அவை ஒரே பெயரைக் கொண்ட இருவேறு இடங்களா என்பதை ஆராயவேண்டும்.*

**காங்கேசந்துறைத் திட்டம்**

*நிலப்படத்தின்படி அக்காலத்தில் காங்கேசந்துறைக்குப் பெரிய முக்கியத்துவம் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. பிரித்தானியர் காலத்தில் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டதாலும், தொடர்வண்டிப்பாதை காங்கேசந்துறை வரை சென்றதாலும், பின்னர் சீமெந்துத் தொழிற்சாலை அமைக்கப்பட்டதாலும் முக்கியத்துவம் பெற்ற இவ்வூர், போர்த்துக்கேயர் காலத்தில் ஒரு குறிப்பிடத்தக்க குடியேற்றமாக இல்லாததாற்போலும் இவ்வூரின் பெயரில் ஒரு துணை நிர்வாகப் பிரிவுகூட உருவாக்கப்படவில்லை.*

*ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின்னர் தலைமையிடத்தை யாழ்ப்பாண நகரத்திலிருந்து*

காங்கேசந்துறைக்கு மாற்றுவது தொடர்பில் சிந்தித்ததாகவும், அங்கே கோட்டையொன்றைக் கட்டுவதற்கான ஆரம்ப வேலைகள் இடம்பெற்றுப் பின்னர் கைவிடப்பட்டது என்றும், அதன் எச்சங்கள் இன்னும் இருக்கின்றன என்றும் ஆர்.எல். புரோகியர் உள்ளிட்ட சில ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டது பற்றி இத்தொடரின் முன்னைய கட்டுரையொன்றில் குறிப்பிட்டோம்.[4] லெயுசிக்காமின் வலிகாமத்தைக் காட்டும் நிலப்படத்திலும் காங்கேசந்துறையை அண்டிய கடலுக்குள் நீண்டிருக்கும் சில கட்டுமானங்களைக் குறித்துள்ளனர். இதன் அருகிலுள்ள குறிப்பையும் வேறு சில நிலப்படங்களிலுள்ள குறிப்புகளையும் ஒப்பிட்டு ஆராய்ந்ததில், இதற்கு 'காங்கேயந்துறைக்கான பழைய திட்டம்' (Oud Project tot Cangeantoerre) எனப் பொருள்கொள்ள முடியும். 'பழைய திட்டம்' என்ற குறிப்பிலிருந்து அவ்விடத்தில் ஏதோவொரு கட்டுமானம் தொடங்கப்பட்டுப் பின்னர் கைவிடப்பட்டது எனக் கொள்ளலாம் என்றே தோன்றுகிறது. ஆனால், புரோகியர் முதலியோர் கருதுவதுபோல் இது ஒரு கோட்டையா அல்லது வேறேதாவது கட்டுமானமா என உறுதியாகச் சொல்ல முடியாது. இந்தக் கட்டுமானத்தின் ஒரு பகுதி தெல்லிப்பழைக் கோவிற்பற்றை அண்டியும் எஞ்சிய பகுதி மயிலிட்டிக் கோவிற்பற்றை அண்டியும் காணப்படுகின்றன.

## கீரிமலை

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உயரமான பகுதி கீரிமலையே என்பது அறிந்ததே. இவ்விடத்தை உயரக்கோடுகள் போன்ற குறியீடுகளுடன் நிலப்படத்தில் காட்டியுள்ளனர். அருகே கீரிமலை (Kirimale) என்று பெயரும் குறித்துள்ளனர். இவ்விடம் குடாநாட்டின் மிக உயரமான பகுதி என்பதாலேயே இதைச் சிறப்பாகக் குறித்துக் காட்டியுள்ளனர் எனலாம். இந்நிலப்படம் வரையப்பட்ட காலத்தில் சைவ சமயம்சார்ந்த செயற்பாடுகளுக்கு ஒல்லாந்தர் தடை விதித்திருந்தமையால் இங்கே முன்னர் இருந்த கீரிமலைச் சிவன்கோவில், புனிதக்கேணி என்பவை தொடர்பாக ஒல்லாந்தர் இவ்விடத்துக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கமாட்டார்கள் என்பது தெளிவு.

## குளங்கள்

நிலப்படத்தின்படி தெல்லிப்பழைக் கோவிற்பற்றில் 15 குளங்கள் உள்ளன. இவற்றுள் 14 குளங்கள் தெல்லிப்பழைத் துணைப்பிரிவுக்குள்ளும் எஞ்சிய ஒரு குளம் கட்டுவன் துணைப்பிரிவுக்குள்ளும் உள்ளன. தெல்லிப்பழைத் துணைப்பிரிவிலுள்ளவற்றுள் மட்டிவளைக் குளம், உட்டுச்செல்லக் குளம், பண்டுவண்ணைக் குளம், கர்த்தவயல் குளம், வாரித்தூண்டல், பட்டிக்கடவை, வெட்டுக் குளம், கெச்சேரிக் குளம், வலித்துணையன் குளம், சிலுகெல் குளம், பள்ளனவெட்டுவான் குளம், முலாய்க்குளம் ஆகிய 12 குளங்கள் சிறப்புப் பெயர்களைக் கொண்டவை.

இவற்றுடன் அத்துணைப் பிரிவுக்குள் ஒரு கேணியையும் ஒரு குளத்தையும் பொதுப்பெயர்களிலேயே குறித்துள்ளனர். கட்டுவன் துணைப் பிரிவுக்குள் உள்ள குளம் அவ்வூர்ப் பெயரைத் தழுவிக் கட்டுவனில் குளம் என்று அழைக்கப்படுகிறது.

இப்பகுதியில் காணப்படும் தற்காலக் குளங்களின் பட்டியலிலுள்ள பெயர்களுடன் ஒப்பிடும்போது மட்டிவளைக் குளமும் பண்டுவண்ணைக் குளமும் மட்டுமே அதே பெயரில் இன்றுவரை தொடர்வதைக் காண முடிகிறது.5 இவற்றைவிட நிலப்படத்திற் காணும் உட்டுச் செல்லக் குளம் (Uttoe chella coelam), முலாய்க் குளம் (Moelaay coelam) ஆகிய குளங்கள் முறையே உச்சலைக் குளம், முல்லைக் குளம் ஆகியவற்றுடன் அமைவிடப் பொருத்தத்தையும், பெயர்களில் ஒலிப்பு ஒற்றுமையையும் கொண்டுள்ளன. எனவே, நிலப்படத்தின் உட்டுச் செல்லக் குளம், முலாய்க் குளம் என்பனவே முறையே தற்போதைய உச்சலைக் குளம், முல்லைக் குளம் ஆகியவை என்று கொள்ள முடியும்.

## குறிப்புகள்


1. Phillipus Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon", trans. Pieter Brohier, The Ceylon Historical Journal, vol. VIII nos. 14 (July 1958April 1959), 318.

2. Phillipus Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon", 318.

3. Miron Winslow, Memoirs of Mrs. Harriet L. Winslow (New York: American Tract Society, 1840), 192.

4. R. L. Brohier, "Ceylon in Maps," The Journal of the Dutch Burgers Union, vol XXXII, no. 2 (October 1942): 80.

5. விவசாய அபிவிருத்தித் திணைக்களப் பதிவுகளின்படி.

‘அரசறிவியல் கலைக்களஞ்சியம்’ (Encyclopedia Of Political Science) என்னும் தலைப்பில் அமையும் இத் தொடரில் அரசியல் கோட்பாடுகள் (Political Theories), அரசியல் விஞ்ஞான எண்ணக்கருக்கள் (Concepts) சமகால அரசியல் விவாதங்கள் என்பன குறித்த கட்டுரைகள் வெளியிடப்படவுள்ளன. பொதுவெளியில் (Public Sphere) நடைபெறும் அரசியல் விவாதங்களை ஆரோக்கியமுடையனவாக ஆக்குவதற்கு, அரசியல் கருத்தாக்கங்கள் குறித்த தெளிவான புரிதலை ஏற்படுத்துவதும், சமூகத்தின் பல மட்டங்களிற்கும் அரசியல் அறிவை எடுத்துச் செல்வதும் அவசியமான பணி என நாம் உணருகின்றோம். தமிழ் அரசியல் சூழலில் நிலவும் கோட்பாட்டு வறுமையை (Theoretical Poverty) நீக்குவதற்கு இக் கட்டுரைத் தொடர் உதவும் என்பது எமது நம்பிக்கை. தமிழ்ச் சமூகத்தில் அறிவியல் மூலதனம் (Intellectual Capital) ஒரு சிறு மேட்டிமைக் குழுவிடம் (Elite Group) குவிந்திருப்பதை நீக்கி, அறிவுச் செல்வத்தின் மறுபங்கீட்டின் மூலம் சமூக விடுதலை, ஜனநாயக மயப்படுத்தல், அடிமட்டத்தினர் அதிகாரத்தில் பங்கேற்றல் ஆகிய இலக்குகளை அடைதல் இத் தொடரின் நோக்கமாகும்.

*ஆங்கில மூலம்: நியூட்டன் குணசிங்க*

# 1983 கறுப்பு யூலை பேரழிவின் பின்னரான மே தினம்: இலங்கையின் இனக்குழுமப் பிரச்சினைக்கான தீர்வு யாது?

**கந்தையா சண்முகலிங்கம்**



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த ‘இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்’ என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.
‘நவீன அரசியல் சிந்தனை’, ‘கருத்தியல் எனும் பனிமூட்டம்’, ‘இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்’ ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

1984 மே 1 ஆம் திகதிய *'Lanka Guardian'* இதழில் நியூட்டன் குணசிங்க அவர்கள் *'May Day after the July Holocaust'* என்னும் தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதினார். கறுப்பு யூலை 1983 இன் பின்னரான முதலாவது மே தினத்தின்போது தமது மனதில் தோன்றிய கருத்துகளை நியூட்டன் குணசிங்க அவர்கள் இக்கட்டுரையில் முன்வைத்தார். இலங்கையின் இனக்குழுமப் பிரச்சினைக்கான தீர்வு யாது? என்பதை ஆராயும் இக்கட்டுரை இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை பற்றிய கோட்பாட்டு ஆய்வில் மிக முக்கியமான ஒரு பங்களிப்பாகும். இக்கட்டுரையின் தமிழாக்கம், இது எழுதப்பட்டு ஏறக்குறைய 42 ஆண்டுகள் கழிந்தபின் வெளியிடப்படுகிறது.

## கோட்பாட்டுக் குழப்பம்

1983 யூலை பேரழிவுக்குப் பின்னரான காலத்தில் இலங்கையின் இடதுசாரி ஜனநாயக சக்திகள், தேசிய இனப்பிரச்சினை தொடர்பாகக் கோட்பாட்டுக் குழப்பத்திற்கு (*Theoretical Disarray*) உள்ளாகியிருப்பதாகக் குறிப்பிடும் நியூட்டன் குணசிங்க அவர்கள் கட்டுரையின் முதற் பந்தியிலேயே தெளிவான முறையில் தமது வாதத்தை முன்வைக்கிறார். இனி அவரது கட்டுரைக்குள் செல்வோம்.

இலங்கையின் அண்மைக்கால வரலாற்றில் மிகமுக்கியமான திருப்புமுனையாக அமைந்த வரலாற்று நிகழ்வு என்றால் அது 1983 இன் தமிழருக்கு எதிரான யூலை வன்முறைகள் தான் (*AntiTamil Riots of July 83*) என்பது இப்போது தெளிவாகியுள்ளது. யூலை 83க்கு முன்பு இலங்கைச் சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட வகைச் சமநிலை (*Particular Equilibrium*) இருந்து வந்தது. அந்தச் சமநிலை முற்றாகவே குலைக்கப்பட்டுவிட்டது. அச்சமநிலை மீண்டும் உருவாகும் என நாம் எதிர்பார்க்க முடியாது. புதிய சமநிலை இன்றும் உருவாகவில்லை. பொதுமக்கள் மத்தியில் இன்று இனத்துவ உணர்வுகள் (*Ethnic Conscious ness*) தூண்டப்பட்டுள்ளன. அவை கொதிநிலையில் உள்ளன. இலங்கையின் இடதுசாரி ஜனநாயக சக்திகள் தெளிவற்றுக் குழப்பத்தில் உள்ளன. பழைய இடதுசாரிகள் (*Old Left*), இலங்கையில் இனப்பிரச்சினை என ஒன்றும் கிடையாது; எல்லாவற்றுக்கும் பொருளாதாரப் பிரச்சினைதான் காரணம் என்று போதனை செய்வதோடு பொருளாதார வர்க்கக் கோஷங்களை உரத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

## வரலாற்றுத் தருணம்

இலங்கையில் இனப்பிரச்சினை என ஒன்று கிடையாது, யாவற்றுக்கும் அடிப்படையான பொருளாதாரப் பிரச்சினையிலேயே கவனம் செலுத்த வேண்டும் என்ற வாதம் தவறானது என்பதை அழுத்திக் கூறும் நியூட்டன் குணசிங்க அவர்கள், 1983க்கு பின்னரான கட்டம் முக்கியமான 'வரலாற்றுத் தருணம் (*A Moment in History*) எனக் குறிப்பிடுகிறார். இவ்வரலாற்றுத் தருணம், 'சமகால வரலாற்றின் ஒரு சந்திப்புப் புள்ளி' (*Contemporary Conjuncture*) எனவும் குறிப்பிடுகிறார். 'வரலாற்றுத் தருணம்', 'சமகால வரலாற்றின் ஒரு சந்திப்புப் புள்ளி' என்ற தொடர்கள் வெற்று வார்த்தைகள் அல்ல; அர்த்தச் செறிவுடைய தொடர்கள் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். கட்டுரையின் இரண்டாவது பந்தி 'சமகால வரலாற்றின் ஒரு சந்திப்புப் புள்ளி' பற்றிப் பின்வருமாறு விளக்கம் தருகிறது.

சமகால வரலாற்றின் ஒரு சந்திப்புப் புள்ளியாக அமையும் இன்றைய நிலையின் அடிப்படைக்கூறுகளை நாம் பகுப்பாய்வு செய்தல் அவசியமானது. இலங்கையின் இரண்டு இனத்துவக் குழுமச் சமூகங்கள் (*Ethnic Formations*) கடந்த சில ஆண்டுகளில் ஒன்றில் இருந்து மற்றது பிரிந்து, இரண்டும் வெவ்வேறு திசைகளில் பயணித்துக் கொண்டிருக்கின்றன. அவற்றுக்கிடையே உறவுகள் முற்றாகவே துண்டிக்கப்பட்ட நிலை (*Virtual Rupture*) காணப்படுகிறது. வர்க்கங்களுக்கிடையிலும், சமூக அடுக்குகளிடையேயும் குறிப்பிட்ட வகை முரண்பாடுகளும் ஏற்றத்தாழ்வுகளும் சிங்களச் சமூகத்தில் உருவாகியுள்ளன. தமிழ்ச் சமூகத்தின் உள்ளக வர்க்க முரண்பாடுகளும், சமூக அடுக்குகளின் (*Social Strata*) வேறுபாடுகளும் வேறுபட்ட முறையில் உருவாகியுள்ளன. தமிழ்ச் சமூகத்தில் தொழிலாளி - முதலாளி முரண்பாடுகளும் நில உடைமையாளர் - விவசாயப் பட்டாளிகள் முரண்பாடுகளும் உள்ளன. இத்தகைய உள்ளக முரண்பாடுகளும், வர்க்க முரண்பாடுகளும் (*Class Contradictions*) தமிழ்ச் சமூகத்தில் உரத்துப் பேசப்படுவதில்லை. அவை அடக்கி வாசிக்கப்படுகின்றன. ஆழத்தில் அமுங்கிப் போயுள்ளன. இதற்கான வலிதான காரணம் ஒன்று உண்டு. தமிழ்ச் சமூகம் தனது கூட்டு இருப்பும், தாம் ஒரு சமூகமாக நிலைத்திருக்க முடியுமா என்பதும் ஆபத்துக்குள்ளாகியிருப்பதை உணர்கிறது (*Perceives a Danger to It's Collective Social Existence*). ஆனால் சிங்கள இனத்துவக் குழுமச் சமூகத்தின் நிலை வேறானது. அச்சமூகத்தில் ஆழமான சமூகப்பிளவுகள் வெளிப்பட்டுள்ளன. வர்க்க வேறுபாடுகள் காரணமாக எழும் உணர்வுநிலை சிங்களச் சமூகத்தில் கூர்மை பெற்றுள்ளது. ஆளும் உயரடுக்குக்கும் (*Ruling Stratum*) பொதுமக்களுக்கும் இடையிலான பிளவுகள் தொடருகின்றன. ஆனால் பொதுமக்கள் மத்தியில் இன்றைய பிரச்சினைகளுக்கான காரணங்கள் பற்றிய பொய்யான விளக்கம் ஒன்று பரவலாக உள்ளது. தமது இன்றைய துன்பங்கள் யாவற்றுக்கும் காரணம்

இந்நாட்டில் சலுகைகள் பெற்ற இனமாக வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்களின் நியாயமற்ற கோரிக்கைகள் தாம் எனச் சிங்கள மக்கள் சிந்திக்கிறார்கள். இனப்பகை என்ற பொய்யான திசையில் (False External Direction) அவர்களது சிந்தனை மடைமாற்றம் செய்யப்பட்டுள்ளது. சிங்களவர், தமிழர் ஆகிய இரு சமூகங்களிலும் வர்க்க முரண்பாடுகளைவிட, இனத்துவ முரண்பாடுகள் (Ethnic Contradictions) முதன்மை பெற்றுள்ளன. அல்தூசரின் வார்த்தைகளில் இதனை வருணிப்பதாயின் 'மேல் நிர்ணயம்' (Over Determination) நிகழ்ந்துள்ளது. வர்க்க முரண்பாடுகளை, இனத்துவ முரண்பாடாக இரண்டாம் நிலைக்குத் தள்ளிவிட்டு முதன்மை முரண்பாடாக இனத்துவ முரண்பாடுகள் மேல் நிர்ணயம் செய்கின்றன. மேல் நிர்ணயம் என்பது இவ்விடத்து அமைப்பியல் மேலாதிக்கத்தைக் (Structure in Dominance) குறிப்பிடுகிறது. அதாவது ஒரு குறிப்பிட்ட சமூக உருவாக்கம் வரலாற்றின் ஒரு கட்டத்தில் (At a Point of Time) பல்வித முரண்பாடுகளின் சேர்க்கையாக அமையும் அமைப்பியல் மேலாதிக்க நிலையைக் குறிப்பதாகும்.



யூலைக் கலவரத்தின் போது
Image Source - groundviews.org

## மேல் நிர்ணயம் என்னும் அல்தூசரின் கருத்தாக்கம்

பிரஞ்சு தேசத்தின் அமைப்பியல் மார்க்ஸியச் சிந்தனையாளரான அல்தூசரின் 'மேல் நிர்ணயம்' (Over Determination) என்ற கருத்தாக்கத்தை, இலங்கையில் 1983 யூலை வன்முறைக் கலகத்திற்குப் பின்னரான சூழமைவை விளக்குவதற்கு நியூட்டன் குணசிங்க அவர்கள் பிரயோகிப்பதை இங்கே நாம் காண்கிறோம். 1983 கறுப்பு யூலை இலங்கையின் வரலாற்றின் ஒரு முக்கிய கட்டமாகும். இவ்வரலாற்றுக் கட்டத்தில் சிங்களவர், தமிழர் ஆகிய இரு சமூகங்களினதும் உள்ளக முரண்பாடுகள் (Internal Contradictions) இனத்துவ முரண்பாடுகள் என்னும் காரணியால் மேல் நிர்ணயம் செய்யப்படுவதை நியூட்டன் குணசிங்க விளக்கிக் கூறியிருப்பதை எமது வார்த்தைகளால் அடுத்து எடுத்துக் கூறுவோம்.

ஒரு சமூகத் தோற்றப்பாடு ஒரேயொரு காரணியால் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை. குறிப்பிட்டதொரு வரலாற்றுச் சூழமைவில் தோன்றும் குறித்தவொரு சமூகத் தோற்றப்பாடு பல்வேறு முரண்பாடுகளின் குறிப்பிட்ட வகைச் சேர்க்கையான காரணிகளால் (Multiple Causes) தீர்மானிக்கப்படுகிறது. அதாவது சமூகத் தோற்றப்பாடுகள் (Social Phenomena) பொருளாதாரம், அரசியல், கருத்தியல் (Ideology), பண்பாடு ஆகிய பல்வேறு கூறுகளினால் எழும் பல்வேறு முரண்பாடுகளினால் தீர்மானிக்கப்படுகின்றன. அவ்வாறு தீர்மானம் செய்கின்றபோது ஒரு குறிப்பிட்ட முரண்பாடு பிற எல்லா முரண்பாடுகளையும்விட முதன்மையான முரண்பாடாக (Primary Contradiction) அமைந்துவிடுவதோடு, அம்முதன்மையான முரண்பாடு ஏனைய முரண்பாடுகளைப் பின்தள்ளி நிகழ்வுப் போக்குகளின் மீது மேல் நிர்ணயம் (Over Determination) செய்கிறது.

அல்தூசரின் 'மேல் நிர்ணயம்' என்ற கருத்து புரட்சிகரமான ஒரு எண்ணக்கருவாகும். பழமைவாத மார்க்சிஸ்டுகள் (Orthodox Marxists) பொருளாதாரம் என்ற காரணியையும், பொருளாதார முரண்பாடுகளையும் தீர்மானமானவை என்று கூறிக்கொண்டிருந்த பின்னணியில் பொருளாதாரம் அல்லாத (Non-Economic) காரணியொன்று, முதன்மை முரண்பாடாக மாற்றமுற்று, பிறயாவற்றையும் பின்னிலைக்குத் தள்ளி மேல் நிர்ணயம் செய்வதாக அமைகின்றது என்பதே அல்தூசரின் விளக்கமாகும்.

மேல் நிர்ணயம் என்னும் கருத்தாக்கத்தை சிங்களவர், தமிழர் என்னும் இரு சமூக உருவாக்கங்களின் உள்ளக முரண்பாடுகளின் வளர்ச்சிப் போக்குகளை விளக்குவதற்குப் பிரயோகிக்கும் நியூட்டன் குணசிங்க அவர்கள், வர்க்க முரண்பாடுகள் (Class Contradictions) அல்ல, இனத்துவ முரண்பாடுகளே (Ethnic Contradictions) கறுப்பு யூலை 1983 இன் பின்னர் முதன்மைக் காரணியாக மாற்றம் பெற்றுள்ளன எனக் குறிப்பிட்டார்.

## அமைப்பியல் மேலாதிக்கம்

மேல் நிர்ணயம் என்ற எண்ணக்கருவுடன் தொடர்புடைய பிறிதொரு எண்ணக்கருவான 'அமைப்பியல் மேலாதிக்கம்' (Structure in Dominance) என்னும் எண்ணக்கரு ஒரு சமூக உருவாக்கத்தில் பொருளாதார முறைமை, அரசியல் முறைமை, கருத்தியல் முறைமை எனப்பல உபமுறைமைகள் உள்ளமைந்து காணப்படும். இந்த உபமுறைமைகள் ஒன்றோடொன்று கலந்தும், குறுக்கே வெட்டிச் செல்வனவாயும் (Cross Cutting) காணப்படும். இந்நிலையில் சமூக உருவாக்கத்தின் மேலாதிக்கக்கூறாக ஒரு வர்க்கம் அமைந்துவிடலாம் அல்லது ஓர் அரசியல் நிறுவனம் அமைந்துவிடலாம் அல்லது பண்பாட்டுக் கருத்தியல் (Cultural Ideology) அமைந்துவிடலாம். சமூகத்தில் அதிகாரமும், சமத்துவமின்மையும் (Power and Inequality) சமூகக் கட்டமைப்புகள் ஊடாக ஆழமான வேர்களை ஊன்றியிருக்கும். அமைப்பியல் மேலாதிக்கம் என்னும் கருத்தாக்கம் மேற்கண்டவாறு மேல் நிர்ணயம் என்ற கருத்தை விளக்க உதவுகிறது.

கறுப்பு யூலை 1983 இன் பின்னரான சூழமைவில் இனத்துவ உறவுகளின் கட்டமைப்பு இலங்கைச் சமூகத்தில் மேலாதிக்கம் பெற்றுள்ளதை எடுத்துக் காட்டும் நியூட்டன் குணசிங்க, அதிகாரமும் சமத்துவமின்மையும் இனத்துவ உறவுகளின் கட்டமைப்பினால் தீர்மானிக்கப்படுவதைக் குறித்துக் காட்டுகிறார். இக்காரணத்தால் வர்க்க முரண்பாடுகளின் தீவிரம், இயல்பு, போக்கு என்பன இனத்துவ உறவுக்கட்டமைப்புகளாலேயே தீர்மானம் செய்யப்படுகின்றன. இனத்துவ உறவுக்கட்டமைப்புகள் வர்க்க உறவுகளின்மீது ஆதிக்கத்தையும் செல்வாக்கையும் செலுத்துகின்றன.

## இனத்துவப் பிரச்சினையை மறந்துவிடுங்கள் என்ற கோஷம்

இலங்கையில் கறுப்பு யூலை 1983க்குப் பிந்திய சூழமைவில் இனத்துவ முரண்பாடுகள் முதன்மை பெற்றுள்ளதால், அவை வர்க்க உறவுகள்மீது ஆதிக்கம் செலுத்துகின்றன. இப்பின்னணியில் இனத்துவப் பிரச்சினையை மூடிமறைத்தல் மூடத்தனமான கொள்கையாகும். இம்மூடத்தனமான கொள்கையைப் பின்பற்றும் இடதுசாரிகள் சிலர் 'இனத்துவப் பிரச்சினையை மறந்து விடுங்கள்' (Forget Ethnic Issue) என்று கோஷம் எழுப்புகின்றனர். இது முற்போக்குச் சக்திகளை தவறான பாதையில் வழிநடத்திச் செல்வதற்கே உதவும். இனத்துவ முரண்பாடுகளைத் தீர்வு செய்வதற்கு நாம் இனத்துவப் பிரச்சினை பற்றி வெளிப்படையாகப் பேச வேண்டும். பகுத்தறிவுக்குப் பொருத்தமான அரசியல் தீர்வைப் (Rational Political Solution) பற்றிச் சிந்திக்க வேண்டும். மத்தியில் குவிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை அதிகாரப் பகிர்வு (Devolution of Power) மூலம் பகிர்ந்தளிக்க வேண்டும். அத்தகைய அரசியல் தீர்வு குறித்து தொழிலாளர் வர்க்கத்திற்கும் ஏனைய உழைக்கும் மக்கள் பிரிவினருக்கும் கல்வியறிவூட்டும் பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டும். வெகுஜனங்களிடையே எக்கருத்துகள் கவர்ச்சியுடையனவாய் இருக்கின்றன என்பதைப் பார்த்து, அவற்றின் வழிச் செயற்படுவதை விடுத்து, மக்களைச் சரியான பாதையில் நெறிப்படுத்தல் வேண்டும். தொலைநோக்குடைய தந்திரோபாயத் திட்டத்தை முன்வைத்து, தொழிலாளர் வர்க்கத்தின் மத்தியிலும் பிற உழைப்பாளர் வகுப்புகளின் மத்தியிலும் செயற்பட வேண்டும்.

## இலங்கையின் அரசியல் கட்சிகளிடையே ஏற்பட்ட உட்பிளவுகளும் புதிய கூட்டுகளும்

இனத்துவ முரண்பாடுகளின் மேல் நிர்ணயம் காரணமாக இலங்கையின் அரசியல் கட்சிகளிடையே உட்பிளவுகள் ஏற்பட்டதையும் அக்கட்சிகள் புதிய கூட்டுகளை ஏற்படுத்திக் கொண்டிருப்பதையும் நியூட்டன் குணசிங்க அவர்கள் எடுத்துக்காட்டுகிறார். அரசியல் கட்சிகளுக்கிடையிலான உறவுகளில் அடிப்படையான மாற்றங்கள் ஏற்பட்டன. பழைமைவாதிகள் (Conservatives), முற்போக்குவாதிகள் (Progressives) என்ற பழைய முகாம்களுக்குள் பிரிவினைகள் தோன்றின. இப்பிரிவினைகள் இனத்துவப் பிரச்சினை தொடர்பான கொள்கை வேறுபாடுகள் காரணமாக ஏற்பட்ட உட்பிளவுகளாகும். அரசியலில் முன்னர் எதிரெதிர் முகாம்களில் இருந்தோர் இனத்துவப் பிரச்சினை தொடர்பாக தம்மிடையே ஒற்றுமை இருப்பதை உணர்ந்தனர். 1977 இல் ஐக்கிய தேசியக்கட்சி (UNP) அரசாங்கத்தில் ஓர் அங்கமாக இணைந்து கொண்ட தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (CWC) ஒரு பழமைவாத அரசியல் கட்சியாகவே கருதப்பட்டு வந்தது. ஆனால் அக்கட்சி அதிகாரப் பகிர்வை (Devolution of Power) ஆதரித்தது. பிராந்தியச் சபைகளை (Regional Councils) அமைக்க வேண்டும்; அதிகாரப் பகிர்வைச் செயற்படுத்த வேண்டும் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை ஆதரித்துப் பேசியது. மகாஜன எக்சத் பெரமுன (MEP) கட்சியின் தினேஷ் குணவர்த்தன, ஐக்கிய இடதுசாரிக் கூட்டணியின் (United Left Alliance) பங்காளியாக இருந்துகொண்டே அதிகாரப் பகிர்வைத் தீவிரமாக எதிர்ப்பவராக விளங்கினார். முற்போக்குவாதி எனக் கருதப்பட்ட தினேஷ் குணவர்த்தனவின் எம்.ஈ.பி (MEP) கட்சி இனத்துவப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான மாநாட்டில் கலந்துகொள்வதைக்கூட நிராகரித்தது; இனத்துவப்

பிரச்சினையின் அரசியல் தீர்வுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு மறுப்புத் தெரிவித்தது. இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியும், லங்கா சமசமாஜக் கட்சியும், அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவு தெரிவித்தன. ஆனால் ஜனதா விமுக்திப் பெரமுனவின் (ஜே.வி.பி) ரோஹண விஜயவீர, நியாயமான அரசியல் தீர்வான அதிகாரப் பகிர்வை நடைமுறைப்படுத்தி, இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆதரவு வழங்குவதற்கு மறுத்தார். அதிகாரப் பகிர்வு யோசனையை வன்மையாக எதிர்த்தார். இனவாதத் துவேசத்தை வெளிப்படுத்தும் முறையில் அறிக்கை வெளியிட்டார். மேலே குறிப்பிட்ட வகையான பிளவுகளும் உட்பிரிவுகளும், வர்க்க முரண்பாடுகளின் (Class Conflict) அடிப்படையில் எழுந்த பிளவுகளும், உட்பிரிவுகளும் எனக் கருத முடியாது. இப்பிரிவினைகள் மேல் நிர்ணயத்தின் (Over Determination) விளைவுகளே ஆகும். முற்போக்குவாதிகள் எனக் கருதப்பட்டு வந்த சிங்கள அரசியல் சக்திகள் இரண்டு அணிகளாகப் பிரிவுபட்டிருப்பதைக் காண முடிகிறது. இவ்விரு அணிகளினதும் கொள்கைகளும் செயற்திட்டங்களும் வேறுபட்டனவாய் உள்ளன.



நியூட்டன் குணசிங்க
Image Source - www.colombotelegraph.com

## முற்போக்கு அரசியலின் இரு அணிகள்

1980களில், கறுப்பு யூலை 83 இற்கு முன்னும் பின்னுமான காலத்தில் இலங்கையின் சிங்களச் சமூகத்தில் முற்போக்கு அரசியல் சக்திகள் இரு அணிகளாகப் பிளவுபட்டிருந்தன. இந்த அரசியல் யதார்த்தத்தை தெளிவாகப் புரிந்துகொண்ட நியூட்டன் குணசிங்க, இந்த இரு அணிகளினதும் கொள்கைகளையும் நடைமுறைகளையும் பகுப்பாய்வுக்கு உட்படுத்துகிறார். ஆங்கிலத்தில் நியூட்டன் குணசிங்க இவ்வாறு குறிப்பிடுகிறார்:

*"Within the ranks of the Sinhala political forces traditionally regarded as 'progressive' two mutually opposed lines are emerging"*

இக்கூற்றில் உள்ள 'Two Lines' என்பதை தமிழில் 'இரு அணிகள்' என நாம் மொழிபெயர்த்துக் கொள்ளலாம். ஒன்றோடொன்று முரண்படும் கருத்துகளையுடைய இவ்விரு அணிகளையும் அணி1, அணி2 எனக் குறிப்பிடும் குணசிங்க அவற்றின் கொள்கைகளையும் நடைமுறைகளையும் விபரிக்கிறார். அணி1 இன் அரசியல் நிலைப்பாட்டை பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்: இன்றைய அரசு நவகாலனியத்தின் கருவியாகச் செயற்படுகிறது. அது சர்வதேச நாணய நிதியம் (IMF), உலக வங்கி ஆகியவற்றின் கைப்பொம்மையாகும். அது எமது மக்களை அரசியல்ரீதியில் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கியுள்ளது. தேர்தல்களை நடத்தாமல் ஆட்சியில் இருந்து வருகிறது. சுற்றுலாத்துறை வளர்ச்சி என்ற போர்வையிலும், அதுபோன்ற செயற்றிட்டங்கள் மூலமும் எமது பண்பாட்டைச் சீரழித்து வருகிறது. ஆகையால் இந்த அரசை எதிர்த்துப் போராடுவதற்காக முற்போக்கு, தேசபக்த மக்கள் யாவரையும் ஒன்றிணைக்கும் வகையில் ஐக்கிய முன்னணி (United Front) ஒன்றை அமைத்து எமது அரசியல் செயற்பாடுகளை முன்கொண்டு செல்ல வேண்டும்.

அணி2 இன் அரசியல் நிலைப்பாட்டை பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம்: இந்த அரசு மேலே குறிப்பிட்டபடி (அணி1 இன் கருத்துப்படி) பிற்போக்கான கொள்கைகளையும் நடைமுறைகளையும் கொண்டது என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை. ஆனால் முற்பாக்கு தேசபக்த சக்திகள் அனைத்தையும் ஒன்றிணைத்த ஐக்கிய முன்னணியை அமைக்க வேண்டும் எனக் கூறப்படுகிறதே? இதன் விளைவு என்னவாக இருக்கும் என்பதைச் சிந்திக்க வேண்டும். இன்று நாம் வரலாற்று சந்திப்புப் புள்ளி ஒன்றில் (Historical Conjuncture) நிற்கிறாம். இன்றைய சூழமைவில் உருவாக்கப்படும் தேசபக்த ஐக்கிய முன்னணியில் தவிர்க்க முடியாதபடி பெருந்திரளான சிங்கள இனவாத சக்திகள் இணைந்துகொள்ளப் போகின்றன. 'தேசபக்த ஐக்கிய முன்னணி' (Patriotic United Front) எனப்படும் இந்த முன்னணியில் மேலாதிக்கம் பெற்ற கருத்தியலாக சிங்கள இனவெறிவாதம் (Sinhala Chauvinism) இருக்கப்போகிறது. இதனால் நாட்டில் இனமுறுகல்நிலையும் அதனால் எழும் அச்சம், பதற்றம் என்பனவும் உச்சநிலைக்குச் செல்லும் இவ்வாறான ஒரு பின்னணியில் இடதுசாரிச்சக்திகளால் வெகுஜனங்களை (Masses) பொருளாதார, வர்க்கப் பிரச்சினைகளின் அடிப்படையில் ஓரணியில் ஒன்று திரட்ட முடியாது. நாட்டில் உருவாகப்போகும் இனமுறுகல்நிலை இன்று ஆட்சியில் அமர்ந்துள்ள தரகு முதலாளித்துவ வகுப்பின் ஆட்சி தொடர்வதற்கு வாய்ப்பான சூழலை உருவாக்கும். ஆகவே நாம் தொழிலாளர் வர்க்கத்தின் நோக்குநிலை நின்று இன்றைய அரசியல் யதார்த்தத்தை




Image Source - ssalanka.org

ஆராய்ந்து பார்க்க வேண்டும். அவ்வாறு பார்த்தால், இனமுறுகல் நிலையை இயன்றளவுக்கு தணித்தல் வேண்டும். இதுவே தொழிலாளர் வர்க்க அரசியலின் குறுங்காலத் திட்டமாக இருத்தல் வேண்டும். இதனை நிறைவேற்றுவதன் மூலம் பொருளாதாரப் பிரச்சினைகள் தொடர்பான போராட்டத்தை முன்னெடுப்பதற்கான சூழலை எம்மால் உருவாக்க முடியும்.

இதனைக் குறிக்கோளாகக்கொண்டு இடதுசாரிகள் செயற்பட வேண்டும்; அவர்களது செயற்பாடுகளின் முதன்மையான விடயமாக இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்பது இலங்கைத் தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதாக (Devolution of Power) இருப்பதோடு ஒன்றுபட்ட ஐக்கிய இலங்கைக்குள் அமையும் அரசியல் தீர்வாகவும் இருத்தல் வேண்டும். இத்தகைய அதிகாரப்பகிர்வு அரசியல் தீர்வுக்கு ஆதரவாக இடதுசாரிகள் பிரசாரம் செய்வதோடு, அரசுக்குள்ளும் அரசுக்கு வெளியேயும் உள்ள அறிவார்ந்த சிந்தனையுடையவர்களின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும்; அத்தகையோரை வென்றெடுத்தல் வேண்டும். அதன்மூலம் பேச்சுவார்த்தையின் மூலமான அரசியல் தீர்வைக் கொண்டுவரலாம்.

## 1984 மே தினம்

"இந்த மே தினம், *1983* இல் தமிழினத்திற்கு எதிராக நிகழ்த்தப்பட்ட வன்கொடுமைக்கு பிந்திய முதலாவது மே தினம் ஆகும்" என *1984* மே தினத்தின் முக்கியத்துவத்தை அழுத்திக்கூறும் நியூட்டன் குணசிங்க, கோட்பாட்டுக் குழப்பத்தில் (Theoretical Disarray) சிக்குண்டுள்ள இடதுசாரிகளுக்கு ஒரு முக்கியமான செய்தியைத் தெரிவிப்பதுடன் தனது கட்டுரையை நிறைவு செய்கிறார். கட்டுரையின் இறுதிப்பகுதியில் அவர் கூறியிருப்பவை வருமாறு:

"இலங்கையின் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் எதிர்காலம், மேலே நாம் குறிப்பிட்ட அணி1, அணி2 என்ற இரு அணிகளில் எந்த அணியின் செயற்பாடுகள் வெற்றியடையப் போகின்றன என்பதிலேயே தங்கியுள்ளது. அணி1 வெற்றி பெறுமானால் இனமுறுகல்நிலை அதிகரித்து உச்சநிலைக்குச் செல்லும். இதன்விளைவாக 'மேல் நிர்ணயம்' என்ற செயல்முறை பலப்படுத்தப்படும்; மக்கள் தவறான பாதையில் வழிநடத்தப்படுவார்கள். அணி2 வெற்றி பெறுமாயின் இனமுறுகல்நிலை தணிக்கப்படும்.

அதன்பயனாக 'மேல் நிர்ணயம்' என்ற செயல்முறையின் வீரியம் குறைக்கப்படும். வடக்கு - கிழக்கு மக்களிற்கு அரசியல் சுதந்திரங்கள் (Democratic Liberties) வழங்கப்படுதல் சாத்தியமாகும். தொழிலாளர் வர்க்கத்தின் பெரும்பங்கினர் வாழுகின்ற தென்னிலங்கையில் வர்க்கப் போராட்டத்தை இடதுசாரிகள் முன்னெடுப்பதற்கு வாய்ப்பான சூழல் உருவாகும். நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகள் அதிகரிக்கும்போது தொழிலாளர் வர்க்க இயக்கம் புத்துயிர்பெற்று வீரியத்துடன் செயற்படுவதோடு, தொழிலாளி வர்க்கத்தின் உணர்வை (Class Consciousness) வளர்ப்பதற்கான வாய்ப்பு உருவாகுவதோடு வர்க்க முரண்பாடுகளைவிட இன முரண்பாடுகள் முதன்மை பெற்றனவாய் 'மேல் நிர்ணயம்' (Over Determination) செய்வதான செயல்முறை வலுவிழக்கும்."

*1984* மே *1* ஆம் திகதிய 'Lanka Guardian' இதழில் வெளியான 'May Day after the July Holocaust' என்னும் ஆங்கிலக்கட்டுரையின் தமிழாக்கமாக இத்தமிழ்க்கட்டுரை அமைந்துள்ளது. நியூட்டன் குணசிங்க அவர்கள் இக்கட்டுரையை எழுதி, நான்காண்டுகள் கழிந்தபின், *1988* ஒக்டோபர் *31* ஆம் திகதி காலமானார். அவர் மறைவுக்குப் பின்னர் 'SSA' நிறுவனத்தால் *1996* இல் வெளியிடப்பட்ட 'Newton Gunasinghe: Selected Essays' என்னும் நூலில் குறித்த ஆங்கிலக்கட்டுரை சேர்க்கப்பட்டுள்ளது (பார்க்க பக். *197-200*).

இன்றைய இருப்பில் இயங்கும் சமூக சக்திகள் தத்தமக்கான நலன்களின் நோக்கில் கடந்த காலத்தை மறுவாசிப்புக்கு உட்படுத்துகின்றன. மேலாதிக்கத் தமிழ்த் தேசியம், தலித்தியம், விடுதலைத் தேசியம் என்பவற்றின் கருத்தியல் தளங்களை அடிப்படையாக உடைய சமூக சக்திகள் இன்றைய இயக்கங்களாகச் செயற்படுகின்றன. எமக்கான நவீன வரலாற்றைக் கட்டமைத்த ஆளுமையாகிய ஆறுமுக நாவலர் குறித்து இவை ஒவ்வொன்றும் தமக்கே உரிய கண்ணோட்டத்தில் மறுவாசிப்பை மேற்கொள்கின்றன; இதன்வழியாக, கடந்தகாலச் சமூக சக்திகள் வழிவகுத்துவிட்டிருந்த இயங்குமுறை அமைந்த அடித்தளங்களைப் புரிந்துகொள்ள முயற்சிக்கின்றன. இதேபோன்ற பின்னணிக்குரிய ஏனைய சமூகங்களில் இயங்கிய ஆளுமைகளுடன் எமது இயங்கு தளத்துக்குரிய ஆளுமைகளை ஒப்பிடுவதன் வாயிலாக செய்யப்பட்டவற்றையும், செய்திருக்கத்தக்கன எவை என்பதையும் மதிப்பீடு செய்வது அவசியமானது. இவற்றின் பெறுபேறுகள் எமக்கான எதிர்கால மார்க்கத்தை வடிவமைப்பதற்கு மிகமிக முக்கியமானவை ஆகும். "சமத்துவச் சமூகம் காணப் போராடுவோர் பார்வையில் ஆறுமுக நாவலர் எனும் இத்தொடரானது நாவலரின் பங்களிப்புக் குறித்த மதிப்பீட்டின் வழியாக சமகால இயங்குமுறையைக் கணிப்பிட்டு, சுயவிமரிசனங்களுடன் புதிய பாதையையும், அதற்குரிய சரியான மார்க்கத்தையும் கண்டடையும் நோக்கில் எழுதப்படுகிறது.

# மீள் பார்வைக்கான சமூக சக்திகள்

**நடேசன் இரவீந்திரன்**



இரவீந்திரன் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி கலைப்பட்டதாரி. பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே முதுகலைமாணிப்பட்டத்தினையும் ‘திருக்குறளின் கல்விச்சிந்தனை’ எனும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் மலையகத்தின் சிறிபாத கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளதுடன் 1995இல் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும் பணியாற்றியுள்ளார்.

இரவீந்திரன் 18இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் ‘பாரதியின் மெய்ஞ்ஞானம்’, ‘இலங்கையின் சாதியமும் அவற்றிக்கெதிரான போராட்டங்களும்’, ‘பின்நவீனத்துவமும் அழகியலும்’, ‘கலாச்சாரம் எதிர் கலாச்சாரம் புதிய கலாச்சாரம்’, ‘இந்துத்துவமும் இந்து விடுதலை நெறியும்’, ‘சாதியமும் சமூக மாற்றங்களும்’, ‘இரட்டைத் தேசியமும் பண்பாட்டுப் புரட்சியும்’, ‘சாதி தேசம் பண்பாடு’ என்பன குறிப்பிடத்தக்கவை.

ஈழத்தைச் சூழ்ந்த யுத்த மேகங்கள் இன்று காசாவில்; பல்லாயிரம் மனித உயிர்களைக் காவுகொள்ளும் மேலாதிக்க வெறியானது மேலும் வியாபிதமடைந்து அரபுலகனைத்தையும் அதனைக்கடந்த உலக யுத்தமாகவும் விரிவாக்கம் பெறலாம் என்ற ஆரூடங்கள் வெளிப்பட்ட வண்ணம். மேலைத்தேசங்கள் எனப்படும் ஏகாதிபத்தியத் திணையானது அவ்வாறு ஏற்படவுள்ள அந்தப் பெரும் யுத்தக்களரிக்குத் தயாராகும் முஸ்தீபுடன் இராணுவச் செலவுகளை அதிகரிப்பதான செய்திகள் வந்தபடி. இனிவரும் புதிய உலக ஒழுங்கில் பனிப்போர்கூட மூழ இடமின்றித் தேசங்கள் ஆக்கிரமிப்பு யுத்தங்களை மறந்தவாறு ஆளுமையுடன் சுயசார்புப் பொருளாதாரத்தை அடிப்படையானதாக வரித்துத் தமக்கான விருத்தியை ஏற்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்பு உள்ளது என்று கூறிவரும் வேளையில் இத்தகைய அவதி.

அதுவும் மெய்; இதுவும் இன்றைய நிதர்சனம். உலக நாடுகள் அனைத்திலும் தனது ஆணைக்கு இணங்கும் அரசுகளை அமைக்க முற்படுவதும், மீறி வரும் அரசாங்கங்களை இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்துப் புதிதாக ஒன்றை ஜனநாயக வடிவிலோ இராணுவச்சதி வாயிலாகவோ அரங்கேற்றுதல் என்பது ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தின் ஆளுமைக்குக் கட்டியங்கூறி வந்த அம்சம். அந்த ஒற்றை மைய மேலாதிக்கத்துக்கு இனிமேலும் பணிந்து ஒழுக வேண்டிய அவசியமின்றிப் பல மையங்களுடன் நாடுகள் ஊடாடவல்ல புதிய உலக நியதி ஒன்று தொடக்கம் பெற்றுவிட்டது; சர்வவியாபியாக இருந்த டொலர் மேலாண்மையை மறுத்துப் பல்வேறு நாணயப் பரிமாற்ற வாய்ப்புகள் சாத்தியப்பட்டவாறுள்ளன.

ஏகாதிபத்தியத் திணையால் இந்த மாற்றத்தைச் சமாதான வழியில் அனுமதித்துப் பின்வாங்க இயலவில்லை என்பதனையே இன்றைய கெடுபிடிகள் காட்டிநிற்கின்றன; அதனைப் பொறுத்தவரை, 'வாழ்வா? சாவா?' எனும் பிரச்சினை இது. மேலாதிக்க ஒடுக்குமுறையைப் பிரயோகித்து டொலர் வாயிலாக எமது தேசங்களைச் சுரண்டிவந்த ஏகாதிபத்தியம், அவ்வாறன்றிச் 'சுயசார்புடன் தனது சொந்த உழைப்பில் வாழ்வதற்கு' ஒருப்படுமா?

ஏகாதிபத்தியத் திணையினுள் நேற்றுவரை இருந்து வந்த அந்நியோன்ய ஒற்றுமை இன்று இல்லையெனும் ஒரு தோற்றப்பாடு ஏற்பட்டுள்ளது. ருஷ்ய - உக்ரேன் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு உக்ரேனின் வளப்பிரதேசங்களை பெரியண்ணன் நிலையில் இருக்கும் ஐக்கிய அமெரிக்கா வறுகி எடுத்துவிட்டதில் ஐரோப்பிய நாடுகளுக்கு உடன்பாடில்லை; உக்ரேனை யுத்தத்துக்குத் தூண்டியதுடன் அதற்கான ஆயுத வழங்கல்களை நாங்களும் தானே செய்தோம், எங்களுக்கான பங்கைத் தரவேண்டாமா என்ற ஆதங்கம் பின்தங்கிவிட்ட ஏனைய ஏகாதிபத்திய நாடுகளுக்கு!

இதனைப் பகை முரண்பாடாக்கி, உலகை மறுபங்கீடு செய்யும் ஆற்றலுடன் மூன்றாம் உலக யுத்தமொன்றைத் தொடுப்பதன் வாயிலாக ஐக்கிய அமெரிக்காவை மேவிய மூப்பு எமக்கே உரியது என்பதனை ஐரோப்பவினால் சாதித்துக்காட்ட இயலுமா? அதற்காகத்தான் தமது நாடுகளின் இராணுவச் செலவை அதிகரிக்கிறார்களா? நேற்றுவரை இளமைத் துடிப்பு மங்காமல் ஆளுமையுடன் தலைமை தாங்கிய ஐக்கிய அமெரிக்காவுங்கூட முதிர் பருவத்தில் தள்ளாடத் தொடங்கிவிட்டது; அதற்கும் ஏற்கனவே கிழடுதட்டிப்போன ஐரோப்பிய அணிக்கும் இடையே பாகப்பிரிவினை காரணமாக ஏற்பட்டுவரும் முரண்பாடு வலுத்தவாறு உள்ளபோதிலும் அதனைப் பகை முரண்பாடாக்குவதற்கு அவ்விரு தரப்பினருமே முற்படப்போவதில்லை. தமக்கிடையே பங்குபிரித்தலில் ஏற்பட்டுள்ள இந்தப் போட்டாபோட்டியை விடவும் புதிதாக உலக நாடுகள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுவரும் சீன - ருஷ்ய அணியின் பொருளாதார வல்லமைதான் அவர்களைப் பொறுத்தவரை முதன்மைமிக்க பகை முரண்பாடு.

வர்த்தகப்போரை அறிவித்து முரண்டுபிடித்துவந்த ஐக்கிய அமெரிக்கா இறுதியில் சீனாவிடம் விட்டுக்கொடுப்புடன் கூடிய சமரசத்தைச் செய்ய நேர்ந்துள்ளது. தம்மால் பதியமிட்டு விருத்தி செய்யப்படுகின்ற இந்தியப் பெருமுதலாளி வர்க்கத்தால் ஐக்கிய அமெரிக்கத் தாளத்துக்கு அமைவாக இந்திய அரசை இணங்கிப்போகும்படி செய்வதற்கு இயலவில்லை என்பதனையும் ஏகாதிபத்தியத் திணையால் புரிந்துகொள்ள முடிகிறது. பலபடித்தான பலவீனங்களுடன் உள்ள இன்றைய இந்திய அரசாங்கம்கூடத் திமிறிக்கொண்டே செயற்படுகிறது. சீனாவைப்போலச் சொந்தக்கால்களில் முன்னேறும் வல்லமை தம்மிடம் கிடையாது என்றபோதிலும் இந்திய அரசாங்கம் இந்தவிடயத்தில் விட்டுக்கொடுப்புக்கு இடமின்றித் தனித்துவத்தைப் பேண இயலுமாக இருப்பது, ஏகாதிபத்திய நலனைக் காவாந்து பண்ணும் அவசியத்தின் பொருட்டாகத் தம்மிடம் ஐக்கிய அமெரிக்கா இறங்கிவரும் என்ற நம்பிக்கையினாலே தான்!

பொதுவாக, புதிதாக மேலெழும் ஏகாதிபத்திய அணி ஏற்கனவே நடப்பிலிருக்கும் உலகப்பங்கீட்டை மாற்றியமைக்கும் நிர்ப்பந்தம் காரணமாக உலகயுத்தம் ஒன்றை தொடக்குவதாக இன்றைய ஏகாதிபத்திய யுகம் அமைந்தபோதிலும், புதிய பொருளாதார வலிமையைப்பெற்று முன்னேறுகின்ற சீன - ருஷ்ய அணி அத்தகைய யுத்த சன்னத நிலையைத் தவிர்க்கும் செயலொழுங்குகளுடனேயே இயக்கம் கொண்டுள்ளது. நேட்டோவின் யுத்த முஸ்தீபை முறியடிக்கும் நோக்கில் உக்ரேன் மீது ருஷ்யா தொடுத்துள்ள பதிலடித்தாக்குதல் என்பது ஏகாதிபத்தியத்தின் முன்னேற்றத்தை முறியடிப்பதற்கானது என்பதனைச் சமாதான விரும்பிகள் அறிவர். கிழடுதட்டத் தொடங்கியதன் காரணமாக ஏற்படுகின்ற தனது தள்ளாட்டத்துக்கு உரிய இன்றைய கட்டத்தை உணரும் ஐக்கிய அமெரிக்கத் தலைமையிலான ஏகாதிபத்தியத் திணையேதான் வலிந்த யுத்தத்தை இன்று நாடி நிற்கின்றது. அதற்கு வாய்ப்புடைய ஒவ்வோரிடத்திலும் யுத்தப்பொறி பெருமெடுப்பாக மூசியெழ வேண்டும் என்பதற்கான இராஜதந்திரத்தை முடுக்கிவிட்டுள்ளது ஏகாதிபத்தியத் திணை. உக்ரேனிலும் மத்தியகிழக்கிலும் அவர்களது நோக்கம் தவிடுபொடியாகும்போது தூரகிழக்கில் தைவானைப் பகடைக்காயாக்க முயல்கின்றனர். நவகாலனித்துவப் பிணைப்புகளைத் தகர்த்து எறிந்தபடி தத்தமது நாடுகளின் பூரண விடுதலையை வென்றெடுக்க முற்படும் விடுதலைத் தேசிய சக்திகள் யுத்தங்களை விரும்பப்போவதில்லை; தேசங்கள் சுயாதிபத்தியத்துடன் விருத்தி பெறுவதனைத் தடுக்கும் பொருட்டும் ஆயுத வியாபாரம் களைகட்ட வேண்டும் என்பதனாலும் ஏகாதிபத்தியம் யுத்தத்தை வலிந்து உருவாக்கி வருகின்றது. அது யுத்தத்தையே சுவாசமாகக்கொண்டு சீவிக்க நிர்ப்பந்திக்கப்பட்ட அமைப்புமுறை. பூரண சுதந்திரத்தையும் சுய விருத்தியையும் நாடும் எந்தவொரு இனத்தேசியமும் யுத்தங்களை நிராகரிப்பதன் அடிப்படையில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து முறியடிக்கும் இலட்சியத்தையே வரித்துக்கொள்ளும்!

## மேலாதிக்கத் தமிழ்த்தேசியம்

'மாவீரர்' யுகத்தை மீட்டெடுக்கும் பரப்புரைகளை மேற்கொண்டுவரும் மேலாதிக்கத் தமிழ்த் தேசியம் சுயவிமரிசன நாட்டம் அற்றதாக உள்ள காரணத்தால், நடந்தேறிய வரலாற்றுத்தடத்தில் எமக்கான பின்னடைவு எவ்வாறு ஏற்பட்டது என்ற தேடலற்றதாக உள்ளது. இன்னமும் எதிர்ப்பு அரசியல் நிலைப்பாட்டில் யுத்தத்தைத் துதிபாடுகிறது. இவ்வாறு சொல்வதில் அடிப்படையான ஒரு தவறுள்ளது என்பதனையும் இணைத்துப்பேசுவது அவசியம். ஒட்டுமொத்தமாகத் தமிழ்த் தேசியம் தோல்வி கண்டுள்ளது எனக்கூற இயலுமா?

பிரித்தானிய ஏகாதிபத்தியமானது உயர்பதவிகளைத் தம்மிடம் வைத்தவாறு, உயர்கல்வி வாய்ப்பை அதிகளவில் யாழ்ப்பாணத்துக்கு வழங்கியதனூடாக, அடுத்துள்ள நிர்வாக ஏவலாளர்களால் இங்கு உருவாக்கிய ஊழியப்படையை நிரப்பிக்கொண்டது. அவர்களால் உற்பத்தி செய்யப்பட்டிருந்த அரசாங்க உத்தியோக வாய்ப்பின் பேறாக இலங்கை பூராவிலும் ஆதிக்கம் செலுத்திவந்த யாழ்ப்பாண மேலாதிக்கத் தமிழ்த் தேசியம் இன்றைய நிலையில் 'சர்வதேசமளாவிய' (அவர்களது 'சர்வதேசம்' ஏகாதிபத்தியப் பூமிப்பரப்பே தான்) உத்தியோக வாய்ப்பைப் பெற்றுள்ளதன் மூலமாக வெற்றிபெற்ற வாழ்க்கை மட்டத்தை எட்டியுள்ளது என்பதே உண்மை நிலவரம்!

சிங்களம் அரசகரும மொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்ட 1956 ஆம் ஆண்டிலிருந்து, சிங்களத் தேசியம் தமது பிரதேசங்களில் தமக்கான ஊழியர் படையை உள்வாங்கும் முனைப்பை மேற்கொண்டு வந்தபோதிலும், முழு அளவில் உத்தியோகக்களத்தைக் கைப்பற்றிவிட இயலவில்லை. உயர்கல்வி வாயிலாக மேலாதிக்கப் பதவிகளில் அறுபதாம் ஆண்டுகளின் இறுதிவரை, தொடர்ந்தும் யாழ்ப்பாணம் முன்னுரிமையுடன் அதிகாரம் செலுத்தி வந்தது. தரப்படுத்தல் ஊடாக ஒவ்வொரு மாவட்டங்களிலும் இருந்து துறைகள் ஒவ்வொன்றுக்கும் மாணவர் தெரிவு 1972 ஆம் ஆண்டின் பின்னர் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் அதுவரை பெற்றிருந்த சிறப்புரிமையை இழக்க நேர்ந்தது. யாழ்ப்பாணத்துக்கு வெளியே வன்னி, கிழக்கு மாகாணம் எனும் ஏனைய பூர்வீகத் தமிழர் பிரதேசம் அனைத்தையும் உள்ளடக்கியதுடன், இலங்கை பூராவும் பெற்றிருந்த உத்தியோக ஆக்கிரமிப்பு இவ்வகையில் பறித்தெடுக்கப்பட்டமை காரணமாகவும், அதன்பாலிருந்த நியாயத்தையும் கடந்து வேறும்பல புறக்கணிப்புகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டமையினாலும் தொடுக்கப்பட்ட ஆயுதப்போராட்டம் இரத்த வெள்ளத்தில் ஒடுக்கப்பட்டது. இன்று, தமிழர் தாயகம் என விளங்கிய வடக்குக் கிழக்கு எங்கிலும் தனது ஆக்கிரமிப்புக்கரத்தை சிங்களப் பேரினவாதம் விஸ்தரித்துள்ளது. சுதந்திரத்தின் பின்னர் படிப்படியாக ஏற்படுத்தப்பட்டு வந்த புறக்கணிப்புகள் இடம்பெறாத வண்ணம் அனைத்து இனங்களும் சமத்துவத்துடனும் சமவுரிமையுடனும் இணைந்து செயலாற்ற வழிவகுப்போம் எனக்கூறும் தேசிய மக்கள் சக்தி

அரசாங்கம், தமிழர் தாயகக் கோட்பாட்டை மறுதலிப்பதாக மட்டுமன்றி வேறுபட்ட தேசிய இனங்களின் இருப்பையும் நிராகரித்துள்ளது; சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையக, பறங்கி, மலே எனவுள்ள இனப்பிரிவினர்கள் அனைவரது இணைப்புக்குமுரிய பல்லினப் பண்பாட்டுத் தேசமாக இலங்கையைக் கட்டியெழுப்ப முற்படுவதாக சூழுரைக்கின்றனர்!

ஆக, இலங்கை மண்ணில் இலங்கைத் தமிழ்த் தேசியம் தோற்கடிக்கப்பட்டுள்ளது என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை; அவ்வாறிருக்க 'முழுத்தோல்வி ஏற்பட்டுவிடவில்லை' என்று கூறுவது எவ்வகையில் சரியானது? இலங்கை பூராவிலும் பெற்றிருந்த உத்தியோக மேலாதிக்கம் பறிபோனதில் ஆயுதமோதலை மேற்கொண்ட யாழ்ப்பாண மேட்டுக்குடிகளில் முக்கால் பங்குக்கு அதிகமானோர் புலச்சிதறலுடன் ஏகாதிபத்திய நாடுகளில் இருப்பை ஏற்படுத்தி உறுதிப்படுத்திக் கொண்டுள்ளனர். யாழ்ப்பாணக் குடிசன அடர்த்தியில் சரிபாதி இவ்வகையில் வெளியேறிவிட்டுள்ளது. ஏகாதிபத்திய நாடுகளில் தஞ்சமடைந்தோரில் அடங்கும் மேலாதிக்கத் தேசியர்கள் அல்லாத மிகுதிக் காற்பங்கிலும் குறைவானோர் மேலாதிக்கத் தேசியத்தை எதிர்க்கின்ற விடுதலைத் தேசிய உணர்வுடையோராவர். இலங்கையிலுள்ள மேலாதிக்க நாட்டமிக்கோரில் பெரும்பாலானவர்கள் தமது இருப்பைக் கொழும்பிலும், தென்னிலங்கையிலும் அமைத்தவாறு வடக்குக் கிழக்குக்கான சமஷ்ட்டியைக் கோரும் விநோதமான அரசியல்வாதிகள் (இறுதி யுத்தம் நடைபெற்றபோது, வன்னியிலிருந்து வெளியேற முனைந்த மக்களைக் கண்டித்துத் 'தலைமைக்கு விசுவாசமாக அங்கையிருந்தே போராடாமல் தப்பியோடப் பார்க்கினம்' என்ற குற்றப்பத்திரிகை வாசித்த இவர்கள் இப்போது 'முள்ளிவாய்க்கால்' நினைவேந்தலில் ஈடுபடும் அற்புதக் காட்சிகளையும் தரிசிக்கிறோம்).

சிங்களப் பேரினவாதச் செயலொழுங்குகளை முறியடிக்கும் கொள்கைத் திட்டங்களும் நடைமுறைகளும் விடுதலை நாட்டம் உள்ள சிங்களத் தேசியத்தால் முன்னெடுக்கப்படாத காரணத்தால் வடக்கு - கிழக்குப் பாரம்பரியப் பிரதேசத்தில் வாழும் பெரும்பான்மையான தமிழ்மக்கள் மேலாதிக்கத் தமிழ்த் தேசியத்தின் வாலாகத் தொங்க நேர்ந்துள்ளது. பேரினவாத மேலாதிக்கத்தை விடவும் சாதிய ஒடுக்குமுறையைக் கொடியது எனக்கூறும் ஒரு பகுதியினர் உள்ளனர்; இவர்களுக்கு ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிவினரில் பெரும்பான்மையினர் அவ்வாறு வாலாக ஆகிப்போனதற்கான காரணத்தை விளக்கம்கொள்ள இயலவில்லை என்பதனால் அவ்வாறு இழுபடுவதற்கு எதிரான தமது கண்டனத்தைத் தெரிவித்தும் உள்ளனர்.

இந்த அம்சத்தைக் கவனங்கொள்வதற்கு முன்னதாக நாவலர் பற்றிய மேலாதிக்கத் தமிழ்த் தேசியத்தின் அக்கறை எத்தகையது எனப் பார்ப்பது அவசியம். அரசியல் - போரியல் ஈடுபாடற்ற பெரும்பான்மையாகவுள்ள மேலாதிக்கத் தேசிய நாட்டம் மிக்கவர்கள் 'கடவுளாலே தான் தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட இயலும்' என அமைதியடைந்து தமக்கான ஆடம்பர வாழ்வைத் தக்கவைப்பது பற்றிய கரிசனையில் காலம் தள்ளுவர். அவர்களுக்கு நாவலர் ஐந்தாம் குரவராகத் தெரிவார். தமிழகத்தின் நிலப்பிரபுத்துவ ஆதிக்க சக்தியான வெள்ளாளர், வேத - வேதாந்தப் பிராமணரை அரவணைக்க முற்பட்ட தவிர்க்கவியலாத வரலாற்று நிர்ப்பந்தம் பின்னதாக ஏற்படுத்திவரத் தொடங்கிய பாதிப்பை இனங்கண்ட வேளையில், அங்கிருந்து வெளியேற நேர்ந்து யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்த சிறுபிரிவினர், முன்னெச்சரிக்கை உணர்வோடு இயங்கினர்; பிராமணரைக் கோயில் ஊழிய அடிமைநிலையில் மட்டுப்படுத்தி சொத்துரிமை மறுப்பை அவர்களுக்கும் உரியதாக்கினர். இந்த ஆக்கிரமிப்பு இங்கு ஏற்பட்ட பதின்மூன்றாம் நூற்றாண்டில் தமது மேலாதிக்கத்தை வெளிப்படுத்தும் சைவசித்தாந்தம் வெள்ளாளர்களால் அங்கே வெளிப்படுத்தப்பட்டு இருந்தது. அந்தச் சைவசித்தாந்தப் பதியாகிய சிவனின் புனித பூமியாக யாழ்ப்பாணத்தை மட்டுமன்றி இலங்கை பூராவையும் கருத்தியல்படுத்திய வெள்ளாள மேட்டிமைகளுக்கு நாவலரை ஐந்தாம் குரவராகக் காட்டும் அவசியமுள்ளது. கிறிஸ்தவப் பண்பாட்டு ஊடுருவலை முறியடிக்கும் பொருட்டு பண்பாட்டுத் தேசிய முன்னெடுப்பைத் தொடக்கி வைத்தவரான நாவலர் சைவசித்தாந்தப் பரப்புரையாளராகத் திகழ்ந்தார் என்பது குறித்துப் பேசி வந்துள்ளோம்.

இத்தகைய பிரிவினர்கூட இப்போது நாவலர் குறித்து அதிகம் அக்கறை கொள்வதில்லை. அவரைவிடவும் இன்றைய ஏகாதிபத்திய 'வள வாழ்வை' வருவித்துத் தந்த மாவீர யுத்த மேலாண்மையைத் துதி பாடுவது அவர்களுக்கான வரலாற்று அவசியமாக ஆகியுள்ளது. தமது மேலாதிக்கத்தை நிலைநிறுத்தும் யுத்தத்துக்கு அப்பால் விடுதலைப் போராட்டம் எதுவும் அவர்களுக்கு அவசியமில்லை. 'கடவுள் தான் தமிழரைக் காப்பாற்ற வேண்டும்' என்பவர்கள் மற்றொரு பக்கத்தில் ஏகாதிபத்திய அணியை மனங்கொள்வதாயுள்ள 'சர்வதேச சமூகம்' தாயக மண்ணில் நீதியைப் பெற்றுத்தர வேண்டும் என்று இறைஞ்சவும் செய்கின்றனர்!

மற்றொரு விந்தையும் உண்டு; சொந்த மண்ணில் வாழவிடாமல் புலச்சிதறலுக்கு ஆளாக்கிய சிங்களப் பேரினவாத அரசு மக்கள் மீது தொடுத்த யுத்தத்துக்குக் கரித்துக்கொட்டுவர்.

அதேவேளை, தாயக மண்ணில் வாய்ப்பளித்த சந்தர்ப்பங்கள் அனைத்தையும் தட்டிக்கழித்து அவசியமற்ற யுத்த முன்னெடுப்புகளை ஒவ்வொரு தடவையும் தொடக்கி வைத்த விடுதலைப் புலிகளின் நடைமுறைத் தந்திரோபாயத் தவறுகளை விமரிசனத்துக்கு உள்ளாக்காது இருப்பது மட்டுமன்றி, அதன் உந்துதலில் இருந்த வீரத்தை மெச்சுகின்றவர்களாக மேலாதிக்கத் தமிழ்த் தேசியர்கள் விளங்குகின்றனர். அந்த 'விட்டுக்கொடுக்காத வீரம்' தான் ஏகாதிபத்திய நாடுகளில் தமக்கான இருப்பைச் சாத்தியப்படுத்தி இருந்தது எனும் நன்றி உணர்வை மறந்தாரில்லை.

இவ்வாறு ஏகாதிபத்தியத் தளத்தில் 'புலம்பெயர் தமிழீழத்தை' இயங்க வாய்ப்பளித்த புலிகள் மட்டுமே இஸ்ரேலில் பயிற்சிபெற்ற ஒரேயொரு அமைப்பு எனும் அம்சம் கவனிப்புக்குரியது. இன்றைய உலகின் நாசகார யுத்த முன்னெடுப்பை மேற்கொண்டவாறு குழந்தைகள், பெண்கள், குடிமக்கள் என வகைதொகையற்று பல்லாயிரக்கணக்கானோரைக் கொன்று குவிக்கும் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு முஸ்தீபுகளுக்கு எதிராகப் போராடும் பலஸ்தீன விடுதலைப் போராட்டக் களத்தில் எண்பதாம் ஆண்டுகளின் முற்கூறில் பயிற்சிபெற்ற ஏனைய அமைப்புகளைத் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் இருந்து வெளியேற்றிய விடுதலைப் புலிகளின் தவறு குறித்தும் இந்த மேலாதிக்கத் தமிழ்த் தேசியர்கள் அலட்டிக்கொள்வதில்லை. வன்னியிலும் கிழக்கிலும் 'அனைத்து இயக்கங்களும் ஒற்றுமைப்பட வேண்டும்' என்ற உணர்வு மேலோங்கி இருந்தது; யாழ்ப்பாணத்திலோ 'எதற்குப் பல இயக்கங்கள் வருகிறீர்கள், ஒரு இயக்கம் மட்டும் போராடினால் போதும்' என்ற குரல் மேலோங்கி ஒலித்தது. அதன் ஆயுதமேந்திய பிரதிநிதிகளாகப் புலிகள் வெளிப்பட்டனர்!

விடுதலைப் புலிகள் அமைப்பினுள் ஆரம்பம் முதலாக ஏகாதிபத்தியச் சார்புடைய மிஷனரிகளின் செல்வாக்கு வலுவுடன் காணப்பட்டது. எந்த மிஷனரிகள் எமக்கான பாதிப்பின் கொடுமுடிகளாக வருவரெனக் கண்டு நாவலர் எமது பண்பாட்டுத் தளத்தைப் பாதுகாக்க முனைந்தாரோ, அந்த அமைப்புகள் இன்றைய மேலாதிக்கத் தமிழ்த் தேசியத்தின் ஏகாதிபத்திய நாட்டத்துக்குள்ளே ஊடாடி இருக்கின்றன எனும் பின்னணி கவனிப்புக்குரியது.

## தலித்தியம்

தமிழ்த் தேசிய மக்களின் விடுதலைக்கான சரியான மார்க்கத்தைக் கண்டடையும் வாய்ப்புகளை மறுக்கும் வகையில், அனைத்து இயக்கங்களும் ஒன்றுபட்டு இயங்க இடமளிக்காமல் தனிவழி சென்ற மேலாதிக்கத் தமிழ்த் தேசிய இயங்குமுறை இன்றைய ஏகாதிபத்திய அணிக்குள் எம்மை ஆழ்த்தியுள்ளது; புலச்சிதறல் 'வாய்ப்புடன்' ஏகாதிபத்தியப் பரிணமிப்பை எட்டியுள்ள மேலாதிக்கத் தமிழ்த் தேசியர்கள் மட்டுமே தாயக மண்ணில் தமிழ்த் தேசிய விடுதலையின் சாத்தியப்பாட்டை இன்றும் மறுதலிக்கிறார்கள் என்றில்லை. இவர்கள் ஏதாயினுமொரு அதிதீவிரக் கோரிக்கை, சமஷ்டி என்பவற்றை முன்வைத்து 'அதையன்றி வேறெதனையும் ஏற்கப் போவதில்லை' என்று விடுதலைத் திசை மார்க்கத்துக்குரிய படிக்கட்டுகளைத் தகர்த்தெறிவர். நீண்டகால நோக்கில் தமிழ் மக்கள் உள்ளிட்ட இலங்கை முழுமையினது மக்கள் விடுதலை இலட்சியங்களைக் குழிதோண்டிப் புதைப்பதே அவர்களது குறிக்கோள். அதிதீவிரமாக தமிழின் தனிவழி என்ற அவர்களது கோசத்தை வீரஞ்செறிந்ததாகக் கருதும் பலரும் இவர்களே தமிழர் விடுதலைக்கு வழி சமைப்பவர்கள் என மயங்குவர்.

இன்னொரு தரப்பினர் தமிழ்த் தேசியத்தின் பேரால் முன்வைக்கப்படும் ஒடுங்கிய குறிக்கோளானது தமிழ் மேட்டுக்குடிகளுக்கு உரியது; அவர்கள் ஒடுக்கப்பட்ட மக்களைத் தொடர்ந்தும் வாட்டிவதைத்துச் சுரண்டுவதற்கானதே தமிழ்த் தேசியத் தனியலகு என்பர்; தமிழ்த் தேசியத்துக்கு எதிராக பேரினவாத யுத்தத்தை முன்னெடுக்கும் சிங்கள அரசாங்கங்களுடன் இணைந்து தலித் விடுதலையை வென்றெடுக்க வேண்டும் என்பது அவர்களது நிலைப்பாடு. சென்ற நூற்றாண்டின் நாற்பதாம் ஆண்டுகள் முதல் அறுபதாம் ஆண்டுகளின் இறுதிவரை ஒடுக்கப்பட்ட மக்கள் கொம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைமையின் கீழ் அணிதிரண்டு, அனைத்துச் சாதிகளையும் ஒன்றுபடுத்தி இங்கே போராடியதன் வாயிலாகச் சாதியத் தகர்ப்புக்குரிய பல சாதனைகளை நிகழ்த்தி இருந்தனர். அந்தப் போராட்டங்களுக்கு எதிராகச் செயற்பட்ட தமிழ்த் தேசியத்தை ஆரம்பத்தில் அவர்கள் நிராகரித்தபோதிலும், சிங்களப் பேரினவாதத்தின் யுத்தவெறி அடிநிலை மக்களின் வாழ்வாதாரங்களை நாசப்படுத்தியதுடன் அவர்களைத் தொடர்ந்தும் இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்து வந்தது; இளந்தலைமுறைத் தலித் போராளிகள் இயல்பாக யுத்த சாகரத்தில் ஈர்க்கப்பட்டபோது புலிகளால் கையகப்படுத்தப்பட்ட அணிக்குள் இயங்குவதன்றி வேறு சாத்தியப்பாடுகள் ஏதும் அவர்களின் முன்னே

இருக்கவில்லை. உத்தியோக ஆக்கிரமிப்புத் தமிழ்த் தேசியர்களில் இருந்து வேறுபட்ட தேசிய நலனைக் கொண்டிருந்த தலித் மக்கள், முன்னர் தம்மை தமிழர்களுக்குள் சிறுபான்மையினர் எனக் கருதும் வகையில் தீண்டாமை வாயிலாகப் புறக்கணிக்கப்பட்டு இருந்தனர். நாற்பதாம் ஆண்டின் நடுக்கூறில் உருவான 'சிறுபான்மைத் தமிழர் மகா சபை' என்ற அமைப்பாக்கத்தில் ஒடுக்கப்பட்ட அனைத்துச் சாதிப்பிரிவினரும் இணைந்து ஆதிக்க சாதியினரின் வேறுபடுத்தல்களுக்கு எதிராகப் போராடிய காலநிலை அப்படியே நீடித்திருப்பின், தமிழ்ப் புலிகளின் யுத்தகளத்தில் தலித் இளந்தலைமுறையினர் ஆகுதியாகி இருப்பரா? கொம்யூனிஸ்ட் கட்சி சரியான வழிகாட்டலை முன்னெடுக்காது போயிருப்பின், பௌத்த மதமாற்ற இயக்கம் வீறுடன் இயங்கத் தொடங்கிய நிலை வளர்ந்து, 'தலித் - தமிழ்ப் பௌத்த' இனத்தேசியம் ஒன்றை உருவாக்கி இருக்குமே? அதனை மேலாதிக்கத் தமிழ்த் தேசியம் எப்படிக் கையாண்டிருக்கும்? உடுத்த உடைகளுடன் முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டது போல 'பௌத்தத் தமிழர்கள்' வெளியேற்றப்பட்டிருப்பரா, கொன்றொழிக்கப்பட்டு இருப்பரா? நாற்பதாம் ஆண்டுகளில் இருந்து மூன்று தசாப்தங்களாகத் தொடர்ந்து போராடி அறுபதாம் ஆண்டுகளின் பிற்கூறில் உருவாக்கப்பட்ட 'தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்' புனிதமான - தீண்டத்தகாத சாதிகளென்ற பிளவாக்கத்தைத் தகர்க்கும் போராட்டங்களை முன்னெடுத்த காரணத்தாலேயே, வேறுபட்ட இரு தமிழர் நலன்கள் என்ற பேதங்கள் அகற்றப்பட்டு இருந்தது. இவ்வகையில் 'சிறுபான்மைத் தமிழர்' எனும் வேறுபடுத்தல் மார்க்சியர்களது போராட்டங்கள் ஊடாக அகற்றப்பட்டமையாலேயே ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிவின் இளம் தலைமுறையினர் தமிழ்த் தேசியச் சேனைக்குள் உள்வாங்கப்படுதலும் சாத்தியப்படலாயிற்று!

தொடர்ந்த விடுதலைக்காகப் போராட வேண்டிய தலித் மக்கள் இன்று மேலாதிக்கத் தமிழ்த் தேசியத்தின் வாலாக ஆக்கப்பட்டுள்ளனர் எனக் கண்டிக்கும் தலித்தியவாதிகள் சிங்களப் பேரினவாதத்துடன் உறவாடியவாறுள்ளனர். மேலாதிக்க உணர்வற்ற தமிழ்த் தேசிய இருப்பை அவர்களால் உணர இயலவில்லை; மேலாதிக்கத் தமிழ்த் தேசியத் தலைமை தவறு செய்த காரணத்துக்காகத் தலித் மக்களே பெரும்பான்மையினராக ஆகியுள்ள தாயக மண்ணின் தமிழ்த் தேசிய நலனைக் கைவிட வேண்டுமா? இறுதி யுத்தகளத்தில் பேரினவாத யுத்தவெறிக்குக் களப்பலியான ஒரு லட்சம் மக்களில் மிகப்பெரும்பான்மையினர் ஒடுக்கப்பட்ட மக்களல்லவா? மேட்டுக்குடிகள் ஏகாதிபத்திய நாடுகளில் இருந்தபடி "உள்ளே வரவிட்டு அடிக்கப்போவதாகக்" கதையளந்தபோது களத்தில் புலித் தலைவர்களின் மனிதக் கேடயங்களாக இழுபட்டுச் சென்ற மூன்று இலட்சம் மக்களில் பெரும்பான்மையானவர்கள் ஒடுக்கப்பட்ட மக்களே. அப்போது தலைமையைக் கடுமையாக விமரிசித்த போதிலும் பின்னரும் ஒடுக்குமுறைகளைத் தொடர்ந்த இலங்கை அரசின் பேரினவாத நடைமுறைகள் காரணமாகவே அனைத்தையும் மறந்து அதே மேலாதிக்கத் தமிழ்த் தேசிய அலைக்குள் மாட்டுப்படும் துர்ப்பாக்கியநிலை தலித் மக்களுக்கு ஏற்படலாயிற்று. இவ்வகையில் இயக்கம் கொண்டுள்ள எமது மண்ணின் உயிர்த்துடிப்பை உணராத புலச்சிதறல் சிந்தனையே இவர்களைத் தலித்தியவாத முடக்கத்துக்கு ஆட்படுத்துகிறது. தமிழகத்தில் தலித்தியவாதம் மேலோங்கி உள்ளதெனில், அங்கே மார்க்சியர்கள் தலித் மக்களது விடுதலைக்குத் தலைமையேற்கத் தவறியதன் பேறு அது!

இலங்கை மண்ணில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு கொம்யூனிஸ்ட் கட்சிகள் வழிகாட்டித் தலைமை ஏற்றிருந்த காரணத்தால் தலித்தியவாதம் இங்கே முனைப்படையவில்லை. அதேவேளை பேரினவாதப் புறக்கணிப்பு, ஒடுக்குமுறை என்பன வலுப்பட்டு வந்தபோது அவற்றுக்கு எதிராகக் கொள்கை வகுத்துக் களமாடி இன விடுதலை இலட்சியத்தை ஆற்றுப்படுத்தத் தவறியமையால் இங்கே இனவாதம் தலைவிரித்தாடும் நிலை ஏற்பட்டது. சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடிய போது ஆதிக்க - இடைநிலைச் சாதிகளைச் சேர்ந்த மக்களில் பெரும்பான்மையினர் சமூக நீதிக்காகப் போராடிய காரணத்தால் சாதியவாதப் பிளவாக்கம் சாத்தியப்படாமல் போனது. இன ஒடுக்குமுறைக்கு எதிராக மார்க்சியர்கள் போராட்டக்களத்தைத் தலைமையேற்று முன்னெடுத்திருப்பின் பேரினவாதத்தை எதிர்க்கும் மிகப்பெரும்பான்மையினரான உழைக்கும் - ஜனநாயக - முற்போக்குச் சிங்கள மக்கள் விடுதலைத் தமிழ்த் தேசியத்தை ஆதரித்து அணிதிரண்டு இருப்பர். இனவாதப் பிளவாக்கத்தைத் தகர்த்தபடி 'இலங்கைத் தேசத்தினுள்' சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையகம் எனும் நான்கு இனத்தேசியங்களும் மலே, பறங்கி மற்றுமுள்ள சிறுபான்மைப் பிரிவு மக்களும் ஒன்றிணைந்திருப்பர்.

தமிழ்த் தேசிய இயங்குதளத்தில் தலித் மக்களது இணைப்பு ஏற்பட்ட வரலாற்றுத்தடத்தைக் கவனங்கொள்ளாத புலம்பெயர் தலித்தியவாதிகள் தமிழ்த் தேசியத்தை மேட்டுக்குடிகளின் விவகாரமாக மட்டும் காண்பர். அந்த அணியின் சாதியகம்பாவம் அனைத்துக்குமே கருத்தியல் வழிகாட்டியாக இருந்தவர்

நாவலரே எனக் கூறியவாறு, அவரது வரலாற்று வகிபாகம் குறித்த பன்முகத் தேடல் ஏதுமின்றி ஒட்டுமொத்தமாக நிராகரிக்கின்றனர். தமிழ் மேட்டுக்குடிகளை 'விட்டுக்கொடுப்பின்றி' எதிர்ப்பதாகக் கூறியபடி சிங்களப் பேரினவாதக் கொலை பாதகங்களுக்குச் சாமரம் வீசுகின்றனர். உழைக்கும் தலித் மக்கள் இத்தகைய இரண்டக நிலைக்குச் சென்றதில்லை. அவர்களைவிட்டுக் காததூரம் விலகிவிட்ட 'தலித் பிரபுக்கள்' தம்மை அறியாமல் ஏகாதிபத்தியக் கைக்கூலிகளாகவும் மாறியுள்ளதைச் சுயவிமரிசன ரீதியாக ஏற்பது அவசியம்.

தமிழ்த் தேசியத்தை எதிர்ப்பதாகக் கூறியவாறு சிங்களப் பேரினவாத அரசுடன் கைகோர்க்கும் போது விடுதலைத் தேசிய முன்னெடுப்பை நாடிய தலித் மக்களுக்கு எதிராகச் செல்வதனை இவர்கள் உணரவில்லை. அந்தத் தலித் மக்களும் மேலாதிக்கத் தமிழ்த் தேசியத்தின் யுத்த முன்னெடுப்பில் களமாடிய தவறைச் செய்தனர் என்றால் அவர்களுக்கான சரியான தலைமை வழங்கப்படாத வெற்றிடத்தால் அது நேர்ந்தது என்பதனை ஏற்பது அவசியம். அந்த மேலாதிக்கத் தமிழ்த் தேசியத்தின் புரவலரான ஏகாதிபத்தியத்துக்கு உதவும் கைங்கரியத்தைத் தானே தலித் சிந்தனையாளர்களும் செய்கின்றனர்?

### விடுதலைத் தேசியம்

ஏகாதிபத்தியத் திசை மார்க்கத்தில் பிரித்தானியா பரிணமித்தபோது அதன் காலனிய ஒடுக்குமுறையை ஏற்றுக்கொள்ளாத ஜனநாயகப் பண்பாட்டை உடையவர்கள் எனும் தோற்றப்பாடு அமெரிக்க மிசனரிகளிடம் இருந்தது. யாழ்ப்பாணத்தின் கல்வி விருத்தியில் அவர்கள் வகித்த பங்குப்பாத்திரம் எமது பன்முக வளர்ச்சியில் சாதகமான பல விளைவுகளை ஏற்படுத்தி இருந்தது. அதேவேளை ஏற்படவுள்ள அடிப்படையான பாதகமான விளைவாக எமது பண்பாட்டைச் சிதைப்பதற்கான இடத்தை இனங்கண்டு அவர்கள் எதிர்காலத்தில் முன்னெடுக்கவுள்ள மேலாதிக்கத்துக்கு எதிரான போராட்டத்தை நாவலர் தொடக்கி வைத்துள்ளார். அதன்பொருட்டு அவர் முன்னெடுத்த பண்பாட்டுத் தேசியப் பாதுகாப்புக்கான முதல் நடவடிக்கைகள் காத்திரமானவை. ஏகாதிபத்திய அடிமைத் தளையைத் தகர்க்க முனைந்த நாவலரின் பண்பாட்டு அரசியல் பரிமாணத்தை மீறி அதே ஐக்கிய அமெரிக்க மேலாண்மைக்குத் துதிபாடுவோராக மேலாதிக்கத் தமிழ்த் தேசியர்கள் ஆட்பட்டுவிட்டமையால் ஆன்மீகத்தளத்தில் மட்டும், மட்டுப்படுத்தப்பட்ட அளவோடு நாவலரை மதிக்கப் பழகிவிட்டனர். இன்றைய சுரண்டல் அமைப்பின்

ஏகாதிபத்தியத் திசை மார்க்கத்தில் பிரித்தானியா பரிணமித்தபோது அதன் காலனிய ஒடுக்குமுறையை ஏற்றுக்கொள்ளாத ஜனநாயகப் பண்பாட்டை உடையவர்கள் எனும் தோற்றப்பாடு அமெரிக்க மிசனரிகளிடம் இருந்தது. யாழ்ப்பாணத்தின் கல்வி விருத்தியில் அவர்கள் வகித்த பங்குப்பாத்திரம் எமது பன்முக வளர்ச்சியில் சாதகமான பல விளைவுகளை ஏற்படுத்தி இருந்தது. அதேவேளை ஏற்படவுள்ள அடிப்படையான பாதகமான விளைவாக எமது பண்பாட்டைச் சிதைப்பதற்கான இடத்தை இனங்கண்டு அவர்கள் எதிர்காலத்தில் முன்னெடுக்கவுள்ள மேலாதிக்கத்துக்கு எதிரான போராட்டத்தை நாவலர் தொடக்கி வைத்துள்ளார்.

ஏகாதிபத்திய மேலமைப்புக்கு உரியவர்களான இவர்கள் அதற்கெதிரான நாவலரின் பக்கத்தை எவ்வாறு மதிப்புணர்வுடன் போற்ற இயலும்? நாவலரின் ஆன்மீகத்தளத்தில் நிலப்பிரபுத்துவ அமைப்பின் சாதிய வடிவிலான சுரண்டல் இருந்தது. அதன் பேரில் மேலாதிக்கத் தேசியம் அந்த முனைக்குரிய புனிதராக நாவலரைக் கொண்டாடுவதனைக் காரணமாக்கி எதிர்ப்பு அரசியலை முன்னெடுக்கும் தலித்தியர்கள் பேரினவாதத்துடன் இணக்கம் கொள்வர். பேரினவாத இலங்கை அரசுடன் எதிர்ப்பு அரசியலை முன்னெடுக்கும் மேலாதிக்கத் தமிழ்த் தேசியம் ஏகாதிபத்தியத்துடன் இணக்க அரசியலைக் கொண்டுள்ளது. தலித்தியர்கள் 'எதிரியின் நண்பர் எதிரி' என முடிவு செய்து ஏகாதிபத்திய எதிர்ப்பு அவர்களிடம் முன்னிலைப்படுமாயின் நாவலரை நிதானமாக அணுகும் வல்லமையைப் பெற்றிருப்பர்.

மக்கள் விடுதலையை வென்றெடுக்கும் போராட்டங்களை முன்னெடுத்துவரும் மார்க்சியர்கள் அத்தகைய நிதானமான மதிப்பீட்டை நாவலர் குறித்துக் கொண்டிருந்தனர். ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், பேரினவாதம் என்பன முன்னெடுக்கும் ஒடுக்குமுறைகளில் ஒன்றை எதிர்த்து மற்றதொன்றைச் சார்வதாக அன்றி அவையனைத்துக்கும் எதிராகப் போராடும் விடுதலைத் தேசிய சக்திகளின் நாவலர் குறித்த பார்வையைத் தொடர்ந்து விவாதிப்போம். இன்றைய இயங்குதளத்தில் குழப்பகரமான சிந்தனைப் பிளவாக்கம் ஏற்பட்டு இருப்பதில் காலனித்துவம் வகித்த பங்குப்பாத்திரம் குறித்து அடுத்த அமர்வில் அலசுவோம்!

இலங்கையின் மலையக நாட்டார் மரபு, அழகியலையும் வாழ்வியலையும் மட்டுமல்ல; எதிர்ப்புவாதச் சிந்தனைகளையும் வெளிப்படுத்துபவை. சமூக அடக்குமுறைகளுக்கு எதிராக மலையக மக்களிடையே தோன்றிய எதிர்ப்புணர்வுகள் பல்வேறு கலைவடிவங்களாகவும் உருமாறியுள்ளன. அவ்வகையில் சமூக அடையாளச் சிக்கல், உரிமை மறுப்பு, வரலாற்றுப் புறக்கணிப்பு, பொருளாதாரத் திண்டாட்டம் ஆகிய அனுபவங்களின் எதிரொலியாக, 'மலையக வீதிப்பாடல்கள்' உருவாகுவதைக் காண்கின்றோம். முச்சந்தி இலக்கிய வகையின் ஒரு முக்கியகூறாக விளங்கும் இப்பாடல்கள், எழுச்சிக் கோசங்களையும், அரசியற் சிந்தனைகளையும் முன்வைப்பவை. இப்பாடல்கள் சித்திரிக்கும் விடயப்பரப்புகளையும், அவற்றை இயற்றிய பாடலாசிரியர்களையும், அவர்களுக்குப் பின்னணியாக அமைந்த சூழ்நிலைகளையும் ஆவணப்படுத்தும் நோக்கம் கருதியதாக 'மலையக வீதிப்பாடல்கள்: சமூக, அரசியல் எழுச்சித் தாக்கங்கள்' எனும் இத்தொடர் பரிணமிக்கும். தலைப்பில் அமைந்தது போலவே, அவ்வாறு எழுந்த பாடல்கள் ஏற்படுத்திய சமூக, அரசியல் எழுச்சித் தாக்கங்கள் தொடர்பிலும் இத்தொடரின் உள்ளடக்கம் விரிவுபெறும்.

# மலையக வீதிப்பாடல்கள்: சமூக, அரசியல் எழுச்சித் தாக்கங்கள் – அறிமுகம்


**அருணாசலம் லெட்சுமணன்**



'ம.மா கொத் உனுக்கொட்டுவ தமிழ் வித்தியாலயத்தின்' அதிபரான அருணாசலம் லெட்சுமணன், 'நிகர்' சமூக கலை இலக்கிய அரங்கத்தின் பிரதம அமைப்பாளருமாவார். தேசிய, பன்னாட்டு ஆய்வரங்குகளில் பங்கேற்று ஆய்வுக்கட்டுரைகளை முன்வைத்து வருகிறார். 2023இல் மலேசியாவில் இடம்பெற்ற பதினோராவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் ஓர் ஆய்வுக்கட்டுரையை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தேசிய, பன்னாட்டு இதழ்களில் தொடர்ந்து எழுதிவருகிறார். பயண இலக்கியங்கள், சமூக, கலை, இலக்கிய, கல்வித்துறைச் செயற்பாடுகளில் ஆர்வம் மிக்கவர். இவர் ஒரு கவிஞருமாவார். சிறுவர் பாடல்கள், சிறுவர் இலக்கியம் தொடர்பான விமர்சனங்கள், ஆய்வுகளை தொடர்ந்து எழுதி வருகிறார். சிறுவர் கதைகள் எழுதுவதிலும் ஆர்வம் கொண்டவர்.

## புலப்பெயர்வும் மலையகம் எனும் சமூக உருவாக்கமும்

பூர்வீகத் தமிழர்களின் வரலாற்றுடன் தொடர்புடைய ஒரு சமூகம், தன்னை 'மலையகச் சமூகம்' என அடையாளப்படுத்துவதில் தொடர்ந்து முனைப்பைக்காட்டி வந்துள்ளது. இருநூறு வருடங்களுக்கு முன்னர் தென்னிந்தியாவில் இருந்து இலங்கைக்கு மேற்கொள்ளப்பட்ட புலப்பெயர்வை, 'புலம்பெயர வேண்டிய நிர்ப்பந்தம்' என்ற அடிப்படையில், ஆழமாக அணுக வேண்டிய தேவை நிலவுகிறது. பிரித்தானிய சாம்ராஜ்யத்தினதும், சுதந்திர இலங்கையினதும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பிய பணிகளில் பல தியாகங்களைச் செய்த சமூகமாக மலையகம் விளங்குகிறது. உரிமையற்ற கூலிச் சமூகமாகவே வரலாற்றில் காணப்பட்ட இச்சமூகம், பல்வேறு இன்னல்களை அனுபவித்த வரலாற்றைத் தன்னகத்தே கொண்டதாகவும், அதனை மனவுறுதியுடன் எதிர்கொள்ளும் சமூகமாகவும் பரிணமித்துள்ளது. இயற்கைச் சவால்கள் மத்தியிலும் எதிர்ப்பு உணர்வுகளை தன்னகத்தே வளர்த்துக்கொண்ட இச்சமூகம், அதை ஊக்கமாகக் கொண்டு தம்மை வடிவமைத்துள்ளது. கடுங் குளிருடன்கூடிய மார்கழி மாதங்களில், அதிகாலை குளித்து, ஊர்வலமாக வந்து வழிபாட்டில் ஈடுபடுவது, இதற்கான சிறந்த எடுத்துக்காட்டாகும். இதேபோல், பயிற்சி நிலையங்களில் இடம்பெறும் கூத்து நிகழ்வுகளில் தீயைக் கைக்கொள்வது போன்ற செயல்கள் அபரிமிதமான ஆன்ம உறுதியை வெளிப்படுத்துகின்றன. அம்மன் வழிபாட்டுச் சூழலில் தீமிதித்தல், வேல் குத்துதல் போன்ற ஆன்மபல விருத்தியை நோக்கிய பல்வேறு முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

மலையக சமூக உருவாக்கத்தின் அடித்தளமாக விளங்கும் நாட்டார் மரபில், அழகியலும் வாழ்வியலும் பிரதிபலிக்கின்றன. அதேநேரத்தில், மலையக நாட்டார் பாடல்கள் எதிர்ப்பும் எழுச்சியுமான சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றன. இவ்வகை உணர்வுகளின் மேலெழுச்சி, மலையக நாடக முயற்சிகளிலும் தெளிவாகக் காணப்படுகிறது. இந்த எதிர்ப்பு உணர்வை வெளிப்படுத்துவதிலும், எழுச்சிக் கோசங்களை முன்வைப்பதிலும், மலையக வீதிப்பாடல்களும் முக்கிய பங்கு வகித்துள்ளன. அடக்குமுறைகளுக்குள் அமுழ்த்தப்படுகின்ற எந்தவொரு இனமும், தாம் மீள எழுச்சியடையும் விருப்பத்துடன் குரலை உயர்த்துவது உலக வரலாற்றின் தொடர்ச்சியில் பதிவாகி உள்ளது.

அவ்வகையில் முச்சந்தி இலக்கிய வகையாக இவ் இலக்கிய வடிவம் முக்கியத்துவம் பெறுகிறது. பேராசிரியர் கா. சிவத்தம்பி, முனைவர் ஆ.இரா. வேங்கடாசலபதி, பேராசிரியர் செ. யோகராசா ஆகியோர் இவ்வகை இலக்கியம் தொடர்பில் ஆர்வத்தைக் காட்டியுள்ளார்கள். சமூக அவலங்களை அவதானித்த நிலையில் தனியொரு கவிஞனால் இவை பாடப்பட்டு வந்துள்ளன. இவை பின்னர் சிறுசிறு பிரசுரங்களாக அச்சில் வெளிவந்துள்ளன. இவ்வகை இலக்கியத்தை 'பாதி வாய்மொழிப் பாடல்கள்', 'எழுத்து நிலைபெற்ற வாய்மொழிப் பாடல்கள்' என வகைப்படுத்த முயற்சிக்கின்றனர். இலங்கையில் இந்திய வம்சாவளித் தமிழர்கள், புலப்பெயர்வு வேதனைகளை நாட்டார் பாடல் வடிவில் ஆவணப்படுத்தியுள்ளார்கள். அப்பாடல்களில் எதிர்ப்புவாதச் சிந்தனைகளும் மேலோங்கியிருப்பது அவதானத்திற்குரியதாகும். அதிலிருந்து மேலோங்கிய நிலையில் எதிர்ப்புவாதத்தை முதன்மைப்படுத்துகின்ற போக்கில் பாடலை இயற்றிப் பிரசாரப்படுத்தியதில் முதன்மையானவராக மீனாட்சியம்மாள் நடேசய்யர் கொள்ளப்படுகிறார். இலங்கையின் நாடகத்துறையின் முன்னோடி தேசபக்தன் கோ. நடேசய்யரின் 'தொழிலாளர்களின் அந்தரப் பிழைப்பு' நாடகப் பிரதியாக்கத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடல்கள் இவ்வாறான அணுகுமுறையில் உருவாக்கப்பட்டவைகளாகும். இப்பாடல்களில் தொழில் உரிமை தொடர்பான கருத்தியல்கள் வலிமை பெறுகின்றன.

## உரிமை மறுப்பும் மலையக மக்களும்

சுதந்திர இலங்கையில், இந்திய வம்சாவளி மக்களுக்கான வாக்குரிமைப் பறிப்பு, பிரஜா உரிமை பறிப்பு, கல்வியுரிமை மீதான தடைகள் போன்றவை இம்மக்களிடம் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தின. மனித உரிமைகளை உறுதிப்படுத்தும் ஐக்கிய நாடுகள் சபை உருவான பின்னரும், இத்தகைய துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் நிகழ்ந்தன என்பது வரலாற்றின் இருண்ட பகுதியாகவே பார்க்கப்படுகிறது.

இந்த நிலைமையின் தொடர்ச்சியாக அமுல்படுத்தப்பட்ட ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம், இந்திய வம்சாவளியினர் மத்தியில் மிகுந்த கவலையையும் அவமானத்தையும் ஏற்படுத்தியது. குடியுரிமைக்கான உரிமையை எதிர்பார்த்த ஒரு சமூகத்தை, 'மந்தைக் கூட்டம்' போன்று பிரித்து அனுப்பும் முனைப்பே இவ்வொப்பந்தத்தின் மையமாக அமைந்தது. இலங்கையில் நூற்றாண்டைக் கடந்த பின்னணியைக் கொண்ட குடும்பங்களும், சமூகங்களும் இந்த ஒப்பந்தத்தால் வேறுபாடுகளுக்கு உள்ளாயின. இந்திய வம்சாவளித் தமிழர்கள் தங்களை 'மலையக மக்கள்' என அடையாளம் காண முனைந்தபோதும், அவர்களைப் பாதித்த இந்த அனுபவம் மனங்களில் நீங்காத கறையாகவே பதிந்துவிட்டது. இத்தகைய அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு உருவான பாடல்களே 'வீதிப்பாடல்கள்' என அழைக்கப்படுகின்றன.

மேலும், தென்னிந்தியாவில் உருவான திராவிடக் கருத்தியலும், அக்காலத் தமிழகச் சினிமாச் சூழலும் இத்தகைய சமூகநிலைகளில் தாக்கத்தை ஏற்படுத்தின. திராவிட இயக்கத்தின் வாதங்களை எதிரொலிக்கின்ற பாடல்களும், புரட்சிகரக் கலைப்பாடல்களும் மலையகத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தின. அவற்றின் மொழியிலும் நடைமுறையிலும் ஏற்பட்ட தாக்கங்களால் பல வீதிப்பாடல்கள் உருவாயின என்பது கவனிக்கத்தக்க விடயமாகும்.

மலையகம் எனும் சமூக உருவாக்கத்தின் ஏக்கத்திலிருந்து எழுந்த இந்தப் பாடல்கள் 'மலையக வீதிப்பாடல்கள்' எனச் சிறப்பித்துக் கூறப்படுகின்றன. இப்பாடல்கள் சித்திரிக்கும் விடயப்பரப்புகளையும், அவற்றை இயற்றிய பாடலாசிரியர்களையும், அவர்களுக்குப் பின்னணியாக அமைந்த சமூக - அரசியல் சூழ்நிலையையும் ஆவணப்படுத்துவது காலத்தின் தேவையாகும்.

### நாட்டார் பாடல், வீதிப்பாடல்களுக்கிடையிலான தொடர்புநிலை

மலையக நாட்டார் பாடல்களில் அழகியல் வர்ணனைகளுக்கு குறைவில்லாதபோதிலும், சமூகப் பாதிப்புநிலைகளும் விரிவாகப் பாடப்படுவது கவனிக்கத்தக்க அம்சமாகும். தமிழகச்சூழலில் பிறந்து வளர்ந்த மக்கள், தமிழர்களின் பூர்வீக உணர்வுடன் வாழ்ந்து பழகிய அனுபவத்தைக் கொண்டவர்களாக இருந்தனர். ஆனால், பிரித்தானியர்களின் காலனித்துவத் திட்டத்திற்குள் அகப்பட்டு, புலம்பெயர்ந்த இம்மக்கள் இலங்கையில் சிறுபான்மை இனக்குழுமமாக அடையாளப்படுத்தப்பட்டனர். இந்தக் கடினமான மாற்றத்தை எதிர்கொண்ட இம்மக்கள், அந்தநிலையை விரும்பாத மனநிலையுடன் வாழ்ந்தனர் என்பதை இப்பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. தமிழகத்தில் நிலவிய பஞ்சநிலைமை, இந்தப் புலப்பெயர்வுக்கு ஒரு முக்கியத் தூண்டலாக இருந்தபோதும், இலங்கையின் வளத்தின்மீது காட்டப்பட்ட ஆசைச் சொற்களும் இந்த இடப்பெயர்வுக்கு காரணமாக இருந்ததைக் குறிப்பிட்டுக் கூறலாம். முழுமையான விருப்பமின்றி கட்டாயத்தால் அழைத்துவரப்பட்டதற்கான அனுபவங்களும் மலையக நாட்டார் பாடல்களில் வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளன. அவ்வாறு அமைந்த பாடல்களுக்கு எடுத்துக்காட்டாக பின்வரும் பாடலைக் கவனிக்கலாம்.

"கண்டிக்கு போறோமுன்னு
கறி சோறு தின்னுப்புட்டு..
தோணி ஏற மாட்டமுன்னு
தொங்கலிலே ஒழிஞ்சிக்கிட்டா..
தங்கரத்தினமே..! அவனத்
தொலைச்சுடுவான் ஆளுக்காட்டி
பொன்னே ரத்தினமே..!
எட்டடி குடிசையிலே..
இருப்பது நியாயமில்லே..
எமலோகம் போகலாம் வாடி தாயே..
பட்டுப் பாவாடை கட்டி..
பகட்டு மினுக்கிக் கொண்டு
பரதேசம் போகலாம் வாடி – தாயே..!
பரதேசம் போகலாம் வாடி!

இலங்கையில்பட்ட வேதனைகளைப் பதிவு செய்யும் பின்வரும் பாடலடிகளும் கவனத்திற்குரியவைகளாகும்.

"எட்டுப் பேர் சேவகரும்
இலங்கைக்கே போனதிலே..
எட்டு பேர் வந்ததென்ன – நீங்க
இலங்கையிலே மாண்டதென்ன?
அடி அளந்து வீடு கட்ட – நம்ம
ஆண்ட மனை அங்கிருக்க..
பஞ்சம் பொழைப்பதற்கு
பாற்கடலைத் தாண்டி வந்தோம்!
பஞ்சம் பொழைக்கலையே – நாம
பட்டணம் போய்ச் சேரலையே..?
ஊரான ஊரிழந்தேன்..
ஒத்தப்பனைத் தோப்பிழந்தேன்..
பேரான கண்டியிலே..
பெத்த தாயை நான் இழந்தேன்.
பாதையிலே வீடிருக்க..
பழனி சம்பா சோறிருக்க
எரும தயிரிருக்க..
ஏண்டி வந்த கண்டிச் சீமை?"

இப்பாடல்கள் இலங்கைக்கான புலப்பெயர்வில் ஈடுபாடு இல்லாத தன்மையின் வெளிப்பாடுகளாக அமைந்தமையை அறியலாம். அதுபோலவே வாழ்விடச் சூழலிலும் தொழிற்களங்களிலும் எதிர்ப்புணர்வைக் காண்பிக்கும் வகையில் எழுந்த பாடல்களும் அவதானத்திற்குரியவைகளாகும். தாங்கள் அனுபவிக்கும் பாதிப்புநிலைகளை பதிவு செய்யும் இப்பாடல்கள், அவ்வனுபவங்களை எதிர்க்கும் கருத்தியல் முனைப்புகளையும் கொண்டிருக்கின்றன.

"கூடயில கொழுந்துமில்லே
கொழுந்தெடுக்க சிந்தையில்லே
கங்காணி சொன்ன சொல்லு

கண்ணீரா கொட்டுதடி..!
ஓடி ஓடி கொழுந்தெடுத்தேன்
ஒரு கூட கொழுந்தெடுத்தேன்
பாவி கணக்கப்புள்ள
பத்து றாத்த சொல்லுறானே..!
கல்லாறு தோட்டத்திலே
கண்டாக்கையா பொல்லாதவன்
மொட்டே புடுங்தின்னு
மூனாள வெரட்டிப் போட்டான்..
அவ்வாறே,
"எண்ணிக் குழி வெட்டி
இடுப்பொடிஞ்சி நிக்கையிலே
'வெட்டு வெட்டு' எங்கிறானே
வேலையத்த கங்காணி"

என்ற வசைமொழிகளும் குறிப்பிடத்தக்கவைகளாகும். செவிவழியாக பேணப்பட்டு வந்த பாடல்களிலும் தங்கள் எதிர்ப்புணர்வை வெளிக்காட்டியுள்ளதுடன் இருப்புத் தொடர்பான ஏக்கங்களையும் பதிவு செய்துள்ளார்கள். நாட்டார் பாடல்களைத் தொடர்ந்து அதன் தொடர்ச்சி நிலையில் கருத்துகளை எழுத்தாக்கமாகப் பதியும் முனைப்பில் மலையகக் கவிதைகள் உருவாக்கத்திற்கான களங்கள் அமையப்பெற்றுள்ளன. அதன் தொடர்ச்சி நிலையிலேயே மலையகச் சிறுகதைகள், நாவல்கள் என்றவாறு பரிணாமம் பெற்று மலையக இலக்கியத்துறையின் வளர்ச்சிநிலைக்கு தூண்டுதலாக அமைந்தது எனலாம். இத்துறைகளைப் போன்றே நாடகத்துறையின் பரிமாணமும் அவதானத்திற்குரியதாகும். இலங்கையின் நாடக முயற்சிகளுக்கு முன்னோடியாக மலையகம் விளங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இந்நாடகங்களில் பாடப்பட்ட பாடல்கள் முக்கிய கவனத்தைப் பெறுகின்றன. இப்பாடல்களின் வீரியத்தன்மை மற்றும் கருத்துநிலைகள் மலையக மக்களிடத்தே அதீத ஈடுபாட்டை ஏற்படுத்தியுள்ளது.

### இலங்கையின் நாடகத்துறையின் முன்னோடிகளாக மலையகத்தவர்கள்

பொதுவாக இலங்கையின் நாடகத்துறை வரலாற்றைப் பின்வருமாறு வரையறுக்கும் போக்குக் காணப்படுகிறது. சிங்கள நாடக மரபு 1950களின் பின்னர்தான் பேராசிரியர் சரத் சந்திர தலைமையில் பரிமாணம் எடுத்ததாகக் கூறுவர். அதுபோலவே பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் தமிழ் நாடக மரபு வளர்ச்சி பெற்றதாகவும் குறிப்பிடுவர். இக்கூற்றுகளுக்கு அமைய ஐம்பதுகளுக்குப் பின்னர் தமிழ் நாடக மரபும், சிங்கள நாடக மரபும் சமாந்தரமான வளர்ச்சிநிலையை அடைந்து வந்ததாகக் குறிப்பிடுவர். இந்நாடக முயற்சிகள் தொடர்பான பதிவுகளில் மலையக சமூகம் மீதான அவதானம் இடம்பெறாமை கவலைக்குரிய விடயமாகும். மாறாக முப்பதுகளிலேயே கோ. நடேசய்யர் 'இலங்கைத் தோட்ட இந்தியத் தொழிலாளர் அந்தரப் பிழைப்பு' எனும் நாடக நூலை வெளியிட்டுள்ளார். இலங்கையின் நாடகச் சூழல் பற்றிய அவதானத்தில் மலையகத்தின் வகிபங்கு தொடர்பான ஆதாரங்கள் எடுத்துக்கூறப்பட்டதன் பின்னரே இலங்கையின் நாடகத்துறை வளர்ச்சியை மீள்பரிசீலனை செய்கின்ற போக்கு உருவாகியது. இத்துறை தொடர்பான அழுத்தமான எழுத்துகளின் விளைவாகவே மலையக நாடக முன்னெடுப்புகள் தொடர்பான அவதானமும் கருத்திற் கொள்ளப்படுகின்றமை கவனிக்கத்தக்கது. கோ. நடேசய்யரின் 'இலங்கைத் தோட்ட இந்தியத் தொழிலாளர் அந்தரப் பிழைப்பு' நாடக நூலே, இலங்கையின் முதலாவது அரசியல் நாடகநூல் என்பதை நாடக உலகு ஏற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.


கோ.ந. மீனாட்சியம்மாள்
Image source - www.keetru.com

நடேசய்யரின் நாடகநூலின் மற்றுமொரு பரிமாணமாக எழுச்சிப் பாடல்களைத் தந்த திருமதி. மீனாட்சியம்மாள் நடேசய்யரின் வகிபங்கை எடுத்துக்கூறலாம். இலங்கையின் அரசியல் கவிதைகளை முதலில் தந்த பெண் ஆளுமையாக மீனாட்சியம்மாள் நடேசய்யர் கருதப்படுகிறார்.

மலையகக் கவிதை இலக்கியத்துக்கு வலிமை சேர்த்ததில் முதன்மையானவராகவும் அம்மையார் அமைகிறார். இலங்கையின் பெண் கவிதை ஆளுமையாக பத்மாசினி அவர்கள் விளங்குகின்ற அதேநிலையில் மீனாட்சியம்மாளின் சமகாலத்திற்கு உட்பட்டவராகவும் அவர் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. மீனாட்சியம்மாள் நடேசய்யர் தொழிலாளர்களின் அந்தரப் பிழைப்பு நாடகத்திற்கான பாடல்களை இயற்றியதுடன் தொடர்ந்து வீதிப்பாடல்களுக்கே உரியவகையில் பல பாடல்களை இயற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. மலையக இலக்கியத்தின் தனித்துவத்திற்கு பல இலக்கிய வடிவங்கள் பங்களிப்பை வழங்கியுள்ளன. அவ்வகையில் எழுச்சிபெற்ற இலக்கிய வடிவமாக மலையக வீதிப்பாடல்கள் தனித்துவம் பெறுகின்றன. 1800களின் இறுதிப்பகுதியில் இருந்தே மலையகம் நாடகத்துறையிலும் தன்னை ஈடுபடுத்திக்கொள்வதில் ஆர்வங்காட்டி வந்துள்ளது. அதற்கு முன்பதாகவே பாரம்பரியக் கூத்துகளை பயில்நிலைக்குரியதாக ஆற்றிய அனுபவத்தின் தொடர்ச்சி நிலையாகவும் இவ் ஈடுபாட்டை அவதானிக்கலாம்.

மலையக நாடகத்துறை வளர்ச்சிக்கு அடித்தளமிட்ட சமகாலத்திலேயே வீதிப்பாடல்கள் ஊடாக எழுச்சிக் கருத்துகளை பரப்பும் முனைப்பு இடம்பெற்றுள்ளது. அக்கால எழுச்சிப்பாடல்கள், தாயகமான தமிழகத்தின் மீதான ஏக்கத்தையும், மீண்டும் தமிழகம் நோக்கி நகரவேண்டும் என்ற ஆவலையும் வெளிப்படுத்தியதோடு, புலப்பெயர்வைப் பற்றிய எதிர்ப்பையும் உள்ளடக்கியதாக இருந்தன. எடுத்துக்காட்டாக "இந்தியாவிலிருந்து அந்நிய நாடுகளுக்கு கூலிவேலை செய்யப் போகும் தொழிலாளர்களுடைய நிலைமை விருத்தியடைய வேண்டுமானால் இந்தியாவிலிருந்து தொழிலாளர் வருவது குறைய வேண்டும். இந்தியாவில் கிராம புனருத்தாரண வேலை ஆரம்பிக்கப்பெற்று அவர்களது நிலைமையை உயர்த்த வேண்டும். கிராம புனருத்தாரண வேலை ஆரம்பிக்கப்பட்டால் இந்தியத் தொழிலாளர் அந்நிய நாடு போவது குறைவதோடு, அந்நாடுகளில் அவதியுற்று திரும்பாது இந்தியச் சகோதரர்களுக்கும் தாய் நாட்டில் உழைப்புக்கிடமுண்டாகும் என்பது திண்ணம்." என்ற கோ. நடேசய்யரின் 'தொழிலாளர்களின் அந்தரப் பிழைப்பு' நாடக நூலுக்கான முன்னுரை வரிகளைக் குறிப்பிடலாம்.

#### மலையக வீதிப்பாடல்களை ஆவணப்படுத்தும் பிரயத்தனங்கள்

மலையக வீதிப்பாடல்களை சேகரிக்கும் செயற்பாடுகள் குறித்த அவதானத்தில் மூத்த எழுத்தாளர் மு. சிவலிங்கம் அவர்களது பணி குறிப்பிடத்தக்கதாகும். மலையக நாட்டார் பாடல்களைச் சேகரிக்கும் முனைப்பில் ஈடுபட்டிருந்த மு. சிவலிங்கம் அவர்கள் 2007 ஆம் வருடம் 'மலையகத் தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள் (பல்வகை சேர்க்கை)' எனும் தலைப்பில் தொகுப்பொன்றினை வெளியிட்டிருந்தார். சிறுசிறு நூல்களில் இருந்த வீதிப்பாடல்கள் இத்தொகுப்பின் ஊடாக ஆவணப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதுபோலவே மலையக அசைவியக்கத்தின் முக்கிய ஆளுமையாக விளங்கும் சிவ. இராஜேந்திரன், ஸ்ரீபாத தேசியக் கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளராகக் கடமையாற்றிய காலத்தில் (2008 ஆம் வருடம்) மலையக ஆவணங்கள் தொடர்பிலான கண்காட்சியை ஏற்பாடு செய்திருந்தார். அக்கண்காட்சியில் கணிசமான வீதிப்பாடல் தொகுப்புகளை பார்வையிடும் சந்தர்ப்பம் சமூகத்தினருக்கு கிடைத்தது. 2011 ஆம் வருடம் 'சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்' சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டை கொழும்பில் நடத்தியது. இம்மாநாட்டில், பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் அம்மையாரின் தலைமையில் இடம்பெற்ற ஆய்வரங்கில் 'மலையக வீதிப்பாடல்களின் உள்ளடக்கமும் அவை வெளிப்படுத்திய எழுச்சித் தாக்கங்களும்' எனும் தலைப்பில் ஆய்வாளர் அ. லெட்சுமணன் அவர்களினால் ஆய்வுரை முன்வைக்கப்பட்டது. இவ் உரையின் பின்னர், தலைமை வகித்த பேராசிரியர் அம்மையார் இவ் ஆய்வுரை தொடர்பாகச் சிலாகித்து, முதற்தடவையாக சர்வதேச தளத்தில் மலையக வீதிப்பாடல்கள் தொடர்பான பதிவுகள் இடம்பெற்றமை தொடர்பிலும் கருத்துகளைப் பதிவு செய்திருந்தார். இவ் அரங்கில் பங்கேற்றிருந்த பேராசிரியர் செ. யோகராசா அவர்களும் இவ் உரை தொடர்பிலும், மலையக வீதிப்பாடல்கள் தொடர்பிலும் கருத்துகளை முன்வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து தினக்குரல் பத்திரிக்கையின் இணை வெளியீடான 'உதயசூரியன்' இதழில் மலையக வீதிப்பாடல்கள் தொடர்பான விவரணத் தொடர் கட்டுரை அ. லெட்சுமணனால் எழுதப்பட்டது. பின்னாளில் 'ஈழத்து முச்சந்தி இலக்கியம்' எனும் தலைப்பில் மலையக வீதிப்பாடல்களின் கருத்து நிலைகளையும் உட்படுத்திய ஆய்வு நூலினை செ. யோகராசா வெளியிட்டிருந்தார். 2012 ஆம் வருடம் கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகம் பெ. முத்துலிங்கத்தின் தொகுப்பில் 'பரதேசம் போன தமிழர்களின் பரிதாபப் பாடல்கள்' எனும் தலைப்பிலான மலையக வீதிப்பாடல்களின் தொகுப்பொன்றினை வெளியிட்டிருந்தது. அண்மைக்காலத்தில் கோ. நடேசய்யரின் 'தொழிலாளர்களின் அந்தரப் பிழைப்பு' நாடக நூலின் மீள்பதிப்பும் மலையக வீதிப்பாடல்கள் குறித்த அவதானத்தில் கவனத்தை ஏற்படுத்தியுள்ளது. அவ்வாறே

அண்மைக்காலத்தில் எம்.எம். ஜெயசீலன், ஜெ. ஹறோசனா ஆகியோரின் 'கோ. மீனாட்சியம்மாளின் படைப்புகள்' தொகுப்பும், அதனுடன் தொடர்புபடும் படைப்புகளும் முக்கியத்துவம் பெறுகின்றன.

### மலையக நாட்டார் பாடல்களைத் தொகுக்கும் முயற்சிகள்

மலையக நாட்டார் பாடல்களை நூலுருவில் ஆவணப்படுத்தும் முயற்சியில் சி.வி. வேலுப்பிள்ளை அவர்களது பணி குறிப்பிடத்தக்கது. மலையக இலக்கியத்தின் காத்திரத்திற்கு அடித்தளமிட்டதில் சி. வி. வேலுப்பிள்ளை அவர்களுக்கு முக்கிய இடம் உள்ளது. சி.வி அவர்கள் ஆவணங்களைக் காப்பதிலும் ஈடுபட்டுள்ளார். அதன் தொடர்ச்சி நிலையில் சி.வி வாழ்ந்த மண்ணிலிருந்து வந்த சுப்பையா இராஜசேகரனின் ஆவணப்படுத்தும் நடவடிக்கைகளும் அவதானிக்கத்தக்கதாகும். 1976 ஆம் வருடம் இடம்பெற்ற 'மாமன் மகளே' (மலைநாட்டு மக்கள் பாடல்கள்) எனும் தலைப்பிலான நூலாக்க முயற்சியும் சிறப்பிற்குரியதாகும். இது கடந்த 2023 ஆம் வருடம் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய மலையக நாட்டாரியல் ஆய்வரங்கு நிகழ்வில் பேராசிரியர் ஸ்ரீ பிரசாந்தன் அவர்களினால் மீள்பதிப்புப் பெற்றிருந்தது. மலையக நாட்டார் பாடல்கள் மலையக கலை, இலக்கிய, அரங்கியல், ஆய்வு முயற்சிகளுக்கு சான்றுகளாகவும் ஊடகமாகவும் அமைந்துள்ளமை கவனத்திற்குரியதாகும். மலையக நாட்டார் பாடல்களை ஆவணமாக்கும் முயற்சிகளில், ஏ.வி.பி. கோமசின் 'அங்கமெல்லாம் நெறஞ்ச மச்சான்' எனும் கதை வடிவ ஆவணப்படுத்தலும் குறிப்பிடத்தக்கதாகும். அதன் தொடர்ச்சி நிலையில் 2004 ஆம் வருடம் ஸ்ரீபாத தேசியக் கல்வியியற் கல்லூரியின் ஐந்து ஆசிரியர், மாணவர்கள் முன்னெடுத்த 'கண்டி சீமையிலே' எனும் மலையக நாட்டார் பாடல்களின் தொகுப்பு முயற்சி இத்துறை ஆர்வலர்களுக்கு மகிழ்வைத் தருகின்ற விடயமாக அமைந்திருந்தது. 2007 ஆம் வருடம் இடம்பெற்ற மு. சிவலிங்கம் அவர்களின் தொகுப்பு முயற்சியும் வரவேற்கத்தக்கதாகும். இவ்வாறு மலையக நாட்டார் பாடல்களைத் தொகுதிகளாக்க வேண்டியதை உணர வேண்டியது காலத்தின் தேவை ஆகும்.

### பாதி வாய்மொழிப் பாடல்கள்

'மலையக வீதிப்பாடல்கள்' மலையக நாட்டார் பாடல்களுக்குரிய தன்மையில் வளர்ச்சிபெற்று விளங்கினாலும், நாட்டார் பாடலில் இருந்து வேறுபடுகின்றவையாகும். நாட்டார் பாடலை இயற்றிய பாடலாசிரியர்களை அடையாளப்படுத்த


இந்தியத் தொழிலாளர்
அந்தரப் பிழைப்பு நாடகம்.

கோ. நடேசய்யர்
இயற்றியது.

ஸ்ரீமதி. கோ. ந. மீனாட்சியம்மாளால்
இயற்றப்பெற்றவை.

(விலை 50 சதம்.)

Image Source : www.namathumalayagam.com

முடியாது. மாறாக வீதிப்பாடலாசிரியர்கள் தம்மை அடையாளப்படுத்தியே இப்பாடல்களை அறிமுகம் செய்துள்ளனர். குறைந்த பக்கங்களைக் கொண்ட சிறு நூல்களாக அமையப்பெற்றுள்ள இத்தொகுப்பு நூல்களில், பாடலாசிரியர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருக்கும். பாடலுக்குரிய மெட்டும் இராகமும் குறிப்பிடப்பட்டிருக்கும். மேலும் இத்தொகுப்பில் உள்ள பாடல்களை எழுதியவரே பாடல்களைப் பாடி நூல்களை விற்பனை செய்யும் வழக்கமும் இருந்துள்ளது. ஏலவே இருக்கின்ற பாடலின் மெட்டுகளைத் தழுவிய வகையில் இப்பாடல்கள் அமையப்பெறும். வீதிப்பாடல்களை ஓரளவு வாய்மொழிப் பாடல்கள் அல்லது பாதி வாய்மொழிப் பாடல்கள் என வரையறுப்பர். இலங்கையின் வேறு பிரதேசங்களிலும் இவ்வகையான பாடல்களின் தாக்கம் ஏற்பட்டுள்ளது. சிங்களத்திலும் வீதிப்பாடல்களுக்குரிய அம்சங்களுடன் பாடல் பாடும், சிறு நூல்களை விற்பனை செய்யும் மரபு காணப்பட்டுள்ளது. அவர்கள் 'தாள் பாட்டுக்காரர்' (கொள கவி காறயா) என அழைக்கப்பட்டுள்ளார்கள்.

எழுத்து நிலை பெற்ற வாய்மொழிப் பாடல் மரபு (*Semi Oral*), தமிழில் கவனிக்கப்படாத ஓர் இலக்கிய வகை என்பார் பேராசிரியர் கா. சிவத்தம்பி. பேராசிரியரது வகைப்படுத்தலுக்கான விளக்கம் பின்வருமாறு

அமைகிறது. “இவ்வகைப் பாடல்களை முற்றுமுழுதாக நாட்டார் வழிப்பட்ட பாடல்களுடன் சேர்த்துவிட முடியாது. ஏனென்றால் நாட்டார் பாடல் நிலைக்குள்ள, ஆசிரியர் தெரியாமை அல்லது ஒட்டுமொத்தக் கூட்டுநிலை ஆசிரியர் தன்மை இங்கு காணப்படவில்லை. இங்கு குறிப்பிட்ட ஒருவர் - கவிஞர் அல்லது புலவர் - எழுதுவார், சிலவேளை அவரே அதனை மக்களுக்கு முன்னால் வாசிப்பார். இன்றேல் சிலர் வாங்கி வாசித்துக்காட்டி விற்பார்கள். ஆகவே உண்மையில் இதனுடைய தொடர்பு வலு என்பது வாய்மொழி நிலைப்பட்டதுதான்.” அவருடைய கருத்தின்படி சங்ககாலம் தொடக்கமே இவ்வாறான பாடல் மரபு வளர்ந்து வந்துள்ளமையை அறியலாம். புலவர்களைப் போன்று கல்வி அறிவைப் பெறாதவர்களை ‘கல்லாவாய் பாணர்கள்’ என வகைப்படுத்துவார்கள். இந்தப் பாணர்கள் பற்றி அதிக கவனம் செலுத்தப்படவில்லை. இவ்வகையான பாணர் பாரம்பரியத்தின் வளர்ச்சி அல்லது உருமாற்றந்தான் வீதிப்பாடல்களை ஒத்த பாடல்களின் வளர்ச்சி நிலையாக நோக்கப்படுகிறது.

## ‘முச்சந்தி’ இலக்கியமாக வகைப்படுத்தல்

பாதி வாய்மொழிப் பாடல்கள் நீண்டகாலமாகவே பாடப்படுகின்ற நிலையில், மலையகத்தைப் பொறுத்தமட்டில் அது வீதிப்பாடல்கள் என்றே அழைக்கப்படுகிறது. சமூகத்தின் சிக்கலான தன்மைகளையும், பாதிப்பு நிலைகளையும் எடுத்துக்கூறி அந்நிலைமைகளில் இருந்து மீட்சிபெறும் நோக்கில், அதற்கான தீர்வும் விடிவும் வேண்டும் முனைப்பை வலியுறுத்துவதை இது நோக்காகக் கொண்டமைந்துள்ளது. இங்கு பாடல் புனையும் வித்துவத்தைவிட, சமூகப் பிரச்சினைகள் மற்றும் நிகழ்வுகளை வலியுறுத்துவதே முக்கியமாக அமைவது குறிப்பிடத்தக்கது. இலங்கையின் வடக்கு, கிழக்கு, மற்றும் தென்னிலங்கையிலும் இவ் எழுச்சிப்பாடல் மரபு முறைமை இருந்து வந்துள்ளது. இவ்வகையான எழுத்து நிலைபெற்ற வாய்மொழிப் பாடல்களை முனைவர் இரா. வேங்கடாசலபதி ‘முச்சந்தி’ இலக்கியம் என அடையாளப்படுத்துகிறார். சந்தை, திருவிழா, வீதி, பாலம் ஆகிய பொது இடங்களில் பாடப்படுவதனால், இப்பாடல் மரபினை முச்சந்தி இலக்கியம் என வரையறை செய்வதாய் அவர் கருத்துரைக்கிறார். அதன் தொடர்ச்சியாக, இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில், வெவ்வேறு இனச் சமூகங்களிடையே பாடப்பட்டுவந்த பாடல்கள், ‘ஈழத்து முச்சந்தி இலக்கியம்’ எனும் வரையறைக்குள் உட்படுத்தப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

முச்சந்தி இலக்கியம் தொடர்பான பார்வைக்கு வலிமை சேர்க்கும் கலாநிதி செ. யோகராசாவின் “புதுவகையான வாய்மொழிப் பாடல் மரபென்றினை என்னால் அவதானிக்க முடிந்தது. ஏற்கனவே அறியப்பட்ட வாய்மொழிப் பாடல் மரபு ஆசிரியர் தெரியாத நிலையிலும், ஒட்டுமொத்தக் கூட்டுநிலையிலும் வெளிப்பட்டுள்ளது. மாறாக இம்மரபு தனி ஒரு கவிஞரால் வாய்மொழியாகப் பாடப்பட்டு வந்துள்ளது. அச்சு வந்த பின்னர் சிறு பிரசுரங்களாக வெளிவந்துள்ளது, வெளிவருகின்றது. இவ்வகைப் பாடல்களின் பாடுபொருள் பிரதேச வேறுபாடுகளுக்கமைய தனித்துவப் பண்புகளைப் பெற்றிருப்பதே அதற்கான காரணமாகிறது” என்ற கூற்று கவனத்திற்குரியதாகும்.

## முச்சந்தி இலக்கிய வகையில் முக்கிய அங்கமாக ‘மலையக வீதிப்பாடல்கள்’

இலங்கையில் மிகுந்த அடக்குமுறைக்கு உட்பட்ட சமூகமாக மலையகச் சமூகம் திகழ்கின்றது. காலனித்துவப் பிடிக்குள் சிக்கித்தவித்த நிலையில் மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாக திறந்தவெளிச் சிறைக்குள் அகப்பட்டுக்கொண்ட உணர்வுடனே வாழ வேண்டிய நிர்ப்பந்தம் இங்கு நிலவுகின்றது. கட்டாயமாகப் புலம்பெயர வேண்டிய நிலை, புலம்பெயர்விற்குப் பின்னரான அடக்குமுறை வேதனைகள், வாழ்வாதாரச் சிக்கல்கள், இருப்புத் தொடர்பான சிக்கல்கள், உரிமைகளைப் பெறுவதற்கான தடைகள், அவற்றைப் பெற மேற்கொண்ட போராட்டங்கள், பெற்ற உரிமைகள் மீண்டும் பறிக்கப்படும்போது ஏற்பட்ட மனச்சோர்வுகள், சமூக, அரசியல், கல்வி மற்றும் பொருளாதார ரீதியிலான பாகுபாடுகள் எனப் பல்வேறு அனுபவங்களை இப்பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. சொல்லொணாத் துயரங்களுடன் நீண்டகாலமாக நகரும் சமூகம் என்ற அடிப்படையில், தமது பாதிப்பு நிலைகளை பாடல்களாக வெளிப்படுத்துவதில் இம்மக்கள் ஆர்வங்காட்டி வந்துள்ளனர். இப்பாடல்கள் இருநூறு வருடப் பாரம்பரியத்தைக் கொண்டதாக விளங்குகின்றன. இப்பாடல்கள் வலியுறுத்தும் உள்ளடக்கங்கள் மலையக மக்களின் வரலாற்றுத் தடங்களாகவும் திகழ்வதை அறியலாம். அவ்வாறான வரலாற்றுத் தடங்கள் குறித்த அவதானத்தையும், பல வீதிப்பாடல்களின் ஆசிரியர்கள் வெளிப்படுத்தி நிற்கும் கருத்து நிலைகளையும் ஆவணப்படுத்துவதாக இத்தொடர் அமையப்பெறும்.

1833 முதல் 1921 வரை நீடித்த ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றின் முதலாவது காலகட்டத்தில், தமிழர்கள் அரசியல்ரீதியில் 'இலங்கையர்' என்றும், பண்பாட்டுரீதியில் 'தமிழர்' என்றும் அடையாளம் கொண்டிருந்தனர். 1921 ஆகஸ்ட் 15 அன்று சேர்.பொன். அருணாசலம் தேசிய காங்கிரஸில் இருந்து விலகி தமிழர் மகாசபையைத் தொடங்கியதுடன், இரண்டாவது காலகட்டம் ஆரம்பமானது. இது 1949 டிசம்பரில் தந்தை செல்வா அகில இலங்கை தமிழரசுக் கட்சியைத் தொடங்கும் வரை நீடித்தது. 1949 முதல் 1968 வரை நீடித்த மூன்றாவது காலகட்டத்தில், வடக்கு – கிழக்கு தமிழர் தாயகம் என வரையறுக்கப்பட்டு, சமஷ்டிக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. 1968 இல் ஈழத்தமிழர் இளைஞர் இயக்கத்துடன் தொடங்கி, 2009 இல் ஆயுதப்போர் முடிவடையும் வரை நீடித்த நான்காவது காலகட்டத்தில், தனிநாட்டுக் கோரிக்கை முன்னெடுக்கப்பட்டது. 'ஈழத்தமிழர் அரசியல் வரலாறு' எனும் இத்தொடர், இந்த ஒவ்வொரு காலகட்டத்திலும் நிகழ்ந்த முக்கிய நகர்வுகளைத் தொகுத்து வழங்குகிறது; அதன்மூலம், இன்னும் முழுமையடையாத ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றுக்கு ஓர் அடித்தளம் அமைக்க முயற்சிக்கின்றது

***உதவி : ஜீவராசா டிலக்ஷனா***

# 1949 – 1968: ஈழத்தமிழரின் அரசியல் உருமாற்றமும் எதிர்ப்புப் போராட்டங்களும் – பகுதி 1

**சி. அ. யோதிலிங்கம்**



சி. அ. யோதிலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் சிறப்புக் கலைமாணிப்பட்டத்தையும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தினையும் இலங்கைச் சட்டக்கல்லூரியில் சட்டமாணிப் பட்டத்தினையும் பெற்றவராவார்.

'இலங்கையின் அரசியல் யாப்புகள்', 'இலங்கையின் இனகுழும அரசியல்', 'சமாதான முன்னெடுப்பின் அரசியல் சவால்கள்', 'இலங்கையின் இனப்பிரச்சினையும் அரசியல் தீர்வு யோசனைகளும்', 'இலங்கையில் இனப்பிரச்சினையின் வரலாறு', 'அரசறிவியல் ஓர் அறிமுகம்', 'ஒப்பியல் அரசாங்கம்' போன்ற பல நூல்களை எழுதியுள்ள யோதிலிங்கம் பல ஆய்வுக்கட்டுரைகளைப் பத்திரிகைகளில் தொடர்ச்சியாக எழுதிவருகின்றார்.

இக்காலகட்டம், 1949 ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சி உருவான காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு 1968 ஆம் ஆண்டு ஈழத்தமிழ் இளைஞர்கள் இயக்கம் தொடங்கியதில் முடிவடைகின்றது. இக்காலகட்டத்தில் தமிழர்களின் அரசியல் இலங்கை என்ற ஒற்றைக்கட்டமைப்பில் இருந்து விலகி வடக்கு, கிழக்கு என்ற தமிழர் தாயகத்தை வலியுறுத்தி அதற்கு அதிகாரத்தைக் கோரும் சமஸ்டிக் கோரிக்கையை முன்வைத்தது. இக்காலகட்டத்தில் மூன்று மாற்றங்கள் இடம் பெற்றன. ஒன்று, ஒற்றை ஆட்சியில் சமவாய்ப்புக் கோரிக்கை என்பது கைவிடப்பட்டு, சமஸ்டிக் கோரிக்கை முன்னெடுக்கப்பட்டது. இரண்டாவது, தாயகம் அடையாளப்படுத்தப்பட்டதும் தமிழீழ அரசியல் தமிழத்தேசிய அரசியலாக மாற்றமடைந்தது. மூன்றாவது, இதுவரை காலமும் சட்டசபைகளில் பேசுதல் அல்லது உரையாற்றுதல், கோரிக்கை மனுக்களை அனுப்புதல் என்கின்ற அணுகுமுறைக்கு மாற்றாக மக்களை இணைத்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. 1956 ஆம் ஆண்டு காலகட்டத்தில் காலிமுகத்திடல் சத்தியாக்கிரகப் போராட்டம், 1957 ஆம் ஆண்டு திருமலை யாத்திரை, 1957 - 58 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டங்கள், 1961 ஆம் ஆண்டு கச்சேரிகளின் முன்னால் இடம்பெற்ற சத்தியாக்கிரகப் போராட்டம் என்பன முக்கியமானவையாகும். அகில இலங்கை தமிழரசுக் கட்சி இப்போராட்டங்களை முன்னெடுத்தது. எஸ்.ஜே.வி செல்வநாயகம், 'தந்தை' செல்வா என அழைக்கப்பட்டார். அவர் இக்காலகட்டத்தை நகர்த்திய முக்கிய தலைவராகக் காணப்படுகின்றார்.

**• புதிய கட்சி உருவாக்க முயற்சி இடம்பெறல்**

அகில இலங்கை தமிழ் காங்கிரஸிலிருந்து வெளியேறிய செல்வநாயகம் குழுவினர் சமஸ்டிக் கோரிக்கையை முன்வைத்துப் பிரசாரம் செய்தனர். இதற்கான முதல் கூட்டம் 1949 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் முன்றலில் செல்வநாயகம் தலைமையில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் டாக்டர் ஈ.எம்.வி நாகநாதன், வன்னியசிங்கம் உட்பட இளைஞர்களின் சார்பில் சட்டமாணவராக இருந்த அமிர்தலிங்கமும் உரையாற்றினார். தொடர்ந்து கொழும்பில் ஒவ்வொரு வியாழன் இரவும் ஒவ்வொரு நண்பர் வீட்டில் சமஸ்டிக் கோரிக்கை தொடர்பான கருத்துப் பரிமாறல்கள் இடம்பெற்றன. டாக்டர் வி.என். பரமநாயகம், எம். திருவிளங்கம், வி.என். திருநாவுக்கரசு, பி. நல்லசிவம்பிள்ளை, வி.பி.சி. முத்துக்குமாரசுவாமி, எஸ். பி. வேலாயுதப்பிள்ளை, வி. நவரத்தினம், எஸ்.டி. சிவநாயகம், அருள் தியாகராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதற்கப்பால் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களில் சமஸ்டி பற்றிய கலந்துரையாடல்களும் கருத்தரங்குகளும் இடம்பெற்றன. திருகோணமலையில் 1949 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 8 ஆம் திகதி சக்தி நிலைய ஆதரவில் சமஸ்டி பற்றிய கருத்தரங்கு இடம்பெற்றது. இராஜவரோதயம் இராமநாதன், விஜயநாதன் ஆகியோர் இக்கருத்தரங்கினை ஒழுங்கு செய்வதில் முன்னிலை வகித்தனர். மட்டக்களப்பில் ஆர்.ப. கதிர்காமர் தலைமையில் முதலாவது கூட்டம் இடம்பெற்றது. ஈ. ஆர். தம்பிமுத்து, சாகுல்ஹமீது, செ. இராசதுரை, இரா. பத்மநாதன், பாலசுப்பிரமணியம், சித்தாண்டி நாகலிங்கம், சிவஞானம், ஆசிரியர் கனகசபை ஆகியோரும் இதனை ஒழுங்குபடுத்துவதில் முன்னிலையில் நின்றனர்.

**• நந்திக்கொடி ஏற்றல்**

1949 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் மூன்றாம் திகதி நல்லூர் சங்கிலித் தோப்பில் 1619 இல் அழிக்கப்பட்ட சங்கிலி மன்னனின் நந்திக்கொடியை புதிய அணியினர் மீளவும் ஏற்றினர். நந்திக்கொடி ஏற்றலின் பின்னர் ஊர்வலமாக நல்லூர் கைலாச பிள்ளையார் கோயில் வீதிக்குச் சென்றனர். அங்கு ப. முத்துக்குமார் தலைமையில் கூட்டம் நடைபெற இருந்தது. போலீசார் கூட்டத்தினைத் தடை செய்தனர். அடுத்தநாள் நான்காம் திகதி நல்லூர்க் கூட்டம் தடைப்பட்டதைக் கண்டித்து நவாலியில் பண்டிதர் இளமுருகனார் தலைமையில் கூட்டம் இடம்பெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் இதில் கலந்து கொண்டனர்.

### அகில இலங்கை தமிழரசுக் கட்சியின் தோற்றம் - 1949 டிசம்பர் 18

அகில இலங்கை காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறிய உறுப்பினர்களும், சமஸ்டிக் கோரிக்கைக் கருத்தினால் கவரப்பட்ட உறுப்பினர்களும் 1949 டிசம்பர் 18 ஆம் திகதி காலை 9:30 மணிக்கு மருதானையில் உள்ள அரசாங்க லிகிதர் சேவை கட்டிடத்தில் கூடி அகில இலங்கை தமிழரசுக் கட்சியை உருவாக்கினர். டாக்டர் ஈ.எம்.வி. நாகநாதன், வன்னியசிங்கம் ஆகியோர் கூட்ட அழைப்பாளர்களாக பத்திரிகைகள் மூலம் அழைப்பு விட்டிருந்தனர். டாக்டர் எம். திருவிளங்கம் வரவேற்புக்குழுத் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். செல்வநாயகம், கட்சியின் தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

### செல்வநாயகம் அவர்களின் தலைமைப் பேருரையின் சுருக்கம்

"யாம் விடுதலை பெறுவதற்கு ஒரு சுதந்திரத் தமிழரசை நிறுவுவது இன்றியமையாதது. போர்த்துக்கேயர்

இலங்கைக்கு வருவதற்குமுன் இங்கு வசித்த மக்கள் பல நூற்றாண்டுகளாகச் சிங்களம்பேசும் இனம், தமிழ்பேசும் இனம் என இரு தேசிய இனங்களாகப் பிரிந்து வாழ்ந்தார்கள். தமிழ்பேசும் மக்களில் அரைப்பங்கினரைப் பிரஜாவுரிமை அற்றோராகச் செய்யும் ஒரே நோக்குடன் அரசாங்கம் பிரஜாவுரிமைச் சட்டங்களை நிறைவேற்றியிருக்கிறது.

தேசியக்கொடி விடயத்தில் அரசாங்கம் நடந்துகொண்ட விதம் தமிழ்பேசும் மக்களின் உணர்ச்சிகளையும் உரிமைகளையும் உதாசீனம் செய்வதாக இருக்கின்றது. சிங்கக்கொடி சிங்கள மன்னரின் கொடியேயாகும். இன்று அது சிங்களவருடைய அதிகாரத்தின் சின்னமாக விளங்குகின்றது. அந்தக்கொடியே நடைமுறையில் இலங்கையின் தேசியக்கொடி எனக் கொள்ளப்படுகின்றது. பல்வேறு இனங்கள் வாழும் நாட்டில் தேசியக்கொடியாக ஓர் இனத்தவரின் கொடியைக்கொண்ட நாடு வேறு எதுவும் உலகில் இல்லை. தேசியக்கொடி விடயத்தில் அரசாங்கத்தின் கொள்கை தமிழ்பேசும் மக்களிடம் அவர்கள் நடந்துகொள்ளும் முறைக்கு ஓர் எடுத்துக்காட்டாக இருக்கின்றது. அரசாங்கம் அவர்கள் இங்கு வசிப்பதைச் சகித்துக்கொண்டிருக்கிறது, அவ்வளவுதான்!

தமிழ்பேசும் மக்களின் எல்லாப் பிரிவினருக்குள்ளும் தமிழ் மக்களின் விடுதலைக்காக உழைக்கக்கூடிய வசதி வடமாகாண மக்களுக்கே இருந்தது. அவர்கள் இலகுவாகப் பிரிக்கப்படக்கூடிய பிரதேசத்தில் பெருந்தொகையினராக வாழ்ந்திருந்தது மட்டுமன்றி, அவர்களிடையே சிங்கள மக்கள் கலந்து வாழ்வதும் குறைவாக இருந்தது. அவர்களே ஆங்கிலக்கல்வியினாலும் அதிக பயன் பெற்றிருந்தனர். ஆனபடியால் இலங்கைவாழ் தமிழ் இனத்திற்குத் தொண்டு செய்யும் பொறுப்பு பெரும்பாலும் அவர்களையே சார்ந்திருந்தது.

அரசாங்கத்தின் குடியேற்றக்கொள்கை எல்லாவற்றையும் விடவும் தமிழ்பேசும் மக்களுக்குக் கூடிய ஆபத்தை விளைவிக்கக் கூடியது. இக்கொள்கையின் ஆபத்தை கல்லோயாவில் காண்கின்றோம். கல்லோயாத் திட்டத்தின்கீழ் நீர் பாய்ச்சப்படும் பிரதேசம், தமிழ்பேசும் பகுதியாகிய கிழக்கு மாகாணமேயாகும். தமிழ்பேசும் இப்பிரதேசத்தில் அரசாங்கம் சிங்கள மக்களைக் குடியேற்றத் திட்டமிட்டுள்ளது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. இது உண்மையாக இருந்தால் இன்றைய தமிழ்பேசும் பிரதேசத்தை குறைப்பதற்கே அரசாங்கம் அநீதியான முறையில் தன் அதிகாரத்தை உபயோகிக்கின்றது என்பது தெளிவு. தடுப்பார் இன்றி, இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் சில வருடங்களுக்கிடையில் இந்நாட்டிலே தமிழ்ப்பிரதேசமே இல்லாதொழியும்.

ஒரு சுயாட்சித் தமிழ் மாகாணமும், ஒரு சுயாட்சிச் சிங்கள மாகாணமும் அமைத்து இரண்டிற்கும் பொதுவானதோர் மத்திய அரசாங்கமுள்ள சமஸ்டி அரசு இலங்கையில் ஏற்பட வேண்டும். தமிழ்பேசும் தேசிய இனம் பெரிய தேசிய இனத்தினால் விழுங்கப்பட்டு அழியாதிருக்க வேண்டுமேயானால் இவ்வித சமஷ்டி ஏற்படுவது அவசியமாக இருக்கிறது.

கிழக்கு மாகாணம் முழுவதையும் தமிழ் அரசின் பகுதியாக்க வேண்டுமென்றால் தமிழ்பேசும் தமிழர்களும், முஸ்லீம்களும் ஒன்று சேர வேண்டும். ஆனால் எங்களுடைய இயக்கம் முஸ்லீம்கள் வசிக்கும் பகுதிகள் தமிழ்ப்பிரதேசத்துடன் இணைந்திருக்க வேண்டுமா? சிங்களம்பேசும் பிரதேசத்துடன் இணைந்திருக்க வேண்டுமா? என்பதைத் தீர்மானிப்பதற்கு முஸ்லீம்களுக்குப் பூரண சுதந்திரம் இருக்க வேண்டுமென்ற அடிப்படையிலேயே செயற்பட்டு வருகின்றது. அவர்களுக்கு என்ன வேண்டும்? என்பதை அவர்களே தீர்மானிக்க வேண்டும்.

நாம் வெற்றி பெறுவதற்கு அருகதையுள்ளவர்களாக வேண்டுமென்றால், நமது சமூகத்தில் இருக்கும் குறைகளைக் களைந்து அதைத் தூய்மைபெறச் செய்ய வேண்டும். தமிழ் மக்களிடையே தாழ்த்தப்பட்ட வகுப்பினர் இருக்கின்றனர். அவர்கள் தாங்கள் மற்றவர்களால் ஒடுக்கப்படுபவர்களாகக் கருதுகின்றனர். 'யாம் ஒருவருக்கு கொடுமை செய்தால் தர்ம நீதியின்படி எமக்கும் பிறர் ஒருவர் அதையே செய்வார்'. தமிழ் மக்கள் அரசியல் சுதந்திரம் பெற வேண்டுமேயானால், தம் சமுதாயத்தில் உரிமையற்றவர்களாய் இருக்கும் மக்களுக்கு அவ் உரிமை வழங்க வேண்டும். மலைநாட்டில் வாழும் தமிழ் தொழிலாளர்களது நிலைமையானது இங்கு கூறிய தாழ்த்தப்பட்டோருடைய நிலையிலும் பார்க்கக் கேவலமானதாய் இருக்கின்றது. அவர்கள் அரசியலில் தீண்டத்தகாதவர்களாகி விட்டார்கள். அவர்களுக்குப் பிரஜாவுரிமை இல்லாமல் இருப்பது மாத்திரமன்றி தமக்கென ஒரு நாடுமற்ற அகதிகளாகவும் இருக்கிறார்கள். ஏனைய தமிழ்பேசும் மக்கள் இவர்களுக்கு வந்திருக்கும் இன்னலைத் தங்களுக்கு வந்ததாகவே கருதுதல் வேண்டும். அவர்கள் உதவிக்காக எதிர்பார்ப்பது இந்தியாவை அல்ல. சுதந்திரம் விரும்பும் இலங்கைவாழ் மக்களிடமிருந்தே அவ் உதவி வருதல் வேண்டும்."

### கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்

1. தமிழ்பேசும் மக்களுக்கு ஒரு சுயாட்சி அரசை நிறுவும் வகையில் உழைப்பதற்காக தமிழ்பேசும் மக்களின் தேசிய நிறுவனமாக இயங்குதல்.

2. கட்சியின் பொருளாதாரக் கொள்கையாக, சோசலிசக் கொள்கையை ஏற்றுக்கொள்ளல்.

இரண்டாவது தீர்மானம் தொடர்பாக காராசாரமான விவாதம் நடைபெற்றது. இதன்போது சோசலிஸப் பொருளாதாரக் கொள்கையை இளைஞர்கள் வற்புறுத்தினர். ஆனால் பெரியவர்கள் இதனை எதிர்த்தனர். கடுமையான வாக்குவாதத்தின் பின்னர் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது இருபக்கத்திற்கும் சமமான வாக்குகள் கிடைத்தன. ஈற்றில் தலைவரான செல்வநாயகம் தனது வாக்கை இளைஞர் பக்கத்திற்கு அளித்து சோசலிஸப் பொருளாதாரக் கொள்கையை ஒரு வாக்கினால் வெற்றியுறச் செய்தார்.

சோசலிஸப் பொருளாதாரக் கொள்கை, தீண்டாமையை ஒழித்தல், சமூக உயர்வு - தாழ்வுகளை இல்லாமல் செய்தல் என்பவற்றை அடிப்படைக் கொள்கையாகக் கொண்டதை பழமை விரும்பிகள் பலர் ஏற்கவில்லை. இதனால் அவர்கள் விலகிக்கொண்டனர். கட்சியை ஆரம்பிப்பதற்காக உழைத்த பலர்கூட விலகிச்சென்றனர். அகில இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தோற்றத்துடன் தமிழ்த்தேசிய அரசியலில் தமிழரசுக் கட்சி X தமிழ்க்காங்கிரஸ் என்ற இரு சக்திகள் இயங்க ஆரம்பித்தன. தமிழிலேயே கல்விகற்ற மத்தியதர வர்க்கத்தினர் அகில இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பிரதான ஆதரவுத்தளமாக மாறினர்.

### சோல்பரியின் யாழ்ப்பாண வருகையும், பகிஸ்கரிப்பும்

சோல்பரி அரசியல் திட்டத்தினை உருவாக்கிய சோல்பரிப் பிரபுவே அவ் அரசியல் திட்டத்தின்கீழ் மகாதேசாதிபதியாகவும் நியமிக்கப்பட்டார். இவர் 1950 ஆம் ஆண்டு ஜனவரியில் யாழ்ப்பாணம் வருகை தந்தார். தமிழரசுக்கட்சி இவரது வருகையை பகிஸ்கரிக்க முடிவு செய்தது. இதுவே தமிழரசுக் கட்சியின் முதற் போராட்டமாகவும் இருந்தது. 'தமிழினத்தின் வைரியை வரவேற்காதீர்' என்ற தலைப்பில் தமிழரசுக்கட்சி துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டு 'வருகையைப் பகிஸ்கரியுங்கள்' என மக்களைக் கோரியது. இது தொடர்பாக 22-150 இல் யாழ். நகர மண்டபத்தில் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இறுதி நேரத்தில் அரசாங்கத்தினால் கூட்டம் தடை செய்யப்பட்டது. கூட்ட நாளன்று மண்டபத்தைச் சுற்றிப் பொலிஸ் காவலில் நிற்றனர். ஆயிரக்கணக்கில் வந்த மக்கள் அருகில் உள்ள தனியார் 'கராஜ்'ஜில் கூடினர். அங்கு ஒரு மேசையின்மீது ஏறி நின்று தலைவர்கள் பேசினர்.

### தேசியக்கொடிப் பிரச்சினை

1948 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் திகதி தேசியக்கொடியை உருவாக்குவதற்காக குழு நியமிக்கப்பட்டது. S.W.R.D. பண்டாரநாயக்கா, கலாநிதி செனரத்பரணவிதான, ஜே.ஆர். ஜெயவர்த்தனா, சேர். ஜோன். கொத்தலாவல, ஜீ.ஜீ. பொன்னம்பலம், டி.பி. ஜாயா, எஸ். நடேசன் ஆகியோர் குழுவில் அங்கம் வகித்தனர்.

இதற்கு முன்னரே தேசியக்கொடி சிங்களவர்களின் சிங்கம், தமிழ் மக்களின் நந்தி, முஸ்லீம்களின் பிறை என்பவற்றைக் கொண்டிருக்க வேண்டும் என ஒரு பிரேரணையை தந்தை செல்வா முன்வைத்தார். பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் அதனை ஆமோதித்தார். ஆனால் சிங்களத்தரப்பு இதனை நிராகரித்தது. 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி 04 ஆம் திகதி சுதந்திரம் கிடைத்தபோது எந்தக் கொடியை ஏற்றுவது என்று பிரச்சினை வந்தது. 1835 ஆம் ஆண்டு இங்கிலாந்திற்கு கொண்டு செல்லப்பட்ட சிவப்பு நிறப் பின்னணியுடன் வாளேந்தியபடி இருக்கின்ற கண்டி அரசனின் சிங்களக் கொடியே தேசியக் கொடியாக இருக்க வேண்டுமென மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் முதலியார் சின்னலெப்பை பாராளுமன்றத்தில் பிரேரணையைக் கொண்டுவந்தார்.

ஏ.ஈ. குணசிங்கா அதனை ஆமோதித்தார். பிரதமர் டி. எஸ் சேனநாயக்காவும் வரவேற்றார். இதனால் சிங்கக்கொடியே சுதந்திர தினத்தன்று ஏற்றப்பட்டது. அனைத்து மதத்தவர்களும் வழிபடும் 'சிவனொளிபாதமலை' தேசியக்கொடியாக இருக்க வேண்டும் என ஹண்டி பேரின்பநாயகம் வலியுறுத்தினார். தமிழ், முஸ்லீம்களை குறிப்பதற்கு செம்மஞ்சள், பச்சை நிறக்கோடுகள் வாளேந்திய சிங்கத்திற்கு வெளியே இருக்கும்வகையில் கொடி உருவாக்கப்பட்டது.

செனட்டர் நடேசன் இதனைக் கடுமையாக எதிர்த்தார். கொடியில் தமிழர்களும், முஸ்லீம்களும் சிங்கள தேசத்தின் எல்லைகளுக்கு வெளியே இருப்பதாகவும் அந்த இரு இனங்களையும் தடுத்து நிறுத்துவதற்காக சிங்கம் தன் வாளுடன் கண்காணித்து நிற்பதாகவும் கூறி, செனட்டர் நடேசன் எதிர்ப்புத் தெரிவித்துக் குழுவை விட்டு வெளியேறினார்.

ஜீ.ஜீ.பொன்னம்பலமும் டி.பி. ஜாயாவும் கொடிக்கு இணக்கம் தெரிவித்தனர். 1950 ஆம் ஆண்டு மாசி மாதம் 14 ஆம் திகதி தேசியக் கொடிக்குழு தேசியக்கொடி பற்றிய பரிந்துரையைச் செய்தது. செனட்டர் நடேசன் இதனை ஏற்கவும் இல்லை, கையெழுத்திடவும் இல்லை. 1950 ஆம் ஆண்டு மாசி மாதம் 15 ஆம் திகதி செனட்டர் நடேசன் இது பற்றி அறிக்கை வெளியிட்டார்.. அதில் "தேசப்பிரிவினையின் குறியீடாக கொடி இருக்கும்" எனக் கூறினார். 1952 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 02 ஆம் திகதி தேசியக்கொடி பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது. தேசியக்கொடிக்கு ஆதரவாக 51 பேரும் தேசியக் கொடியை எதிர்த்து 21 பேரும் வாக்களித்தனர். வவுனியா தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் சி. சுந்தரலிங்கம்

தேசியக்கொடியை எதிர்த்து தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்தார். இடைத்தேர்தல் இடம்பெற்றபோது, ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் கொழும்பு மாநகர சபை மேஜர் குரே வவுனியாவில் போட்டியிட்டார். சுந்தரலிங்கம் பெருவெற்றி பெற்றார். அகில இலங்கை தமிழரசுக்கட்சியும் தேசியக்கொடியை நிராகரித்தது. "தமிழ்பேசும் சமூகம் புறக்கணிக்கப்பட இரண்டாம் தரப்பிரஜைகளாக இந்நாட்டில் வாழ்கின்றனர் என்பதைப் பிரகடனப்படுத்தும் ஒட்டுக்கொடி" எனப் பிரசாரம் செய்தது.

## சிங்களக் குடியேற்றங்கள்

கிழக்கில் சிங்களக் குடியேற்றங்கள் தீவிரமடைந்தது. 1941 இல் உருவாக்கப்பட்ட கல்லோயாக் குடியேற்றத் திட்டமும் சுதந்திரத்தின் பின்னரே நடைமுறையில் துரிதநிலைக்கு வந்தது. இக்குடியேற்றத்தின் மூலம் 44 குடியேற்றக் கிராமங்கள் உருவாக்கப்பட்டன. அதில் 38 கிராமங்கள் சிங்களவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. 06 கிராமங்கள் தமிழ்பேசும் மக்களுக்கு ஒதுக்கப்பட்டது. பட்டிப்பளையாறு என்ற தமிழ்ப்பெயர் கல்லோயா என மாற்றப்பட்டது.

மாவட்டத்தின் சனவிகிதாசாரத்தை மாற்றுவதன் மூலம் மாவட்ட அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுதலே நோக்கமாக இருந்தது. இக்குடியேற்றத்தை மையமாக வைத்தே 1959 ஆம் ஆண்டு அம்பாறைத் தேர்தல் தொகுதியும், 1961 ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டமும் உருவாக்கப்பட்டது. மாவட்டத்தின் தலைநகராக குடியேற்றப் பிரதேசமான அம்பாறை தெரிவு செய்யப்பட்டது.

அம்பாறை மாவட்டம் என்ற பெயர் பின்னர் 'திகாமடுல்ல' மாவட்டம் என மாற்றப்பட்டது. சிங்கள மக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக மொனராகலை மாவட்டத்துடன் இணைந்திருந்த மகா ஓயாவும், பதியத்தலாவையும் அம்பாறை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டன. சிங்களப் பிரதேச சபைகளும் உருவாக்கப்பட்டது. தமிழரசுக் கட்சி கல்முனை, சம்மாந்துறை போன்ற இடங்களுக்குச் சென்று குடியேற்றங்களுக்கு எதிரான பிரசாரங்களை மேற்கொண்டது. இக்குடியேற்றங்கள், பின்னர் திருகோணமலை மாவட்டத்துக்கும் விஸ்தரிக்கப்பட்டது.

திட்டமிட்ட விவசாயக் குடியேற்றம், சட்டவிரோத விவசாயக் குடியேற்றம், மீனவர் குடியேற்றம், வியாபாரக் குடியேற்றம், கைத்தொழில் குடியேற்றம், புனிதப் பிரதேசக் குடியேற்றம், முப்படைப் பண்ணைகளுக்கான குடியேற்றம் என அனைத்துவகைக் குடியேற்றங்களும் திருகோணமலை மாவட்டத்தில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. திட்டமிட்ட விவசாயக் குடியேற்றங்கள்தான் இவற்றில் பெரியவையாக இருந்தன. மாவட்டத்தின் சனத்தொகையை மாற்றியமைப்பதில் பெரும்பங்களிப்பினைச் செய்தனர்.

அல்லைத்திட்டம், கந்தளாய்த்திட்டம், மொறவேவாத் திட்டம், மகாதிவுல்வெளத்திட்டம், பதவியாத்திட்டம் என மிகப்பெரும் குடியேற்றத்திட்டங்கள் உருவாக்கப்பட்டன. வடக்கையும், கிழக்கையும் இணைக்கின்ற மாவட்டமாக இருப்பது திருக்கோணமலைதான். தாயக ஒருமைப்பாட்டைச் சிதைத்தலே இக்குடியேற்றங்களின் முக்கிய நோக்கமாக இருத்தது. 1970களில் இக்குடியேற்றங்களை வால்போல இணைத்து 'சேருவல' என்கின்ற சிங்களத் தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டது. பிரதேசசபைகளும் உருவாக்கப்பட்டன.

'சேருவல' தொகுதியின் உருவாக்கத்தால் மூதூர் என்ற இரட்டை அங்கத்தவர் தொகுதி, ஒற்றை அங்கத்தவர் தொகுதியாக மாற்றப்பட்டது. இதன்மூலம் மூதூர்ப் பிரதேச தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் இல்லாமல் போனது. மாவட்டத்தில் தமிழ்ப்பிரதிநிதித்துவம் குறைவடைந்தது. பிற்காலத்தில் இக்குடியேற்றங்கள் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டன. வவுனியா தெற்கு சிங்களப் பிரதேச செயலர் பிரிவு உருவாக்கப்பட்டது. வவுனியா வடக்கில் மகாவலித்திட்டத்தை இதற்காகப் பயன்படுத்தினர். இன்று வவுனியா வடக்குப் பிரதேச சபையில்கூட நான்கு வட்டாரங்கள் சிங்கள வட்டாரங்களாக இருக்கின்றன. முல்லைத்தீவில் 'வெலிஓயா' என்ற பெயரில் சிங்களப் பிரதேச செயலாளர் பிரிவு உருவாக்கப்பட்டது.

1948 ஆம் ஆண்டு பெப்ரவரி நான்காம் திகதி வழங்கப்பட்ட சுதந்திரம் சிங்கள ஆட்சியாளர்களுக்கு தமிழ் மக்களினை ஒடுக்குவதற்கான அனுமதிப்பத்திரத்தை வழங்கியது. ஆட்சியாளர்கள் ஒரேநேரத்தில் தமிழ்மக்கள் ஒரு தேசிய இனமாக இருப்பதை அழிப்பது, அரச அதிகாரக் கட்டமைப்பைச் சிங்களமயமாக்குவது என்கின்ற இரண்டு செயற்திட்டங்களை முன்னெடுத்தனர். முதலாவது செயற்திட்டத்தின் அடிப்படையில் தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து தமிழ்மொழிப் புறக்கணிப்பு, பொருளாதாரச் சிதைப்பு, கலாசார அழிப்பு என்பன அரங்கேற்றப்பட்டன. தேசியக்கொடி குறியீட்டு வடிவில் அரச அதிகாரக் கட்டமைப்பிலிருந்து தமிழ் மக்களை வெளியேற்றியது. 1956 ஆம் ஆண்டின் தனிச் சிங்களச் சட்டம், ஒரேநேரத்தில் தேசிய இன அழிப்பாகவும், அரசு அதிகாரக் கட்டமைப்பைச் சிங்களமயமாக்குவதாகவும் இருந்தது.

## கல்லோயாத் திட்டம்

1948 ஆம் ஆண்டு சுதந்திரத்தைத் தொடர்ந்து பிரதமர் டி.எஸ். சேனநாயக்க தனது நிரந்தர செயலாளர் சேர். கந்தையா வைத்தியநாதன், நீர்ப்பாசனப் பணிப்பாளர் ரி. அழகரத்தினம், நில அளவைப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் எஸ். புறோக்கியர் என்போரை ஒரு கூட்டத்திற்கு அழைத்தார். கிழக்கு மாகாணத்தின் தெற்குப் பகுதியில் உள்ள பட்டிப்பளை ஆற்றினை பாரிய நீர்பாசனத் திட்டமாக்கப் போவதாக அறிவித்தார். அதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயும் பணி அழகரத்தினத்திடம் ஒப்படைக்கப்பட்டது. பட்டிப்பளை ஆறு பதுளை மாவட்டத்தில் உள்ள மடுல்சீமை மலைத்தொடரில் ஊற்றெடுத்து 56 மைல்கள் பாய்ந்தோடி, வங்காள விரிகுடாக் கடலில் கலக்கின்றது. இதன் தரையில் பிரதான தமிழ்க்கிராமமான பட்டிப்பளை இருந்தது. சிறந்த விவசாய பூமி. மன்னராட்சிக் காலத்தில் இருந்தே சிறந்த விவசாயப் பிரதேசமாக இருந்தது. ஆங்கிலேய ஆட்சியாளர்கள் இதனை வளர்க்கும் முகமாக இறக்காமம், கொண்டை வெட்டுவான், அம்பாறைக் குளங்களைப் புனரமைத்துக் கொடுத்தனர்.

அழகரத்தினம் குழுவினர் சம்மாந்துறை சென்று அங்கிருந்து மாட்டுவண்டி மூலம் பட்டிப்பளை ஆற்றின் மேல் பகுதியில் உள்ள அம்பாறை, இங்கினியாகலை ஆகிய இடங்களுக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டனர். பட்டிப்பளையாற்றை இங்கினியாகலையில் மறித்து நீர்த்தேக்கம் ஒன்றை உருவாக்கி நீர்ப்பாசனத் திட்டத்தை ஆரம்பிக்கலாம் எனச் சிபாரிசு செய்தனர்.

இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக கல்லோயா அபிவிருத்திச் சட்டம் உருவாக்கப்பட்டது. இதன் மூலம் பட்டிப்பளை ஆறு கல்லோயாவாக மாற்றப்பட்டது. தமிழ்க் கிராமங்களுக்கு சிங்களப் பெயர் சூட்டும் முயற்சி இங்குதான் ஆரம்பிக்கப்பட்டது. கல்லோயா அபிவிருத்தி வேலைகளை 1948 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி இங்கினியாகலையில் பிரதமர் டி.எஸ். சேனநாயக்க ஆரம்பித்து வைத்தார். பட்டிப்பளை ஆற்றை இங்கினியாகலையில் மறித்து அணை ஒன்றைக் கட்டி நீர்த்தேக்கம் உருவாக்கப்பட்டது. டி.எஸ். சேனநாயக்க அதனை ஆரம்பித்து வைத்ததால் இதற்கு சேனநாயக்க சமுத்திரம் எனப் பெயர் சூட்டப்பட்டது.

கல்லோயாத் திட்டம் 12,0000 ஏக்கர் நிலப்பரப்பை உள்ளடக்கியிருந்தது. ஒவ்வொரு நிலத்திலும் 150 குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. ஒவ்வொரு குடும்பத்திற்கும் மூன்று ஏக்கர் வயல் நிலங்களும் இரண்டு ஏக்கர் மேட்டு நிலங்களும் வழங்கப்பட்டன. ஒவ்வொரு குடும்பத்திற்கும் குடியிருக்க வீடும் கட்டிக் கொடுக்கப்பட்டது. 40 குடியேற்றக் கிராமங்களில் 34 கிராமங்கள் சிங்களவர்களுக்குப் பகிர்ந்து வழங்கப்பட்டன. 6 கிராமங்கள் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் வழங்கப்பட்டன.

கல்லோயாத் திட்டத்தின் முதலாவது கட்டமாக 20,000 சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர். 6 கிராமங்களில் தமிழர்களும் முஸ்லிம்களும் குடியேற்றப்பட்டனர். 1956 ஆம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து இடம்பெற்ற கலவரத்தில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் கல்லோயாத் திட்டத்திலிருந்து விரட்டப்பட்டனர். மீண்டும் குடியேறிய மக்கள் 1958 இல் நடைபெற்ற கலவரத்தில் மீண்டும் விரட்டப்பட்டனர். மீண்டும் திரும்பிய ஒருசிலரும் 1990 இல் விரட்டப்பட்டனர். இறுதியில் கல்லோயாத் திட்டம் தனித்துச் சிங்களவர்களுக்கான திட்டமாகவே மாறியது.

தமிழ் மக்களுக்கும் முஸ்லிம்களுக்குமென ஒதுக்கப்பட்ட 1200 ஏக்கர் நிலங்களிலும் சிங்களவர்களே பயிர்ச்செய்கையை மேற்கொண்டனர். இதைவிட பொத்துவில் லகுகலவில் வாழ்ந்த 343 தமிழ்க் குடும்பங்களும் சிங்களவர்களினால் விரட்டியடிக்கப்பட்டனர். இவர்கள் காரைதீவு, விநாயகபுரம், ஆலையடி வேம்பு போன்ற இடங்களில் அதிகளவாக வாழ்கின்றனர்.

1959 ஆம் ஆண்டு தேர்தல்தொகுதி மறுசீரமைப்புச் செய்யப்பட்டது. அதன்போது முதன்முதலாக சிங்கள மக்களுக்கு என அம்பாறைத் தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டது. இத் தேர்தல் தொகுதியிலிருந்து முதன்முதலாக 1960 ஆம் ஆண்டு சிங்களவர் ஒருவர் கிழக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்டார். 1961க்கு முன்னர் இப்பிரதேசம் மட்டக்களப்புத் தெற்கு என்றே அழைக்கப்பட்டது. 1961 இல் அம்பாறை என்ற தனி மாவட்டம் உருவாக்கப்பட்டது. குடியேற்றப் பிரதேசமான அம்பாறை இதன் தலைநகராக்கப்பட்டது. 1980களில் இதன்பெயர் திகாமடுல்ல என மாற்றப்பட்டது. இதே காலப்பகுதியில் சிங்கள மக்களின் விகிதாசாரத்தை மாவட்டத்தில் கூட்டுவதற்காக மொனராகலை மாவட்டத்துடன் இணைந்திருந்த மகாஓயா, பதியத்தலாவ பிரதேச செயலாளர் பிரிவுகள் அம்பாறை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டன.

## திருகோணமலைக் குடியேற்றங்கள்

உலகின் எல்லா இடங்களிலும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை வலுவிழக்கச் செய்வதற்கு ஆதிக்கசக்திகள் குடியேற்றங்களையே ஒரு பிரதான ஆயுதமாகப் பயன்படுத்துகின்றன. தேசிய

இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கோரிக்கைகளின் அடிப்படைகளை இல்லாமல் செய்வதற்கும், போர்க்காலங்களில் போராளிகளை இலகுவாக ஒடுக்குவதற்கும், ஒடுக்கப்படும் மக்கள் தங்களிடையே நெருங்கிய தொடர்புகளை வைத்துக்கொள்ளாமல் கூறுபோடுவதற்கும், தீர்வு என வரும்போது குடியேற்ற மக்களைக்காட்டி தீர்வு முயற்சிகள் ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்குச் சார்பாகச் செல்லவிடாமல் தடுப்பதற்கும், இக்குடியேற்றங்களே அவர்களுக்குப் பெரிதும் பயன்படுகின்றன.

பாலஸ்தீனத்தில் யூதர்களின் குடியேற்றம், அயர்லாந்தில் புரட்டஸ்தாந்தியர்களின் குடியேற்றம், கொசேவாவில் சேர்பியர்களின் குடியேற்றம், திபெத்தில் சீனர்களின் குடியேற்றம், கிழக்குத் தீமோரில் இந்தோனேசியர்களின் குடியேற்றம், பிலிப்பைன்ஸ் மிந்தானோவில் கிறிஸ்தவர்களின் குடியேற்றம் என்பன இந்த வகையிலேயே நடைபெற்றன.

உலக நாடுகளின் நிர்ப்பந்தங்களினால் தீர்வு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்போது இக்குடியேற்றங்களே பெரும் தடைகளாக விளங்குகின்றன. கிழக்குத் தீமோர் மக்களின் சுதந்திரத்தினை அங்கு குடியேறியுள்ள இந்தோனேசியர்கள் தடுத்ததையும், பாலஸ்தீன சுயாட்சி ஒழுங்காகச் செயற்படுவதை மேற்குக்கரை, காஸா பகுதிகளில் குடியேறிய யூதக் குடியேற்றவாசிகள் தடுப்பதையும் இந்தவகையிலேயே விளங்கிக்கொள்ள வேண்டும்.

இலங்கையிலும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையைச் செயலற்றதாக்குவதற்கு ஆட்சியாளர்கள் குடியேற்றங்களையே ஒரு பிரதான கருவியாகப் பயன்படுத்தினர். தமிழர்களின் தனிவழி அரசியல் 1920களிலேயே உணரப்பட்டதால் அக்காலத்தில் இருந்தே சிங்களப் பேரினவாதிகளிடம் இக்குடியேற்ற எண்ணம் வலுப்பெறத் தொடங்கியிருந்தது. 1931 இலிருந்து 1947 வரையான டொனமூர் அரசியல் யாப்புக் காலப்பகுதியில் சிங்களவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரத்தைக் கொண்டே இதற்கான முயற்சிகள் முடுக்கிவிடப்பட்டன. இந்த வகையிலேயே 1941 இல் கல்லோயா அபிவிருத்தித் திட்டம் அப்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சுதந்திரத்தினைத் தொடர்ந்து தமிழர் அரசியல், சமத்துவ உரிமை என்பதற்கப்பால் தாயக இறைமை என்பதனை நோக்கி வளரத் தொடங்கியது. தாயகக் குறியீடாக வடக்கு - கிழக்கு நிலப்பரப்பு என்பது எழுச்சியடைந்தது. இத்தாயக இறைமை, சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையைத் தடுக்கும் வகையில் ஒரு நீண்டகால இலக்கில் குடியேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கு அவர்கள் பிரதானமாக தேர்ந்தெடுத்த இடமே திருகோணமலை மாவட்டமாகும். திருகோணமலை மாவட்டத்தினை கடற்கரைப்பக்கமாக வில்போல சுற்றிவளைத்து இவை மேற்கொள்ளப்பட்டன. ஏனைய தமிழ்ப்பிரதேசங்களுடனான தொடர்புகளை துண்டித்தலே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாக இருந்தது. ஒரு வில்போல நீளமாக வளைந்திருக்கும் குடியேற்றப் பிரதேசமான சேருவல தேர்தல் தொகுதியினைப் பார்க்கும்போது இவ்வுண்மை தெளிவாகப் புலப்படும்.

இந்நிலையில் தமிழ் மக்களின் புதிய தலைமுறையினர் இக்குடியேற்றங்களைப் பற்றியும், அதற்குப் பின்னால் உள்ள சதி முயற்சிகளைப் பற்றியும், பேரினவாதிகளின் மூலோபாயங்கள், தந்திரோபாயங்கள் பற்றியும் தெளிவாக அறிந்து கொள்ளவேண்டியது அவசியமானதாகும். இவ்வறிந்து கொள்ளலே இப்புற்றுநோயை இந்த மட்டத்திலாவது இடைநிறுத்தி மேலும் வளராமல் தடுப்பதற்குரிய மார்க்கங்களைப் புலப்படுத்தும். பேரினவாதிகளின் செயற்பாட்டிற்கு மாற்றான ஒரு செயற்பாட்டுத்தளத்தையும் திறந்துவைக்கும். மாற்றுமருந்து வகைகளையும் கண்டுபிடிக்கும்.

சுதந்திரத்திற்கு முன்னர் திருமலை மாவட்டத்தில் நிரந்தரமாகக் குடியேறியிருந்த சிங்கள மக்கள் என விரல்விட்டு எண்ணக்கூடியோரே வாழ்ந்திருந்தனர். இதற்குப் புறம்பாக திருமலை நகரத்தில் மட்டும் துறைமுக வேலைகளுக்காகவும், பிரித்தானியக் கடற்படைத்தள வேலைகளுக்காகவும் தற்காலிகக் குடியேறிகள் சிலர் வாழ்ந்தனர். சுதந்திரத்துக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட திட்டமிட்ட விவசாயக் குடியேற்றத் திட்டங்களைத் தொடர்ந்தே, பெரும் எண்ணிக்கையானவர்கள் குடியேறத் தொடங்கினர். தொடர்ந்து இவற்றைப் பலப்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்ட சட்டவிரோத விவசாயக் குடியேற்றத் திட்டங்கள், கைத்தொழில் குடியேற்றங்கள், வியாபாரக் குடியேற்றங்கள், மீனவர் குடியேற்றங்கள், புனிதப் பிரதேசக் குடியேற்றங்கள், முப்படைப் பண்ணைகளுக்கான குடியேற்றங்கள் என்பன சிங்களவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்தன. இக்குடியேற்றங்களின் வளர்ச்சியினாலேயே திருகோணமலை மாவட்டத்தில் 1827 இல் 1.3% ஆக இருந்த சிங்களவர் எண்ணிக்கை, 1981 இல் 33.62% ஆக அதிகரித்தது. அதேவேளை 1827 இல் 81.82% ஆகவிருந்த தமிழர்களின் எண்ணிக்கை 36.4% ஆகக் குறைந்தது.

இனி திருகோணமலையின் முக்கிய திட்டமிட்ட விவசாயக் குடியேற்றங்களைப் பார்ப்போம்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் குறிப்பாக வடமாகாணத்தில் குயர் மக்களுக்கான உரிமைக் குரல்களை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காணமுடிகிறது. 'வடபுல பண்பாட்டுத் தளத்தில் குயர் அரசியல்' என்ற இத் தொடரானது, வடபுல மக்கள் மத்தியில் ஆழமாக வேரூன்றியுள்ள பிற்போக்கான கருத்தியல்கள் பால்நிலைச் சமத்துவத்திற்கு அச்சுறுத்தலாக அமைதல், குயர் மக்கள் இந்தச் சமூகத்தின் மத்தியில் வன்முறைகளையும் பாரபட்சங்களையும் எதிர்கொள்வதில் கலாசாரம் – சமயம் அல்லது மதக் கட்டமைப்புகளின் பங்கு, வடபுலத்தில் குயர் அரசியல், குயர் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மற்றும் ஏனைய குயர் செயற்பாட்டாளர்களின் சமத்துவம் நோக்கிய முன்னெடுப்புகள், கல்வியியலாளர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட மையக்கருத்து வெளிப்பாட்டளர்கள் குயர் அரசியல் அல்லது அது சார்ந்த விடயங்களில் பேணும் மௌனிப்பு என்பன பற்றிப் பேசவிழைகின்றது.

# குயர் வெறுப்பும் குயர் சமூகத்தின் மீதான ஓரங்கட்டல்களும்

**அனுதர்சி கபிலன்**



அனுதர்சி கபிலன் அவர்கள் தனது இளமாணிப் பட்டத்தைத் திருகோணமலை வளாகம், கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் இதழியலில் "டிப்ளோமா" பட்டத்தைக் கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் பெற்றுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஊடகக் கற்கைகள் துறையில் விரிவுரையாளராகப் பணிப்புரியும் அனுதர்சி முதுமாணிப் பட்டப்படிப்பைக் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஸ்ரீபாளி வளாகத்தில் வெகுஜன ஊடகவியலில் தொடர்கின்றார்.
'இலங்கை அரசியல் அரசியல்வாதிகள்' என்ற தலைப்பில் 2015 இல் அவரால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் நேர்காணல்கள் 2017 இல் நூல்வடிவில் வெளியிடப்பட்டது.

இந்த உலகில் பிறந்த அனைவரும் மனிதர்களாக மதிக்கப்படுவதற்கும், கண்ணியமாகவும், பாதுகாப்பாகவும் வாழ்வதற்கும் உரித்துடையவர்கள். ஆனாலும் குயர்மக்கள் அவ்வாறு வாழ்வதற்குப் பல போராட்டங்களைக் குயர் சமூகமும், செயற்பாட்டாளர்களும் முன்னெடுக்கவேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது. இவர்கள் நாள்தோறும் அன்றாட வாழ்க்கையின் அனைத்துச் சூழ்நிலைகளிலும் அவதூறுகளையும், துன்புறுத்தல்களையும் சந்திக்க வேண்டியுள்ளது.

குயர் வெறுப்பு நேரடியாக மாத்திரமல்லாமல், ஊடகங்களின் வாயிலாகவும் வெறுப்புப் பேச்சாக வெளிப்படுத்தப்படுகின்றது. அண்மைக்காலங்களில் சமூக ஊடகங்களில் பாரியளவில் வெறுப்புப் பேச்சை அவதானிக்க முடிகிறது. வெகுசன ஊடகங்களில் ஓரளவு அறிக்கையிடல்களில் உணர்திறன்மிக்க அறிக்கையிடலை அவதானிக்கமுடியும். இயற்கையானது மற்றும் இயல்பானது எனச் சமூகம் நம்புகின்ற விடயங்களுக்கு, அப்பாற்பட்டு நடக்கும் விடயங்களை இந்தச் சமூகம் ஏற்றுக்கொள்ள மறுப்பதுடன் அவற்றை வெறுப்புடன் நோக்குவதை அவதானிக்க முடிகிறது.

தமிழ்ச்சூழலில் அண்மையில் குயர் மக்களுடைய சுயமரியாதை நடைபயணம் மற்றும் கொண்டாட்டங்கள் இடம்பெற்றதை அவதானிக்க முடிந்தது. அது தொடர்பான செய்திகள் சமூக ஊடகங்கள் உள்ளிட்ட பல்வேறு ஊடகங்களிலும் இடம்பெற்றிருந்தன. பெரும்பாலான செய்திகளும் பின்னூட்டங்களும் குயர்வெறுப்பை வெளிப்படுத்துபவையாகவே அமைந்திருந்தன.

“மேலைத்தேய கலாசார நடடிவடிக்கைகள் எமது பிரதேசங்களில் இருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டும்” என்ற வகையில் இணையவழி ஊடகம் ஒன்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தச் சமூகத்தில் குயர் மக்களுடைய நீண்ட வரலாறுகளை இலக்கியங்களும் ஏனைய ஆதாரங்களும் தாங்கியிருக்கின்றபோது, இந்தச் சமூகத்தில் உள்ள பெரும்பாலானோர் இது மேலைத்தேயக் கருத்தியல் அல்லது பண்பாடு என மிக இலகுவாகக் கடந்துவிடுகின்றனர்.

குயர் மக்களுடைய பெற்றோர்களை விமர்சிக்கும் வகையிலான விமர்சனங்கள், மிக மோசமான வார்த்தைப் பிரயோகங்கள் மற்றும் சித்திரிப்புகள் என்பவற்றை ஊடகங்களின் பின்னூட்டத்திலும் சமூக ஊடகங்களிலும் அவதானிக்க முடிந்தது. குயர் மக்களுடைய போராட்ட வடிவங்களும் கேலிக்குட்படுத்தப்பட்டிருப்பதைக் காணமுடிந்தது. பால்நிலை சார்ந்த பிரச்சினைகளும் மிக முக்கியமானவையாகவே இருக்கின்றன. அதேவேளை குயர் மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகள் ஏராளம். அவை ஜனநாயக நாடொன்றில் பேசப்படவேண்டியவை.

### திருநர்கள் மீதான சமூகத்தின் வெறுப்பு (Transphobia)

*Transphobia* என்பது திருநர்கள் மீதான சமூகத்தின் வெறுப்பு ஆகும். திருநர் என்பதனுள் திருநம்பிகள் மற்றும் திருநங்கைகள் என்போர் உள்ளடங்குவர். திருநர்கள் என்போர் பிறப்பால் ஆணாக அடையாளப்படுத்தப்பட்டுப், பின்னர் தம்மைப் பெண்ணாக உணர்ந்து பெண்களாக வாழ முற்படுவோர்களையும், பெண்ணாகப் பிறந்து பின்னர் தம்மை ஆணாக உணர்ந்து ஆணாக வாழ முற்படுவோர்களையும் குறிக்கும். இவர்கள் பல பெயர்களால் கேலியாக அழைக்கப்படுவதுடன் பெரும்பான்மைச் சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களாகவும் இருக்கின்றனர்.

*Trans* என்பது திருநர்களையும் *Phobia* என்பது ஒருவருக்குப் பயத்தை அல்லது வெறுப்பை ஏற்படுத்துவது எனவும் பொருள்கொள்ளப்படுகின்றது. இந்த வார்த்தை ‘போபோஸ்’ என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வந்தது. அதாவது *Phobia* என்பது வழக்கமாக ஏற்படும் பயத்தை அல்லது வெறுப்பைவிட வித்தியாசமானது. பலநேரங்களில் அவை மனஉளைச்சலை ஏற்படுத்தக்கூடும். இதன்படி *Transphobia* என்பது திருநர்கள் மீதான சமூகத்தின் வெறுப்பை வெளிப்படுத்துகின்றது.

திருநர்கள் மீதான சமூகத்தின் வெறுப்பு எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது என்று பார்த்தோமானால், ஓர் ஆண் பெண்ணாக உணரும் போது, அல்லது பெண் ஆணாக உணரும் போது சமூகம் அதனை ஏற்றுக்கொள்வது என்பது சிக்கலான நிலைப்பாடாகும். முதலில் அவர்களுடைய குடும்பத்தினர் அதை எவ்வாறு ஏற்றுக்கொள்கின்றனர் என்பதைப் பொறுத்துத்தான் திருநர்களின் எதிர்கால வாழ்க்கைநிலை எப்படி இருக்கப்போகின்றது என்பது தீர்மானிக்கப்படுகிறது. குடும்பத்தினர் புறக்கணிக்கும் போதும், திருநர்கள் வீட்டைவிட்டுவெளியேறும் நிலைக்குத் தள்ளப்படும்போதும், திருநர்கள் சமூகத்தில் பல்வேறு சவால்களைச் சந்திக்கின்றனர். குறிப்பாகச் சமூகத்தில் உள்ள திருநர்களை நடாத்தும் விதம், திருநர்களை குடும்பத்தில் இருந்து ஓரங்கட்டுவதுடன், அவர்களைத் தவறான முடிவுக்கும் இட்டுச்செல்கின்றது. திருநங்கையாக அல்லது திருநம்பியாக ஒருவர்




**யாழ். சுயமரியாதை நடைபயணத்தின் போது**
Image Source - www.tamilguardian.com

அடையாளப்படுத்தப்பட்டால், குடும்பத்தைச் சேர்ந்தவர்களே, சமூகம் என்ன சொல்லுமோ? என்ற பயத்தினால் ஒதுக்கிவைத்தல், வீட்டிலிருந்து துரத்துதல் போன்ற செயற்பாடுகளைச் செய்கின்றனர். இதனால் அவர்கள் முற்றாக மனமுடைந்து போகின்றனர். சமூகத்தில் திருநர்கள் தெருவோரத்தில்தான் நிறுத்தப்படுகின்றார்கள். திருநங்கைகளைப் பாலியல் தொழிலாளிகளாகப் பார்ப்பதாலும், அவர்கள் பாலியல் அத்துமீறலை எதிர்கொள்கிறார்கள்.

திருநர்கள் ஏன் கேலிக்கும் கிண்டலுக்கும் உள்ளாக்கப்படவேண்டும்? திருநர்களை இச்சமூகம் சந்தேகக் கண்கொண்டே பார்க்கிறது. பண்பாட்டுரீதியாகத் திருநர்கள் பொதுநீரோட்டத்திலிருந்து விலக்கப்பட்டவர்களாகவே பார்க்கப்படுகின்றனர். வேலைக்குச் செல்லும் இடங்களிலும் பொதுச் சேவைகளைப் பெறச் செல்லும் இடங்களிலும், இவர்களை எத்தனை பேர் ஏற்றுக்கொள்கின்றனர். வாடகைக்கு வீடு தேடுவதில், வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்வதில், கல்வியைப் பெறுவதில், பொதுச்சேவைகளைப் பெறுவதில் என அனைத்து விடயங்களிலும் திருநர்கள் பாரபட்சமாக நடத்தப்படுவதற்குத் திருநர் வெறுப்பு அடிப்படையாகக் கணப்படுகின்றது. திருநர்கள் பாலியல் கொடுமைகளைச் சந்திப்பதற்கும் குயர் வெறுப்பே அடிப்படையாக அமைகின்றது. பாடசாலைகள் மற்றும் கல்வி நிலையங்களில் பாகுபாடும், துன்புறுத்தலும் இருப்பதால் பாதியிலேயே படிப்பை நிறுத்தவேண்டிய சூழலுக்குள்ளும் திருநர்கள் தள்ளப்படுகின்றனர். பாடசாலையில் படிக்கும்போது, அந்த வளரிளம் பருவத்தில் உடலில் ஏற்படும் மாற்றங்களால் தன்னைத்தானே வெறுத்து வாழ வேண்டிய நிலை ஏற்படுகின்றது. தன்னுடலைத் தானே வெறுத்து வாழ்வதுதான் உலகத்திலேயே கொடுமையான விடயம் ஆகும். பல்வேறு சவால்களுக்குள் வாழும் திருநர்களுக்கு, சமூகத்தின் வெறுப்பு மேலும் சவாலாக அமைகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை குயர்மக்கள் தொடர்பாகச் சேவையாற்றும் நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் இருக்கின்றபோதிலும் இவர்கள் தொடர்பான விழிப்புணர்வு போதுமானதாக இல்லை. சமூக அளவில் பால்நிலை அடிப்படையிலான பாகுபாடு மற்றும் பாரபட்சத்தை இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் அவசியமாகும். இதன்மூலம் திருநர்கள் என்போர் சமூகத்தில் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும்




Image Source - www.centreformentalhealth.org.uk

நடமாடமுடியும். அத்துடன் பல்வேறு துறைகளில் தமது திறமைகளை வெளிப்படுத்தவும் முடியும்.

தனிமனிதர்களின் தன்பாலின மாற்றங்களை உணரும்போது, சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் ஏனைய அமைப்புகள் மூலமாகவும் மக்களுக்குத் தம்மைப் பற்றிய புரிதல்களைக் கொண்டுவருவதன் மூலம், திருநர்கள் மீதுள்ள சமூகத்தின் வெறுப்புக் குறைக்கப்பட்டு அவர்களும் சகமனிதர்களாக வாழ்வதற்கான நிலைமை ஏற்படலாம். ஆகவே இலங்கையிலும் சரி ஏனைய நாடுகளிலும் சரி திருநர்கள் மீதான சமூக வெறுப்பை இல்லாதொழித்து அவர்களின் உணர்வுகளையும் மதித்து எல்லோரும் ஒன்றிணைந்து சிறந்ததொரு ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்புவது அவசியமாகும்.

### தன்பாலீர்ப்பு வெறுப்பு (Homophobia)

தன்பாலீர்ப்பு என்பது சமூகத்தால் கலாசாரச் சீர்கேடாகப் பார்க்கப்படுகிறது. தன்பாலீர்ப்பாளர்களுக்கு எதிரான நடத்தைகள், நகைச்சுவைகள், உணர்வுகளை மதிக்காது காயப்படுத்துதல், பாரபட்சம் காட்டுதல் மற்றும் பெரும்பான்மையினரின் விருப்பமின்மை என்பவற்றைத் தன்பாலீர்ப்பு வெறுப்பு எனலாம். தன்பாலீர்ப்பு இயற்கையானதல்ல என்ற வாதம் இவர்கள் கையில் எடுக்கும் ஆயுதமாக இருக்கிறது. இவர்கள் தன்பாலீர்ப்பாளர்களுக்கு எதிராகப் பல்வேறு வழிகளிலும் தமது வெறுப்பை வெளிப்படுத்துகிறார்கள். சமூகத்தில் இடம்பெறும் தன்பாலீர்ப்பாளர்களுக்கு எதிரான பல்வேறுபட்ட வன்முறைகளுக்கும் பாரபட்சங்களுக்கும் இது அடிப்படையாக இருக்கிறது.

### இருபாலீர்ப்பு வெறுப்பு (Biphobia)

இருபாலீர்ப்பு வெறுப்பு எதிர்ப்பாலீர்பாளர்களிடம் இருந்து மட்டுமல்லாமல் குயர்மக்களிடம் இருந்தும் ஏற்படமுடியும். எனவே இருபாலீர்ப்பாளர்கள் அதிகம் எதிர்ப்பையும் வெறுப்பையும் எதிர்கொள்பவர்களாக இருக்கிறார்கள்.

### குயர் வெறுப்பு (Queerphobia)

குயர் வெறுப்பும் குயர் சமூகத்தின் மீதான ஓரங்கட்டல்களும், குயர் மக்களை மனஉளைச்சல் மற்றும் உளவியல்ரீதியான பாதிப்புகளுக்கு உள்ளாக்குகின்றன. அதுமட்டுமல்லாமல் இவர்கள் குடும்பத்தினராலும் உறவுகளாலும் தனிமைப்படுத்தப்படுகின்றனர். இதுபோன்ற காரணிகள் மற்றும் பாதிப்புகள் குயர் சமூகத்தைத் தடம்மாற வைக்கின்றதா என்ற கேள்வியும் எழுகிறது. குயர் சமூகத்தினரில் சிலரின் தவறான செயற்பாடுகள், குயர் மக்களைச் சமூகமயப்படுத்தும் செயற்பாடுகளில், தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியனவாக இருக்கின்றன.

மனப்பாங்கு சார்ந்த வெறுப்பு, மொழி சார்ந்த வெறுப்பு, செயல் சார்ந்த வெறுப்பு, கட்டமைப்பு சார்ந்த வெறுப்பு, சமூகம் சார்ந்த வெறுப்பு, பண்பாடு சார்ந்த வெறுப்பு, மறைமுக வெறுப்பு எனப் பல்வேறு விடயங்கள் சார்ந்து குயர் மக்களுக்கு எதிரான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

குயர் மக்கள் பற்றிய அறிவும் புரிதலும் இன்மையை, குயர்வெறுப்பிற்கான முக்கிய காரணமாகச் சொல்ல முடியும். இருந்தாலும்கூட, பாரம்பரியம் மற்றும் மத நம்பிக்கைகள், சமூக அழுத்தம் என்பன மக்களுடைய நடத்தையிலும் குயர்வெறுப்பிலும் முக்கிய பங்காற்றுகின்றன. ஊடகங்களின் குயர்மக்கள் பற்றிய தவறான பிரதிநிதித்துவப்படுத்தலும், மீள்வருவார்ப்புகளை உருவாக்குதலும் குயர் வெறுப்பிற்கான காரணிகளாகும். அதுமட்டுமல்லாமல் பால்நிலை மற்றும் பாலியல் கல்வி இன்மை, சரியான சட்டப் பாதுகாப்பு இன்மை போன்ற இன்னும் பல விடயங்களும் குயர்வெறுப்பைத் தூண்டுவனவாக இருக்கின்றன.

# இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகளில் பிராமணரும் பிரம்மதேயமும்

**எம். எம். ஜெயசீலன்**



எம்.எம். ஜெயசீலன் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணி, முதுதத்துவமாணிப் பட்டங்களைப் பெற்றுள்ள இவர், இந்தியப் பொதுநலவாய நாடுகளின் புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் (தஞ்சாவூர்) கலாநிதிப் பட்ட ஆய்வைச் சமர்ப்பித்துள்ளார். கல்வெட்டியல், பண்பாட்டு வரலாறு, இலக்கிய விமர்சனம், நவீன இலக்கியம் முதலான துறைகளில் ஆர்வமுள்ள இவர், அத்துறைசார்ந்த ஆய்வுக் கட்டுரைகளைத் தேசிய மற்றும் சர்வதேச ஆய்வரங்குகளில் சமர்ப்பித்து வருவதுடன் ஆய்விதழ்களிலும் சஞ்சிகைகளிலும் தொடர்ந்தும் எழுதிவருகிறார்.

இந்தியாவில் பொ.ஆ.மு. காலத்தில் மேலோங்கத் தொடங்கிய பிராமண மதம், கடல் கடந்து இலங்கை, கம்போடியா, தாய்லாந்து, பர்மா, ஜாவா, இந்தோனேசியா முதலான பல நாடுகளில் விரைவாகச் செல்வாக்குப் பெற்றது. அந்நாடுகளின் அரச சபைகளில் பிராமணர்க்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. அரச மட்டத்திலான சடங்குகள், பிராமணர் தலைமையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அரச அதிகாரத்திற்கான சம்பிரதாயபூர்வமான அங்கீகாரத்தைப் பிராமணச் சடங்குகள் வழங்கியுள்ளன. பிராமணர் அரச ஆலோசகர்களாகவும் புரோகிதர்களாகவும் விளங்கியுள்ளனர். அரச மட்டத்தில் முதன்மைபெற்ற பிராமணச் சடங்குகள் மக்கள் மத்தியிலும் பரவத் தொடங்கியுள்ளன.

இலங்கையில் பொ.ஆ. முற்பட்ட காலத்திலேயே பிராமணர் செல்வாக்கு மேலோங்கியிருந்துள்ளது. இலங்கையின் பிராமிக் கல்வெட்டுகளிலும் பாளி நூல்களிலும் அதற்கான சான்றுகள் உள்ளன. அச்சான்றுகள் தென்னிந்தியாவைவிட இலங்கையில் பிராமணச் செல்வாக்கு தொடக்ககாலத்தில் மேலோங்கியிருந்துள்ளமையை வெளிப்படுத்தி நிற்கின்றன. தென்னிந்தியப் பிராமிக் கல்வெட்டுகளில் பிராமணர் பற்றிய குறிப்புகள் இல்லை. சங்ககாலத்தின் பிற்பகுதியிலேயே பிராமணச் செல்வாக்கு மேலோங்கத் தொடங்கியுள்ளது. அதன்பின்பே, “நிலவுடைமையை அடிப்படையாகக்கொண்டு மங்கலம் என்ற பெயரில் அந்தணர்களுக்கு ஊர்களைத் தானமாகத் தரும் வழக்கம் இடம்பெற்றிருக்கின்றது” (வேதாசலம், 2019: 98). பொ.ஆ. 5 ஆம் நூற்றாண்டுக்குரிய பூலாங்குறிச்சி கல்வெட்டில் வெள்ளேற்றான்மங்கலம், சிற்றையூர் எனும் இரு பிராமண ஊர்கள் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன (மேலது: 99). பிரம்மதேயம் பற்றிய முதற்கல்வெட்டுப் பதிவாக அவை விளங்குகின்றன.

இலங்கையில் பிராமணர் பற்றிய குறிப்புகள் அடங்கிய கல்வெட்டுகளை ஆராய்கின்றபோது சிங்கள மன்னர்களும், தமிழ் மன்னர்களும் பிராமணர்களைப் போற்றி ஆதரித்துள்ளமையையும் பௌத்த மரபிலும், இந்து மரபிலும் அவர்கள் முதன்மையான இடத்தினைப் பெற்றிருந்துள்ளமையையும் அறியவியல்கிறது. பிராமணர் பற்றிய தமிழ்க் கல்வெட்டுக் குறிப்புகள் இந்துக் கோயில்களிலும், பௌத்த விகாரைகளிலும் கிடைக்கப்பெற்றுள்ளமை தனித்துக் குறிப்பிட வேண்டியதாகும். அனுராதபுர காலத்துக்குரியதாகக் கிடைத்துள்ள தமிழ்க் கல்வெட்டுகளில் பிராமணர் பற்றிய பதிவுகள் எவையும் இடம்பெறவில்லை. சோழர்காலக் கல்வெட்டுகளிலும் சோழருக்குப் பிந்தையகாலக் கல்வெட்டுகளிலும் பிராமணர் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. சோழர்காலத்து இந்துக்கோயில்களில் பிராமணர்கள் பூசகர்களாக விளங்கியுள்ளதைக் கல்வெட்டுகளிலிருந்து கண்டுகொள்ள முடிகிறது. திருக்கேதீஸ்வரத்தில் கிடைத்த முதலாம் இராசேந்திரன் காலத்துக்குரிய கல்வெட்டில் “மாணி இருவருக்கு நிசதம் நல்லெண்ணை” வழங்கப்பட்ட குறிப்பு உள்ளது. ‘மாணி’ என்பது இளம்பிராமணனைக் குறிக்கும் சொல்லாகும். ஆகவே, இராஜராஜேஸ்வரத்தில் இரு இளம் பிராமணர்கள் இருந்துள்ளனர் என்பதை இதன்மூலம் அறிய முடிகிறது. வானவன் மாதேவி ஈஸ்வரத்தில் உள்ள அதிராசேந்திரனின் மூன்றாம் ஆட்சியாண்டுக்குரிய கல்வெட்டில் “திருவாராதனை பண்ணும் ப்ராஹ்மணன், சிவ ப்ராஹ்மணன்” ஆகிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

சோழருக்குப் பிந்தையகாலக் கல்வெட்டுகளிலும் பிராமணர் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. முதலாம் விஜயபாகுவின் பளமோட்டைச் சாசனத்தில் கொடை வழங்கியதாகக் கூறப்படும், ‘நங்கைசானி’ ஒரு பிராமணப் பெண்ணாவாள். ஆறாம் பராக்கிரமபாகுவின் நாய்மனைக் கல்வெட்டில் பௌத்த விகாரை ஒன்றில் உள்ள தேவராஜ சந்நிதியில் நாள்தோறும் பன்னிரு பிராமணர்களுக்கு உணவளிக்க ஏற்பாடு செய்யப்பட்டமை இடம்பெற்றுள்ளது. அவனுடைய முன்னேஸ்வரக் கல்வெட்டில் பிராமணர்களுக்குச் சர்வமானியமாக நிலம் வழங்கப்பட்ட செய்தி இடம்பெற்றுள்ளது. இவை சோழர்காலத்து மரபு தொடர்ந்து பேணப்பட்டுள்ளமையைக் காட்டுவதோடு பௌத்த விகாரைகளோடும் பிராமணர்கள் அணுக்கமாக இருந்துள்ளமையையும் சிங்கள மன்னர்கள் பிராமணர்களை ஆதரித்துள்ளமையையும் காட்டுகின்றன.

பிராமணர்களுக்கு வழங்கப்பட்ட நிலம் பிரம்மதேயம், சதுர்வேதி மங்கலம் முதலான பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு வழங்கப்பட்ட நிலப்பகுதிகள் பிராமணர்களின் குடியிருப்புப் பகுதியாக விளங்கியுள்ளன. சங்ககாலத்தின் பிற்பகுதியிலிருந்து பிராமணர்களுக்கு நிலம் வழங்குதல் இடம்பெற்றுள்ளதை இலக்கியச் சான்றுகளின்வழி அறியமுடிகிறது. அவ்வழக்கம் பல்லவர் - பாண்டியர் ஆட்சிக்காலத்தில் அதிகரித்துள்ளதுடன் அதன் தொடர்ச்சியாகச் சோழர் மற்றும் பிற்காலப் பாண்டியர் காலத்திலும் அவ்வழமை பெரும்பான்மையாக அதிகரித்துள்ளது.

“பிராமணர்களுக்குப் பல்வேறு காரணங்களுக்காகப் பிரம்மதேயங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஊர்ப்பெயரிலும் அரசன், அரசி, அதிகாரி ஆகியோரது இயற்பெயர், பட்டப்பெயர்களிலும், புரவுவரியார் பெயரிலும், தானமாகப் பிறரது பெயரிலும், இறைவன் பெயரிலும், வெற்றியின் பெயரிலும் பிரம்மதேயங்கள்

அளிக்கப்பட்டுள்ளன. சிலவேளைகளில் பண்டு பிரம்மதேயமாக வழங்கப்பட்ட ஊர்கள் காலப்போக்கில் தமது உரிமையை இழந்து நின்றன. அவை மீண்டும் பிற்காலத்தில் ஆட்சிபுரிந்த அரசர்களால் உறுதிசெய்யப்பட்டு மறுபடியும் பிரம்மதேயமாக்கி அளிக்கப்பட்டிருக்கிற வழக்கமும் உள்ளது" (மேலது: 103).

இப்பிரம்மதேயங்கள் யாவும் வளமான பகுதிகளிலேயே உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதைச் சோழர் மற்றும் பாண்டியர் காலப் பிரம்மதேயங்களை ஆராயும்போது உணரவியல்கிறது. அவை இடைக்காலத் தமிழகத்தில் அரச நிர்வாகத்தின் முக்கியமான அமைப்பாக இயங்கியுள்ளன.

இலங்கையிலும் பிரம்மதேயங்கள் இருந்திருக்கின்றன என்பதைக் கல்வெட்டுகளில் இருந்து கண்டுகொள்ள முடிகிறது. இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள கல்வெட்டுகளில் 05 கல்வெட்டுகளில் பிரம்மதேயம் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. அக்கல்வெட்டுகள் வருமாறு:

**பிரம்மதேயங்கள் பற்றிய கல்வெட்டுகள்**

| பிரம்மதேயம் | மன்னன் | ஆண்டு |
|---|---|---|
| இராஜராஜ சதுர்வேதி மங்கலம் | சோழ இலங்கேஸ்வரன் | பொ.ஆ.1033 |
| விஜயராஜ சதுர்வேதி மங்கலம் | 1 ஆம் விஜயபாகு | பொ.ஆ. 1097 |
| கந்தளாய்ப் பிரம்மதேயம் | ஜயபாகுதேவர் | |
| கந்தளாயான விஜயராஜ சதுர்வேதி மங்கலம் | ஜயபாகுதேவர் | பொ.ஆ. 1145 |
| ஜயங்கொண்ட சலாமேக சதுர்வேதி மங்கலம் | ஜயபாகுதேவர் | பொ.ஆ. 1134 |

மேற்படி ஐந்து கல்வெட்டுகளுள் முதல் நான்கும் கந்தளாய்ப் பிரம்மதேயத்தோடு தொடர்புடையனவாகும். அவற்றுள் விஜயபாகு காலத்துக் கல்வெட்டு பளமோட்டையிலும் ஏனைய கல்வெட்டுகள் கந்தளாய்ச் சிவன் கோயிலும் கிடைக்கப்பெற்றுள்ளன. இச்சாசனக் குறிப்புகளின்படி, கந்தளாயில் இருந்த பிரம்மதேயம் இராஜராஜ சதுர்வேதி மங்கலம் என இராஜராஜன் பெயரினால் சோழர் காலத்தில் அழைக்கப்பட்டுள்ளது. இப்பிரம்மதேயம் எக்காலத்தில் அமைக்கப்பட்டது என்பதற்கான சான்றுகள் எவையும் கிடைக்கப்பெறவில்லை. சோழ இலங்கேஸ்வரன் என்ற பெயரில் இலங்கையை ஆண்ட சோழ மன்னனின் 10 ஆவது ஆட்சி ஆண்டிலே அக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. அம்மன்னனின் இயற்பெயர் தெரியவில்லை. அதனால் கல்வெட்டில் இடம்பெறும் பஞ்சாங்கக் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு அது 1033 அல்லது 1047 இல் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும் என கா. இந்திரபாலாவும் (1975), செ. குணசிங்கமும் (1974) கருதுகின்றனர். அக்கருத்துகளை ஏற்றுக்கொண்ட சி. பத்மநாதன் சோழர் காலத்து ஏனைய தகவல்களை அடிப்படையாகக்கொண்டு அது 1033 ஆம் ஆண்டாக இருக்க வேண்டும் என்றுள்ளார் (பத்மநாதன், 2006: 98). எனவே, அக்காலத்துக்கு முன்னரே அப்பிரம்மதேயம் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். முதலாம் இராஜராஜன் காலத்தில் அல்லது அவனுக்குச் சற்றுப் பின்னர் அப்பிரம்மதேயம் உருவாக்கப்பட்டிருக்கலாம்.

இலங்கையில் சோழராட்சி முடிவடைந்த பின்னர் அப்பிரம்மதேயம் தன் செல்வாக்கை இழக்கவில்லை. சோழரை வெற்றிகொண்ட முதலாம் விஜயபாகுவின் பெயரினால் அப்பிரம்மதேயம் விஜயராஜ சதுர்வேதி மங்கலம் என அழைக்கப்பட்டுள்ளது. மன்னர்கள் மாறுகின்றபோது, ஆட்சிகள் மாறுகின்றபோது பிரம்மதேயங்களின் பெயர்கள் மாற்றமடைதல் தென்னிந்தியாவிலும் இடம்பெற்றுள்ளதைக் காணலாம். சான்றாக, "வைகையாற்றின் கரையில் அமைந்த சோழவந்தான் பத்தாம் நூற்றாண்டில் பராந்தகச் சதுர்வேதி மங்கலம் என்ற பெயரில் விளங்கியுள்ளது. அதன்பிறகு சோழன் தலைகொண்ட வீரபாண்டியனின் பட்டப்பெயரால் சோழாந்தகச் சதுர்வேதி மங்கலம் என்ற பெயர் மாற்றம் பெற்றுள்ளது. முதலாம் இராசராசன் காலத்தில் இவ்வூர் ஜனநாத சதுர்வேதி மங்கலம் என்று இராசராசனது பெயருக்கு மாறியுள்ளது. இடைக்காலப் பாண்டியர் காலத்தில் மீண்டும் இவ்வூர் பாண்டியர் பெயருக்கு, சோழ குழாந்தகச் சதுர்வேதி மங்கலம் என்று பெயர் மாற்றம் பெற்றுள்ளது" (வேதாசலம், 2019: 107).

விஜயபாகுக்குப் பின்னரும் அப்பிரம்மதேயம் தொடர்ந்து நீடித்துள்ளது என்பதற்கு ஜயபாகு தேவரின் பெயரில் இடம்பெற்றுள்ள கல்வெட்டுகள் சான்றாக அமைகின்றன. கந்தளாயில் அமைந்த பிரம்மதேயம் என்பதால் 'கந்தளாயான விஜயராஜ சதுர்வேதி மங்கலம்', 'கந்தளாய் பிரம்மதேயம்' எனக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஜயபாகு தேவரின் 35 ஆம் ஆட்சியாண்டு என்பது இரண்டாம் கஜபாகுவின் காலத்துக்குரியதாகும் (பொ.ஆ. 1145). ஆட்சியாண்டு இடம்பெறாத கல்வெட்டும் இரண்டாம் கஜபாகுவின் காலத்துக்கு உரியதாகவே கொள்ளப்படுகிறது.

இலங்கையில் சோழருக்குப் பிந்திய காலக் கல்வெட்டுகளில் ஜயபாகு தேவர் பெயரிலான

கல்வெட்டுகள் அதிகமாகக் கிடைத்துள்ளன. இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள கல்வெட்டுகளுள் பத்துக் கல்வெட்டுகள் ஜயபாகுவின் காலத்தில் பொறிக்கப்பட்டுள்ளமையை வெளிப்படையாகக் குறிப்பிட்டுள்ளன. இவற்றுடன் ஹிங்குராங்கொடையில் கிடைக்கப்பட்ட கல்வெட்டில் இடம்பெறும் 40 ஆவது ஆட்சி ஆண்டும் ஜயபாகுவைக் குறிக்கிறது (ET: 17). இங்கு ஜயபாகுவின் ஆட்சிக் காலத்துக்குரியனவாகப் பதினொரு கல்வெட்டுகள் கிடைக்கப்பெற்றாலும் அவை எவையுமே அவனுடைய ஆட்சிக்காலத்தில் பொறிக்கப்படவில்லை. முதலாம் விஜயபாகுவுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த ஜயபாகு (1110) ஒரு வருடம்கூட ஆட்சி செய்யவில்லை. கிடைக்கின்ற சான்றுகளின்படி முதலாம் விஜயபாகுவின் மகனும் முறைப்படி ஆட்சி உரிமைக்கு உரித்துடையவனுமாகிய விக்கிரமபாகு தனது சித்தப்பாவான ஜயபாகுவை எதிர்த்து ஆட்சியை மிகவிரைவில் கைப்பற்றியுள்ளான். அதனால் ஜயபாகுவின் ஆட்சி சிறிது காலமே இடம்பெற்றுள்ளது.

விக்கிரமபாகுவும் (1110 - 1132) அவனுடைய மகன் கஜபாகுவும் (1132 - 1153) நான்கு தசாப்தகாலம் ஆட்சி செலுத்தியுள்ளனர். அவர்கள் இருவரும் முறைப்படி முடிசூட்டிக்கொள்ளாமல் ஆட்சி நடத்தியுள்ளதால் தம்காலத்துக் கல்வெட்டுகளை முறைப்படி முடிசூட்டிக்கொண்ட ஜயபாகுவின் பெயரில் பொறித்துள்ளனர். அவ்விருவரும் முடிசூட்டிக்கொள்வதற்கான அங்கீகாரம் சங்கத்தார்வழி கிடைக்கப்பெறவில்லை என்பதை வம்ச வரலாற்றுக் கதைகளினூடாக அறியமுடிகிறது. ஜயபாகு தேவரின் 04, 08 ஆகிய ஆட்சி ஆண்டுகளில் பொறிக்கப்பட்டுள்ள 03 கல்வெட்டுகள் உறுதியாக விக்கிரமபாகுவின் காலத்துக்கு உரியனவாகும். ஏனைய கல்வெட்டுகளுள் 18, 24, 28, 35, 38, 43 ஆகிய ஆட்சி ஆண்டுகளில் பொறிக்கப்பட்டுள்ளவை கஜபாகுவின் காலத்துக்குரியனவாகும். ஜயவாகு தேவரின் 12 ஆம் ஆட்சி ஆண்டில் பொறிக்கப்பட்டுள்ள பெரியமடு கோடலிப்பறிச்சான் கல்வெட்டு விக்கிரமபாகு காலத்துக்குரியதா, கஜபாகு மன்னன் காலத்துக்கு உரியதா என்பதை உறுதியாகக் கூறமுடியாதுள்ளது.

கந்தளாயில் கிடைத்த நிஸ்ஸங்க மல்லனின் (பொ.ஆ.1187-1196) கல்லாசன சிங்களக் கல்வெட்டில் 'சதுர்வேத பிரம்மபுர' எனக் கந்தளாய்ச் சதுர்வேதி மங்கலம் குறிப்பிடப்பட்டுள்ளது (EZ. 2: 285-290). சதுர்வேதி மங்கலத்தில் அமைக்கப்பட்ட பார்வதி சத்திரத்திலிருந்து ஆடல், பாடல், இசை முதலானவற்றை மன்னன் கண்டு களித்ததாகக் கூறப்பட்டுள்ளது. இது கந்தளாய்ப் பிரம்மதேயம் இரண்டு நூற்றாண்டுகளாகப் பெற்றிருந்த தொடர் செல்வாக்கைக் காட்டுகின்றன.

மஹாகிரித்தேகமவில் கிடைத்த கல்வெட்டில் ஜயங்கொண்ட சலாமேக சதுர்வேதி மங்கலம் என்ற பிரம்மதேயம் பற்றிய பதிவு இடம்பெற்றுள்ளது. இது ஜயவாகுதேவரின் 24 ஆம் ஆட்சி ஆண்டில் பொறிக்கப்பட்டதாகும். அதன்படி இது, இரண்டாம் கஜபாகுவின் இரண்டாவது ஆட்சி ஆண்டுக்குரிய கல்வெட்டாகும் (பொ.ஆ. 1134). இப்பிரம்மதேயம் சோழர் காலத்திலிருந்து தொடர்வதா, பின்னர் அமைக்கப்பட்டதா? என்பதை அறியமுடியவில்லை.

இக்கல்வெட்டுகளின்படி, கந்தளாய்ப் பிரம்மதேயம், ஜயங்கொண்ட சலாமேக சதுர்வேதி மங்கலம் என இரண்டு பிரம்மதேயங்கள் இடைக்கால இலங்கையில் சிறப்புற்றிருந்துள்ளன என்பதைக் கண்டுகொள்ள முடிகிறது. இவற்றையொத்த பிரம்மதேயங்கள் இன்னும் அக்காலத்தில் இருந்திருக்கலாம் என்பதைக் கல்வெட்டுகளிலும் பிறசான்றுகளிலும் இடம்பெறுகின்ற பிராமணர் பற்றிய குறிப்புகளிலிருந்து ஊகிக்க முடிகிறது. எடுத்துக்காட்டாக, 14 ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்த இபுன் பதூதாவின் தீனூர் (தேனுவரையைத் தேனூர் என்றும் அக்கோயிலின் மூலமூர்த்தியைத் தீனூராண்டவன் என்றும் இபுன் பதூதா குறிப்பிட்டுள்ளார்.) பற்றிய குறிப்பில் இடம்பெறும் "அந்தக் கோயிலில் பார்ப்பனரும் யோகியரும் ஆயிரம் பேர் இருக்கின்றனர்" (நீலகண்ட சாஸ்திரி, 2022: 460) என்ற செய்தியைக் கூறலாம்.

சோழ இலங்கேஸ்வரன் காலத்துக் கல்வெட்டிலிருந்து கந்தளாய்ப் பிரம்மதேயம் குறித்த சில முக்கியமான தகவல்களை அறிந்துகொள்ள முடிகின்றது. அப்பிரம்மதேயமானது, "ராஜேந்திரசோழ வளநாட்டு ராஜவிச்சாத்திர வளநாட்டு ப்ரஹ்மதேசம்" எனச் சுட்டப்படுவதிலிருந்து ராஜேந்திர சோழ வளநாட்டு ராஜவிச்சாத்திர வளநாட்டு எனும் வளநாட்டுப் பிரிவுக்குள் அப்பிரம்மதேயம் அமைந்திருந்துள்ளது. அவ்வளநாடு ராஜேந்திரசோழ வளநாடு, ராஜவிச்சாத்திர வளநாடு என இரு பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளது. பிரம்மதேயங்களானவை சோழ அரசின் நிர்வாகப் பிரிவின் மண்டலங்களுக்கு அடுத்த பிரிவாக விளங்கிய வளநாடு என்ற பிரிவினுள் அடக்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க இலங்கையில் இருந்த பிரம்மதேயமும் வளநாடு என்ற பிரிவுக்குள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

இக்கல்வெட்டில் 'பெருங்குறி பெருமக்களோம்' என்ற குறிப்பும் இடம்பெற்றுள்ளது. பெருங்குறி பெருமக்கள் என்பது பிராமண ஊர்ச்சபைக் கூட்ட உறுப்பினர்களைக் குறிக்கும் தொடராகும் (சுப்பராயலு, 2002: 450) பிரம்மதேயங்களில் நிர்வாகப் பொறுப்பைச் சபை என்ற அமைப்பு மேற்கொண்டுள்ளது. "அச்சபையில் நிலவுடைமை கொண்ட பிராமணர்கள் உறுப்பினர்களாக இருந்துள்ளனர்" (வேதாசலம், 2019: 123). அச்சபையின் அனைத்து உறுப்பினர்களையும் உள்ளடக்கிய கூட்டமே பெருங்குறி பெருமக்கள் என அழைக்கப்பட்டுள்ளது.

ஆகவே, இராஜராஜ சதுர்வேதி மங்கலம் நன்கு வளர்ச்சிபெற்ற நிலையில் இருந்துள்ளது. அது தென்னிந்தியப் பிரம்மதேயங்களைப் போலவே நிர்வாக முறையினைக் கொண்டிருந்துள்ளது.

பெருங்குறி பெருமக்களோம் எனத் தன்மைப் பன்மையில் கல்வெட்டில் இடம்பெறுவதால், இக்கல்வெட்டு பெருங்குறி மக்களால் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும். அவர்கள் ஒன்றுகூடி ஏதோ முடிவெடுத்து அதனைக் கல்வெட்டாகப் பொறித்துள்ளனர். ஆனால், கல்வெட்டுச் சிதைவடைந்துள்ளதால் அவர்கள் எடுத்த முடிவு என்ன என்பதை அறிந்துகொள்ள முடியவில்லை. கல்வெட்டில் இடம்பெறுகின்ற, "நம்மூர் தண்டுகிற முத்தங்கை கோயில்மானி..., காசு மூன்று இக்காசு மூன்றில் இரட்டிப்பான காசு ஆறுக்கு கல்லூர் நீர்நிலத்தில் வாசதேவ..., விக்கிரமசோழ வாய்க்கால், இரண்டாங்கண்ணாற்று மூன்றாஞ் சதுரத்து நீர்நிலம்" முதலான தொடர்களைக்கொண்டு அவர்கள் எடுத்த முடிவினை ஊகிக்க முடிகிறது. அதன்படி, வாய்க்கால், கண்ணாறு, நீர்நிலம் முதலானவை தொடர்பான வரிவசூலிப்பு குறித்த ஏற்பாடாக அம்முடிவு இருக்கலாம்.

பிரம்மதேயங்கள் வளமான பகுதிகளிலேயே உருவாக்கப்பட்டுள்ளதால் அப்பகுதிகள் ஆறு, வாய்க்கால், நீர்நிலம் முதலானவற்றைக் கொண்டவையாக விளங்கியுள்ளன. தென்னிந்தியக் கல்வெட்டுச் சான்றுகளைக் காணும்போது, "பிரம்மதேயங்களில் வயல்களும் நீர்ப்பாயும் கால்களும் நீரெடுத்துவரும் கால்களும் வரையறுக்கப்பட்டு அவற்றிற்கு எண்களும் இடப்பட்டு முறையே பிலாறு, வதி, கண்ணாறு, நாராசம் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளன. இதனால் புதிதாகத் திருத்தியமைக்கப்பட்ட திட்டமிட்ட நீர்ப்பாசன முறையைப் பிரம்மதேயங்கள் கொண்டிருந்துள்ளன. மேலும், பிரம்மதேயத்தில் இருந்த நிலங்களும் பல சதுரங்களாகப் பிரிக்கப்பட்டு எண்ணிடப்பட்டுள்ளன" (மேலது: 115). அந்நிலத்தில் விவசாயத்தினை மேற்கொள்வதற்காக ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றைப் அப்பிரம்மதேயத்தின் சபையும், சபை உறுப்பினர்கள் யாவரும் கூடிய பெருங்குறிப் பெருமக்களும் நிர்வகித்துள்ளனர். இந்தமுறைமை கந்தளாய்ப் பிரம்மதேயத்திலும் பின்பற்றியுள்ளமைக்கு இக்கல்வெட்டுச் சான்றாக அமைந்துள்ளது. வாசுதேவ வாய்க்கால், விக்கிரமசோழ வாய்க்கால், இரண்டாங்கண்ணாறு, மூன்றாங்கண்ணாறு, சதுரத்து நீர் நிலம், பெருங்குறி பெருமக்கள் முதலானவை அதற்குச் சான்றாக அமைகின்றன. இந்த நீர்ப்பாசன வசதிகள் பிரம்மதேயம் உருவாக்கப்பட்ட காலத்தில் ஏற்படுத்தப்பட்டவையாக இருக்க வேண்டும். இப்பிரம்மதேயம் குறித்து சோழருக்கு முற்பட்ட காலச் சான்றுகள் எவையும் கிடைக்கப்பெறாததாலும் அதன் நடைமுறை சோழரின் தென்னிந்தியப் பிரம்மதேய முறைமையை ஒத்திருப்பதாலும் சோழர்காலத்தில் தான் கந்தளாய்ப் பிரம்மதேயம் உருவாக்கப்பட்டுள்ளது என்று கூறலாம்.

சோழ இலங்கேஸ்வரனின் கல்வெட்டுக்குப் பின்னர் 64 ஆண்டுகள் கழித்து, கந்தளாய்ப் பிரம்மதேயம் பற்றிய முதலாம் விஜயபாகு காலத்துக் கல்வெட்டு கிடைத்துள்ளது. நங்கைசானி என்ற பெண், காராம்பிச் செட்டு யக்ஞக்ரமவித்தன் என்ற இறந்துபோன தன் கணவனின் நினைவாகக் கொடுத்த கொடை இக்கல்வெட்டில் இடம்பெற்றுள்ளது. அப்பிராமணன் கந்தளாய்ப் பிரம்மதேயத்தில் வாழ்ந்தவன் என்ற குறிப்பும் கல்வெட்டில் இடம்பெற்றுள்ளது. சோழர் ஆட்சி நிறைவுற்று 27 ஆண்டுகளின் பின்னர் பொறிக்கப்பட்டுள்ள இக்கல்வெட்டின்படி, வளநாடு முதலான சோழரின் நிர்வாக முறைமை கைவிடப்பட்டுள்ளமையைக் கண்டுகொள்ள முடிகிறது. நிர்வாகப் பிரிவுகள் பற்றிய எந்தக்குறிப்பும் கல்வெட்டில் இல்லை. அத்துடன் சோழ இலங்கேஸ்வரன் கல்வெட்டில் கோயில் பற்றிய நேரடிக் குறிப்பு எதுவும் இல்லை. விஜயபாகுவின் கல்வெட்டில் விஜயராஜ ஈஸ்வரம் எனக் கோயிலின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. முற்காலத்தில் இருந்த கோயில் விஜயபாகுவின் பெயரினால் அழைக்கப்பட்டுள்ளது. நங்கைசானி ஆறு கழஞ்சி பொன்னாலான முடி, மூன்று கழஞ்சி பொன்னாலான மாலை ஆகியவற்றுடன் சந்தி விளக்கு ஒன்றுக்குக் காசு ஒன்று, திருநந்தவனம் செய்வானுக்குக் காசு எட்டு, பொன் அழிவு சோர்வுக்குக் காசு மூன்று, தேவரடியார் எழுவருக்கு 23 காசு என 35 காசினைக் கொடையாக வழங்கியுள்ளாள். இக்காசினை முதலீடாகக்கொண்டு அதிலிருந்து வரும் வட்டியைக்கொண்டு அக்கொடைகளை நிறைவேற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இக்கொடைகளை அவதானிக்கும்போது, பிரம்மதேயத்தில் இருந்த பிராமணர்களுள் மிகுந்த பொருளாதார வளமுள்ளவர்களும் இருந்துள்ளனர் என்பதைக் கண்டுகொள்ள முடிகிறது.

கந்தளாய்ப் பிரம்மதேயம் பற்றிய ஏனைய இரு கல்வெட்டுகளும் கஜபாகுவின் காலத்துக்குரியவையாகும். அதில் ஒரு கல்வெட்டு விஜயபாகுவின் கல்வெட்டு பொறிக்கப்பட்டு, 48 ஆண்டுகளுக்குப் பின்னர் பொறிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டில், மன்னர் விஜயராஜ, சதுர்வேதி மங்கலத்து ஸ்ரீ கைலாசமான விஜயராஜ ஈஸ்வரத்துக்குக் காசு பத்துக் கொடையளித்துள்ளார். இரண்டாவது கல்வெட்டில் ஆட்சி ஆண்டு இடம்பெறவில்லை. அது கந்தளாய்ப் பிரம்மதேயத்தின் எல்லை அளவிடப்பட்டு எல்லைக்கல் நாட்டிய செய்தியைப் பதிவு செய்துள்ளது.

யானையை நடக்கவிட்டு அதனை அளவாகக்கொண்டு இடையர் கல் என்ற இடத்தில் ஊரார் கூடி எல்லைக்கல் நாட்டியுள்ளனர். நூறாண்டுக்கு மேல் வழக்கில் இருந்த பிரம்மதேயத்தின் எல்லை தொடர்பாகச் சிக்கல் ஏற்பட்டதால் இந்த எல்லைக்கல் நாட்டப்பட்டிருக்க வேண்டும்.

பிரம்மதேயங்கள் வளமான பகுதிகளில் வழங்கப்பட்டதாலும் அப்பகுதிகளில் இருந்த ஏனைய குடியினர் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டு அந்நிலம் பிராமணர்களுக்கு மட்டும் உரித்தானவையாக நிர்ணயிக்கப்பட்டதாலும் காலம் செல்லச்செல்ல பிரம்மதேயங்களின் எல்லைகள் தொடர்பாகச் சர்ச்சைகள் இடம்பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக, தளவாய்புரம் செப்பேட்டின் சமஸ்கிருதப் பகுதியில் இடம்பெறும், "ஆசிநாட்டில் இருந்த திருமங்கலம் என்ற ஊரைப் பன்னிரு பிராமணர்களுக்குப் பாண்டிய மன்னன் ஒருவன் தானமாக வழங்கியிருந்தான். அந்நிலத்தின் ஒரு பகுதியைப் பிற்காலத்தில் சூத்திரர்கள் (வேளான் குடிகள்) ஆக்கிரமித்து மதுரதநல்லூர் எனப் பெயரிட்டுக் குடியேறினார்கள்" (மேலது: 108) என்ற செய்தியைக் குறிப்பிடலாம். இவ்வாறு கந்தளாய்ப் பிரம்மதேயத்தின் எல்லை தொடர்பிலும் ஏதோ சர்ச்சை தோன்றியுள்ளது. அதனாலே மன்னருக்கு அந்நிகழ்வு கொண்டுசெல்லப்பட்டு எல்லைக்கல் நாட்டப்பட்டுள்ளது எனலாம்.

மகாகிரித்தேகம கல்வெட்டும் கஜபாகுவின் காலத்துக்கு உரியதாகும். கஜபாகு மன்னன் பிராமணர்களை மிகுதியாகப் போற்றியுள்ளதை அவனுடைய காலத்துக்குரிய பிரம்மதேயம் பற்றிய 03 கல்வெட்டுகளும் காட்டுகின்றன. இக்கல்வெட்டு நிலக்கொடை பற்றியதாகும். "ஜயங்கொண்ட சலாமேகச் சதுர்வேதி மங்கலத்திழவுபட்ட வயலும் யத்தாலையும் வல்லபர் பக்கம் நின்றும் வாங்கிப் பிராமணற்கே தானம் பண்ணி அருளினாரிவர்கள்" என்பது கல்வெட்டு வாசகமாகும். இதில் கொடை பெற்றவர் பிராமணர். கொடை வழங்கியவர் பெயர் நேரடியாக இடம்பெறவில்லை. ஆனால், கல்வெட்டில் இடம்பெறும் 'அருளினாரிவர்கள்' என்ற தொடரால் கொடையை மன்னனே வழங்கியுள்ளான் என்பது தெரியவருகிறது. அத்துடன் வழங்கப்பட்ட நிலமானது முன்னர் பிரம்மதேயத்துக்கு உரியதாகவே இருந்துள்ளது. 'சதுர்வேதி மங்கலத்திழவுபட்ட, பிராமணற்கே' முதலான சொற்கள் அதனை வெளிப்படுத்தி நிற்கின்றன. அதனால் ஏதோ காரணத்தினால் பிரம்மதேயத்துக்குரிய நிலம் பறிபோய் உள்ளது. அதனை மீண்டும் பெற்றுக்கொடுக்கும் நிகழ்வு இடம்பெற்றமையைக் கல்வெட்டு கூறுகிறது. 'வல்லபர்' பக்கம் நின்று நிலம் வாங்கிக் கொடுக்கப்பட்டதாகக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இங்கு வல்லபர் என்பதைத் தனிநபர் ஒருவரின் பெயராக சி. பத்மநாதன் கருதுவார் (2006: 142). கல்வெட்டானது 'வல்லவரையன் சூழறவு' என்று முடிவடைகிறது. இங்கு வல்லவரையன் என்பது விநாயகரைக் குறிப்பதாகக் கூறப்படுகிறது. இங்கு இரண்டு இடத்திலும் வல்லவர் என்ற பெயர் வருவதால், முன்னர் தனிநபராகக் கூறப்படும் வல்லபர், விநாயகராகவும் இருக்கலாம். பிரம்மதேயத்துக்குரிய நிலம் ஏதோ காரணத்தினால் விநாயகர் கோயிலுக்கு உரியதாக மாறியிருக்கலாம். அதனை மன்னர் மீண்டும் பிராமணர்களுக்குப் பெற்றுக்கொடுத்திருக்கலாம்.

இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுகளில் பிராமணர்கள், பிரம்மதேயம் குறித்து இடம்பெறுகின்ற செய்திகளில் இருந்து, இலங்கையில் பண்டையகாலத்தில் பிராமணர்கள் செல்வாக்கு பெற்றிருந்ததைப் போலவே இடைக்காலத்திலும் அவர்கள் செல்வாக்குடன் விளங்கியுள்ளனர் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. இலங்கையைச் சோழர்கள் ஆட்சி செய்தபோதும் அவர்களுக்குப் பிந்தைய சிங்கள மன்னர் ஆட்சிக்காலத்திலும் பிராமணர்கள் நன்கு ஆதரிக்கப்பட்டுள்ளனர். இந்துக்கோயில்களில் மட்டுமல்லாது பௌத்த விகாரைகளிலும் பிராமணர்களுக்கு முதன்மையளிக்கப்பட்டுள்ளன. இவை இடைக்கால இலங்கையின் சமூக, சமய வாழ்வில் பிராமணர்கள் பெற்ற முதன்மையை வெளிப்படுத்தி நிற்கின்றன.

### உசாத்துணை நூல்கள்


1. Gunasingam, S., (1974) Two Inscriptions of Cola Ilankesvara deva, Trincomalee Inscriptions, Series No.1, Peradeniya.
2. Indrapala, K., (1971) Epigraphia Tamilica Volume I part I, A journal of Tamil Epigraphy, Jaffna: Archeological Society.
3. Wickremasinghe, D.M.D.Z., (1928) Epigraphia Zeylanica Vol.2, London: Oxford University press.
4. இந்திரபாலா, கா., (1975) "கந்தளாயிற் கண்டுபிடிக்கப்பட்ட சோழ இலங்கேஸ்வரன் காலத்துக் கல்வெட்டு, பாவலர் துரையப்பாப்பிள்ளை நூற்றாண்டு விழா மலர்.
5. சுப்பராயலு, எ., (2002) தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி I & II, சென்னை: சாந்தி சாதனா.
6. பத்மநாதன், சி., (2006) இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள், கொழும்பு: இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.
7. நீலகண்டசாஸ்திரி, கே.ஏ., (2022) தென்னிந்தியாவைப் பற்றி வெளிநாட்டினர் குறிப்புகள் (மீள் அச்சு), மு.ரா. பெருமாள் முதலியார் (மொ.பெ.), தமிழ்நாட்டுப் பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்.
8. வேதாசலம், வெ., (2019) பாண்டிநாட்டு ஊர்களின் வரலாறு, தஞ்சாவூர்: தனலட்சுமி பதிப்பகம்.

# இலங்கை மலையகத் தமிழர்களின் சமூக அசைவியக்கத்தில் கூத்துக் கலைகளின் செல்வாக்கு

பகுதி 1

பொன் பிரபாகரன்



பொன்.பிரபாகரன், யாழ். பல்கலைக்கழகத்தில் வணிக முகாமைத்துவப் பட்டம் பெற்றவர். பட்டப்பின் டிப்ளோமாவை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திலும், ஊடகவியலில் டிப்ளோமாப் பட்டத்தை கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் பெற்றவர். மேலும், கொழும்பு வணிகப் பள்ளியில் செயற்றிட்ட முகாமைத்துவப் பட்டத்தைப் பெற்றுள்ளார். அரசியல், பொருளாதாரம், பண்பாடு போன்ற தளங்களில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். 'காமன் கூத்து'(மலையக தமிழரின் பண்பாட்டு வகைப்பட்ட அரசியல் பொருண்மிய ஆய்வு), 'உப்பு ரொட்டி' (கவிதைத் தொகுப்பு), 'மலையகத் தமிழரின் சமூகவியலும் அரசியலும்' என்பன இவரது நூல்களாகும்.

## அறிமுகம்

இலங்கை மலையகத்தமிழர்கள் எனப்படும் மக்கள் கூட்டம், 18 ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியிலிருந்து 19 ஆம் நூற்றாண்டின் மத்தியபகுதி வரை பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இந்தியாவின் தமிழகக் கிராமங்களில் இருந்து அழைத்துவரப்பட்டு இலங்கையில் கொக்கோ, கோப்பி, சிங்கானா, தேயிலை, இறப்பர், தென்னை போன்ற செய்கைகளிலும்; துறைமுகம், நெசவாலை, வீதியமைப்பு போன்ற துறைகளிலும் ஈடுபடுத்தப்பட்ட தொகுதியினராவர்.

அவர்கள் 1924 முதல் 1945 வரையிலான காலப்பகுதியில், முதலில் கால்நடையாகவும் பின்னர் படகுகள், ரயில்கள் ஆகியவற்றின் மூலமும், பின்னர் மீண்டும் கால்நடையாகவும் மத்திய மலைநாட்டின் அடர்ந்த காடுகளுக்கு அழைத்துச்செல்லப்பட்டு, அங்கு தோட்டங்களை அமைப்பதற்காகக் குடியேற்றப்பட்டவர்கள் ஆவர். பிரித்தானியர் ஆட்சிக்காலம் முழுவதும் தோட்டங்களுக்கு வருவதும்போவதுமாக இருந்த மக்கள் இலங்கை சுதந்திரமடைந்தபோது, 80% நிலையான குடியிருப்பாளர்களாக மாறினர். இம்மக்களுக்கு 1931 ஆம் ஆண்டு டொனமூர் சீர்திருத்தம் மூலம் வழங்கப்பட்ட சர்வசன வாக்குரிமை 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் பறிக்கப்பட்டது. இதன்மூலம் இலங்கைவாழ் இந்திய வம்சாவளித் தமிழர்கள் நாடற்றவர்களாக்கப்பட்டனர். இவர்களது வாக்குரிமை 1949 இலும், மொழியுரிமை 1958 இலும் பறிக்கப்பட்டதோடு, 1964 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய அரசுகளின் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் 575,000 மக்கள் இந்தியாவுக்கும், 325,000 மக்கள் இலங்கைக்கும் பங்கிடப்பட்டனர். மீண்டும் 1974 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய உடன்படிக்கையான சிறிமா - இந்திரா உடன்படிக்கை மூலம் 150,000 பேர் இந்தியாவுக்கும், 150,000 பேர் இலங்கைக்கும் பங்கிடப்பட்டனர்.

இது மட்டுமின்றி 1954, 1977, 1978, 1981, 1983, 1986, 1988 ஆகிய ஆண்டுகளில் நிகழ்த்தப்பட்ட இனவெறித் தாக்குதல்களாலும், உள்நாட்டு யுத்தம் காரணமாகவும் உள்ளக - வெளியகப் புலப்பெயர்வுக்கு உள்ளாகினர். தாம் ஏழு தலைமுறைகளாகக் காடழித்து நாடாக்கிய தோட்டங்களைவிட்டு திட்டமிட்ட வகையில் விரட்டப்பட்டனர். இவர்களில் அரைப்பங்கினர் தமிழகத்திற்கே திரும்பினர். மேலும் ஒரு தொகுதியினர் வடக்கு - கிழக்கு மாகாணங்களில், குறிப்பாக வன்னி பெருநிலப்பரப்பிலுள்ள காட்டுப்பகுதியில் குடியமர்த்தப்பட்டனர். பல்வேறு ஆக்கிரமிப்பு, அபிவிருத்தித் திட்டங்கள், நீர்ப்பாசன குடியேற்றத் திட்டங்களில் இம்மக்களின் வாழ்விடங்கள் சூறையாடப்பட்டன. அவை பூர்வகுடி மக்களின் வாழ்விடம் எனப் பாடம் கற்பிக்கப்பட்டது.

இத்தகைய நூற்றாண்டுகால அடிமை வாழ்வையும், அடக்குமுறைகளையும், சுரண்டல்களையும், சூறையாடல்களையும், அடிமைச்சாசனங்களையும் கடந்துவாழும் மக்கள், தம்மை ‘மலையகத் தமிழர்கள்’ என அடையாளப்படுத்த விழைகின்றனர். இன்றைய மலையகத்திலும், வன்னிப் பெருநிலப்பரப்பிலும் இலங்கைத்தீவின் எங்கலும், தமிழகத்திலும், உலகமெங்கிலும் வாழும், இலங்கைப் பெருந்தோட்ட உற்பத்தி உறவுகள், சமூக - கலாசார - பண்பாட்டு வாழ்வியலோடு தம்மைப் பிணைத்துக்கொண்ட தமிழ்மக்கள் அனைவரும் மலையகத் தமிழரேயாவர்.

## மலையகத் தமிழர் சமூக அசைவியக்கம்

சமூகமொன்றின் அசைவியக்கம் என்பது குறித்தவொரு மக்கள் கூட்டம், மேல் நோக்கி அல்லது கீழ்நோக்கி அசைவதனைக் குறிக்கின்றது. இலங்கை மலையகத் தமிழர்கள் தமது பண்பாட்டுத் தொடர்ச்சியைப் பேணிப்பாதுகாத்து வருவதன்மூலம், தமது இருத்தலையும் தனித்தன்மைகளையும் பேணிப்பாதுகாத்து வருகின்றனர். ஒரு நூற்றாண்டுக்கும் மேலான காலனிய ஆட்சியையும், அரையடிமை வாழ்வையும் எதிர்கொண்டு போராடுவதற்கான உளவியல் உட்கூறாக ‘பண்பாடு’ பங்காற்றியுள்ளது.

மனிதச் சமூக நடத்தையின் பண்பாட்டுக் காரணிகளுக்கும் பொருளாதார மற்றும் அரசியல் காரணிகளுக்கும் இடையிலான மூடிய சார்புத்தன்மையுள்ள பரஸ்பரப் பிணைப்பையும் இவை காட்டுகின்றன. உண்மையில், திறந்த அல்லது மூடிய சமூகத்தின் வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும், ஒருபுறம் பொருளாதார மற்றும் அரசியல் நடவடிக்கைகளைப் பற்றிய விழிப்புணர்வும், மறுபுறம் தனி மனிதர் அல்லது மனித சமூகத்திற்கும் இயற்கைக்கும் இடையிலான உறவுகளும், அதேசமயம் தனிநபர்களுக்கிடையிலான, குழுக்களுக்கிடையிலான, சமூகப்பிரிவுகள் அல்லது வர்க்கங்களுக்கிடையிலான பல்வேறு உறவுகளின் ஆற்றல் வாய்ந்த வெளிப்பாடுகளாகவுமே பண்பாடு அமைகிறது (அமில்கர் கப்ரால், 2001, வேர்களை நோக்கி, பக். 44-45).

கருத்தியல் தளத்திலோ அல்லது இலட்சியரீதியிலான தளத்திலோ அடிமைப்படுத்தப்பட்ட அல்லது அடிமைப்படுத்தப்போகிற சமூகத்தின் பொருளாதார மற்றும் வரலாற்று யதார்த்தத்தின் தீவிரமான வெளிப்பாடுதான் பண்பாடு (அமில்கர் கப்ரால், 2001,

வேர்களை நோக்கி, பக்.15).

அந்நியர் ஆதிக்கத்திற்கெதிரான போராட்டத்தின ஒரு அடிப்படைக்கூறு என்ற விதத்தில் பண்பாட்டின மதிப்பு அடங்கியுள்ளது (அமில்கர் கப்ரால், 2001, வேர்களை நோக்கி, பக்.45).

ஆபிரிக்க விடுதலைக்கான மிகமுக்கியமான சிந்தனையாளரும் தளபதியுமான அமில்கர் கப்ரால் பண்பாட்டைக் காலனிய எதிர்ப்புக்கூறுகளில் ஒன்றாகவும், அடிமைத்தனத்திற்கு எதிரான பொருளாதார வரலாற்றுக் கருவியாகவும் கையாள விழைவதைக் காண்கின்றோம். குர்திஸ்தான் தொழிலாளர் கட்சியின் தலைவரும் சிந்தனையாளருமான 'ஒகலான்' குர்திஸ் மக்களின் விடுதலைக்கான கருவியாக பண்பாட்டை எடுத்தாள்வதைக் காண்கின்றோம்.

கலாசாரம் குறித்து எழுந்த விவாதங்களின்போது, வி.ஐ. லெனின் பாட்டாளி வர்க்க பண்பாடு குறித்த தனது கருத்துருவாக்கத்தை பின்வருமாறு முன்வைத்தார். "இந்தியப் பண்பாடும் தத்துவமரபும் ஆழமான மானிட விடுதலைக்கான உட்கூறுகளைக் கொண்டுள்ளமையைக் காண்கின்றோம் (தண்டி யாத்திரை, உப்புச் சத்தியாக்கிரகம்)."

ஸ்பானியக் காலனித்துவத்திற்கு எதிரான அல்ஜீரிய விடுதலைப்போரில் பண்பாட்டுக்கூறுகள், மக்களின் விடுதலைக்கான செயற்பாடுகளாக முன்னிறுத்தப்படுவதைக் காண்கின்றோம் (பிரான்ஸிஸ் பெனான்).

இத்தகைய விடுதலைக்கான எதிர்ப்பாற்றலுக்கான உளவியல் ஊக்கியான பண்பாட்டை முன்னிறுத்துவதாகவே இலங்கை மலையகத் தமிழர்களின் கூத்துகள் காணப்படுகின்றன.

மலையகத் தமிழர்களிடையே நிகழ்த்தப்பட்டுவரும் கூத்துகள், அவற்றின் பின்புலம், வரலாறு, பாடுபொருள், ஆடுவெளி, தொனி, கருத்துருவாக்கம், சமயச்சார்பு, குலச்சார்பு, வர்க்கச்சார்பு, வாழ்வியல் கூறுகள், ஒலிஓசை நயம், ஒப்பனைத் திறன், ஆடை மற்றும் ஆபரணங்கள், தொழில்நுட்பக் கூறுகள், மனித ஆற்றல், நினைவு நிலை, ஆக்கத்திறன், மாற்றுவெளிகள், சூழலமைவுகள், சமூகப் பொருளாதாரக் காரணிகள் எனும் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்குகின்றன. இந்தக் கூத்துகள், ஒரு அந்நிய நாட்டில் காலனிய வாழ்க்கையையும், தீவிர இனவெறி அடிப்படையிலான ஒடுக்குமுறையையும், பெருமுதலாளித்துவக் கட்டமைப்பின் மூலதனச் சுரண்டலையும், நிதி மூலதனம் மற்றும் கார்ப்பரேட் பெருநிறுவனங்களின் அதிகார வர்க்கத்தையும் எதிர்க்கும், உளவியல், சமூகவியல், வர்க்கவியல் கூறுகளுடன் இணைந்த பண்பாட்டுப் போராட்ட வடிவமாகவும் பார்க்கப்படுகின்றன.

அந்தவகையில் இம்மக்களிடையே நிகழ்த்தப்பட்டு வரும் காமன் கூத்து, பொன்னர் - சங்கர், அருச்சுணன் தபசு, லவகுசா, இராமர் நாடகம், அங்காயம்மன் கூத்து, பவளக்கொடி, காட்டேரியம்மன் என்பவற்றை காலனிய எதிர்ப்புக்கான, இருத்தலுக்கான, தகவமைப்பிற்கான, நிலைத்திருப்பிற்கான கூத்து வடிவங்களாக நோக்கலாம்.

### அ) காமன் கூத்து

இலங்கை மலையகத்தமிழர்களிடையே நிகழ்த்தப்பெறும் காமன் கூத்து மலையகத் தமிழர்களின் தேசிய கூத்து வடிவமாகத் திகழ்கின்றது. இக்கூத்தை மாசி - பங்குனி மாதங்களில் தோட்டமக்கள் மட்டுமின்றி அயற்கிராம நகர்ப்புற மக்களும் ஒன்றுதிரண்டு கொண்டாடி வருவதைக் காண முடிகின்றது. காமன் கூத்து ஒரு சடங்கு என மானிடவியலாளர்கள் வரையறுக்கின்றனர்.

சடங்கை வரையறை செய்ய முயன்ற மானிடவியலாளர்கள், சடங்கின் இயல்புகளை அடிப்படையாகக்கொண்டு 13க்கும் மேற்பட்ட தன்மைகளின் அடிப்படையில் சடங்கை விவரிக்கும் பல்வேறு வரையறைகளையும், அதனைச் சுற்றிய விவாதங்களையும் முன்வைத்துள்ளனர் (பக்தவக்சல பாரதி, தமிழர் மானிடவியல் - இரண்டாம் பாகம், பக்.195).

இத்தகைய சடங்கின் தன்மைகளாவன: 1) செயல் சார்ந்து 2) நிகழ்த்துதல் சார்ந்து 3) தன்னார்வம் சார்ந்து 4) கருவி சாராதது, பகுத்தறிவு 5) பொழுதுபோக்கு தன்மையுடையதன்று 6) கூட்டுத்தன்மை உடையது, சமூகம் சார்ந்தது 7) சமூகக் கனவுகளை வெளிப்படுத்துவது 8) புனைவுக்குரியது 9) முனைப்பான குறியீடுகள் 10) உன்னதக் குறியீடுகள் 11) வெளிப்பாட்டு நடத்தை அழகியல் சார்ந்தது, அழகியல் மிகுதன்மை சாராதது 12) திரும்பத் திரும்ப நிகழ்வது 13) புனிதத்துடன் தொடர்புடையவை (பக்தவத்சல பாரதி, பக்.183-195)

"சடங்கு என்பது, அசட்டைத்தனமற்ற, உள்ளார்ந்த அக்கறையுடன் கூடிய வாழ்வியலைக் குறிக்கும். குறியீட்டளவில் உந்துதல் பெற்ற அல்லது நேரடியாகப் பங்கெடுத்துக் கொண்ட சரியான, பொருத்தமான நடத்தைமுறைகளை தன்னார்வமாக நிகழ்த்துவதாகும் (ரோத்தன் பூலர், 1998:27 ) ( பக்தவத்சல பாரதி, பக்: 195).

மேற்குறிப்பிட்ட அனைத்துத் தன்மைகளையும் காமன் கூத்து எனும் நிகழ்த்துகலை கொண்டிருப்பதைக்

காணலாம். 'ஹோவல் டாய்' என்பவரின் கருத்துப்படி, இது உணர்வு சார்ந்த, நிகழ்த்துதல் சார்ந்த, சமயம் சார்ந்த, சமய நடனம், ஆட்டம் சார்ந்த, சமயப் பேரணி சார்ந்த ஒன்றாகக் காணப்படுகின்றது. திருமணம், இறப்பு, எரித்தல், உயிர்ப்பித்தல், மடிப்பிச்சையிடல் என்பன காமன் கூத்தின் பிரதான ஆற்றுகைக் கூறுகளாகும் (மேலது. பக் : 196,197).

அந்தோனி வாலஸ் என்பவரின் கருத்துப்படி, தொழில்நுட்பம் சார்ந்த மற்றும் கருத்தியல் சார்ந்த இரு பண்பாட்டுகூறுகளும் 'காமன் கூத்து' என்ற சடங்கில் காணப்படுகின்றன. இதில், தெய்வ ஆற்றலை வரவழைத்தல் ஒரு தொழில்நுட்பக்கூறாக அமைவதுடன், சமூகத்தைக் கட்டியமைத்தல், கட்டுப்பாட்டுடன் வைத்திருத்தல், முரண்பாடுகளைக் கையாளுதல், காதல், விழுமியங்களைப் பேணல், சமூக உறவுகளைப் பராமரித்தல், தனிமனிதனை சமூகமயப்படுத்தல், யாத்திரை, நேர்த்திக்கடன், படையல், உயிர்ப்பித்தல் ஆகியவை கருத்தியல் கூறுகளாக வெளிப்படுகின்றன (மேலது, பக்.1981-97).

எமிலி துர்க்ஹைம் என்பவரின் கோட்பாட்டின்படி, 'ஆதிக்கநிலைச் சடங்குகள்' மற்றும் 'எதிர்நிலைச் சடங்குகள்' என்ற வகைப்பாடுகளின் அடிப்படையில் 'காமன் கூத்தை' அணுகலாம். இதில், காமன் பாலித்தல், அபிஷேகம் செய்தல், வழிபாடுகள், மாவிளக்குப் படைத்தல், படத்தேர்ப் பவனி போன்றவற்றை ஆதிக்கநிலைச் சடங்குகளாகக் கொள்ளலாம். அதேவேளை, புனிதம் மற்றும் சமயச்சார்பற்ற தன்மைகளை வெளிப்படுத்தும் அம்சங்களை 'எதிர்நிலைச் சடங்குகள்' எனக் கருதலாம்.

ரொனால்ட் கிரிம்ஸ் என்பவரின் வகைப்பாட்டின்படி, 'நிலைப்படுத்தல் சடங்குகள்' என்பவற்றில் வழிபாடு செய்தல், அருளாசி பெறல், சிவனிடம் இரதி மடிப்பிச்சை கேட்டல், விரதமிருத்தல், படத்தேர் யாத்திரை, படையலிடல் ஆகியவை அடங்குகின்றன. 'நிலைமாற்றச் சடங்குகள்' என்பவற்றில் இரதி-மதன் திருமணம், மதனின் இறப்பு மற்றும் உயிர்ப்பிப்பு போன்ற காமன் சடங்குகளை எடுத்துக்காட்டலாம்.

அர்னால்டு வான் கென்னப் என்பவரின் வாழ்க்கை வட்டச் சடங்குக் கோட்பாட்டுடனும் காமன் கூத்தை ஒப்பிட முடியும். இரதி - மதன் திருமணம், மதனின் இறப்பு என்பன இவற்றின் சில கூறுகளாகக் காணப்படுகின்றன (மேலது, பக்.203,204).

வீணா தரஸ் போன்ற அறிஞர்களின் சடங்கு குறித்த வகைப்பாட்டின்படி மங்கள, மங்களமற்ற சடங்குகளின் பண்புநிலையிலும் காமன் கூத்தை நோக்க முடியும். இரதி - மதன் திருமணம், மங்களச் சடங்கிலும்; மதனின் இறப்பு, பாலூற்றுதல் என்பன மங்களமற்ற சடங்கிலும் அடங்குகின்றன.

இசபெல்லா நபோசோன் என்பவரது விதிமுறைசார்ந்த சடங்குகள், நிகழ்த்துநிலை சார்ந்த சடங்குகள் என்பனவற்றின் கூறுகளும் காமன் கூத்தில் காணப்படுகின்றன. இரதி - மதன் திருமணம் விதிமுறைப்படி நடைபெற; ஆடல், பாடல், மாவிளக்குப் பூசை, காமன் பாலித்தல் என்பன நிகழ்த்துமுறை சார்ந்த சடங்குகளாக நடைபெறுகின்றன.

இவ்வாறு காமன் கூத்து சடங்கு பல கோட்பாட்டு நிலைகளுக்கும் பொருந்திப்போவதாகக் காணப்படுகின்ற போதிலும், இன்றைய மலையகத்தில் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களினால் நடாத்தப்படும் காமன் கூத்து நிகழ்வுகள் பற்றிய எனது அண்மைக்காலக் கள ஆய்வுகளில், காமன் கூத்து ஒரு சமூக அரங்காகவும் பன்முகப் பரிமாணங்களைக்கொண்ட மலையக தேசிய கலை வடிவமாகவும் எழுச்சியுறுவதை அவதானிக்க முடிகின்றது.

இன்று மலையகத்தில் காமன்கூத்தைப் பற்றிய ஏராளமான எழுத்துப்படிகள், நூறாண்டுகளைத் தாண்டிய அச்சிடப்பட்ட பிரதிகள், மலையகத்திற்கே உரிய பாட்டுப்பிரதிகள் காணப்படுகின்றன. இதனுடன் தொடர்புடைய ஆய்வுகள் மற்றும் எழுத்து முயற்சிகளில், சி.வி. வேலுப்பிள்ளை, காரை சுந்தரம்பிள்ளை, மாத்தளை சோமு, மாத்தளை கார்த்திகேசு, மாத்தளை வடிவேலன், பா. செல்வராஜா, லெனின் மதிவாணன், பா. விஜயகாந்தன் ஆகியோர் எழுதிய கட்டுரைகள் குறிப்பிடத்தக்கவை. அத்துடன், அ. லெட்சுமணனின் பத்திரிகைத் தொடர்கள், சோ. ரவிந்திரன், சோபனா தேவி, ஹாரிஸ் ஆகியோரின் பாடல் தொகுப்புகளும் குறிப்பிடத்தக்கவையாகக் காணப்படுகின்றன. இத்தகைய ஆய்வுப் பணிகளைத் தொகுத்து 'காமன்கூத்து: மலையகத் தமிழர் பண்பாட்டு வகைப்பட்ட அரசியல் - பொருண்மிய ஆய்வு' என்ற நூலை பொன். பிரபாகரன் வெளியிட்டுள்ளார்.

மேலும் இயக்கச் செயற்பாடுகளில், இடதுசாரி இயக்கமான லங்கா சமசமாஜக்கட்சி (1972), மக்கள் விடுதலை முன்னணி (1972), ஈரோஸ் இயக்கம் (1989) என்பன அரசியல் பிரசார ஊடகமாகக் காமன்கூத்தைப் பயன்படுத்தியுள்ளன. நவீன நாடகச் செயற்பாடுகளில் பிரான்ஸிஸ் ஹெலன், காமன் கூத்தை மேடை நாடக வடிவிற்கு கொண்டுவந்து பரீட்சித்த முதல்வராகிறார். அதேவேளை பொன். பிரபாகரனின் புதிய பண்பாட்டு அமைப்பு, காமன் கூத்தை சமுதாய அரங்கவடிவிலும் பயன்படுத்தியுள்ளது. மலையக இலக்கியத்தில் காமன் கூத்தை மையப்படுத்திய கதைகளை தலவாக்கலை

மல்லிகை சி. குமார், சு. தவச்செல்வன் ஆகியோர் படைத்துள்ளனர். இளங்கலை மாணவர்கள் பலர் காமன் கூத்தின் பல கூறுகளை தனித்தனியே ஆய்வுக்குட்படுத்தியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

காமன்கூத்து குறித்து நடைபெற்ற ஆய்வுகள், இதனை ஒரு சமுதாய அரங்காக மட்டுமல்லாமல் பன்முகப் பரிமாணங்களைக்கொண்ட ஒரு மகத்தான பண்பாட்டு நிகழ்வாகவும் வெளிப்படுத்துகின்றன. காமன்கூத்து பற்றிய வடிவங்களும் கூறுகளும், கம்பராமாயணம், சிலப்பதிகாரம், மணிமேகலை, நாச்சியார் திருமொழி, மகாபாரதம், கந்தபுராணம், கலித்தொகை, வான்றை புராணம், ஆண்டாள் சரிதம், சீவக சிந்தாமணி போன்றவற்றிலும் விரவிக் கிடக்கின்றன (பொன். பிரபாகரன், 2015, பக். 19).

மலையகத் தமிழரின் சமூக அசைவியத்தில் காமன்கூத்து முக்கிய பங்கு வகிக்கிறது. இது தொழில்நுட்ப அறிவைப் பரப்புவதற்கும் பயன்படுகிறது. உதாரணமாக, கிரீடம், புயம் தயாரித்தல், ஆடைகள் மற்றும் ஆபரணங்களை வடிவமைத்தல், மாலைகள் மற்றும் மணிகள் தயாரித்தல், இடைப்பட்டிகளை வண்ணமயமாகச் செய்தல் போன்றவை இதில் அடங்கும். காமன்கூத்து, சமூகம் சார்ந்த நிகழ்வுகளை உருவாக்கும் ஒரு கட்டமைப்பாகவும் செயற்படுகிறது. இதில் இனம், மதம், சாதி, பால், வயது, வர்க்கம் போன்ற வேறுபாடுகள் இல்லாமல் மக்கள் ஒன்று சேருகின்றனர். வேலைப் பிரிவும், சமூக சமரசமும் இதில் இடம்பெறுகின்றன. மேலும், திருமணம் வேண்டுதல், பிள்ளை வரம் வேண்டுதல், நோய் தீர்க்க நேர்த்திக் கடன் வைத்தல் போன்ற நோக்கங்களுக்காகவும் இது நடைபெறுகிறது. சிக்மன் பிராய்ட் கூறுவது போல, இது ஆழ்மன அடக்குமுறையின் வெளிப்பாடாக, கட்டுப்பாடில்லாத மருளை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் ஒரு நிகழ்வாகும். இதில் தப்பு, சல்லாரி, அளிக்கி, உருமி போன்ற பலவகை இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. மொழியியல் கூறுகள் துல்லியமாகப் பயன்படுத்தப்படுகின்றன. தொனி வேறுபாடுகள் மற்றும் பலவகையான பாணிகளும் இதில் இலாவகமாக இணைக்கப்படுகின்றன.

மேலும், 'பிடி மண் எடுத்தல்' என்பதன் வழியே, கூத்து தன் சமூகத்தையும், அதன் வேர்களையும் மூலச் சொந்தங்களையும் நிலைநிறுத்தி, அதன் பண்பாட்டுத் தொடர்ச்சியைப் பேணி வருகிறது. இந்தச் செயல்முறை, சமூகவியல் இருத்தலின் முக்கியமான கூறாகப் பார்க்கப்படுகிறது.



Image source : parwai.blogspot.com

காமன் பந்தல் என்பது, சமூக நிகழ்வுகளுடன் இணைந்த ஒரு முக்கிய அமைப்பாகும். இது ஆலய வழிபாடுகள், பூப்பு விழாக்கள், திருமணங்கள், மரணச்சடங்குகள் போன்ற நிகழ்வுகளில் காணப்படும் கட்டமைப்புகளை ஒத்ததாக அமைகின்றது. இதில் கொடியேற்றல், கம்பம் நாட்டுதல், பச்சைப் பந்தல் அமைத்தல், பாலூற்றல், சில்லறை நாணயங்களைக் காணிக்கை செய்தல் போன்ற செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

காமன் எரிப்பு விழாவின் இறுதிநாளில், சிவனுக்கும் மதனுக்கும் இடையிலான போரின்போது மதன் எரிக்கப்படுவதை, ஒரு பண்பாட்டுப் போரின் தொடர்ச்சியாகவும், அதேநேரத்தில், எதிர்நிலைகளுக்கிடையிலான சமூக உறவுகளையும் முரண்களையும் பிரதிபலிப்பதாகவும் கருதலாம். இவை எஜமான் - அடிமை, முதலாளி - தொழிலாளி, ஆக்குவோன் - அழிப்போன், ஒடுக்குவோன் - ஒடுக்கப்படுவோன் போன்ற எதிர்மறை அமைப்புகளாக உள்ளன. இதற்கான சான்றுகளாக, பாடல், ஆடல், இசை மற்றும் உடல்மொழி ஆகிய கூறுகளை எடுத்துக்கொள்ளலாம். குறிப்பாக, மதன் - இரதி தர்க்கம் சார்ந்த ஒப்பாரிப் பாடல்களில் வெளிப்படும் பாடல் வரிகள், அவற்றின் பாடுபொருள், நிகழும் ஆடுவெளி, ஆட்டத்தின் உந்துவேகத் தன்மை, தப்பிசையின் ஒலிநயம், மற்றும் அதனுடன் இணைந்த உடல்மொழி, இவை அனைத்தும் அடிமைத்தனத்துக்கெதிரான உளவியல் உணர்திறனை

உருவாக்கக்கூடியவை.

காலனித்துவ இலங்கையின் மலையகத்தில், அரையடிமை நிலைப்பட்ட சூழ்நிலையில் தொழிலாளர் சமூக உளவியலை கட்டமைப்பதில் ஒப்பாரிப் பாடல்கள் தீர்க்கமான பங்கினை வகித்தன. நாடு விட்டு நாடு வந்து, காடழித்து, களனிகளை உருவாக்கி, எட்டடிக் கொட்டிலில் ஏழு தலைமுறைகளாக வாழ்ந்து, பிறப்பு, பூப்பு, திருமணம், காதுகுத்து, மரணம், தீட்டு, துடக்கு போன்ற சமூக வரையறைகளைக் கடந்துவந்த ஒரு சமூகத்தினரிடையே அவர்களது ஆளுமையையும், எதிர்ப்புத்திறனையும் வலியுறுத்தும் பண்பாட்டுச் சக்தியாக காமன்கூத்து உருவெடுத்துள்ளது. இனம், வர்க்கம், சாதி ஆகியவற்றின் அடிப்படையில் நிகழ்ந்த ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடி, நிலைத்து நின்று, ஒரு தேசமாக வளர்வதற்கான பண்பாட்டுக் கருவியாகவும், எழுச்சி அடையாளமாகவும், காமன்கூத்து செயற்பட்டுள்ளது.

மலையக தேசிய அடையாளமாக, தேசிய கூத்தாக காமன்கூத்து வளர்ச்சிபெறுவதற்கான அடிப்படையான சில அம்சங்களை புப்புராசி P.A. மூக்கையா மாஸ்டர் அவர்களின் கையெழுத்துப்பிரதியில் காணலாம். மலையகம் முழுவதும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு, நிகழ்த்தப்பட்டு வரும் கையெழுத்துப்படியாக இதனைக் காண முடிகிறது.

“புப்புராசி நன்னகரில் வாழும் மூக்கையா நாவில் கலைவாணியை நிறுத்தி என்னால் தெரிந்த மட்டும் கரனே என் ஏட்டில் தெரிந்த கதை நீட்டி சிறிய கருத்துடைய ஏழை நான் கொடுத்தேன் மதன் கதையை புவியில்” என அவரது ஒரு பாடல் பகுதி அமைகிறது.

விநாயகர்துதியில் “அன்னாசிக் கனியுடனே முந்நூறு மாங்கனியும் அறுநூறு தொடாங்கனியும் ஆயிரம் பலாக்கனியும் அப்பளம், இட்லி, தோசை, முப்பழம் தேனும், அதிரசம், எள்ளுருண்டை, அருஞ்சுவையான மிட்டாய், ஆயிரம் தேங்கனியுடைத்து...” (மூக்கையா P.A.) எனவும் எழுதுகின்றார்.

இலங்கையின் கண்டி மாவட்டத்தில் கம்பளை மாநகர சபைக்கு அருகில் இருக்கும் புப்புராசி தோட்டப் பகுதியிலிருந்து, அப்பிரதேசத்தில் சாதாரணமாகக் கிடைக்கக்கூடிய கனிகளைக்கொண்டு பூசை செய்வேன் எனத் துதி பாடுவதிலிருந்து மலையகத்தின் பொருண்மிய வாழ்வோடு காமன் கூத்து இறுக்கமான ஊடாட்டம் கொண்டிருப்பதைக் காணலாம்.

சமூக அசைவியக்கமும் காமன் கூத்தும் காலனித்துவ, பின் காலனித்துவச் சவால்களை எதிர்கொண்டு போராடும் மக்களினத்திற்கு உளவியல் பலமும் உத்வேகமும் அளிப்பதோடு நவீன சினிமா, தொலைக்காட்சித் தொடர்கள், சமூக - கலாசார பிறழ்வுகள், நெறிமுறையற்ற வாழ்வு, வணிகமயமாதல், நுகர்வியம் போன்ற நவீன சமூகத்தின் கேடுகளிற்கான எதிர்க்குறியீடாகவும் திகழ்வதைக் காணலாம்.

சுமார் 600 இற்கும் மேற்பட்ட தோட்டப்பிரிவுகளில், மாசி 3 ஆம் பிறை தொடக்கம் பங்குனி முடியும் வரை, சிலவேளை சித்திரை மாதத்திலுங்கூட மலையகத்தில் நிகழ்த்தப்படும் காமன்கூத்து, சமய, சடங்கியல் சார்ந்த சமுதாய அரங்கொன்றுக்காக அனைத்து வயது, பால், வர்க்க நிலைப்பட்ட மக்களையும் ஒழுங்குபடுத்தும் ஊடகமாகத் திகழ்கின்றது. சமூகப் பங்கேற்புடன் காமன் பொட்டலைத் தயார்ப்படுத்தல், சாணமிட்டு மெழுகுதல், பந்தலிடல், பூசைக்குத் தயார் செய்தல், குளித்தல், விரதமிருத்தல், கொடியேற்றுதல், மதன் எரிக்கப்பட்டு 3 ஆம் நாள் ‘உயிர் எழுப்புதல்’ வரை, பொதுவான அறநெறி சார்ந்த வாழ்க்கையும் ஒழுக்கநெறிகளும் எதிர்பார்க்கப்படுகின்றன.

மதன், இரதி, சிவன் வேடமிடும் கலைஞர்கள் முதல், சில தோட்டங்களில் 108 வேடங்கள் வரை தாங்கும் இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள், பெரியவர்கள், வாத்தியார்மார், இதர கலைஞர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களில் சமூக ஒழுக்கம், மாமிச உணவுத் தவிர்ப்பு, பாலியல் ஒழுக்கம் என்பன பெரிதும் வேண்டப்படுகின்றன. மீறல்கள் இடம்பெறும்போது கண்டிக்கவும் விலக்கி வைக்கவுமான சமூகப் பொறிமுறையாக வேடமிடத் தடைவிதித்தல் போன்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதையும் அவதானிக்க முடியும்.

‘என்றும் ஜுவனுள்ள காமத்தின் கடவுளான காமன் கூத்து திருமணமாகாத கன்னியர், காளையரின் காதலை நிறைவேற்றும்’ என்ற நம்பிக்கையோடு விரதமிருத்தல், வேடம் தரித்தல், நேர்த்தி வைத்தல் என்பன இடம்பெறுகின்றன. இதனால் திருமணம் கைகூடியதாக ஆழ்ந்த நம்பிக்கை காணப்படுகிறது.

சமூக இயங்கியலில் காமன் கூத்தின் உடல்மொழி பெரிதும் ஈர்க்கக்கூடியதாகும். “வில்லைக் கொண்டா மதனே வில்லைக் கொண்டா” என இரதியும் “கொடுக்க மாட்டேன் பெண்ணே கொடுக்கமாட்டேன்” என மதனும் தர்க்கிக்கும் போதெழும் உடல்மொழியும், “பித்துப் பிடித்தது போல் போகாதே மன்மதரே பைத்தியம் பிடித்தது போல் போகாதே மன்மதரே” என இரதி மதனை வையும்போது வெளிப்படும் உடல்மொழியும், இரதி - மதனிடையே நடக்கும் தர்க்கத்தின்போது ஆட்ட வடிவங்களில் வெளிப்படும் உடல்மொழியும், அடக்குமுறைக்கு எதிரான உடலியல் உளவியலை வெளிக்கொணர்வதைக் காணமுடியும்.



Image source : parwai.blogspot.com

**காலனித்துவ இலங்கையின் மலையகத்தில், அரையடிமை நிலைப்பட்ட சூழ்நிலையில் தொழிலாளர் சமூக உளவியலை கட்டமைப்பதில் ஒப்பாரிப் பாடல்கள் தீர்க்கமான பங்கினை வகித்தன.**

தூதன், நேர்வசந்தன், வீரபுத்திரன், மகாமுனி, காளி வேடம் தரிக்கும் பாத்திரங்கள், 18-108 தீபங்களைத் தாங்கியபடி ஆடும் ஆக்ரோசமான ஆடல் வெளிப்படும் உடல்மொழியும், அகோர வீரபுத்திரன் தீப்பிழம்பிடையே ஆடுகின்ற அச்சம் தரும் ஆடலும், வீரபுத்திரன் - தூதன் 20-30 அடி உயரமான மேடைகளிலிருந்து தீப்பந்தங்களோடு கூத்தாடும் ஆட்டமும், ஒருவகை உளக்கிளர்ச்சியை, உடல் நடுக்கத்தை பார்ப்பவரிடையே ஏற்படுத்துகின்றன. அழகிய காதல் கதையான காமன் கூத்தினூடாக வெளிப்படும் சமூக உரை அல்லது கருவிகளைக் கண்டறியும் உள்ளியல் வெளிப்பாடாகவே இப்பாத்திரங்கள் அமைகின்றன. இவற்றை இன்றைய சமூகநிலையைப் பிரதிபலிக்கும் பாத்திரங்களாகவும் ஒப்புநோக்க முடியும்.

எதுகை, மோனை, ஓசை, ஒலிநயம், ஒப்பனை, இசை, ஆடல், பாடல், அலங்காரம், வீரதீர செயல்களின் வெளிப்பாடுகள், பிற்பாட்டுகள் என்பன புதிய தலைமுறையினரிடையே போட்டா போட்டியை ஏற்படுத்துவதை அவதானிக்க முடிகின்றது. காமன் கூத்து நிகழ்த்தும் வாத்தியார்கள், 3-10 வயது சிறுவர் - சிறுமியர்கள் முதல், 60-90 வயது பெரியவர்கள், பெண்கள் வரை செயலூக்கமுடன் பங்கேற்பதை அவதானிக்க முடிகிறது.

அரச ஊழியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள், புலமையாளர்கள் உட்பட பலரையும் தன்வயப்படுத்தியுள்ள காமன் கூத்து ஒரு திறந்த சமூகப் பாடசாலையாகவும் அமைகிறது.

பார்ப்போர், பயில்வோர், பயிற்றப்படுவோர், பங்கேற்போர், கேட்டுக் கொண்டிருப்போர், பராக்குப் பார்ப்போர், வாய்ப்பளிப்போர் அனைவரையும் ஒரு தொடரலையான செயலுக்குத் தூண்டுகின்ற பண்பு, சமூக அசைவுக்குப் பங்களிப்பதோடு, உள நோய்களுக்கான சிகிச்சையாகவும் அவதானிக்கப்பட்டுள்ளது. எனவேதான் இலங்கை மலையகத் தமிழர்களிடையேயும், உழைக்கும் தொழிலாளி வர்க்கத்தினரிடையேயும் காமன் கூத்து இரு நூற்றாண்டு கடந்தும் வாழும், வளரும் மலையகத் தேசிய கலையாக சூல்கொண்டுள்ளது.

### ஆ) பொன்னர் - சங்கர் கூத்து

பாரம்பரிய தென்னிந்திய பொன்னர் - சங்கர் கதையானது, கதைப் பாடலாக, உடுக்கடிப் பாடலாக, அண்ணன்மார் கதைப் பாடலாக, அம்மானைப் பாடலாக, நாட்டுக் கூத்தாக பயிலப்பட்டு வந்தபோதும், மலையகத்தில் கூத்து வடிவத்திலேயே நிகழ்த்தப்படுகிறது. தற்காலத்தில் நுவரெலியா மாவட்டத்தில் மலையகத் தமிழர்கள் செறிவாக வாழும் அம்பேகமுவ, நுவரெலியா உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பொகவந்தலாவ தங்கப் பள்ளத்தாக்கு, சாமிமலைப் பள்ளத்தாக்கு, தலவாக்கலை - லிந்துலைப் பள்ளத்தாக்குப் பகுதிகளிலேயே சிறப்பாக ஆடப்படுகின்றது.

பொன்னர் - சங்கர் கதையானது திருச்சி மாவட்டத்தின் மணற்பாறை அருகே வீரப்பூர் என்ற ஊரைக் கதைக்களமாக கொண்டு நிகழ்த்தப்படுகிறது. இக்களம்,

*“நாகமலை தோகை மலை, அண்ணா நானுபக்கம் வீரமலை”*

என விவரிக்கப்படுகின்றது.

மலையகத் தோட்டங்களில் கொடியேற்றங்கள், காப்புக் கட்டுதல், சலங்கை கட்டுதல், படுகளம், தவமிருத்தல் என்பன இதனோடு தொடர்புடைய முக்கிய அம்சங்களாகக் காணப்படுகின்றன.

அண்ணன்மார் கதை தமிழின் முதல் நாட்டார் காப்பியம் என கனேடிய மானிடவியலாளரான ‘பிருந்தா பெக்’ மதிப்பிடுகின்றார். இவர் இக்கதைப் பாடலை 40 மணித்தியால் ஒளிவட்டாக வெளியிட்டுள்ளார். இக்கதையாடல் கி.பி 500-700 ஆண்டுகளில் நிகழ்ந்ததாக ஆய்வாளர் மதிப்பிடுகின்றார்.

டிக்கோயா வீரட் தோட்டம், கிருமிக் கொல்லைத்தோட்டம் என்பனவற்றில் 3 இரவுகளும்; புளும்பில்ட் தோட்டத்தில் 2 இரவுகளும் பொன்னர் - சங்கர் நிகழ்த்தப்படுகிறது. மரே தோட்டம், மொக்கா தோட்டம், தங்காலைத் தோட்டம், கேம்பரி தோட்டம், சென் ரெகுலாஸ் தோட்டம் என்பனவற்றிலும் பொன்னர் - சங்கர் சிறப்பாக இடம்பெறுகின்றது.

பெரியகாண்டி தெய்வத்தையழைக்கும்,

*“ஆதிநல்லூர் பெரியகாண்டி*
*அறிய துணைவர வேண்டும்*
*பெற்றவளே தாமரையார்*
*பேருவச்ச குன்னுடையான்”*

எனவரும் பாடல் பகுதியில் இடம்பெறும் புலம்பல் நீண்ட புலப்பெயர்வு, தமிழகத்தை, தாய் நிலத்தை, அதன் நினைவுகளை, தெய்வங்களை விட்டு விலகிய மக்களின் ஆழ்மன துயரத்தின் வெளிப்பாடாக அமைகிறது.

“பொன்னிவள நாட்டில் என் தாய், தந்தையரைத் தேட வேண்டும்” என்ற பாடல் வரிகள் இழந்துவிட்ட, துண்டாடப்பட்ட உறவுகளைத் தேடும் உளக்கிடக்கையை வெளிப்படுத்துகின்றது. ஆபத்துவேளைகளில் காளி தெய்வம் உடன்வருவதான நம்பிக்கையும், அதன்மூலம் கிடைக்கும் உளவலிமையும், எதிர்காலத்தை நம்பிக்கையோடு



**பொன்னர் - சங்கர்**
Image source : commons.wikimedia.org

நோக்கிட உந்துதலளிக்கின்றது. “வீராப்பு காளியும் வாரேன் வேங்கை வாகனமேறி ஆங்கார ரூபமாக” எனும் காளியின் வரவு, தம் அடிமை வாழ்வுக்கும் தீராத் துயரங்களுக்கும் மாட்சியளிப்பதான உளவியலைக் கட்டமைக்கின்றது. தாய், தந்தையரைத் தேடும் அண்ணன்மாருக்கு காளி வழிகாட்டுவதாக வரும் பாடல் பகுதியானது, மலையகத் தொழிலாளர் வாழ்வின் ஏக்கங்களை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது.

“தெக்கத்திதான் தூரமப்பா,
தென்னாட்டுக்
கோட்டையப்பா,
வடக்கத்திதான் தூரமப்பா,
வடநாட்டுக்
கோட்டையப்பா,
பொன்னிவள நாட்டுல தான்,
உம் தாய் தகப்பன் வாழ்கிறார்கள்.”

இந்தியாவின் தெற்கே இலங்கை, இலங்கையின் வடக்கே தாயகம், தாயகத்துக்கும் சேயகத்துக்குமான உறவை, உறவுகளைப் பிரிந்த ஏக்கத்தை அழகாக இவ்வரிகள் எடுத்துக்காட்டுகின்றன.

தாய், தந்தையரைத் தேடிப் புறப்படும் அண்ணன்மார் தரித்துள்ள ஆயுதங்கள், கருவிகள் பற்றிய வர்ணனை, காடுமலையைக் கடந்து, நடையாய் நடை நடந்து, உறவுகள் பல இழந்து, தீராத பசியுடனும், ஓயாத துயரத்துடனும், தாயகம் முதல் மலையகக் கானகம் வரை நடந்த மக்களினத்தின் ஆழ்மனப் பதிவுகளாகவே மாறிவிடுகின்றன.

*“கச்சை வரிஞ்சி கட்டி கருங்கச்சை சுங்கமிட்டு*
*இடதுபுற கச்சையிலே இயமனது அச்சரமாம்*
*வலதுபுற கச்சையிலே மாயனோட அச்சரமாம்*
*அச்சரத்தைக் கட்டிவிட்டும் அரிராமர் மைத்துனராம்”*

என இயமன், மாயவன், அரிராமர் துணைவர நடப்பதான பாடல் பகுதியைக் காணமுடிகின்றது. வனம் பற்றிய வர்ணனையில், “மஞ்சள் மணக்கும் வனம் மாதுளம் காய் காய்க்கும் வனம்” என மஞ்சள், மாதுளம் போன்ற பிணி தீர்க்கும், மங்களத்தைக் குறிக்கும்

பயிர்நிலங்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன. வனவாழ்வு, வனம் கடத்தல், வனத்தில் தேடல் என்பன மலையகத் தமிழரின் ஆரம்பகால மலைவருகைப் படலத்துடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருப்பதைக் காணலாம்.

பொன்னர் - சங்கரது வனப் பயணத்தை ஆரவல்லி சேவல் வழிமறைப்பதான பாடல் மலையகத்தமிழரின் அரசியல், சமூக வாழ்வோடு தொடர்புடையது. "எட்டு நாளா எட்டுப்பொழுதா வனத்தில் போரும் செய்து ஆரவல்லி சேவலது, அடங்காத சேவலது" எனவரும் பாடல் பகுதி சமூக அசைவுக்குத் தடையான காரணிகளைக் குறியீடாக வெளிக்கொணர்வதைக் காணகின்றோம். "ஆரவல்லி சேவலை வெட்டிக் குவிக்கின்றேன் பார், வீரமுள்ள சேவலது, அரிஞ்சி குவிக்கின்றேன் பார், அடங்காத சேவலது" என ஆற்றாமையை வெளிப்படுத்தும் பாடல் பகுதியையும் காணமுடிகிறது.

"தோழு துடிக்குதடா குமரசங்கா - துக்ககுறி தோனுதடா" என்ற பாடல் பகுதி பொன்னிவள நாட்டில் தாய், தகப்பன் இறந்ததைப் பற்றிய தீயகுறியாக, சகுனமாகக் கொள்ளப்படுகின்றது. இச்சகுனங்கள் ஏழேழு தலைமுறைகளைக் கடந்தும் தம் தாய்நிலத்தைப் பார்க்க முடியாத, உறவுகளைத் தொலைத்த மக்களினத்தின் துக்கக்குறியாகவும் காணப்படுகின்றது.

பாரம்பரியமிக்க தமிழ்ச் சமுதாயத்தில் ஈமக்கிரியைகளை, மரணச் சடங்குகளைச் செய்வது குறித்த பாடல் பகுதி,

"சந்தனம் தான் கட்டை வெட்டி, குங்குமம் தான் கட்டை வெட்டி, கோபுரம் போலடுக்கி, தாமரையாள் தாயாருக்கு தகனக் கிரியை செய்தல் வேண்டும்"

"தாயுக்குத்தான் தலைமகனார் தலைசிரைச்சி கொள்ளி வைப்பான்"

"தந்தைக்குத் தான் இளைய மகன் கைசிரைச்சி கொள்ளி வைப்பான்"

"தங்காளும் தான் கொள்ளிக்குடம் தாயுக்குத்தான் உடைக்கவேண்டும்"

"அங்கமெல்லாம் தான் பொறுக்கி காவிரி ஆற்றுலதான் கரைத்திட வேணுமப்பா"

என மாயவர் வந்து அண்ணன்மாருக்கு உரைப்பதாகக் காணப்படுகின்றது. தமிழ்ப் பண்பாட்டில் மரணச் சடங்குகளுக்கு தனியிடமுண்டு. அவற்றை மீண்டும் மீண்டும் கற்பிக்கும் சமூகப்பள்ளியாக 'பொன்னர் - சங்கர்' திகழ்கின்றது.

'கிளிக்களனி' அல்லது 'கிளிபிடிக்கும் காண்டம்' என்பது வளவாழ்வுடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. தங்காளுக்குக் கிளிபிடிக்கச் செல்லும் பொன்னருக்கும், சங்கருக்கும் கிளிகள் வாழும் வனப்பகுதியின் அமைவிடம் பற்றியுரைக்கும் தங்காளின் பாடல் வரிகள்,

"தாகமலை தோகைமலை நானுபக்கம் வீரமலை, வீரமலை ஓரத்திலே வேம்படியார் பாசிபதம், பாசிபதம் அருகினிலே தெப்பக்குளம், தெப்பக்குளம் ஓரத்திலே தாயாரோட தவசிக்கம்பம், தவசிக்கம்பம் ஓரத்திலோ ஆலமரம் நிக்குதம்மா"

"கிழக்கே போற வாதுலதான் ஐந்து கிளி கொஞ்சும் கிளி"

என இலங்கை மலையகத் தமிழரின் வாழ்வியல் கோலத்தோடு நெருங்கிய பிணைப்பினைக் கொண்டு அமைவதைக் காணலாம்.

"தெக்கத்தியான் கிளிகளெல்லாம் தென்னம்பழம் தின்னக் கிளி, வடக்கத்தியான் கிளிகளெல்லாம் வாழைப்பழம் தின்னக் கிளி, இந்தக் கிளி வேணாமம்மா அண்ணன்மாரின் தங்கையார்க்கு"

என்ற பாடல் பகுதியில் இடம்பெறும் 'தெக்கத்தி', 'வடக்கத்தி' என்ற திசைக்குறிச் சொற்கள், ஆதித்தமிழரின் புலம்பெயர் வாழ்வை ஒன்றிணைக்கும் புள்ளியாகவும், ஆழ்மனத் துயரத்தின் பதிவாகவும் காணப்படுகின்றன. 'தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை' என்ற வள்ளுவர் வாய்மொழியுடன் இதனை ஒப்பிடமுடியும்.

பொன்னர் - சங்கர் கூத்தின் ஆடல்முறையினூடாக வெளிப்படும் உடல்மொழி, அடக்குமுறை, ஆக்கிரமிப்பு மற்றும் சுரண்டலுக்கு எதிரான முகபாவம், ஒப்பனை, உடல்வெளிப்பாடு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இது, உளவள ஆற்றுப்படுத்தலுக்கான அரங்காகவும், பண்பாட்டுப் பேணுகை மற்றும் மீட்பு முயற்சிக்கான வடிவமாகவும் செயற்படுகின்றது. அதேசமயம், இது வரலாறு மற்றும் பண்பாட்டு வேர்களைத் தேடும், அவற்றை அறியும் ஒரு முயற்சியாகவும், அந்நிய தேசத்தில் சூல்கொண்டுள்ள புதிய வாழ்வுக்கும் தாயகத்தின் வேர்களுக்குமான ஊடாட்டத்திற்கான ஏக்கத்தைப் பிரதிபலிக்கும் குறியீடாகவும் காணப்படுகின்றது.

இந்தவகையில் மலையகத் தமிழர்கள் சமூக அசைவியக்கத்தில் பொன்னர் - சங்கர் தீர்க்கமானதொரு பண்பாட்டுப் பாத்திரத்தை வகிக்கின்றது.

## இ) மலையக சமூக அசைவியக்கத்தில் அருச்சுனன் தபசு

பகுதி 2

தமிழர் பண்பாட்டில் வழங்கப்பட்டுவரும் மகாபாரத இதிகாசத்தின் கிளைக்கதையான அருச்சுனன் தபசு, துரியோதனனிடம் சூதாட்டத்தில் நாடு, நகரங்களையும் அரசாட்சியையும் இழந்த பஞ்ச பாண்டவர்களான தருமன், வீமன், நகுலன், சகாதேவன், அருச்சுனன் ஆகியோர் வனவாசம் அனுப்பப்பட்ட பின்னர், தாம் இழந்த நகரங்களை மீளப் பெறுவதற்கு 'பாசுபத ஆயுதம்' பெற செல்லும் அருச்சுனனின் வனம் கடத்தல் காட்சிகளை மையப்படுத்தியதாக மலையகத்தில் நிகழ்த்தப்படுகின்றது.

மோகினிவனம், இராட்சதன் வனம், ஏழை பிராமணன் வனம், நாராயண வனம், வேடுவர் வனம், வேங்கை கன்னி வனம், ஏலகளனி வனம், பேரண்ட வனம், ஊர்க்குருவி வனம், மாயவன் வருகை, காளி வருகை, தபசு மரமேறல் என்ற பிரதான காட்சிகள் அடங்கிய வனம் கடத்தல் காட்சிகள் இங்கு நிகழ்த்தப்படுகின்றன.

இவ்வனம் கடத்தல் பகுதிகள் தோட்டம் - துறவுகள், உறவுகள், நாடு - நகர்களை இழந்து புதிய அடையாளத்தைத் தேடும் மலையகத் தமிழர்களின் வாழ்வியல் கோலத்தோடு உணர்வுபூர்வமான ஊடாட்டத்தைக் கொண்டுள்ளமையைக் காணலாம். மலையகத் தமிழரின் அரசியல் வரலாறு, பண்பாட்டு வரலாறு, பொருண்மிய வரலாற்றுடனும் நேரிடைத் தொடர்பினைக் கொண்டுள்ள அருச்சுனன் தபசு, மலையகத் தமிழர்களின் சமூக அசைவியக்கத்தின் இயங்கு விசையாகத் தொழிற்பட்டுள்ளது எனலாம்.

"தார நல்ல புகழ்படைத்த தர்ம ராசா, வெற்றிக்கொடி பிடித்த வீம ராசா, நாக கொடி பிடித்த நகுல ராசா, சாஸ்திரக் கொடி பிடித்த சகாதேவன்"

எனவரும் பாடற்பகுதிகள் ஓர் ஆர்ப்பரிக்கும் உளநிலையையும் எழுச்சியூட்டும் உடல்மொழியையும் கொண்டவை; பாரம்பரியப் பெருமைகளை, நினைவுகளை மீட்டிடும் வல்லமை கொண்டவை.

"அரகர அருனனே நாங்கள் ஆதியில் கங்காதரனே

சிவசிவ சிவனே நாங்கள் சிவனடி பாதம் போற்றி"

என்ற வரிகளில் ஆதியில் தமிழினம் கங்கைக்கு அடிமையானதையும், சிவனடி பாதம் அமைந்துள்ள மலைகாடுகளில் குடியேறியதன் வரலாற்றுப் பதிவையும் எடுத்துக்காட்டுகின்றது.

"குருகுல அரசே நாங்கள் வேந்தராம் ஒருகுடை கீழ் உலகம் ஆண்டோம், முன்னூறு வருடம் நாங்கள் முல்லை வனமாண்டோம், பின் நூறு வருடம் நாங்கள் பேயாண்டிக் கோலமானோம்."

எனும் பாடலடிகளை காடுமலை கடந்து, கால்நடையாக வந்த மலையகத் தமிழர்களின் ஆழ்மனப் பதிவாகவும், தற்கால அரையடிமை நிலையைப் பிரதிபலிக்கும் வாழ்வியலாகவும் கொள்ளலாம்.

"வளமாய் வனம் கடந்து, வாழ்விஜயன் நான் நடந்தான், சிங்கம் உறங்கும் வனம், சிறுபுலியார் தூங்கும் வனம்"

என்ற பகுதி, தலைமன்னாரிலிருந்து மலையகக் காடுகள் வரை மலையகத் தமிழர் எதிர்கொண்ட கானகப் பயணத்தின் ஒரு பகுதியைப் பிரதிபலிப்பதைக் காணலாம். அருச்சுனன் பாசுபதம் பெறக் கடந்த வனங்களும், தமிழர் மலையகப் புலப்பெயர்வில் எதிர்கொண்ட சவால்களும் ஒரே தன்மையிலானவையாக அமைவதைக் காண்கின்றோம்.

அருச்சுனனின் தவ வலிமையைப் பரிசோதிக்கும் விதமாக ஒவ்வொரு வனப்பகுதியிலும் மாயவர் வெவ்வேறு வடிவங்களில் குறுக்கிடுவதாக அமைகிறது இக்கதை. மோகினி வனத்தைல் கடக்கும் அருச்சுனனை மோகினி வழிமறிப்பதாக வரும்,

"தடத்தை மறித்தேயானால்

தவமிழந்து போகும் தாயே

"பகையாளி தான் வதைக்க, எதிராளியை நான் ஜெயிக்க, வஞ்சியரோ மறித்தாயானால் வரமிழந்து போகும் தாயே"

என்கிற வரிகள், தாயகம் விட்டுச் சேயகம் சென்ற மக்களின் ஆழ்மன உளவியலைப் பதிவு செய்வதோடு, பின்காலனித்துவச் சூழலில் உருவான கலக்கம், பொருள் தேடும் வாழ்வுமுறை போன்றவற்றையும் பிரதிபலிக்கின்றன. நாடுவிட்டு நாடு போகும் நிலையில், சமூக சக்திகள் எதிரிகளாக மாறும் ஊடாட்டங்களைக்கூட இவை வெளிப்படுத்துகின்றன.

இராட்சத வனத்தின் சண்டைக் காட்சிகள், "மலையோரம் வாடா வாடா போர்கள் செய்வோம், செடியோரம் வாடா சேர்ந்து போர்கள் செய்வோம்" எனவும், பிராமண வனக் காட்சிகள் "பார்ப்பார தெருவினில் தேடி எடுத்த பழைய பஞ்சாங்கம் கைத்தவிலே" எனவும், நாராயண வனக்காட்சிகள் "முக்கண்ணுத் தேங்காயை திக்கென்று தானுடைத்தார்" எனவும், வேங்கை கன்னி வனக்காட்சிகள் "ஒரு கல்லை மந்திரிச்சு ஓடிவந்து போடச் சொன்னார்" எனவும் விரிகின்றன.

"சின்ன நடை
சிங்கார மோகினி

*கொண்டை கொப்புகள்*

*மூக்குப் பல்லாக்கு*

*கழுத்துக்குத் தாலி*

*கையில் இவங்கன வளையல்*

*நெற்றியில் தாமன் பொட்டு"*

எனும் பாடல் வரிகளில், பண்டையத் தமிழகம் முதல் சங்க இலக்கியச் சான்றுகள் வரை கண்டதும், கீழடி ஆதிச்ச நல்லூர் ஆய்வுகளில் வெளிக்கொணரப்பட்டதும், இன்றும் தொடர்வதுமான தமிழ்ப் பெண்களின் நடையழகு, மயக்கம் தரும் இயல்பு, அணியும் ஆபரணங்கள் என்பன விவரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

"சங்கர சிவ மங்கபாலனே மகாதேவன் சாமிக்கு தியானமாகினேன், சங்கர சிவ மங்கபாலனே பார்த்தரிச்சுவன் மேலே தாக்கினேன்"

என்கிற பாடல் பகுதியில் வரும் ஆடல் மொழி, போர்க்குணம் வாய்ந்த எதிர்ப்பு உணர்ச்சியைப் பதிவு செய்கின்றது.

பேரண்ட வனக் காட்சிகளில், பெண்ணின் காமமும், காமம் தணிக்க மறுக்கும் பேரண்டனைப் பற்றி இல்லாத பொல்லாத பழிகளைக்கூறி போருக்குத் தூண்டுவதையும், போரில் பேரண்டன் மரணிப்பதையும் காண்கின்றோம். மேலும் பேரண்டன் போருக்கு,

*"தேருக்குப் புரவிகட்டி காவடிகட்டி..*

*காட்டிலே வேட்டையாடல்..*

*ஆலமரத்தை வேரோடு பிடுங்கி..*

*தட்டுப்படலை..*

*எட்டுக்கடலையும் தாண்டிக்குதித்தான்"*

*எனப் புறப்படுவதாகக் கூறப்படுகின்றது.*

*பேரண்டச்சியின் புலம்பலில்,*

*"சந்தன மேனி குங்கும் மேனி" எனவும், வருகைப் பாடலொன்றில்,*

*"தங்கப் பள்ளாக்கு"*

*"முத்துப் பள்ளாக்கு"*

*"கட்டிலுண்டு"*

*"மெத்தையுண்டு"*

*"தாழியுண்டு"*

*"கூடமுண்டு"*

*"முத்து சம்பா"*

*"கோர சம்பா"*

*"சந்தரிசி"*

*"தங்கத்தினால் உலக்கை"*

*"வெள்ளியினால் உலக்கை"*

*"பொன்னிலே உலக்கை"*

*"தங்கத்தினாலே முறம்"*

*"பொன்னிலே முறம்"*

*"வெள்ளியிலே முறம்"*

*"கத்தரிக்காய், கருணைக் கிழங்கு"*

*"பூசணிக்காய், புடலங்காய்"*

*"பாகற்காய், பரங்கிக்காய்"*

*"சாத்திக் கதவடைத்தல்"*

எனவும் வருவது, கீழடி, சிவகங்கை, ஆதிச்சநல்லூர் போன்ற தொல்லியல் ஆய்வுகளில் வெளிப்பட்ட பண்டைத் தமிழரின் வாழ்வியல் கூறுகளைக் காட்டுகின்றன. இவ்வாறான வாழ்வியலுக்கு இன்றைய மலையகத் தமிழர்களும் உரித்தானவர்களாக இருப்பதைக் குறிப்பிட இச்சான்றுகள் உதவுகின்றன.

தமிழரின் பொருள் வாழ்வும், துயரமிகு இடப்பெயர்வுகளின் ஆழ்மனச் சுவடுகளும், காலனிய வாழ்வின் அச்சமும், இன்றைய சமூக யதார்த்தங்களும் ஒருங்கே அமைந்த 'அருச்சுனன் தபசு', மலையகத் தமிழர்களின் பண்பாட்டு அசைவியக்கத்தில் ஒரு முக்கிய பண்பாட்டு விசையாகத் திகழ்கின்றது.

### ஈ) மலையக சமூக அசைவியக்கத்தில் லவகுசா அல்லது குசலவன் கதை

சீதையின் கற்பை வண்ணான் பழித்துப் பேசுவதாக அறிந்த இராமன் தன் மனைவியான சீதையைக் காட்டில் விட்டுவிடும்படி தம்பிமார்களைப் பணிக்கிறார். தம்பிமார் வனம் பார்த்துவிட்டு வருவோம் எனச் சீதையை அழைத்துச்சென்று அடவியில் விட்டு வருகின்றனர். வனத்தில் சீதை, இலவன் - குசன் என்ற இரு புதல்வர்களை ஈன்றெடுக்கிறார். அவர்களுக்கு வான்மீகி பலவேறு வித்தைகளைக் கற்றுக்கொடுக்கிறார். லவனும் குசனும் வளர்ந்துவரும் காலத்தில் ஒருமுறை, காட்டில் இராமன், இலட்சுமணன், பரதர், சத்துருக்கன் ஆகியோரின் குதிரைகளைப் பிடித்துக் கட்டி வைக்கின்றனர் (குசலவர் நாடகம், பக்: 131). அக்குதிரையை மீட்க வரும் சித்தப்பாமார் லவனை தேரில் கட்டிக்கொண்டு செல்கின்றனர். இறுதியில் இவர்கள் இராமனின் பிள்ளைகள் என்றறியும் போது, சீதா தேவியின் புலம்பலையேற்று, வான்மீகி முனிவர் மீட்க வருகிறார். லவகுசன் தந்தையருடன் போரிட்டு வெல்வதாகவும், லவகுசன் இருவரும் தந்தை இழந்த

நாட்டில் மீண்டும் முடிசூடுவதாகவும் இக்கதை காணப்படுகின்றது.

லவகுசன் நாடகம் இன்றைய மலையகத்தில் பெருமளவு அருகியே போய்விட்டது. மத்திய மாகாணத்தில், நுவரெலியா மாவட்டத்தில், பொகவந்தலாவ பெரிய எலிப்படை தோட்டத்தில் சுமார் இருபது வருட முயற்சிகளுக்குப் பின்னர் 2014, 2015, 2018 ஆகிய ஆண்டுகளில் அரங்கேற்றப்பட்டது. கட்டுரையாளரின் நேரடி முயற்சியினாலும், மாஸ்டர் G. கனகராஜ் மற்றும் உயிர்வாழும் மூத்த கலைஞர்களின் உதவியுடனும், புதிய தலைமுறை இளைஞர் - யுவதிகளும், மாணவர்களும் இக்கூத்தை சுமார் மூன்று மாதங்கள் ஆர்வத்துடன் பயின்றனர்.

இக்கூத்து மலையகப் பெண்களின் அவல வாழ்வையும், பிள்ளைகளை வீரமுடன் வளர்க்க வேண்டும் என்ற செய்தியையும், நாடுகளிழந்த மக்கள் மீண்டும் தாய்நிலத்தை, அதிகாரத்தை மீட்கவேண்டும் என்ற உள்ளக்கிடக்கையையும் வெளிக்கொணர்வதைக் காணலாம்.

“வண்ணான் வந்தேனே அயோத்தியில் வண்ணான் வந்தேனே.” (பக். 46) என வண்ணான் வருகையும், “சோறு போடம்மா அம்மா கொஞ்சம் சோறு போடம்மா” (பக். 47) என வண்ணாத்தி இரஞ்சுதலும், “மன்னிய சீதையைப் போல் விருந்துனானழைத்தேனாகில் என்னிட் குலத்துக்கெல்லாம் ஈனமும் வருமே தாயே” (பக்: 49) என வண்ணான் தன் தாயாரிடம் சீதையைப் பழித்துக் கூறும் கூற்றும் இடம்பெறுகின்றது.

இவ்வுரையாடலைக் கேட்ட தலையாரிகள் அதனை இராமனுக்குக் கூறுகிறார்கள்.

“அசலகம் போன பெண்டை அழைப்பேனோ வழையேனந்த

தசரதராமர்க்கு அல்லோ, தகுதி மினென்று தீதானையா?”

இச்செய்திகளை இராமன், பரதன், இலட்சுமணன், சத்துருக்கனுக்குக் கூறிப் புலம்புவதையும், அவர்கள் இராமனுக்கு மறுத்துரைப்பதையும் இக்கூத்தில் காண முடியும். இலட்சுமணன் சீதையை வனம் பார்க்க அழைத்தும் செல்கின்றார். மாமியாரிடம் சீதை விடைபெற்றுச் செல்வதாக விரிகிறது கரு.

“அன்னையே வாருமம்மா வளம் பார்க்க அரிவையே வாருமம்மா” (பக். 65) என இலட்சுமணன் சீதையை அழைப்பதையும், “அயோத்தியாளும் இராமர் ஆரண்யம் பார்க்கவென்னை அனுப்பினார், போய் வாரேன் மாமியாரே” என சீதை மாமியாரிடம் விடைபெறுவதையும், “மெய்யறிந்த எல்லாம் விழலுக்கு நீர் இறைத்ததுபோலாச்சே, சீதையாரே” (பக். 67) என மாமியார் புலம்புவதையும் இக்கூத்தில் காணலாம். இராமன் சீதையைக் காட்டில் விடும்போது அவள் ஐந்து மாதக் கர்ப்பிணியாயிருக்கிறாள் என்பதை “அஞ்சுமாதப் பிண்டம் பிஞ்சல்லவோ கரப்பம் சீதையாரே உன்னை அஞ்சா வனத்திற் கொஞ்சி விடுவமோ சீதையாரே” (பக். 65) எனவரும் புலம்பல்கள் எடுத்துக்காட்டுகின்றன.

இக்கூத்தில், பூனை குறுக்கிடுதல், பார்ப்பான் குறுக்கேவரல், விறகு சுமந்து வரல், எண்ணெய்க்குடம் கொண்டுவரல், தட்டான் குறுக்கேவரல், பாம்பு குறுக்கேவரல் ஆகிய சகுனங்கள் இடம்பெறுகின்றன.

படைப்பயிற்சி பெறும் லவகுசனுக்கு வான்மீகி முனிவர் குறிபார்க்கும் வித்தையைக் கற்பிக்கும் விதத்தை பின்வரும் பாடல் பகுதி எடுத்துக்காட்டுகின்றது.

“மத்தியிலே குறிபாரு

“மார்புக்கும் நாபிக்கும் நேரு

அதன் பாருக்குள்ள ராஜரை அணுவாகப் பார்த்திடு

வீறு சிங்கத்தை வேல் கொண்டிடு” (பக். 119)

அசுவத்திற்கு (குதிரை) சத்துருக்கன் பட்டம் கட்டி வேட்டைக்கு அனுப்புதல் குறித்த பாடல், “வீர பட்டம் கட்டினாரையா - வசிட்டர், வீர பட்டம் கட்டினாரையா” எனவும், குசலவன் வேட்டைக்குப் புறப்படும் காட்சி, “வேட்டைக்கு புறப்பட்டாரையா குசேல ராசா, வேட்டைக்குப் புறப்பட்டாரையா, கொடி முடி அதிரவே, கொக்கரித்து ஆர்ப்பரித்தார்” எனவும் வருகின்றன. இப்பகுதிகளில், லவகுசா ஊடாக, ஒடுக்கப்பட்ட மலையகத் தொழிலாளர்களின் வீரம், வேட்கை, ஏக்கங்கள் என்பன வெளிப்படுவதைக் காண்கின்றோம். இதன் உடல்மொழியானது வீரியமும், வீச்சும், வசீகரமும் மிக்கதாகவும் காணப்படுகின்றது.

மலையகக் கூத்துகளில் துயரத்தையும், வேதனையையும், ஏக்கப் பெருமூச்சையும் வெளிப்படுத்தும் லவகுசா கூத்து, தற்போது அருகியமைக்கு அதன் சமூகத் தேவை அருகியமை காரணமாக இருக்கக்கூடும். எனினும் அதன் சமூக விளைவு குறைத்து மதிப்பிடக்கூடியதல்ல.

### உ) பிற கூத்துகள்

மலையகத் தோட்டங்களில் நிகழ்த்தப்பட்ட, நிகழ்த்தப்படுகின்ற ஏனைய கூத்துகளான பவளக் கொடி, அபிமன்யு சௌந்தரி, மருதை வீரன் கூத்து,

காசிராஜன் கதை என்பவற்றின் பிரதிகள் கிடைப்பதும், அவற்றை ஆற்றுகை நிலையில் காண்பதும் அரிதாகவுள்ளது. அரிச்சந்திர மயான காண்டம், இராம நாடகம், சத்தியவான் - சாவித்திரி, குசேலர் புராணம், காத்தவராயன் கூத்து, சித்திரபுத்திரக் கதை, பாம்பாட்டி சித்தர் கதை, குறவஞ்சி நாடகம், காட்டேரியம்மன் கதை, காசிராஜன் கதை, கண்டி ராசன் கதை, வீரபாண்டிய கட்டபொம்மன், நல்லதங்காள் கதை என்பன பயிலப்பட்டு வந்த போதிலும், 1967 ஆம் ஆண்டு முதல் இடம்பெற்ற தமிழகம் நோக்கிய புலப்பெயர்வு, 1958 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்கள் நோக்கிய புலப்பெயர்வு, 1971, 1972 ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்ற காணி, தோட்ட வெளியேற்றம், 1958 ஆம் ஆண்டு முதல் இன்றுவரையான இன வன்முறைகள், உள்நாட்டுப்போர் என்பனவோடு, திறந்த பொருளாதாரக் கொள்கை (1977), ஏகாதிபத்திய உலகமயமாக்கல் என்பன காரணமாகவும் இக்கூத்துகள் மருவிப் போய்விட்டன அல்லது எப்போதாவது நிகழ்த்தப்படுவதாக மாறிவிட்டன. இவை மலையக சமூக அசைவியக்கத்தில் காத்திரமான பங்கு வகித்துள்ளன எனலாம்.

ஆளுமைமிக்க மூத்த கலைஞர்களின் புலப்பெயர்வு, மரணம், பொருளாதார - சமூக கௌரவம் வழங்கப்படாமை, புதிய தலைமுறையின் மத்தியதர வர்க்கத்தினர் அந்நியமாதல், நகரப்புற இடப்பெயர்வுகள், புத்திஜீவிகள் அந்நியமாதல், சினிமா - தொலைக்காட்சி சீரியல்களின் வருகை, சமூக ஊடக வளர்ச்சி என்பன பண்பாட்டுச் செயற்பாடுகளுக்குப் பின்னடைவையும், இடையூறுகளையும் ஏற்படுத்தியுள்ளன.

இருந்தபோதிலும் இத்தகைய தீவிர இடையீட்டுக் காரணிகளையும் மீறி பல நூற்றுக்கணக்கான தோட்டப் பிரிவுகளில் மக்கள் பண்பாட்டுக் கலைகள் பயிலப்பட்டும், நிகழ்த்தப்பட்டும் வருவதானது, மலையக சமூக அசைவில் இக்கூத்துகளின் பங்களிப்பிற்கான ஓர் எடுத்துக்காட்டாகும்.

மலையகப் பாரம்பரியக் கலைப்பண்பாட்டுக் கோலங்களை மீட்டெடுப்பதிலும் பாதுகாப்பதிலும் 'புதிய பண்பாட்டு அமைப்பு' 1997 ஆம் ஆண்டு முதல் ஈடுபட்டுவருகின்றது. 'மலையக மரபுரிமைகள் பாதுகாப்பு அமைப்பு' பாரம்பரியக் கலைஞர்களைக் கௌரவிக்கும் முகமாக 'மலையக மரபுரிமை அறிவியலாளர்கள்' என்ற விருதை வழங்கிவருகின்றது. பத்தனை கல்வியியல் கல்லூரி, கொட்டகலை ஆசிரியர் பயிற்சி கல்லூரி, நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயம் (2018), லிந்துலை சரஸ்வதி கல்லூரி, கந்தலோயா தமிழ் வித்தியாலயம், கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறை, யாழ் பல்கலைக்கழக நுண்கலைத் துறை, வயம்ப பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்பன மலையகப் பாரம்பரிய கூத்துகளை அரங்கேற்றம் செய்தல், ஆய்வு செய்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. மாகாண சாகித்திய விழாக்களில் மலையக கூத்துகள் சிறப்பிடம் வகிக்கின்றன.

கொட்டியாகலை தங்கவேல் மாஸ்டர் (1972), இலங்கை வானொலி, யாழ் விக்னேஸ்வரா கல்லூரி, திருக்கோணேசர் ஆலயம் என்பனவற்றில் மலையக காமன் கூத்து பரிசோதனையாக அரங்கேற்றப்பட்டுள்ளது. புதிய பண்பாட்டு அமைப்பு, கிழக்குப் பல்கலைக்கழக நாடகவிழா (2001), ஈழத்து கூத்து விழா (2001) என்பனவற்றில் மலையகப் பாரம்பரியக் கூத்துகளை அரங்கேற்றியது. பிரான்ஸிஸ் ஹெலன் என்பவர் செம்மொழி மாநாட்டில் காமன் கூத்தை அரங்கேற்றினார். அ. இராமர் என்பவர் திருகோணமலையில் பொன்னர் - சங்கர் கூத்தையும், ப. விஜயாந்தன், க. பிரேம்குமார் ஆகியோர் காமன் கூத்தையும் அளிக்கை செய்தனர்.

மக்கள் களரி எனும் நடமாடும் நாடகக்குழு, சிங்கள நாடக ஆளுமைகளின் வழிகாட்டலில் 'தாகம்', 'கண்களில் ஈரம்', 'செகவே', 'தித்த காட்ட' (கசந்த சாயம்) ஆகிய நாடக ஆற்றுகைகளில், காமன் கூத்தின் ஆடல், பாடல், இசை மற்றும் தாளக்கட்டுகளைப் பயன்படுத்தியுள்ளனர். கிர்கிஸ்தான் நாட்டில் நடைபெற்ற உலக கலாசார திருவிழாவில் மலையக பாரம்பரியக்கூத்துகள் அரங்கேற்றப்பட்டுள்ளன.

## முடிவுரை

மலையகத் தமிழர்களின் சமூக அசைவில் கூத்துகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. பிரபுத்துவக் கட்டமைப்பை எதிர்கொண்டு காலனியச் சூழலில் தங்களைத் தகவமைக்கவும் மறுசீரமைக்கவும் கூத்துகள் ஓர் உந்துதலையும், உளவளத்தையும் வழங்கின. நவீனக் கல்வியில் ஈடுபடாத மக்களிடையேகூட, கூத்துகள் வழியாக மொழிப்புலமை, இலக்கியச் செழுமை, இலக்கண அறிவு, கல்வித்துவம், காதல், வீரம், ஏக்கம், சமயம், கடவுள் நம்பிக்கை, சமூக உறவுகள், சமரசம், சமத்துவம், இனக் குழுகுலக் குழுக்களின் ஒருமைப்பாடு, ஆதிக்க எதிர்ப்பு, கேளிக்கை, கிண்டல், ஆழ்மன உளவியல், நோய்த் தீர்க்கும் நம்பிக்கைகள், அழகியல் மற்றும் வாழ்க்கைத் தொழில்கள் போன்றவை வெளிப்பட்டன. பாடுபொருள், உடல்மொழி, ஆடுவெளி ஆகியவை வழியாக சமகால அரசியல், பொருளாதார, சமூக அமைப்புகளுக்கு எதிரான ஒரு திறனுடைய பதிலாக கூத்துகள் இயங்குகின்றன. அவ்வகையில், மலையகத் தமிழர் பண்பாட்டின் மணிமகுடங்கள் என அடையாளம் காணும் அளவில் காமன் கூத்து, பொன்னர் - சங்கர், அருச்சுணன் தபசு,

*லவகுசா என்பன திகழ்கின்றன எனலாம்.*

## சான்றாதாரங்கள்


1. கையெழுத்து பிரதிகள்
காமன் கூத்து, P.A. மூக்கையா, புப்புரஸ்ஸ தோட்டம்
காமன் கூத்து, T. தேவராஜ் (1979), கொட்டியாகலை
காமன் கூத்து, பொன்னுசாமி (1985), டன்பாரை
அருச்சுனன் தபசு, ஆ. ஐயாத்துரை
அருச்சுனன் தபசு, பாலசுப்பிரமணியம்
அருச்சுனன் தபசு, R. பெருமாள் மாஸ்டர், சீனிக்கத்தாழை தோட்டம்
அருச்சுனன் தபசு, S. முத்துக்காளி மாஸ்டர் (2005), கேம்பிரிட்ஜ் தோட்டம்
2. நூல்கள்
துரைசாமி நாவலர், (1949), அச்சுப்பிரதிகள், சரஸ்வதி புத்தகசாலை
சோதிமலர் இரவீந்திரன், (2004), காமன் கூத்தும் மலையகப் பாரம்பரியமும்
காரை செ. சுந்தரம்பிள்ளை, (2006), ஈழத்து மலையகக் கூத்துகள்
V.T. இராஜேந்திரன், (2005), நவரத்தின ஒப்பாரி
M. நாராயணசாமிப் பிள்ளை, தர்க்க ஒப்பாரி
P.T. தங்கமுத்துப்பிள்ளை, நவரச ஒப்பாரி
சந்தனம் சச்சிதானந்தன், காமன்கூத்து கள ஆய்வு (சங்குவாரித் தோட்டம்)
ஹாரிஸ், மலையகக் கூத்துகள்
ஆ. லெட்சுமணன், (2011), காமன் கூத்துப்பற்றிய ‘உதயசூரியன்’ தொடர் கட்டுரை
பொன். பிரபாகரன், (2015), காமன் கூத்து (இலங்கை மலையகத் தமிழர் பண்பாட்டு வகைப்பட்ட அரசியல், பொருண்மிய ஆய்வு)
அம்பிகை வேல்முருகு, (1998), அருச்சுனன் தபசு
அமில்கர் காப்ரால், (2001), வேர்களை நோக்கி
பக்தவத்சல பாரதி, (2008), தமிழர் மானிடவியல் – இரண்டாம் பதிப்பு
மானிடவியல் கோட்பாடுகள் (2017)
அ.சு. மணவாளன் (2005), இராமகாதையும் இராமாயணங்களும்
கோ. பழனி, தமிழ் நாடக ஆற்றுகைக் கூறுகளின் வரலாறு
தா. வாணமாமலை, (1964), தமிழர் நாட்டுப் பாடல்கள்
கட்டபொம்மன் கூத்து (1972)
அழ. குணசேகரன், (2009), நாட்டுப்புற நடனங்களும் பாடல்களும்
திரிகூடராசப்ப கவிராயர், (1960), திருக்குற்றாலக் குறவஞ்சி
மு. சிவலிங்கம், மலையகத் தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள் பல்வகை
புகழேந்திப் புலவர், நல்லதங்காள் கதை
அ.க. பெருமாள், (2004), நல்லதங்காள் கதை
ச. மெய்யப்பன், நாட்டுப்புற பாடல் களஞ்சியம், தொகுதி 9
அ.க. பெருமாள், நா. இராமச்சந்திரன், (2001), நாட்டார் நிகழ்த்துகலை களஞ்சியம்
லவகுசா நாடகப் பிரதி
3. கள ஆய்வுகள்
காமன் கூத்து, பெரிய எல்படை கீ.பி
காமன் கூத்து, பெரிய எல்படை மே.பி
காமன் கூத்து, லெட்சுமி தோட்டம் ப.பி
காமன் கூத்து, லெட்சுமி தோட்டம் மே.பி
காமன் கூத்து, மோறார் தோட்டம்
காமன் கூத்து, தெரேசியா தோட்டம்
காமன் கூத்து, கெம்பியன் தோட்டம்
காமன் கூத்து, லொய்னோன் தோட்டம்
காமன் கூத்து, சாஞ்சிமலை தோட்டம்
காமன் கூத்து, சாஞ்சிமலை தோட்டம்
காமன் கூத்து, லங்கா தோட்டம்
காமன் கூத்து, சீனாக்கொல்லை பூசாரி டிவிசன்
காமன் கூத்து, அரிசித் தோட்டம்
அருச்சுனன தபசு, பெரிய எல்படை ப.பி
அருச்சுனன் தபசு, பெரிய எல்படை மே.பி
அருச்சுனன் தபசு, லெட்சுமி தோட்டம் மே.பி
அருச்சுனன் தபசு, கெம்பியன் தோட்டம் ப.க
அருச்சுனன் தபசு, அவரவத்தை தோட்டம்
அருச்சுனன் தபசு, கொட்டியாகலை ப.பி
அருச்சுனன் தபசு, பெரிய அறை தோட்டம்
அருச்சுனன் தபசு, தொங்கபத்தினி தோட்டம்
பொன்னர் சங்கர், பெரிய எலிப்படை ம.க
பொன்னர் சங்கர், வீரட் 30 ஏக்கர் தோட்டம் (2001)
பொன்னர் சங்கர், புளும்பில்ட் தோட்டம் (2016)
பொன்னர் சங்கர், காட்மோர் தபேதன்னே தோட்டம் (2019)
பொன்னர் சங்கர், போற்றித் தோட்டம் (2019)
பொன்னர் சங்கர், லிந்துலை சரஸ்வதி கல்லூரி கூத்துவிழா
பொன்னர் சங்கர், நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயம், உலக நாடக விழா (2018)
லவகுசா, பெரிய எலிப்படை கி.பி (2015, 2017, 2019)
4. சந்திப்புகள்
P. தங்கவேல், பெரிய எல்படை
S. சுப்பையா, லெட்சுமி தோட்டம்
ஆ. ஐயாத்துரை (20012021)
திரு. பாலசுப்ரமணியம் மாஸ்டர்
பம்பை கணேசன்
பம்பை தங்கவேல்
அருச்சுனன் தபசு
ஆறு களியன், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் டிப்ளோமா பாடநெறி (2009)
நோர்வூட் த.ம.வி அரங்கியல் மாணவர்களின் பயிற்சிப் பட்டறை (2015)
லவகுசா
பெரிய எலிப்படை தோட்டப் பயிலரங்கு (2014,2015,2019)
உலக நாடகவிழா (2001)
G. கனகராஜ் மாஸ்டர், பயிற்சிப்பட்டறை
குசலவன் நாடக அச்சுப்பிரதி
காசிராஜன் கதை
முத்துசாமி மாஸ்டர், கேம்ரி தோட்டம்
R. தங்கவேல் மாஸ்டர், கொட்டியாகலை தோட்டம்
நல்லதங்காள் கதை
முத்துசாமி மாஸ்டர், கேமரி தோட்டம்
காத்தவராயன் கதை
R. தங்கவேல் மாஸ்டர், கொட்டியாகலை தோட்டம்

ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி என்பது அந்நாட்டின் நிலைபேறுகைக்கு ஸ்திரத்தினை வழங்குகின்றது. இலங்கையில் உள்ள வளச் செழிப்பு நாட்டின் அபிவிருத்திக்கு பெரும்பங்காற்றக்கூடியது. இலங்கையின் கால்பங்குக்கும் அதிகமான நிலப்பரப்பை வடக்கு – கிழக்கு மாகாணங்கள் கொண்டுள்ளன. இந்தவகையில் இலங்கையில் வடக்கு – கிழக்கு மாகாணங்களின் நிலப்பரப்பு, அதில் அடையாளப்படுத்தக்கூடிய வளங்கள் அல்லது இதுவரை கண்டறியப்பட்ட வளங்கள் தொடர்பாக தெளிவுடுத்துவதாகவும், அந்த வளங்களின் இப்போதைய பயன்பாடற்ற முறைமையை மாற்றியமைத்து உச்சப்பயனைப் பெறுதல், அதனூடே வடக்கு – கிழக்கின் விவசாயத்துறை, உட்கட்டமைப்பு, கடல்சார் பொருளாதாரம் என்பவற்றை அபிவிருத்தி செய்வது பற்றியும் 'வடக்கு – கிழக்கு மாகாணங்களின் வளங்களும் உள்ளூர்ப் பொருளாதார அபிவிருத்தியும்' என்ற இந்தக் கட்டுரைத் தொடர் விளக்குகின்றது.

# வடக்கு – கிழக்கு மாகாணங்களின் பொருளாதார அபிவிருத்தியில் கூட்டுறவுத்துறையின் பங்குபற்றல்


**அமரசிங்கம் கேதீஸ்வரன்**



பொருளியல் துறையில் சிரேஸ்ட வளவாளராகவும் பயிற்றுநராகவும் செயற்படும் அமரசிங்கம் கேதீஸ்வரன் அவர்கள் கிளிநொச்சியை சொந்த இடமாகக் கொண்டவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொருளியலில் இளமாணி மற்றும் முதுமாணிப் பட்டங்களையும், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தில் திட்டமிடலில் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றவர். இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் II அதிகாரியாக, கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் பிரதி திட்டமிடல் பணிப்பாளராகப் பணியாற்றும் இவர், தேசிய பெண்கள் செயலகத்தின் பிரதிப் பணிப்பாளராகவும் பணியாற்றுகின்றார். 2012 இல் 'திட்டமிடல் மூலதத்துவங்கள்' என்ற நூலினையும் 2024 இல் 'மண்' என்ற கவிதை நூலினையும் வெளியீடு செய்துள்ளார். இவர் சிறந்த விமர்சகரும் ஆய்வாளருமாவார். வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் உப தலைவராகவும், இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் உபதலைவராகவும், கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவராகவும் செயற்பட்டு வரும் ஒரு மூத்த கூட்டுறவாளருமாவார்.

பொருளாதார அபிவிருத்தியில் பங்குகொள்ளும் ஒரு கொள்கைத்துறையாக கூட்டுறவு இயக்கம் இருந்து வருகிறது. இங்கிலாந்தின் 'றொச்டேல்' முன்னோடிகளினால் உலகத்துக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்ட கூட்டுறவு இயக்கமானது ஒருவர் பலருக்காகவும், பலர் ஒருவருக்காகவும் விட்டுக்கொடுத்து ஒன்றிணைந்து பணியாற்றும் ஓர் அமைப்பாகும். தன் விருப்பார்ந்த தடையற்ற உறுப்புரிமை, சனநாயக ஆளுகை, கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே ஒத்துழைப்பு, சமூக மேம்பாடு, உறுப்பினர்களின் பொருளாதாரப் பங்களிப்புக் கட்டுப்பாடின்றியும் தானாகவும் தொழிற்படல், கல்விப் பயிற்சி, தகவலளிப்பு ஆகிய ஏழு கூட்டுறவுக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு இவ் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. கூட்டுறவில் இணைந்துகொள்ளும் ஒவ்வொரு நபரினதும் பொருளாதார மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்டு, பங்கு மூலதனம் என்றவகையில் நூறு ரூபாவைப் பங்குப் பணமாகக்கொண்டு உருவாக்கப்படும் விதைப்பணத்தின் (Seed Money) மூலம் தொடங்கப்பட்டு, பல்வேறு முயற்சிகளிலும் பெற்றுக்கொள்ளும் இலாபங்களைத் தனிநபரிடையே பங்கீடுசெய்து, பொதுமுதலீட்டு நிதியாக மாற்றி, அதனூடாக அங்கத்தவர்களின் தொழில்சார் விருத்திக்கான உதவிச்சேவைகளை விரிவுபடுத்திச் செல்வதே கூட்டுறவுப் பொருளாதார முறைமையாகும். ஓரினமான உற்பத்தி முயற்சிகளில் ஈடுபடுவோர் தாமாக ஒன்றிணைந்து தமது தொழில் விருத்திக்காக உருவாக்கும் சங்கங்களைச் சட்டரீதியான நிறுவனமாக மாற்றிக் கொள்வதற்கான கூட்டுறவுச் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளதுடன், இதற்குப் பொறுப்பாக கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் இருந்து வருகிறது. கூட்டுறவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுச் செயற்படும் நிறுவனங்கள் மட்டுமே கூட்டுறவு என்ற சொல்லை தனது பெயருடன் பாவிக்க முடியும். கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட சங்கங்கள், மாகாண மட்டத்தில் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் மேற்பார்வையில் செயற்படுகின்றன.

இச்சங்கங்களின் கணக்காய்வை மேற்கொள்வதற்காக, கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்கள் சங்கவாரியாக நியமிக்கப்படுகின்றனர். நிதி நிர்வாகத்துக்கும் கணக்குகளுக்குமான ஆய்வுகள் வருடந்தோறும் மேற்கொள்ளப்படுவதுடன், இலாப-நஷ்ட விபரங்களும், கூட்டுறவுச் சொத்துகளின் நிலைமைகளும் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்படுகின்றன. கூட்டுறவு அமைப்பு அறிமுகம் செய்யப்பட்ட 19 ஆம் நூற்றாண்டிலிருந்து இவ் அமைப்பு சிறப்பாகச் செயற்படும் பகுதியாக வடமாகாணம் இருந்து வந்துள்ளது. இப்பகுதியில் பல்வேறு கூட்டுறவு அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதுடன், இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையினது முதலாவது தலைவராக கூட்டுறவு பெரியார் வீரசிங்கம் செயற்பட்டார் என்பது எமது கூட்டுறவு வரலாற்றின் பழைமையை நிறுவி நிற்கிறது. கூட்டுறவு வரலாற்றில் முதன்முதலில் அமைக்கப்பட்டவை சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களாகும். அதன் பின்னர், பண்டகசாலைக் கூட்டுறவு அமைப்பு உட்பட பல்வேறு வகையான கூட்டுறவு அமைப்புகள் உருவாயின. யாழ்ப்பாணத்தில் தொடங்கப்பட்ட ஐக்கிய வியாபார சங்கமானது வடமாகாணத்தில் முதலில் தொடங்கப்பட்ட கூட்டுறவு அமைப்பாக இருந்தது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் செயற்படும் பல்வேறு சங்க அமைப்புகளையும் நோக்கும்போது, கிழக்கு மாகாணத்தில் 1,663 கூட்டுறவு அமைப்புகளும், வடக்கு மாகாணத்தில் 2,293 அமைப்புகளும் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு அமைப்புகளாகக் காணப்படுகின்றன. செயற்படும் தகைமையின் அடிப்படையில் ஆராயும்போது, வடக்கு மாகாணத்தில் 1,138 சங்கங்கள் செயற்பாட்டிலுள்ளதுடன், 1,155 சங்கங்கள் செயலிழந்த நிலையில் காணப்படுகின்றன. கிழக்கு மாகாணத்தில் 1,098 சங்கங்கள் செயற்பாட்டிலுள்ளதுடன், 565 சங்கங்கள் செயலிழந்து காணப்படுகின்றன. இவ்வகையில் மொத்தமாக 43.4 சதவீதமான சங்கங்கள் செயலிழந்த சங்கங்களாக இவ்விரு மாகாணங்களிலும் காணப்படுகின்றன; 56 சதவீதமான சங்கங்களே செயற்பாட்டில் உள்ளன. சங்கங்களின் அங்கத்துவத்தன்மையின் அடிப்படையில் ஆராயும்போது, கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் 81,720 பேரும்ம், மட்டக்களப்பு மாவட்டத்தில் 64,619 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 81,884 பேருமாக மொத்தம் 233,223 பேர் செயற்படும் அமைப்புகளில் அங்கத்தவர்களாகச் செயற்படுகின்றனர். வடமாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 309,410 அங்கத்தவர்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 37,462 அங்கத்தவர்களும், மன்னாரில் 45,094 அங்கத்தவர்களும், முல்லைத்தீவில் 40,610 அங்கத்தவர்களும், வவுனியாவில் 66,680 அங்கத்தவர்களுமாக மொத்தம் 499,256 பேர் கூட்டுறவு அமைப்பில் இயங்கும் அங்கத்தவர்களாகக் காணப்படுகின்றனர். இதிலிருந்து நாம் தெளிவாகச் சொல்லக்கூடிய ஒரு செய்தியென்பது, வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கூட்டுறவுத்துறையானது, மக்களுக்கு நெருக்கமாகவும் மக்களை மையப்படுத்தியும் செயற்படும் கிராமிய அமைப்பாகவுள்ளது என்பதாகும்.

### அ) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்

கூட்டுறவு அமைப்புகளானது நோக்க அடிப்படையில் ஒன்றிணைந்தவர்களால் உருவாக்கப்பட்டுப் பதிவு செய்யப்படுவதனால், வகைரீதியாக பல்வேறு சங்க அமைப்புகளாக இவை செயற்படுகின்றன. ஓரினமான தொழில்களைச் செய்பவர்களின் நலனை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்டுள்ள கூட்டுறவு அமைப்பை அவற்றின் செயற்பாட்டின் அடிப்படையில் வகையீடு செய்யும்போது, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் முதன்மைச்சங்க அமைப்புகளாகக் காணப்படுகின்றன. நுகர்வோரின் பல்வேறு தேவைகளையும் ஒரே இடத்தில் நிறைவேற்றிக்கொள்வதற்காக உருவாக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் மொத்த - சில்லறை வியாபார நடவடிக்கைகளையும், வங்கிச் சேவைகள், எரிபொருள் வழங்கல், அரசின் நெருக்கடி கால சேவைகள் வழங்கல், பங்கீட்டு விநியோகம் போன்ற அனைத்துச் சேவைகளையும் ஒரே நிர்வாகத்தின் கீழ் வழங்கக்கூடிய வகையில் செயற்படுவதனால், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவு அமைப்பில் முதன்மையானவையாகக் காணப்படுகின்றன.

வடக்கு மாகாணத்தில் 47 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. அதிகளவிலான அங்கத்தவர்களும் இச்சங்கங்களிலேயே அங்கத்துவம் பெற்றுள்ளனர். வடக்கு மாகாணத்தில் 28,900 உறுப்பினர்களும், கிழக்கு மாகாணத்தில் 173,524 உறுப்பினர்களும் இச்சங்கங்களில் செயற்படுகின்றனர். நேரடி வேலைவாய்ப்பைப் பெற்ற பணித்தொகுதியாக, கிழக்கு மாகாணத்தில் 763 பேரும், வடக்கு மாகாணத்தில் 924 பேரும் நன்மையடைந்துள்ளனர். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் அங்கத்தவர்களுக்காக கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் என்ற பெயரில் வங்கிச்சேவையினை உருவாக்கி, நிதிரீதியாக வைப்புகளைச் சேகரித்தல், கடன்களை வழங்கல் என்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன. கிழக்கு மாகாணத்தில் 78 கிராமிய வங்கிகள் செயற்படுவதுடன், இதில் 93 வேலைவாய்ப்புகள் இடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாணத்தில் 88 கிராமிய வங்கிகள் செயற்படுவதுடன், 154 நிரந்தர வேலைவாய்ப்பு இடங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாட்டின் கீழ் வடமாகாணத்தில் 374 கிளை நிலையங்களும், 39 மொத்த நிலையங்களும், 7 கட்டடப்பொருள் விற்பனை நிலையங்களும், ஒரு புடவைக் கடையும், ஒரு மாதிரிக் கடையும், 33 கூட்டுறவு நகர்க் கடைகளும், 92 சிறிய கூட்டுறவு நகர்க் கடைகளும், 44 எரிபொருள் நிரப்பு நிலையங்களும், 6 பேக்கரிகளும், 7 சிற்றுண்டிச்சாலைகளும், 13 மா அரைக்கும் ஆலைகளும்; சேதனப் பசளை உற்பத்தி நிலையம், பழங்களைப் பதனிடல் போன்ற பல முயற்சிகளும் இயங்கி வருகின்றன.

### ஆ) சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள்

கூட்டுறவுச் சங்க வகைப்பாட்டில் அடுத்து முக்கியம் பெறும் சங்க வகையாக சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்க அமைப்புக் காணப்படுகின்றது. சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் அங்கத்தவர்களின் நாணயம் மற்றும் நேர்மைத்தன்மை அடிப்படையில் உருவாக்கப்பட்டதால், ஆரம்பத்தில் இவை ஐக்கிய நாணயச் சங்கங்கள் எனவும்



Image Source : www.nimirvu.org

அழைக்கப்பட்டிருந்தன. அங்கத்தவர்களின் பரஸ்பர நிதித் தேவைக்காக அங்கத்தவர்களிடம் சேமிப்புகளைத் திரட்டுதல், கடன்களை வழங்குதல் ஆகிய நிதிச் செயற்பாடுகளில் ஈடுபடும் 1,313 சங்கங்கள் வடக்கு மாகாணத்தில் பதியப்பட்டுள்ளன. இதில் 559 சங்கங்கள் செயற்பாட்டிலுள்ளன. இதில் 59,619 உறுப்பினர்கள் அங்கத்தவர்களாகவுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் 752 சங்கங்கள் காணப்படுவதுடன், 19,284 உறுப்பினர்கள் இவ்வகைச் சங்கங்களில் அங்கத்தவர்களாகவுள்ளனர். கிராமிய மட்டத்தில் நாணயம் மற்றும் ஐக்கியம் என்ற கொள்கைகளின் கீழ் இவை செயற்படுவதுடன், கிராமியக் கடனளிப்பும் சிறப்பாக நடைபெறுகிறது. இவ்வகைச் சங்கங்களை ஒன்றிணைத்தல் மூலம், மாவட்ட மட்டத்தில் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்க சமாசங்கள் மற்றும் மாகாண மட்டத்தில் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்க சம்மேளனங்கள் தமது அங்கத்துவச்

சங்கங்களுக்கு தேவையான கடன்களை நிதி ஏற்பாடு செய்து வழங்குகின்றன. இதனால், கூட்டுறவுத் தொழில் முயற்சிக் கடன்கள் கிராமிய மக்களின் அவசரத் தேவைகளுக்காக எளிய முறையில் வழங்கப்படுகின்றன. சம்மேளனத்திலும், சமாசங்களிலும் கிராமிய வங்கிகள் உருவாக்கப்பட்டு நிதிச்சேவை உறுதியளிப்புச் செய்யப்பட்டுள்ளன. நடுத்தர மற்றும் சிறிய முதலீடுகளுக்கு முதல் பெறக்கூடிய வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

### இ) கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

கூட்டுறவு அமைப்புகளில் செயற்படும் மற்றுமொரு பெரிய அமைப்பாக கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் காணப்படுகின்றன. மீன்பிடியில் ஈடுபட்டிருக்கும் மீனவர்களுக்கு தேவைப்படும் உள்ளீடுகளை வழங்கல், வள்ளங்கள் - வலைகளைப் பெற்றுக்கொடுத்தல், எரிபொருள்களைப் பெற்றுக்கொடுத்தல், மீனவர்களினது உற்பத்திக்கு அதிக விலையைப் பெற்றுக்கொடுத்தல், மீன்பிடித் தொழிலை பாதுகாப்பான தொழிலாக மாற்றுதல் போன்ற நோக்கங்களுடன் இத்தொழிலில் ஈடுபடுபவர்களை ஒன்றிணைத்து இச்சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. கிழக்கு மாகாணத்தில் 463 சங்கங்கள் செயற்படுவதுடன், வடக்கு மாகாணத்தில் 7,134 சங்கங்கள் செயற்பட்டு வருகின்றன. இதில் 46,872 உறுப்பினர்கள் அங்கத்தவர்களாக உள்ளனர். கடல்நீர், நன்னீர் ஆகிய இரண்டு பரப்புகளிலும் தொழில் செய்பவர்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். மீனவர்களால் பிடிக்கப்படும் மீன்களுக்கு நேரடியாகத் தரமான விலைகளைப் பெற்றுக்கொடுப்பது, மீன்களைப் பழுதடையாமல் பாதுகாக்கும் வகையில் அறைகள் வசதிகளை மேம்படுத்தல், கருவாடு பதனிடல், பொதியிடல் போன்ற பல்வேறு சேவைகளை மையமாகக் கொண்டே இச்சங்கங்கள் செயற்பட்டு வருகின்றன. மீன்பிடி வள்ளங்கள், வலைகளுக்கு அதிகளவில் தேவைப்படும் ஆரம்ப மூலதனத்தில் ஒரு பகுதியை இச்சங்கங்கள் கடனாக அல்லது முற்தொகையாகக் கொடுத்து இத்தொழில் முயற்சிகளை உற்சாகமூட்டியும் வருகின்றன. படகுகள், வலைகளை உற்பத்திசெய்து, தரமானதாக பயன்பாட்டுக்கு ஏற்றதாக வழங்கி மீன்பிடியை ஊக்குவித்து வருகின்றன. கடற்தொழில் சங்கங்கள் தமது அடிப்படை அமைப்பாக சமாசங்களையும், சம்மேளனங்களையும் உருவாக்கியுள்ளன. அவை சங்கங்களின் வளர்ச்சிக்கு உதவியளித்து வருகின்றன.

### உ) விவசாயக் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்

விவசாயக் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் என்ற வகைப்பாட்டின் கீழ் பனை - தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள், பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் என்பவற்றை உள்ளடக்கிக்கொள்ள முடியம். இச்சங்கங்கள் விவசாயம் தொடர்பிலுள்ள பயிர்கள் சார்பிலும், உப தொழில்கள் சார்பிலும் சம்பந்தப்படும் உறுப்பினர்களின் தேவைப்பாடுகளை அடிப்படையாகக்கொண்டு அவர்களின் நலன்களைப் பேணுவதற்காக உருவாக்கப்பட்ட அமைப்புகளாகும். இந்தவகையில் 40 பனை - தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள், வடக்கு மாகாணத்தை மையமாகக் கொண்டதாகப் பதிவுரிமை பெற்றுள்ளன. இதில் 37 சங்கங்கள் நன்கு செயற்பட்டு வருகின்றன. இதில் 28,931 அங்கத்தவர்கள் இணைந்து செயற்படுகின்றனர். இவை உற்பத்தியில் ஈடுபட்டு வெளியீடு செய்யும் கள்ளினை விற்பனை செய்வதற்கான இணை நிலையங்களைக் கொண்டிருப்பதுடன், மேலதிக விற்பனை செய்ய முடியாத கள்ளினைப் போத்தலில் அடைத்தல், பதனீர் உற்பத்தியில் ஈடுபடுதல், வெல்ல உற்பத்தியில் ஈடுபடுதல், கள்ளிலிருந்து மதுசாரம் உற்பத்தி செய்தல் போன்ற பல்வேறு பதப்படுத்தும் தொழில்நுட்பங்கள் அறிமுகம் செய்து உற்பத்தி செய்யும் வறிய தொழிலாளர்களின் உற்பத்தியை வீணடிக்காது பாதுகாத்து வருகின்றன. தொழிலாளர்களின் உற்பத்திகளை நாளாந்தம் முழுமையாகக் கொள்வனவு செய்து, அதற்கான கொடுப்பனவுகளை வாராந்தம் வழங்குகின்றன. மேலும், போதிய சமூகநலத் திட்டங்களையும் முன்னெடுத்து, விபத்து, தொழிலிழப்பு, உயிரிழப்பு போன்ற நெருக்கடிக் காலங்களில் தொழிலாளர்களுக்கான நலன்களைப் பாதுகாத்து வருகின்றன. தொழிலாளர்களின் நடத்தையைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்குத் தரம் வழங்கி முகாமை செய்வதுடன், A தரத்தில் உள்ள தொழிலாளர்களே முகாமைக்குத் தெரிவு செய்யப்படுவதற்கான தர வரிசை ஒழுங்கமைப்பும் இச்சங்கங்களில் காணப்படுகின்றன.

இதேபோல விவசாயச் சங்க வகைப்பாட்டில் உள்ளடங்கும் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் என்பன ஆடு, மாடு, கோழி, பன்றி ஆகிய உயிரின வளர்ப்பில் ஈடுபடுவோரது தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கும், அவர்களின் பிரதான உற்பத்தியான பாலினை சந்தைப்படுத்துவதற்காகவும் உருவாக்கப்பட்ட அமைப்புகள் ஆகும். கால்நடைச் சங்கங்களில், உயிரின வளர்ப்பில் ஈடுபடும் பல்வேறுபட்டவர்களும் அங்கத்துவம் பெற முடிவதுடன், பால் உற்பத்தியாளர்கள் மட்டுமே பால் உற்பத்திச் சங்கங்களில் அங்கத்துவம் பெற்றுள்ளனர். வடக்கு மாகாணத்தில் 4 கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இதில் 33 சங்கங்கள் தற்போது

செயற்பாட்டிலுள்ளன. அத்துடன் 38 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளதுடன், இதில் 23 சங்கங்களே செயற்பாட்டிலுள்ளன. இச்சங்கங்களில் கால்நடை வளர்ப்போர் சங்கங்களில் 17,850 அங்கத்தவர்களும், பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 11,652 உறுப்பினர்களும் அங்கத்தவர்களாகச் செயற்பட்டு வருகின்றனர். கிழக்கு மாகாணத்தை ஆராயும்போது, 54 கால்நடை வளர்ப்போர் மற்றும் பால் உற்பத்திச் சங்கங்கள் செயற்படுவதுடன், 9,593 உறுப்பினர்கள் இச்சங்கங்களில் அங்கத்துவம் பெற்றுச் செயற்பட்டு வருகின்றனர். பால் உற்பத்தியினை பொறுத்து நாளாந்தம் இரண்டுவேளை இது உற்பத்தி செய்யப்படுவதனாலும், அது விரைவில் பழுதடையக் கூடியதாகவும் உள்ளதனால், சந்தைப்படுத்தல் சரியான முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டு இருக்க வேண்டியது அவசியமானதாகிறது. கால்நடை வளர்ப்புத் தொழில்நுட்பத்தின் தேவைப்பாடு அதிகளவில் இருந்தால்தான், சரியான உற்பத்தி மட்டத்தை அடைய முடியம் என்பதால், கால்நடைப் பராமரிப்புக்கும், துணை உணவு வழங்கலுக்கும், தொழில்நுட்பப் பரிமாற்றத்துக்கும் இச்சங்கங்கள் முன்னுரிமை வழங்கி தமது அங்கத்தவர்களுக்குச் சேவை வழங்கி வருகின்றன.

பால் விற்பனையின்போது, கிராமிய மட்டத்தில் பாலை நுகரும் வீதத்தை இந்தக் கால்நடைக் கூட்டுறவுச் சங்கங்கள் உறுதி செய்கின்றன. இச்சங்கங்கள் உள்ளூரில் விற்பனை நிலையங்களை அமைத்து, பாலை உள்ளூரவர்களுக்கு விற்பனை செய்வதுடன், மீதமான பாலைப் பயன்படுத்தி தயிர், யோகட், பன்னீர் போன்ற துணை உணவுப் பொருட்களையும் உற்பத்தி செய்து, அதனையும் உள்ளூரில் விற்பனை செய்வதால் கிராமிய மட்டத்தில் போசாக்கான உணவு நுகர்வை உறுதி செய்வதில் கால்நடைக் கூட்டுறவுச் சங்கங்கள் காத்திரமான பங்கை வழங்கி வருகின்றன எனலாம். மில்கோ, நெஸ்லே, காகிள்ஸ் போன்ற பெரிய கம்பனிகளால் கொள்வனவு செய்யப்படும் பெரும் எண்ணிக்கையிலான பால், தேசிய - மாகாண மட்ட நுகர்வுக்குப் பரிமாறப்படுவதால், கிராமிய மட்டத்தில் பால் நுகர்வை நேரடியாக வழங்கும் இச்சங்கங்களின் சேவை குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

## ஊ) கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்

கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு இயங்கிவரும் கைத்தொழில் சங்கங்கள் என்ற பகுதியின் கீழ் பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்கள், புடவை உற்பத்தி - தச்சு வேலை - மட்பாண்ட உற்பத்தி - தும்பு உற்பத்தி - உலோக உற்பத்தி போன்ற சங்கங்கள் இவ்விரு மாகாணங்களிலும் இயங்கி வருகின்றன. கிழக்கு மாகாணத்தில் 52 சங்கங்களுக்கு ஊடாக 373 அங்கத்தவர்கள் நன்மை அடைவதுடன், வடக்கு மாகாணத்தில் 93 சங்கங்களுக்கு ஊடாக 12,327 அங்கத்தவர்கள் பயன்பெறுகின்றனர். ஒரு நோக்குச் சங்கங்கள் என்ற வகையில் ஓரினமான தொழில்களில் ஈடுபடுபவர்களின் தேவைகளை இச்சங்கங்கள் நிறைவேற்றுவதுடன், இவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்தல், உள்ளீடுகளைப் பெற்றுக்கொடுத்தல், விற்பனை வலையமைப்பை உருவாக்கி வழங்குதல் போன்ற சேவைகளையும் வழங்கி வருகின்றன.

## எ) சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள்

வைத்தியசாலைக் கூட்டுறவுச் சங்கங்கள், தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், நலன்புரிக் கூட்டுறவுச் சங்கங்கள், போக்குவரத்துக் கூட்டுறவுச் சங்கங்கள், இளைஞர் சேவை கூட்டுறவுச் சங்கங்கள், முயற்சியாண்மை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவற்றை இச்சேவை வகைப்பாட்டின்கீழ் உள்ளடக்கிக் கொள்ளலாம். வடமாகாணத்தில் காணப்படும் இவ்வகைச் சங்கங்கள் 48 இல், 8,111 பேர் அங்கத்தவர்களாகக் காணப்படுவதுடன், கிழக்கு மாகாணத்தில் 188 சங்கங்களில் 19,284 பேர் அங்கத்துவம் பெற்றுள்ளனர். சேவைசார் கூட்டுறவுச் சங்கங்கள், பொதுமக்களின் தேவைப்பாடுகளின் முன்னுரிமைக்கமைய அவர்களால் உருவாக்கப்படுவதுடன், அதன் செயற்பாட்டை நிறுவி பதிப்புரிமையும் பெற்றுக்கொள்கின்றன.

## ஏ) இரண்டாம்படிக் கூட்டுறவுச் சங்கங்கள்

கூட்டுறவு அமைப்புகளில் பதிவுசெய்யப்பட்ட ஆரம்பக் கூட்டுறவு அமைப்புகளை தமது அங்கத்துவர்களாகக் கொண்டு செயற்படும் கூட்டுறவு அமைப்புகள், இரண்டாம்படிக் கூட்டுறவு அமைப்புகள் என அழைக்கப்படுகின்றன. இதன்கீழ் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்கள், சம்மேளனங்கள், கிராமிய வங்கிகளின் சமாசங்கள், கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், விவசாயச் சங்கங்களின் சம்மேளனங்கள், மாவட்டக் கூட்டுறவுச் சபைகள் ஆகிய அமைப்புகள் காணப்படுகின்றன. இதில் வடமாகாணத்தில் 53 சமாசங்கள் இயங்குநிலையிலும், 114 சமாசங்கள் செயலிழந்த நிலையிலும் காணப்படுகின்றன.

இந்தவகையில் வடக்கு - கிழக்கு மாகாண அபிவிருத்தியில் கூட்டுறவு அமைப்புகள் சிறப்பாகச் செயற்படுவதுடன், மாகாண மட்டத்தில் செயற்படும் மாகாணக் கூட்டுறவு வங்கி ஒன்றும் வடமாகாணத்தில் புதிதாக முதல் தடவையாக ஆரம்பிக்கப்பட்டுச் செயற்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையின் வறண்ட மண்டலமான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள நீர்வளங்களை நிலைத்தன்மையுடன் பயன்படுத்துவதற்கான கொள்கைகள் உருவாக்குவது மிகவும் அவசியமாக உள்ளது. இது மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த உதவுகின்றது. மேலும், நிலையான நீர்வள மேலாண்மை சுற்றுச்சூழலுக்கு உதவியாகவும், பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவாகவும் அமையும். இதன் மூலம், வறண்ட மண்டலங்களில் உள்ள நீர்வளங்கள் பாதுகாக்கப்படும். ”வறண்ட மண்டல நீர்வளங்களின் இருப்பும் பேண்தகு பயன்பாடும்: வடக்கு – கிழக்குப் பிரதேசங்கள், இலங்கை எனும் இந்தக் கட்டுரைத் தொடர், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து ஆற்றுப்படுகைகளின் நீர்வளங்களின் நிலையை ஆராய்ந்து, சுற்றுச்சூழல் பாதுகாப்புடன், அவற்றின் திறம்பட்ட பயன்பாட்டை எவ்வாறு செயற்படுத்தலாம் என்பதைக்கூறும்.

# மூலோபாயப் பகுதி பற்றிய அடிப்படைத் தகவல்கள்

## பகுதி 4

**சுப்ரமணியம் சிவகுமார்**



கலாநிதி. சுப்ரமணியம் சிவகுமார் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் இளங்கலைப் (BSc Eng.) பட்டமும், இந்தியத் தொழில்நுட்பக்கழகம் ரூர்க்கியில் (IIT Roorkee) நீர்வள மேம்பாட்டுத்துறையில் முதுகலைப் (MSc) பட்டமும், மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் (PhD) பட்டமும் பெற்றவர். பின்னர் நோர்வேயின் உயிரியல் அறிவியல் பல்கலைக்கழகத்திலும் (NMBU, s), வடகிழக்கு நோர்வே பல்கலைக்கழகத்திலும் (Bod) பிந்தைய முனைவர் ஆராய்ச்சியாளராகப் பணியாற்றினார். நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராகவும், நீர்ப்பாசனப் பொறியாளராகவும் 28 ஆண்டுகள் சேவையாற்றியுள்ளார். யாழ்ப்பாணம், வவுனியா போன்ற பல்கலைக்கழகங்களில் மூத்த விரிவுரையாளராகச் செயற்பட்டார். விவசாய அமைச்சகத்தில் திட்டமிடல் பணிப்பாளராகவும், வடமாகாண அவசர மீளமைப்புத் திட்டத்தின் திட்டப்பணிப்பாளராகவும் பணியாற்றினார்.

பல்வேறு சர்வதேசப் பல்கலைக்கழகங்களில் விருந்தினர் விரிவுரைகளையும், முக்கிய உரைகளையும் (Keynote Speeches) நிகழ்த்தியுள்ள இவர், குறியீட்டு அறிவியல் இதழ்களில் 45க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டுள்ளதோடு, இதுவரை 7 நூல்களையும் எழுதியுள்ளார். மேலும், 18 சர்வதேச மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளை வாசித்துள்ளார்.

## கிழக்கு மாகாணம்

இலங்கையின் கிழக்கு மாகாணம், தீவின் கிழக்குக் கரையில் அமைந்துள்ள ஓர் அழகான பிரதேசமாகும். இது இயற்கை அழகு, பண்பாட்டு மரபு மற்றும் புவியியல் முக்கியத்துவம் ஆகியவற்றுக்காக அறியப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தின் புவியியல் நிலப்பரப்பு பல்வகைமை கொண்டது. இங்கு பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த, அழிந்துபோன மாபெரும் கண்டமான கோண்ட்வானாவின் எச்சங்களைக் காணலாம். கொண்டலைட் மற்றும் சார்னோகைட் போன்ற அதிக வெப்பம் மற்றும் அழுத்தத்தால் உருவான பாறைகள் இப்பகுதியில் குறிப்பாக அதிகம் காணப்படுகின்றன. இந்தப் பாறைகளில் இல்மனைட் மற்றும் கிராஃபைட் போன்ற வணிக முக்கியத்துவம் வாய்ந்த கனிமங்கள் உள்ளன.

மேலும், இந்த மாகாணத்தில் குவார்ட்சைட்டுகள் மற்றும் சுண்ணாம்புக்கல் போன்ற நீண்ட புவியியல் வரலாற்றைக்கொண்ட படிவுப் பாறைகள் உள்ளன. இவை கட்டுமானத்தில் பயன்படுத்தப்படுகின்றன; இப்பகுதியின் பழைய வாழ்விடங்கள் பற்றிய தகவல்களை வழங்குகின்றன. இந்தப் பாறைகளில் காணப்படும் புதைபடிவங்கள், இலங்கையின் தொல்பழங்கால வாழ்க்கை பற்றிய நமது அறிவை மேலும் விரிவுபடுத்துகின்றன.

இலங்கையின் கிழக்கு மாகாணம், நாட்டின் ஒன்பது மாகாணங்களில் ஒன்றாகும். இந்த மாகாணங்கள் 19 ஆம் நூற்றாண்டு முதலே இருந்துவந்தாலும், 1987 ஆம் ஆண்டில் இலங்கை அரசியலமைப்பின் 13 ஆம் திருத்தம் மூலம் மாகாண சபைகள் உருவாக்கப்படும் வரை அவற்றுக்குச் சட்டபூர்வமான அங்கீகாரம் இருந்ததில்லை

கிழக்கு மாகாணத்தின் மொத்தப் பரப்பளவு 9,996 சதுர கிலோமீட்டர் ஆகும். இது தீவின் மொத்தப் பரப்பளவில் 16% ஆகும். இதில் நிலப்பரப்பு 9,361 சதுர கிலோமீட்டராகவும், உள்நாட்டு நீர்ப்பரப்பு 635 சதுர

| Description | Trincomalee | Batticaloa | Ampara | Province |
|---|---|---|---|---|
| Electoral Division | 3 | 3 | 4 | 10 |
| No.of Municipal Council | - | 1 | 2 | 3 |
| No.of Urban Council | 2 | 2 | 1 | 5 |
| No.of.Pradesiya Sabha | 11 | 9 | 17 | 37 |
| No.of.DS Division | 11 | 14 | 20 | 45 |
| No.of.GN Division | 234 | 345 | 506 | 1085 |

நிர்வாக மாவட்டங்கள், கி.மா




கிழக்கு மாகாணம், இலங்கை
Image Source : https://alt.army.lk/sfhqeast/map

கிலோமீட்டராகவும் உள்ளது. மேலும், இந்த மாகாணம் 431 சதுர கிலோமீட்டர் நீளமான கடற்கரையைக் கொண்டது. கிழக்கு மாகாணத்தின் எல்லைகள்: வடக்கில் - வட மாகாணம், கிழக்கில் - வங்காள விரிகுடா, தெற்கில் - தென் மாகாணம், மேற்கில் - ஊவா, மத்திய மற்றும் வடமத்திய மாகாணங்கள்.

இலங்கையின் கிழக்கு மாகாணம் மூன்று நிர்வாக மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது: அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை. இம்மாகாணத்தின் தலைநகரம் திருகோணமலை ஆகும். இம்மாகாணம் முதன்மையாக விவசாயம் சார்ந்த பொருளாதாரத்தைக் கொண்டது. இதனால் இது 'இலங்கையின் நெற் களஞ்சியம்' என்று அழைக்கப்படுகிறது.

தேசிய உற்பத்தியில் நெல்: 25%, பால்: 17%, மீன்: 21% பங்களிப்பைச் செலுத்துகின்றன. கிழக்கு மாகாணம் பெரிய சுற்றுலா மையங்களைக் கொண்டுள்ளது. குறிப்பாக பாசிக்குடா, நிலாவெளி, உப்புவெளி, கற்குடா போன்ற கடற்கரைகள்; கழிமுகப்பகுதிகளில் பல ஓய்வுவிடுதிகள் மற்றும் ஹோட்டல்கள் அமைந்துள்ளன. வரலாற்று இடங்கள் மற்றும் இயற்கை அழகுகள் (புறாத்தீவு, பவளப்பாறைகள்)போன்றன சுற்றுலாத்துறைக்கு மேலும் உதவுகின்றன. இது தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 5.6% பங்களிக்கிறது. 2019 ஆம்

| Key Indicators | Sri Lanka | Eastern Province |
|---|---|---|
| Land (sq. km) | 65,610 | 9,996 |
| Coastal (Km) | 1340 | 431 |
| Population (Mn) | 21.67 | 1.710 |
| GDP(Rs.BN)-2017 | 13,418 | 759 |
| Per capita (Rs1000) | 619 | 415 |
| Poverty HCR - 2017 | 4.1 | 7.3 |
| Unemployment Rate | 4.2 | 6.0 |
| Life Expectancy (Years) | 75.0 | 74.0 |
| Literacy Rate | 93.1 | 86.5 |
| Computer Literacy Rate | 27.5 | 14.1 |
| Prosperity 2017 | 0.771 | 0.072 |

கிழக்கு மாகாணத்தின் முக்கியமான குறியீடுகள்

| Description | Trincomalee | Ampara | Batticaloa | Province |
|---|---|---|---|---|
| Urban Land(ha) | 1,280 | 40,847 | 4,022 | 46,149 |
| Agricultural Land (ha) | 129,930 | 134,624 | 129,188 | 393,742 |
| Forest Land (ha) | 81,710 | 201,135 | 46,960 | 329,805 |
| Range Land(ha) | 33,490 | 53,085 | 46,797 | 133,372 |
| Wet Land (ha) | 15,570 | 5,959 | 3,802 | 25,331 |
| Barren Land (ha) | 1,690 | - | 15,722 | 17,412 |
| Total Land (ha) | 263,670 | 435,650 | 246,491 | 945,811 |

நிலப்பயன்பாட்டின் அளவு – கி.மா

| Name | Status | Population Census 1981-03-07 | Population Census 2001-07-17 | Population Census 2012-03-20 | Population Census 2021-07-01 |
|---|---|---|---|---|---|
| Eastern | Province | 975,251 | 1,419,602 | 1,555,510 | 1,783,000 |
| Ampara | District | 388,970 | 592,997 | 649,402 | 752,000 |
| Batticaloa | District | 330,333 | 486,447 | 526,567 | 590,000 |
| Trincomalee | District | 255,948 | 340,158 | 379,541 | 441,000 |

மாவட்ட ரீதியாக கிழக்கு மாகாணத்தின் சனத்தொகை (அண்மைய 40 ஆண்டுகள்)
Image Source : Department of census and statistics, SriLanka

ஆண்டிற்கான மத்திய வங்கியின் ஆண்டறிக்கையின்படி, மாகாணத்தின் செழுமைக் குறியீடு 0.168 ஆகும்; இது தேசிய சராசரியை விடக் குறைவாகும். அட்டவணை 2, முக்கியமான கிழக்கு மாகாணத்தின் குறியீடுகளைத் தருகின்றது. அட்டவணை 3, கிழக்கு மாகாணத்தில் நிலப்பயன்பாட்டின் அளவுகளைக் குறிக்கிறது. அட்டவணை 4, கிழக்கு மாகாணத்தின் சனத்தொகையின் மாவட்டரீதியான பரம்பலை, அண்மைய 40 ஆண்டுகளுக்குத் தருகின்றது.

## கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆற்றுப்படுகைகள்

ஓர் ஆற்றுப்படுகை என்பது ஒரு நீரியல் அலகாகும். இப்பகுதியில் பெய்யும் மழைநீர் முழுவதும் ஆவியாகாத வரை, அதே படுகையில் தங்கிவிடும் அல்லது ஒரே ஆற்றில் கலந்து கடலை அடையும். இதற்கு 'நீர் வடிபகுதி' அல்லது 'நீர்ப்பிரிவு' என்றும் பெயர்கள் உண்டு. ஆற்றுப்படுகைகள் பொதுவாக ஒரு பகுதியின் மிக உயர்ந்த இடங்களில் இயற்கையாக உருவான பிரிவுகளால் ஒன்றிலிருந்து ஒன்று தனிமைப்படுத்தப்பட்டிருக்கும்.

கிழக்கு மாகாணத்தில் கடலில் கலக்கும் 38 ஆறுகள் பாய்கின்றன. படம் 2 - முக்கியமான ஆற்றுப்படுகைகளின் சுருக்கத்தையும், அட்டவணை 5 - ஆற்றுப்படுகைகள் மற்றும் அவற்றின் நீரியல் தரவுகளின் சுருக்கத்தையும் தருகின்றன.

## கிழக்கு மாகாணத்தின் முக்கிய ஆற்றுப்படுகைகள்

### 1. மகாவலி ஆற்றுப்படுகை

இலங்கையின் மிகப்பெரிய ஆற்றுப்படுகையான மகாவலி ஆற்றுப்படுகை, கிழக்கு மாகாணம் உட்பட பல மாகாணங்களின் பகுதிகளை உள்ளடக்கியது. இப்பகுதியில் பாசனம் மற்றும் நீர்மின்சார உற்பத்திக்கு இது ஒரு முக்கியமான நீர் ஆதாரமாகும்.

இலங்கையின் நீளமான ஆறான மகாவலி கங்கை 335 கி.மீ (208 மைல்) நீளம் கொண்டது. தீவின் மொத்தப் பரப்பளவில் ஐந்தில் ஒரு பங்கை வடிநிலமாகக் கொண்ட இந்த ஆற்றுப்படுகை 10,448 சதுர கி.மீ (4,034 சதுர மைல்) பரப்பளவுடன் நாட்டின் மிகப்பெரிய வடிநிலமாகும். மகாவலி கங்கையின் உண்மையான உற்பத்தி இடம் நுவரெலியா மாவட்டத்தின் மகாவில பிராந்தியத்தில் உள்ள பொல்வத்துறை என்னும் ஒதுங்கிய கிராமமாகும். இங்கு ஹட்டன் மற்றும் கொத்மலை ஓயா ஆகியவை இணைகின்றன. திருகோணமலை விரிகுடாவின் தென்மேற்கு முனையில் இந்த ஆறு வங்காள விரிகுடாவில் கலக்கிறது. பல கடலடிப் பள்ளத்தாக்குகளில் முதன்மையானவை இந்த விரிகுடாவில் உள்ளதால், திருகோணமலை உலகின் சிறந்த ஆழ்கடல் துறைமுகங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

### 2. கல் ஓயா ஆற்றுப்படுகை

கிழக்கு வறண்ட மண்டலத்தில் அமைந்துள்ள கால் ஓயா ஆற்றுப்படுகை (படம் 1 {ஆ}) இலங்கையின் மிகப்பெரிய நீர்த்தேக்கமான சேனானாயக்கா நீர்த்தேக்கத்தைக் கொண்டுள்ளது. இந்த

| River Name | Catchment Area (Ac.ft) | Average Rain fall (mm) | Rainfall Volume in MCM | Discharge Volume to Sea in MCM | Runoff/ Rainfall Ratio |
|---|---|---|---|---|---|
| Kumbukkan Oya | 1,218 | 1,622 | 1,976 | 472 | 24 |
| Bagura Oya | 92 | 1,436 | 132 | 37 | 28 |
| Girikula Oya | 15 | 1,436 | 22 | 8 | 37 |
| Helawe ara | 51 | 1,436 | 73 | 27 | 37 |
| Wila Oya | 484 | 1,461 | 707 | 254 | 36 |
| Heda Oya | 604 | 1,675 | 1,012 | 394 | 39 |
| Karanda Oya | 422 | 1,500 | 633 | 253 | 40 |
| Saymena Aru | 51 | 1,500 | 77 | 27 | 35 |
| Tandiadi Aru | 22 | 1,500 | 33 | 12 | 36 |
| Kangikadichi Aru | 56 | 1,500 | 84 | 29 | 35 |
| Rufus Aru | 35 | 1,500 | 53 | 18 | 34 |
| Pannela Oya | 184 | 1,500 | 276 | 97 | 35 |
| Ambalam Oya | 115 | 1,500 | 173 | 66 | 38 |
| Gal Oya | 1,792 | 2,032 | 3,641 | 237 | 7 |
| Andella Oya | 522 | 1,500 | 783 | 278 | 36 |
| Thumpankeni Tanks | 9 | 1,458 | 13 | 4 | 30 |
| Namakada Aru | 12 | 1,475 | 18 | 5 | 28 |
| Mandipattu Aru | 100 | 1,500 | 150 | 45 | 30 |
| Pathanthe Aru | 100 | 1,500 | 150 | 45 | 30 |
| Vett Aru | 26 | 1,650 | 43 | 12 | 28 |
| Unnichchai Aru | 346 | 1,550 | 536 | 195 | 36 |
| Mundeni Aru | 1,280 | 1,750 | 2,240 | 757 | 34 |
| Miyangolle Ela | 225 | 1,450 | 326 | 101 | 31 |
| Madura Oya | 1,541 | 1,750 | 2,697 | 226 | 8 |
| Pulliyanpota Aru | 52 | 1,500 | 78 | 23 | 29 |
| Kirimechchi Odai | 77 | 1,500 | 116 | 35 | 30 |
| Bodigoda Aru | 164 | 1,512 | 248 | 74 | 30 |
| Mandan Aru | 13 | 1,500 | 20 | 6 | 31 |
| Makarachchi Aru | 37 | 1,336 | 49 | 17 | 34 |
| Mahaweli Ganga | 10,327 | 1,946 | 20,101 | 4,009 | 20 |
| Kantale Aru | 445 | 1,583 | 704 | 15 | 2 |
| Panna Oya | 69 | 1,585 | 109 | 2 | 2 |
| Palampotha Aru | 143 | 1,585 | 227 | 5 | 2 |
| Pankulam Aru | 382 | 1,590 | 607 | 13 | 2 |
| Kunchikumban Aru | 205 | 1,500 | 308 | 7 | 2 |
| Pulankitti Aru | 20 | 1,500 | 30 | 1 | 3 |
| Yan Oya | 1,520 | 1,404 | 2,134 | 132 | 6 |
| Mee Oya | 90 | 1,500 | 135 | 41 | 30 |

**ஆற்றுப்படுகை மற்றும் அவற்றின் நீரியல் தரவுகளின் சுருக்கம்**

நீர்த்தேக்கத்தின் சேமிப்புத்திறன் 950 மில்லியன் கன மீட்டர் (MCM) ஆகும். இது 90,000 ஏக்கர் பரப்பளவுக்கு பாசன வசதி வழங்கும் திறன் கொண்டது.

### 3. யான் ஓயா ஆற்றுப்படுகை

இலங்கையின் ஐந்தாவது நீளமான ஆறான யான் ஓயா தோராயமாக 142 கிமீ (88 மைல்) நீளம் கொண்டது. இதன் வடிநிலப் பகுதியில் ஆண்டுக்கு சுமார் 2,371 மில்லியன் கன மீட்டர் மழைப்பொழிவு ஏற்படுகிறது. இதில் சுமார் 17 சதவீதம் நீர் மட்டுமே கடலை அடைகிறது. இதன் வடிநிலப் பரப்பளவு 1,520 சதுர கிலோமீட்டர்கள் ஆகும்.

### 4. கும்புக்கன் ஓயா ஆற்றுப்படுகை

கும்புக்கன் ஓயா இலங்கையின் பன்னிரண்டாவது நீளமான ஆறாகும். 116 கிமீ நீளமுள்ள இந்த ஆறு இரண்டு மாகாணங்கள் மற்றும் இரண்டு மாவட்டங்களின் வழியாகப் பாய்கிறது. இதன் வடிநிலத்தில் ஆண்டுக்கு சுமார் 2,115 மில்லியன் கன மீட்டர் மழைப்பொழிவு ஏற்படுகிறது. இதில் சுமார் 12 சதவீதம் நீர் மட்டுமே கடலை அடைகிறது. இதன் வடிநிலப் பரப்பளவு 1,218 சதுர கிலோமீட்டர்கள் ஆகும்.

### 5. மாதுரு ஓயா ஆற்றுப்படுகை

மாதுரு ஓயா இலங்கையின் வடமத்திய மாகாணத்தில் உள்ள ஒரு முக்கியமான நீரோடையாகும். இது தோராயமாக 135 கிமீ (84 மைல்) நீளம் கொண்டது. இதன் வடிநிலப் பகுதியில் ஆண்டுக்கு சுமார் 3,060 மில்லியன் கன மீட்டர் மழைப்பொழிவு ஏற்படுகிறது. இதில் சுமார் 26 சதவீதம் நீர் கடலை அடைகிறது. இதன் வடிநிலப் பரப்பளவு 1,541 சதுர கிலோமீட்டர்கள் ஆகும்.

### 6. வெருங்கல் ஆறு ஆற்றுப்படுகை

வெருங்கல் ஆறு (வெருங்கல் ஆறு) எனப்படும் இந்த நீரோடை திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைப் பிரிக்கிறது. புகழ்பெற்ற வெருங்கல் கந்தசுவாமி கோவில் இதன் கரையில்

## Major River Basins in Eastern Provence

There are 103 rivers which are listed for the country of which 38 rivers from numbers 31-68 flow through the Eastern province to the sea in the Eastern Province including the Mahaweli Ganga.

| River Name | Catchment Area (Ac.) | Average Rain fall (mm) | Rainfall Volume in MCM | Discharge Volume to Sea in MCM | Runoff/ Rainfall Ratio |
|---|---|---|---|---|---|
| Kumbukkan oya | 1,218 | 2,622 | 1,972 | 472 | 24 |
| Gal Oya | 1,792 | 2,032 | 3,641 | 237 | 7 |
| Mundeni Aru | 1,280 | 1,750 | 2,240 | 757 | 34 |
| Madura Oya | 1,541 | 1,750 | 2,697 | 226 | 8 |
| Mahaweli Ganga | 10,327 | 1,946 | 20,101 | 4,009 | 20 |
| Yan Oya | 1,520 | 1,404 | 2,134 | 132 | 6 |
| Wila oya | 484 | 1,675 | 707 | 254 | 36 |




ஆற்றுப்படுகைகள்

அமைந்துள்ளது. இந்த ஆறு கதிரவெளிக்கு வடக்கே அமைந்துள்ள வெருங்கல் நகரம் வழியாகப் பாய்கிறது.

## கிழக்கு மாகாணத்தின் நிலத்தடி நீர்வளம்

மழைவளம் குறைவாக உள்ள இப்பிரதேசத்தில் நிலத்தடி நீர் வளங்கள் விவசாயம், குடிநீர்த் தேவை மற்றும் தொழில்துறை தேவைகளுக்கு அத்தியாவசியமானவையாக உள்ளன. கிழக்கு மாகாணத்தில் பல ஆழமற்ற மற்றும் ஆழமான நீரகங்கள் (Aquifers) உள்ளன. மேற்பரப்பு நீர் ஆதாரங்கள் குறைவாக உள்ள பகுதிகளில், பாசனம் மற்றும் குடிநீர்த் தேவைகளுக்கு இந்த நீரகங்கள் முக்கியமானவையாக உள்ளன. மொத்த நீர்ப்பயன்பாட்டில் 65% நிலத்தடி நீரே பயன்படுத்தப்படுகிறது. ஆண்டுதோறும் 250 மில்லியன் கன மீட்டர் நீர் 'பம்ப்' செய்யப்படுகிறது. அதில் 90% விவசாயத் தேவைகளுக்காகவே பயன்படுத்தப்படுகிறது. 1.2 மில்லியன் மக்களின் குடிநீர்த் தேவை நிறைவேற்றப்படுகிறது. கிழக்கு மாகாணத்தின் நிலத்தடி நீரகங்கள் (Aquifers) கீழுள்ள படத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மூன்று முக்கிய நிலத்தடி நீரக வகைகள் காணப்படுகின்றன:

அ) கரடுமுரடான படிகப்பாறை நீரகங்கள்: மாகாணத்தின் மேற்குப் பகுதிகளில் காணப்படுகின்றன. 50-100 மீட்டர் ஆழத்தில் அமைந்துள்ளன. நீர் ஊடுருவும் திறன் குறைவு.

ஆ) சுண்ணாம்புக்கல் நீரகங்கள்: திருகோணமலை, மட்டக்களப்புப் பகுதிகளில் காணப்படுகின்றன. 100-200 மீட்டர் ஆழம் வரை நீர் தேக்கம். உயர் ஊடுருவும் திறன் கொண்டவை.

இ) கடலோர மணல் நீரகங்கள்: கடற்கரையை ஒட்டிய பகுதிகளில் 20-50 மீ ஆழத்தில் உள்ளவை. விரைவாக நிரம்பக்கூடியவை.

நிலத்தடி நீரின் அதிகப்படியான பயன்பாடு (அதிக 'பம்பிங்' காரணமாக, வறண்டுபோன கிணறுகளின் எண்ணிக்கை 25% ஆக அதிகரித்துள்ளது), நீர்மட்டம் குறைதல் மற்றும் கடலோரப் பகுதிகளில் உப்பு நீர் ஊடுருவல் (கடலோரப் பகுதிகளில் 45% நீரகங்கள் பாதிக்கப்பட்டுள்ளன) போன்ற பிரச்சினைகளை ஏற்படுத்தலாம்.
வேளாண்மை நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் (Fertilizers and pesticides) நிலத்தடி நீரை மாசுபடுத்தும் அபாயம் உள்ளது (நைட்ரேட் அளவு WHO இனால் பரிந்துரைக்கப்பட்ட அளவை விட 3 மடங்கு அதிகம்).

கிழக்கு மாகாணத்தின் நிலத்தடி நீர்வளம் பல சவால்களை எதிர்கொண்டாலும், சரியான மேலாண்மை மற்றும் தொழில்நுட்ப முன்முயற்சிகள் மூலம் இந்த முக்கியமான வளத்தைப் பாதுகாக்க முடியும். உள்ளூர்ச் சமூகங்கள், அரசு மற்றும் தனியார்துறை இணைந்து செயற்படுவது எதிர்காலத்தில் நீர்ப் பாதுகாப்பை உறுதி செய்யும்.

# நிகழ்வுகள்

04.06.2025



## 'யாழ்ப்பாண நகரத்தின் வளர்ச்சி வரலாறு (1621–1948)' நூல் வெளியீட்டு விழா – யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியற்றுறை மற்றும் எழுநா இணைந்து நடாத்திய, இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் அவர்கள் எழுதிய யாழ்ப்பாண நகரத்தின் வளர்ச்சி வரலாறு (1621 – 1948 ) என்னும் நூலின் வெளியீட்டு விழாவானது, கடந்த யூன் மாதம் 4 ஆம் திகதி, புதன்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றிருந்தது.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராசா அவர்கள் கலந்து சிறப்பித்திருந்தார். நூலின் அறிமுக உரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியற்றுறைத் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா நிகழ்த்தியிருந்தார். தொடர்ந்து, நகரப்புவியியல்சார் நோக்கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பொன்னுத்துரை பாலசுந்தரம்பிள்ளை அவர்களும், கலை வரலாறு நோக்கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையைச் சேர்ந்த பேராசிரியர் தாமோதரம்பிள்ளை சனாதனன் அவர்களும், பல்பரிமாண நோக்கில் படைப்பாளியும் அரசியல் விமர்சகருமான திரு. மகாதேவா நிலாந்தன் அவர்களும் மதிப்பீட்டுரைகளை ஆற்றியிருந்தார்கள்.

நூலாசிரியரான கட்டடக்கலைஞர் இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் அவர்களது ஏற்புரையை அடுத்து இடம்பெற்ற நன்றியுரையோடு நூல் வெளியீட்டு விழா இனிதே நிறைவுற்றது. குறித்த நிகழ்விற்கு பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், துறைசார் ஆர்வலர்கள், மாணவர்கள், ஊடக நண்பர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.



06.06.2025

## விற்பனைக்கு வந்துவிட்ட தங்கத்திரவம் ஆவணப்படத்திரையிடல் கே.ஏ.எஸ்.சத்தியமனை நூலகம்

எழுநாவின் தயாரிப்பில் வெளிவந்த 'யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு வந்துவிட்ட தங்க திரவம்' என்ற ஆவணப்படமானது சுழிபுரத்தில் உள்ள கே.ஏ.எஸ் சத்தியமனை நூலகத்தில், கடந்த 06.06. 2025 அன்று, வெள்ளிக்கிழமை மாலை 6.00மணியளவில் திரையிடப்பட்டது. இத்திரையிடல் நிகழ்வில் மாணவர்கள் பலர் பங்குபற்றியிருந்தனர்.

உள்ளூர் நீர் மூலங்களின் முக்கியத்துவம், அவற்றிற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல், அவற்றைப் பாதுகாப்பதில் அரசாங்கத்திற்கும் அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் உள்ள கடப்பாடு முதலியவற்றை குறித்த ஆவணப்படத்தினூடாக சமூகத்தின் மத்தியில் கொண்டு செல்லும் நோக்கில் இத் திரையிடல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 'நீர்த்த கடல்' ஆவணப்படத்திரையிடல் Movie Club, மட்டக்களப்பு





21.06.2025

எழுநாவால் தயாரித்து வெளியிடப்பட்ட 'நீர்த்த கடல்' என்ற தலைப்பிலான ஆவணப்படமானது, மட்டக்களப்பிலுள்ள 'Movie Club' இன் ஒழுங்கமைப்பில் 21.06.2025 அன்று, சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் 'American Corner' இல் திரையிடப்பட்டது. இந்நிகழ்வில் சமூக ஆர்வலர்கள் பலர் பங்குபற்றியிருந்தனர்.

இத்திரையிடலில் பங்குபற்றியிருந்த பார்வையாளர்களில் ஒருவரான கேஷாயினி எட்மண்ட், "இது காலத்தின் தேவை கருதியதொரு ஆவணப்படம். இதன் காட்சியமைப்புகள் எனக்குப் பிடித்திருந்தன. குறித்த விடயம்சார் நூலினை எழுதியவரது நேர்காணலை உள்ளடக்கியிருந்தது மிகவும் வரவேற்கத்தக்கது. பலரும் இப்போது சுற்றாடல்சார் பிரச்சினைகள் தொடர்பாகக் கவனஞ்செலுத்த ஆரம்பித்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. எனவும், "ஆவணப்படத்தின் நேரத்தினைச் சுருக்குவது, சுவாரசியமாக்குவது, தொழில்நுட்பத் தரம் போன்றன குறித்தும் சிந்திக்க வேண்டும். பெண்களது நேர்காணல்களும் இடம்பெற்றிருக்க வேண்டும். எனவும் தனது கருத்தைத் தெரிவித்திருந்தார்.

வடக்கு – கிழக்குத் தமிழர் தேசக் கடற்பரப்பில் கடல் விவசாயம் எனும் போர்வையில் அமைக்கப்படும் கடலட்டை வளர்ப்புப் பண்ணைகள் மூலம் கடலைச்சார்ந்த தமிழ் மக்களின் இறைமையும், நிலைத்த பொருண்மிய வளங்களும் எவ்வாறு சவாலிற்கு உட்படுத்தப்படுகின்றன? சூழற் சமநிலையும், கடலோரப் பகுதியில் வாழும் மக்களின் வாழ்வும் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன? என்பவை பற்றி குறித்த ஆவணப்படமானது ஆராய்கின்றது.



18.06.2025

## 'நீர்த்த கடல்' ஆவணப்படத் திரையிடல் கொழும்புத் தமிழ்ச் சங்கம்

எழுநாவால் தயாரித்து வெளியிடப்பட்ட 'நீர்த்த கடல்' என்ற தலைப்பிலானஆவணப்படமானது, கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஒழுங்கமைப்பில் 18.06.2025 அன்று, புதன்கிழமை பிற்பகல் 5.30 மணியளவில் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் திரையிடப்பட்டது. இந்நிகழ்வில் சமூக ஆர்வலர்கள் பலர் பங்குபற்றியிருந்தனர்.

வடக்கு – கிழக்குத் தமிழர் தேசக் கடற்பரப்பில் கடல் விவசாயம் எனும் போர்வையில் அமைக்கப்படும் கடலட்டை வளர்ப்புப் பண்ணைகள் மூலம் கடலைச்சார்ந்த தமிழ் மக்களின் இறைமையும், நிலைத்த பொருண்மிய வளங்களும் எவ்வாறு சவாலிற்கு உட்படுத்தப்படுகின்றன? சூழற் சமநிலையும், கடலோரப் பகுதியில் வாழும் மக்களின் வாழ்வும் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன? என்பவை பற்றி குறித்த ஆவணப்படமானது ஆராய்கின்றது.

# எழுநா வெளியீடு






















முன்பதிவுகளுக்கு +94 777 97 5029


எழுநா
வடக்கு - கிழக்குப்
பிராந்திய அபிவிருத்தியும்
உயிர்ப்பல்வகைமையும்
சி. ஜேம்சன் அரசகேசரி


எழுநா
யாழ்ப்பாணத்தில்
சாதி அமைப்பும்
சமூக உறவுகளும்
தொகுப்பும் தமிழாக்கமும்:
கந்தையா சண்முகலிங்கம்


எழுநா
உத்தியாக்கள்
கிழக்கிலங்கை கடலோர வேடர்களின்
பண்பாட்டு அசைவுகள்
கமலநாதன் பத்திநாதன்


எழுநா
உத்தியாக்கள்
கிழக்கிலங்கை கடலோர வேடர்களின்
பண்பாட்டு அசைவுகள்
கமலநாதன் பத்திநாதன்


எழுநா
சூழ்ச்சிகளையும்
சதிகளையும்
கடந்த வரலாறு
இரா.சடகோபன்


எழுநா
பதார்த்த
சூடாமணி
பால. சிவகடாட்சம்


எழுநா
மாறுபாடில்லா
உண்டி
சித்தமருத்துவர்
தியாகராஜா சுதர்மன்


எழுநா
வடக்குப் பிராந்தியக்
காலநிலையியல்
நாகமுத்து பிரதீபராஜா

SpotOn Money



SEND MONEY to SRI LANKA

FIRST TRANSFER FEE FREE*

Immediate Payment to Any Account

*Partnership* with

CargillsBank

BANKING ON THE HUMAN SPIRIT

Cash Pickup at any Cargills food city

get 5% Discount* on Purchases

0207 341 7300

www.spoton.money

Authorised and regulated by the Financial Conduct Authority (FRN 510848)
SpotOn Money is a trading name of Monex International Limited, a company incorporated in England and Wales, and registered as a money service business with HMRC (12161278)

* T & C Apply

XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

**OUR GROUP OF COMPANIES**

**codelantic**

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

**ExentAI**

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

**itaffix**

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

**ontomatrix**

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

**EmbryoZ**

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

**BurgeonFirst**

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

**FINACCDIRECT**

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

**LegalLiaise**

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

**callOcare**

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

**LeadHRM**

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

**CSR INITIATIVE**

**NurtureLeap**

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**

#32 Spring Street,
Paddington W21JA.
Phone : +44 203 5001380
Email : contact@xebiro.com

**Colombo**

#7 - 3/1, Galle Road,
Colombo 06.
Phone : +94 112 559854
Email : contact@xebiro.com

**Jaffna**

#63, Sir Pon Ramanathan Road,
Kallady, Thirunelvelly, Jaffna
Phone : +94 212 212797
Email : contact@xebiro.com



**Nimal Vinayagamoothy, CPA, CGA**

Chartered Professional Accountant

nimal@nlraccounting.com
T: 416 - 494 - 4777
C: 416 - 888 - 1128
F: 416 - 613 - 2739
300-5200 Finch Avenue East
Toronto, ON M1S 4Z4

CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANT

மானுடம் நிறுவனம்
maanudam foundation

# நூல்சார் செயற்பாடுகள்




தமிழ் அச்சுப் பண்பாட்டிலும் பதிப்பு வரலாற்றிலும் ஈழத்து அறிஞர் பணிகள் முன்னோடியானவை. வரலாற்றுக் கனதி மிக்கவை. ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை முதலியோரின் சீர்பதித்த நற்பதிப்புகளும் நுண்மாண் நுழைபுல ஆராய்ச்சிப் பதிப்புகளும் தமிழை அச்சு யுகத்திற்குத் தயார்படுத்தியும் தகுதிப்படுத்தியும் வைத்தவை. தமிழ்ச் சமூகத்தின் ஆய்வு அறிவுச் சூழலையும் படைப்பாக்கச் சூழலையும் மேன்மையுறச் செய்தவை. பாடாய்க் கிடந்த ஏடுகளை, எழுதா எழுத்தான அச்சு வாகனம் ஏற்றிப் பவனிவரச் செய்து, தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்தை நல்கியவை. ஈழத்தில் தமிழ், தமிழர் குறித்த எந்தவொரு ஆய்வும் ஈழத்துப் பதிப்புலகின் அறிகையின்றிப் பூர்த்தியாகாது. ஆய்வுப் பரப்பில் ஈழத்துப் பதிப்புலகானது. வரலாறு மற்றும் சமூக பண்பாட்டுப் பின்புலத்தில், இதுவரை அதிகம் கவனிப்புறவில்லை. இதனால், ஈழத்துத் தமிழ்ப் பதிப்புலகின் திசைவழிகளை அடையாளம் காணவும் அதன்வழி வரலாற்றைக் கட்டமைக்கவும் 'ஈழத்தில் அச்சுப் பண்பாடும் பதிப்பும்' எனும் பொருண்மையில் 'ஆறாவது சர்வதேச தமிழியல் ஆய்வு மாநாட்டை எமது துறை ஒழுங்குசெய்தது. மாநாட்டில் நிகழ்த்தப்பெற்ற ஆதார கருதி உரையையும் சமர்ப்பிக்கப்பெற்ற 27 ஆய்வுக் கட்டுரைகளையும் கொண்டு உருவானதே இந்நூல். தமிழியலுக்கு எம் தமிழ்த்துறையின் நன்கொடையாக அமையும் இந்நூல் அச்சுப் பண்பாடு, பதிப்பு வரலாறு ஆகியவற்றில் ஈழத்தின் சென்ற காலத்துப் பழுதிலாத் திறம் மீது ஒளி பாய்ச்சுகின்றது.

அனுசரணை:
மானுடம் நிறுவனம்
www.maanudam.org



# யாழ் மண்ணில்

வீடு, காணி,
வியாபார ஸ்தாபனங்கள்
வாங்குவதற்கு,
விற்பதற்கு அல்லது
வாடகைக்கு
நம்பிக்கையுடன் நாடுங்கள்

**RE/MAX ELITE**

021 224 2855 | 0777 44 1113

**இடம்: இல. 115 கே.கே.எஸ் வீதி சுன்னாகம்**
(பீப்பிள்ஸ் லீசிங் கட்டிட தொகுதி, 1ம் மாடி)

**BUY-SELL-RENT HOME AND LANDS**

WWW.REMAXELITE.LK


We work with
35 financial
institutions
Business & Personal Insurance
Free Financial Education for everyone
We work with 35 financial institutions
Long Term Care | Elder's Insurance
Children's Insurance
Best Services
1. RESP/PRSP
2. Life Insurance
3. Auto Insurance
4. Estate Planning
5. Home Insurance
6. Disability Insurance
7. Mortgage Insurance
8. Travel/Visa Insurance
9. Non-Medical Insurance
10. Critical illness Insurance
11. Dental & Drug Insurance
12. Guaranteed Investments
416-731-2829


SS CAKES
Say "I Do"
to Sweet Perfection!
Planning your dream wedding? Look no further!
At SS Cakes, we specialize in crafting exquisite wedding cakes that are as stunning as they are delicious. From classic elegance to modern masterpieces, we'll design the perfect cake to sweeten your special day.
+94 76 347 0055
We do delivery around the world

# வீடு என்பது ஞாபகங்களின் கலவை

காதல், சில்மிஷங்கள், கனவுகள், சிரிப்புக்கள், நேசங்கள், அரவணைப்புக்கள், தவிப்புக்கள், அடையாளங்கள், கூடல்கள், குதூகலங்கள் என நீங்கள் உறைவிடமாகும் பொழுதுதான் வீடு விலாசம் கொள்கிறது.

தற்போதைய நிலையில் நீங்கள் வீடொன்றை விற்பது அல்லது வாங்குவது குறித்து உங்களிடம் இருக்கும் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு என்னால் தெளிவாக விளக்கமளிக்க முடியும்.

நம்பிக்கையோடு என்னை அழையுங்கள் நல்லதோர் வீடு செய்வோம்.



# XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

**OUR GROUP OF COMPANIES**

**codelantic**

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

**ExentAI**

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

**itaffix**

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

**ontomatrix**

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

**EmbryoZ**

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

**BurgeonFirst**

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

**FINACCDIRECT**

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

**LegalLiaise**

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

**callOcare**

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

**LeadHRM**

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

**CSR INITIATIVE**

**NurtureLeap**

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**
#32 Spring Street,
Paddington W21JA.
Phone : +44 203 5001380
Email : contact@xebiro.com

**Colombo**
#7 - 3/1, Galle Road,
Colombo 06.
Phone : +94 112 559854
Email : contact@xebiro.com

**Jaffna**
#63, Sir Pon Ramanathan Road,
Kallady, Thirunelvelly, Jaffna
Phone : +94 212 212797
Email : contact@xebiro.com



Helping you harness the power around you

**NEW DAWN ENERGY SOLUTIONS**

# SOLAR POWER சூரிய சக்தி

SAFE ☼ CLEAN ☼ FREE ☼ பாதுகாப்பானது ☼ இலவசமானது ☼ சுத்தமானது

**AUTOMATIC OPERATION | NO REFUELLING | POWER DIRECTLY TO YOUR HOME**

**GRID-TIED SOLAR**
With this solar system you can earn up to $3850 annually for 20 years.

**NANO GRID SOLAR**
With this solar system you can cut your electricity bill to zero and you are never without electricity.

**ENERGY CONSERVATION**
With this solutions you can reduce your energy bill.

**OFF-GRID SOLAR**
With this solar system you can have electricity wherever you want.

**SOLAR POOL HEATER**
With this solar system you can cut your pool heating bill to zero.

**info@NewDawn-ES.Com | www.NewDawn-ES.Com | 416-855-9377**



HomeStars
Read Our Reviews
www.homestars.com

A+ Rating BBB ACCREDITED BUSINESS

500 2015 TOP SOLAR CONTRACTORS

Netwyn.Place

Unleash Your Potential

www.netwyn.place

10 Thornmount Drive, Scarborough, ON M1B 3J4

**+1 416-906-1414**




**BOOK YOUR TOUR TODAY**





